# புனைகதை இலக்கியம்

க. பொ. த. (உ/த)

தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகள்

நாவல் (நாகம்மாள்)



S. S. ஆனந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனைகதை இலக்கியம்

## தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகள், நாவல்

க.பொ.த. உயர்தரம்

K. Krishanthan
Life Insurance Agent
Regd. No. SLII AG/47350/1107
Mobile: 077-9037568

தொகுப்பு

S. சிவநிர்த்தானந்தா
(S.S. ஆனந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பு : மாசி 2001

பதிப்புரிமை : ஆசிரியர்

தலைப்பு : புனைகதை இலக்கியம்

தொகுப்பு : S.S. ஆனந்தன்

அட்டைப்படம் : பத்மவாசன்

கணனி வடிவமைப்பு : பவானி கிருஷ்ணமூர்த்தி

நூல் வடிவமைப்பு : சு. கிருஷ்ணமூர்த்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

க.பொ.த. உயர்தர தமிழ்மொழிப் பாடத்திற்கான பாடநூல்கள் வெளிவரத் தொடங்கி ஐந்தாறு ஆண்டுகளைக் கடந்துவிட்டபோதும் இன்னும் முழுமை பெறவில்லை என்றே கூறவேண்டும். இப்பாடப் புத்தகங்களை இரண்டு கட்டங்களில் பதிப்பித்து வெளியிட்ட நான் மூன்றாவது முறையாகவும் எனது நூல்கள் அனைத்தையும் புதுப்பித்து வெளியிட விரும்பினேன். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பெரும் பயன் கிடைக்கவேண்டும் என்பது எனது பேரவா.

எனவே மூன்றாவது முறையாகச் செம்மைப்படுத்தப்பட்டு வெளியிடப்படும் நூல் வரிசையின் புனைகதை இலக்கியம் என்ற பாடப்பரப்பிற்குரிய தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து சிறுகதைகளையும் 'நாகம்மாள்' என்னும் நாவலையும் ஓருருவாக்கி வெளியிட்டுள்ளேன்.

அச்சுத்துறை சார்ந்த பொருட்களினதும் சேவைகளினதும் விலை கட்டுக்கடங்காது உயர்ந்து செல்லும் இவ்வேளையில் மாணவச் செல்வங்களுக்கு இதனால் ஏற்படும் சுமையை எவ்வாறு குறைக்கலாம் என்று தீவிரமாகச் சிந்தித்து நான் எடுத்துக்கொண்ட முடிவே இப்புனைகதை இலக்கியங்களின் ஒன்றுசேர்க்கை ஆகும். தனித்தனியாக இப்பகுதிகள் நூலுருவாக்கம் பெறுவதைவிட இவ்வாறான முயற்சி என் அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய ஆசிரியப் பெருந்தகைகளுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் ஓரளவாவது பணச்சுமையைக் குறைப்பதோடு இப்பாடப் பரப்பினை ஒன்றாக நோக்குவதற்கும் பேருதவியாக அமையும் என்பது வெள்ளிடைமலை.

நூலுருவாக்க வெளியீட்டில் சாதனையாக அமையப்பெற்ற எனது முயற்சி இனி வரும் காலங்களிலும் நூல் வெளியீட்டினை மேற்கொள்பவர்களுக்கு கலங்கரை விளக்கமாகவும் வழிகாட்டியாகவும் அமையும் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

எனது பாடநூல்கள் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் மட்டுமல்ல அன்பிற்குரிய ஆர்வலர்களினதும் அணைகடந்த வெள்ளம் போன்ற ஏகோபித்த ஆதரவினையும் வரவேற்பினையும் பெற்றதனால் இவற்றிற்கு பெருந் தட்டுப்பாடு இலங்கையின் பல இடங்களிலும் ஏற்பட்டதை நானறிவேன். இனிவரும் காலங்களில் இறையருளால் இந்நிலை ஏற்படாது என்பதனையும் உறுதிபட உரைக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிய பொறுப்பொன்றை நான் சுமக்கும் இவ்வேளை, தோளோடு தோள் நின்று துணைபுரியும் அன்பு நெஞ்சங்கள் பல. - நூல் விநியோகத்திலும் நூல் வெளியீட்டிலும் அகில இலங்கை ரீதியிலும், சர்வதேச ரீதியாகவும் முத்திரை பதித்த பூபாலசிங்கம் புத்தகசாலையும், அதன் உரிமையாளர் திரு. பூ.ஸ்ரீதரசிங் அவர்களும் என் நன்றிக்கு உரியவர்கள். இவரின் ஆலோசனைகளும் ஆதரவும் என்னால் என்றும் மறக்க முடியாதவை.

என் எண்ணத்தைக் கொடுத்தால் நல்லரும் வண்ணமாக்கும் வல்லமை கைவரப் பெற்றவர்கள் என் அன்புக்கும் பாசத்திற்கும் உரிய தண்ணம் தங்கிய உள்ளம் கொண்ட திரு. திருமதி. சு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள். அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

என்றென்றும் ஆக்கமும் ஊக்கமும் தந்து எனது நூல்களைப் பெற்றுப் பயன் பெறும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் என் நன்றிகள் உரித்தாகுக.

S.S. **ஆனந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. இலங்கையில் தமிழ்ச் சிறுகதை ........ 1
2. புதுமைப்பித்தன் ........ 11
3. ஒருநாள் கழிந்தது ........ 16
4. குறிப்புகள் - ஒருநாள் கழிந்தது ........ 27
5. கு. ப. ராஜகோபாலன் ........ 30
6. கனகாம்பரம் ........ 34
7. குறிப்புகள்- கனகாம்பரம் ........ 41
8. கு. அழகிரிசாமி ........ 43
9. தவப்பயன் ........ 46
10. குறிப்புகள் - தவப்பயன் ........ 54
11. இலங்கையர்கோன் ........ 56
12. வெள்ளிப் பாதசரம் ........ 59
13. குறிப்புகள் - வெள்ளிப் பாதசரம் ........ 66
14. சி. வைத்தியலிங்கம் ........ 68
15. பாற்கஞ்சி ........ 70
16. குறிப்புகள் - பாற்கஞ்சி ........ 75
17. ஆர். ஷண்முகசுந்தரம் ........ 78
18. நாகம்மாள் ........ 80
19. குறிப்புகள் - நாகம்மாள் ........ 161
20. மாதிரி வினாக்கள் ........ 165


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

# இலங்கையில் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிப் போக்குப் பற்றியதொரு மேலோட்டமான நோக்கு

சிறுகதைகள் பல்வேறுபட்ட தன்மைகளிலே இருப்பதனால் அவற்றிற்கு உறுதியான வரைவிலக்கணம் கூற முற்பட்ட கீழைத்தேசத்தவரும், மேலைத் தேசத்தவரும் உறுதியான வரைவிலக்கணம் கூறமுடியாது நின்றதோடு அதனைக் காலத்திற்குக் காலம் மாற்றியும் அமைத்தனர். பொதுவான தன்மையிலே சொல்வோமாயின் நாவலிலும் பார்க்க அமைப்பிற் சிறியதாயும், ஒருமைப்பாடுடைய அமைப்பு உடையதாயும், இறுக்கம், கட்டுக்கோப்பு உடையதாயும் அமைவது சிறுகதை எனலாம்.

சிறுகதை செம்மையான பாத்திர வார்ப்புடையதாக அமைதல் வேண்டும். மற்றும் சொற்சிக்கனமும் இன்றியமையாததாகும். சுருங்கச் சொல்வதாயின், எடுத்த கதைப் பொருள் உணர்ச்சி புலப்பட விளக்கப்பட்டிருத்தல் வேண்டும். இன்னும் கூடுதலாக விளக்கியிருப்பினும் பயன் மிகுந்திருக்காது எனச் சொல்லத்தக்கவாறு அளவான விளக்கம் வேண்டும். மேலும், உயிர்த் துடிப்பும், கதைக்கேற்றதான ஆரம்பமும், முடிவும், திட்டமும் இருத்தல் வேண்டும். இவ்வம்சங்கள் நேரிய முறையிலே அமைக்கப்பட வேண்டும். இவற்றினைச் சிதைக்கும் வேறு அம்சங்களை இணைக்கக்கூடாது.

சிறுகதை அளவு சிறியதாயிருப்பதானால், கட்டுப்பாடுகள் உடையதாய் விளங்குகின்றது. இது ஒரே முறையில் படித்து முடிக்கக்கூடியதாயும் ஒரேயொரு விளைவு அல்லது ஒரேயொரு பயனுடையதாயும், கதையில் வரும் சில நிகழ்ச்சிகளும் பாத்திரங்களும் ஒன்றுடனொன்று பின்னப் பட்டனவாயும் அமைதல் வேண்டும். சிறுகதையில் நீண்ட வருணனை இடம்பெறக்கூடாது. மற்றும் சிறுகதையின் கருவுக்கோ உணர்ச்சிக்கோ தொடர்புபடாத வருணனை இடம்பெறக்கூடாது. சிறுகதை, அளவில் சிறிய கதையாக இருந்தாலும், அதனுள் ஒரு முழுமை இருக்கவேண்டும். எல்லாம் கூறப்பட்டுள்ளன என்ற மனநிறைவு வாசகருக்கு ஏற்பட வேண்டும். சிறுகதையின் தொடக்கம் வாசகரின் ஆர்வத்தையும் கற்பனையையும் தூண்டக்கூடிய வகையில் அமைந்திருத்தல் இன்றியமையாதது.

சிறுகதை என்ற இலக்கியவகை உலகில் தோன்றி வளர்ந்து இற்றைக்கு 125 ஆண்டுகள் ஆகின்றன. புனைகதை இலக்கியத்தின் ஒரு பிரிவான சிறுகதை இலக்கியம் குறுகிய காலப்பகுதியில் தமிழிற் தோற்றம் பெற்றதா-யினும், அக்காலப் பகுதிக்குள் அது கண்ட வளர்ச்சி மிகவும் முக்கியமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேனாட்டார் வருகையினால் ஏற்பட்ட சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களும், ஆங்கிலக் கல்வி முறைமையின் அறிமுகமும், சஞ்சிகைகள், பருவ இதழ்களின் தோற்றமும் தமிழில் சிறுகதை என்ற இலக்கிய வடிவம் உள்வாங்கப்படுவதற்கான சூழலமைவுகளை ஏற்படுத்தின.

மேலைநாட்டில் சிறுகதைகள் ஓர் தனி இல்க்கியமாக வளர்வதைக்கண்டு, தமிழ்மொழியிலும் அவ்வாறு ஒரு நிலைமை ஏற்படவேண்டுமென்று ஆர்வங் கொண்டு பாடுபட்டவர் வ.வே.சு.ஐயர் அவர்கள். தமிழ்ச்சிறுகதையின் ஆரம்பகாலப் போக்கினைத் துல்லியமாக எடுத்துக் காட்டுவதற்கான உதாரணமாக, வ.வே.சு.ஐயரின் 'மங்கையற்கரசியின் காதல்' என்ற கதையினைக் குறிப்பிடலாம். தமிழ்ச் சிறுகதையின் தந்தையாகப் போற்றப் படும் வ.வே.சு.ஐயருக்கு முன்பும் (சிறிய) கதைகள் எழுதப்பட்டு வந்துள்ளன. வீரமாமுனிவர் எழுதிய 'பரமார்த்தகுரு கதை' உரைநடையில் படைப்பிலக்கியம் தோன்ற அடித்தளமிட்டது. 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த வீரசாமிச் செட்டியார் எழுதிய 'விநோதரச மஞ்சரியும்', தாண்டவராய முதலியார் மொழிபெயர்த்து எழுதிய 'பஞ்சதந்திரமும்' வசன இலக்கியத்திற்குத் தூண்டுகோலாக அமைந்தன. வங்காளத்தில் தாகூர் எழுதிய சிறுகதைகளும் தமிழ்நாட்டு அறிஞர்களுக்கு இவ்வடிவம் தொடர்பான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தின எனலாம்.

இலங்கையில் ஆங்கிலேயர் வருகையினால் அரசியல், சமூக, பண்பாட்டு, பொருளாதாரத் துறைகளிலே பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. ஆங்கிலக் கல்விமுறை ஏற்பட்டது. இதன் காரணமாக மேலைநாட்டு இலக்கியத் தொடர்பு ஏற்பட்டது. மற்றும் மேலை நாட்டினரால் தமிழ்நாட்டில் ஏற்பட்ட சமய சமூகத் தாக்கமும் இலங்கையில் பிரதிபலித்தது. இக்கால கட்டத்தில், குறிப்பாக, 1933 காலப்பகுதிகளில் 'சுதந்திரச்சங்கு', 'தேசபக்தன்', 'மணிக்கொடி', 'ஆனந்தவிகடன்', 'கலைமகள்', 'சுதேசமித்திரன்', 'தமிழ்நாடு' முதலிய பத்திரிகைகள், சஞ்சிகைகள் இலங்கைக்கு வரத்தொடங்கின. தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் சிறுகதைக்கு முன்பு நாவல்களே தோன்றின. அதற்குப் பின்னரே சிறுகதைகள் எழுந்தன. இக்காலப்பகுதிகளிலே தமிழ் நாட்டின் பத்திரிகைகள், சஞ்சிகைகளின் தாக்கத்தினால், இலங்கையில் சிறுகதை வளர்ச்சி முனைப்புப் பெறத் தொடங்கியது.

இக்காலப் பகுதியிலே சோ.சிவபாதசுந்தரம், சி.வைத்தியலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தன் ஆகியோர் சிறுகதை எழுதும் முயற்சியில் ஈடுபட்டனர். ஈழத்துச் சிறுகதைகளைப் பொறுத்தவரையில் அதன் முன்னோடிகளாக அமைபவர்களும் இவர்களே.

'வெள்ளிப் பாதசரம்' என்னும் தொகுதியாக இலங்கையர்கோனின் கதைகள் வெளிவந்தன. இலங்கையில் தமிழ்ச் சிறுகதை உலகில் இலங்கையர்கோனுக்கு தனியான இடமுண்டு என்பதை யாராலும் மறுக்க முடியாது. நவீன இலக்கிய வடிவமான சிறுகதை தமிழில் வேர்கொள்ளத் தொடங்கிய காலமான முப்பதுகளில் சிறுகதைகள் எழுதத் தொடங்கியவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையர்கோன். இக்காலப்பகுதியில்தான் தமிழ்நாட்டில் மணிக்கொடிக் குழுவினர் தமிழ்ச் சிறுகதைகளுக்குப் புதிய வளமும், வடிவமும் கொடுத்துக் கொண்டிருந்தனர். புதுமைப்பித்தன், கு.ப.ரா., அழ்கிரிசாமி, மௌனி முதலான முதிர்ச்சி பெற்ற எழுத்தாளர்களின் கதைகள் இக்காலத்திலே வெளிவந்தன. இவை இலங்கையர்கோனைச் சிறுகதை எழுதத் தூண்டின. இவரின் முதற் சிறுகதையான 'மரிய மதலேனா' என்ற சிறுகதை, 'கலைமகளில்' வெளிவந்தபோது பதினெட்டு வயது இளைஞனாக இருந்தார். வளரிளம் பருவத்திலே கலைகளில் மூழ்கியிருந்த இலங்கையர்கோன் தான் அவ்வாறு சென்றதன் காரணத்தை 1958இல் மார்கழி 'கலைச்செல்வி' இதழில், "என்னுடைய இளம் வயதிலே எத்தனையோ கனவு கண்டேன். அவற்றுள் ஒன்றுதான் சிறுகதை எழுதவேண்டும் என்பது" என்று குறிப்பிடுகின்றார்.

'கலைமகள்', 'சூறாவளி', 'மணிக்கொடி' முதலிய தமிழ்நாட்டுப் பத்திரிகைகளில் ந.சிவஞானசுந்தரம் என்னும் இயற்பெயர் கொண்ட இலங்கையர்கோனின் ஆரம்பகாலக் கதைகள் வெளிவந்தன. ஆரம்பகாலக் கதைகள், கதை எழுதவேண்டும் என்ற அவாவினால் தூண்டப்பட்ட படைப்புகளாக இருந்தமையால் அவற்றில் தரமான சிறுகதை ஒன்றிற்கு இருக்கவேண்டிய பண்புகள் பலவற்றையும் இனங்காண முடியவில்லை. பின்னாளில், கு.ப.ரா., புதுமைப்பித்தன் போன்றோரின் பாதிப்பினால் முதிர்ச்சி அடைந்த இவர் தன் சிறுகதைகளில் உருவ்வமைதியையும், அதனால் தனக்கென ஒரு தனித் தன்மையையும் பேணத் தொடங்கினார். இத்தகைய முதிர்ச்சி, இவரது கதைகளில் தமிழ்ச் சிறுகதை இலங்கையிற் கண்டுவந்த மாற்றங்களைப் புலப்படுத்தியதோடு, அவை இலங்கையின் யாழ்ப்பாண மண்வாசனை வீசும் கதைகளாகவும் வெளிவரத் தொடங்கின. 'ஈழகேசரி', 'ஈழநாடு', 'தினகரன்', 'வீரகேசரி' போன்ற பத்திரிகைகளில் வெளிவந்த கதைகள் இவரது அனுபவ முதிர்ச்சியினை வெளிக்கொணருகின்றன.

இலங்கையர்கோனின் சிறுகதைப் படைப்புகளை நாம் இருவகையாக நோக்கலாம். வரலாற்றுக் கதைகளாக ஒரு பகுதியையும், சமூகக்கதைகளாக மறுபகுதியையும் பிரிக்கலாம். வரலாற்றுக் கதைகளாக 'மரிய மதலேனா', 'கடற்கோட்டை', 'மணப்பரிசு', 'சிகிரியா', 'அனுரா', 'யாழ்பாடி' என்பவற்றைக் கூறலாம். சமூகக் கதைகளாக 'வெள்ளிப்பாதசரம்', 'மச்சாள்', 'ஒருநாள்', 'துறவியின் துறவு', 'சதிர்க்காரி', 'தாய்', 'ஓரிரவு', 'தாழைமர நிழலிலே', 'தந்தி வந்தது', 'முதற்சம்பளம்', 'வஞ்சம்' போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவர் 'மேனகை' என்னும் புராணக் கதையையும் எழுதியுள்ளார்.

பழைய வரலாற்றுச் சம்பவங்கள் புராண இதிகாசங்களில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் மனிதனின் மென்மையான உணர்வுகள், மன உணர்வுப் போராட்டங்கள், ஆண்-பெண் உறவு, கிராமியப் பண்புகள் இலங்கையர்கோனின் சிறுகதைகளில் முக்கியம் பெற்றுள்ளன. 'வஞ்சம்' என்னும் சிறுகதை ஆண்-பெண் உறவு பற்றிய மிகச் சிறந்த சிறுகதை. இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவல்களையும், ஒரு கோழியையும் வைத்துச் சமூகத்தில் காணப்படும் ஆண்-பெண் பாலுறவு பற்றிச் சிறப்பாக வெளிக்கொணருகின்றார்.

சி.வைத்தியலிங்கம் இலங்கையர்கோனின் உறவினர். அவரைப்போலவே ஆங்கிலக் கல்வி கற்று உயர் உத்தியோகம் பார்த்தவர். இதனால் சிறுகதை பற்றியும், அதன் தன்மை பற்றியும் நன்கு தெரிந்திருந்தார். உத்தியோக ரீதியாக 1930களில் கொழும்பு வந்து தன்னை இலக்கியரீதியான சூழலிற்குப் புடம்போட வைத்தார். 'ஆனந்தவிகடன்', 'மணிக்கொடி', 'கலைமகள்', 'திரிவேணி', 'கிராம ஊழியன்' போன்ற பத்திரிகைகளை வாசிக்கும் வாய்ப்பு அங்கு அவருக்கு ஏற்பட்டது. இதனால் அன்றைய இலக்கியவான்களான புதுமைப்பித்தன், கு.ப.ரா., ந.பிச்சமூர்த்தி, க.நா.சு., சிதம்பர சுப்பிரமணியம் போன்றோரின் எழுத்துக்களின் பரிச்சயம் கிட்டியது. அத்தோடு, கொழும்பில் வசித்த சோ.சிவபாதசுந்தரம், சோ.நடராசா, குல.சபாநாதன், ஆ.குருசாமி போன்றோருடனான தொடர்பும் ஏற்பட்டது. இவை பல்வேறு வகைகளிலே அவருக்கு இலக்கிய உத்வேகத்தைக் கொடுத்தது. கொழும்பிலிருந்து நகர வாழ்க்கையை இவர் அனுபவித்தபோதும், தான் சிறுவயதில் கொஞ்சிக் குலாவிய தனது சொந்த ஊரான ஏழாலையை அவரது மனம் நாடியது. அத்தகைய ஒரு கிராமப் பின்னணியை வைத்தே இவரது 'பாற்கஞ்சி' படைக்கப்பட்டுள்ளது. மற்றும் இவர் யாழ்ப்பாணப் பிரதேசங்களை மட்டும் கதை நிகழ்வு களமாகக் கொள்ளாது, சிங்களக் கிராமங்களையும் கதை நிகழ்வு களமாகக் கொண்டுள்ளார். இதற்கு இவரின் 'நெடுவழி' என்ற சிறுகதையை உதாரணமாகக் கொள்ளலாம்.

முன்னையோரைப் போலவே இவரும் சமூகக்கதைகளையும், வரலாற்றுக் கதைகளையும் எழுதினார். 'நந்தகுமாரன்', 'தியாகம்', 'பூதத்தம்பி கோட்டை' ஆகியன வரலாற்றுக் கதைகளாகும். 'களனி கங்கைக் கரையில்', 'ஏன் சிரித்தார்', 'பார்வதி', 'அழியாப் பொருள்', 'புல்லுமலையில்', 'உள்ளப்பெருக்கு' முதலான கதைகள் ஆண்-பெண் உறவு பற்றிய சித்திரிப்புக் கொண்டவை.

இவர், இலக்கிய வாழ்விற் பெரிதும் மனம் ஒன்றிப் போய் இருந்தும் குறைவாகவே எழுதியுள்ளார். இவர் எழுதிய கதைகள் முப்பதைத் தொடாது. இவர் 'என் காதலி' என்றொரு உருவகப்பாணியிலான தமிழோடு தனக்குள்ள உறவு பற்றிய கதையையும் எழுதியுள்ளார். இவரது ஒரேயொரு சிறுகதைத் தொகுதி 'கங்கா கீதம்' என்ற பெயரில் 1990இல் வெளியாகியது.

இலங்கைத் தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தின் முன்னோடி எழுத்தாளர்களில் ஒருவராக மதிக்கப்படுபவர் அமரர் க.சம்பந்தன் (திரு. திருஞான சம்பந்தன்) அவர்கள். இவர் இருபதுக்கும் அதிகமான சிறுகதைகளை எழுதியுள்ளார். 'கலைமகள்', 'கிராம ஊழியன்', 'மறுமலர்ச்சி', 'ஈழகேசரி' முதலான சஞ்சிகைகளில் இவரது சிறுகதைகள் வெளிவந்துள்ளன. இவரது சிறுகதைத் தொகுதியொன்று அண்மையில் வெளிவந்துள்ளது. 'சாகுந்தல காவியம்' சம்பந்தனின் கவித்துவத்திற்குச் சான்று பகர்கின்றது. 'மனிதன்', 'வீதி' என்பன சம்பந்தனின் சிறப்பான சிறுகதைகளாகும். பழைய வரலாற்றுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவங்கள், மனிதனின் மென்மையான உணர்வுகள், மன உணர்வுப் போராட்டங்கள், ஆண்-பெண் உறவு, கிராமியப் பண்புகள் முதலியன இவரது சிறுகதைகளில் முக்கியத்துவம் பெறுகின்றன.

மேலே இதுவரை குறிப்பிட்ட இலங்கைச் சிறுகதை முன்னோடிகளைத் தொடர்ந்து 1940களில் சொக்கன், இராஜநாயகம், அ.ந.கந்தசாமி, வரதர், சு.நல்லையா, அ.செ.முருகானந்தம், சு.வேலுப்பிள்ளை, வ.அ.இராசரத்தினம், தாழையடி சபாரத்தினம், கனக செந்திநாதன், போன்றோர் சிறுகதை எழுதும் கலையில் தடம் பதித்தனர். 1940 தொடக்கம் 1950 வரையான காலப் பகுதியை இலங்கைத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியின் மறுமலர்ச்சிக்காலம் எனலாம். இவ்வாறு மறுமலர்ச்சி ஏற்பட்டமைக்குக் காரணம் இந்தியாவில் வீறுநடை போட்டுக்கொண்டு செயற்பட்ட காந்தீய இயக்கமும், தமிழ்நாட்டில் வெளியாகிக் கொண்டிருந்த பத்திரிகைகளும், அவற்றின் இலக்கியப் பரிசீலனைகளும், தமிழ்நாட்டின் மறுமலர்ச்சிச் சிந்தனைகளும், மணிக்கொடிப் பத்திரிகை போன்றவற்றின் தாக்கமும் ஆகும். 'ஈழகேசரி', 'வீரகேசரி' போன்ற பத்திரிகைகள் 1930களில் மறுமலர்ச்சிக் கருத்துக்களுக்கு வரவேற்பளித்து அவற்றினை வெளியிட்டன.

தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம் 1943ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது. அதுவும் பல மாறுதல்களை ஏற்படுத்தியது. காலத்திற்கு பொருந்தாத பழைய மரபுகளைத் தவிர்த்தும், நவீன சிந்தனை மறுமலர்ச்சி கருத்துக்களை வரவேற்றும் பண்டித மனப்பான்மையை எதிர்த்தும், இலட்சிய வேகத்திற்கும், இலக்கிய வேட்கைக்கும் முக்கியத்துவமளித்தும் இலங்கைத் தமிழ்ச் சிறுகதை உலகினை வளம்படுத்த 1945இல் ஆரம்பிக்கப்பட்ட 'மறுமலர்ச்சி' என்னும் பத்திரிகை உறுதுணையாயிற்று. மேற்குறிப்பிட்ட விடயங்கள் இலங்கைத் தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களை புதியதோர் அருவியில் கலந்து செல்நெறியில் வீறுநடை போட வைத்தது. இந்நவீன பரம்பரையின் தோற்றத்தினால் ஈழத்துச் சிறுகதை உருவத்திலும், உள்ளடக்கத்திலும் புதிய உத்வேகத்துடன் ஆழமாகக் கால் பதிக்கத் தொடங்கியது. இலங்கை-யையே களமாகக் கொள்ள வேண்டும் என்றும், மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சனைகளே பிரதிபலிப்புக்களாக அமைய வேண்டுமென்றும், சீர்திருத்தத்திற்கும், சமூக முன்னேற்றத்திற்கும் பயன்பட வேண்டும் என்ற கருத்துக்களும் இக்காலப் பகுதியில் இலங்கைத் தமிழ்ச் சிறுகதைகளில் முனைப்புப் பெறத் தொடங்கலாயின. இக்காலத்தில், அதாவது, 1940க்கும் 1950க்கும் இடைப்பட்ட மறுமலர்ச்சிக்கால எழுத்தாளர்களே தென்னிந்திய மரபினைப் பின்பற்றுவதை விடுத்து, சொந்தமான தனித்துவமான மரபினை, இலக்கிய மரபினை ஏற்பட வழிசமைத்தவர்களாக உள்ளனர்.

இந்தச் சிறுகதை எழுத்தாளர்கள் சிறுகதைக்ளின் மூலம் சமூகத்தைச் சீர்படுத்தவும், பண்படுத்தவும் புதியதோர் சமூகத்தைத் தோற்றுவிக்கவும் இதயசுத்தியுடன் புறப்பட்டனர். பழைய போக்குகளிலிருந்து முற்றுமுழுதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம் பெற்றபோதும் ஆரம்பகாலகட்டச் சிறுகதைகளிலிருந்து, அதிகளவு மாறுபட்ட தன்மைகளிலிருந்தே இக்கால அறிஞர்கள் சிறுகதைகளைப் படைத்தனர். இவர்கள் தமது சிறுகதைகளை சமூகப் பிரச்சனைகள் உலாவும் களமாகக்கொண்டு பயன்படுத்த முனைந்ததை இவற்றின்மூலம் காணக் கூடியதாகவுள்ளது. இக்காரணங்களினால் சிறுகதை இலக்கியத்தின் நோக்கிலும் போக்கிலும் பெரிய மாற்றங்கள் ஏற்படலாயின. இவ்வகையில் வரதர், அ.ந.கந்தசாமி, வ.அ.இராசரத்தினம், அ.செ.முருகானந்தம் ஆகியோரின் சிறுகதைகள் குறிப்பிடத்தக்கன. மேற்குறிப்பிட்ட எழுத்தாளர்கள் தமது சிறுகதைகளிலே பெண்விடுதலை, ஏழைமக்களின் வாழ்க்கைப் போராட்டம், பழைய சம்பிரதாய மரபுகள், சடங்கு சம்பிரதாயங்கள் முதலானவற்றை வெளிப்படுத்தினார். அவ்வாறான விடயங்களுக்கு அவர்கள் தீர்வுகளினையும் அவற்றில் முன்வைத்தனர்.

அ.ந.கந்தசாமி, அ.செ.முருகானந்தம், வ.அ.இராசரத்தினம் போன்றோர் கிழக்கிலங்கை, கொழும்பு, மலையகம் முதலிய பிரதேசங்களை கதைக் களமாகக் கொண்டதுடன், யாழ்ப்பாணத்தைக் களமாகக் கொண்ட கதைகளையும் படைத்துள்ளனர். கனக. செந்திநாதன் அவர்களின் சிறுகதைகளில் யாழ்ப்பாண கந்தபுராணக் கலாசாரம், மண்வாசனை, பழமைப் பண்பு முதலானவை தனித்துவமாக ஒளிருகின்றன. கனக.செந்திநாதன் மண் வாசனை கொண்ட பழமை பேணும் பண்பினராக இருந்தபோதும், புதுமையை வெறுத்தொதுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிழங்கிலங்கையைக் களமாகக் கொண்டு, அம்மக்களின் வாழ்க்கைப் பிரச்சனைகளை கருவாகக் கொண்டு, வ.அ.இராசரத்தினம் சிறுகதைகள் பலவற்றை எழுதியுள்ளார். சமய தத்துவ புராணக் கருத்துகள், மனித இயல்புகள், வாழ்க்கை முரண்பாடுகள் முதலிய அம்சங்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. சொக்கனின் சிறுகதைகளில் துன்படையும் மனிதனின் வேதனைக்குரல் மேலோங்கி ஒலிக்கிறது. வரதரின் கதைகளில் காந்தீயக் கருத்துகளும், பெண் விடுதலைக் கருத்துகளும் சீதனக் கொடுமைகளும் மேலோங்கி நிற்கின்றன. பெண்மை, வீரம், கற்பு, காதல் போன்றவற்றிற்கு தமது கதைகளின் மூலம் வரதர் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்தி உள்ளார்.

பெரும்பாலும் சமூகத்தைப் பிரதிபலிப்பனவாகவும் சிக்கல்கள், முரண்பாடுகள் அற்றவையாகவும், கல்வியின் ஆதிக்கம் அதிகம் ஊன்றி இருப்பதாகவும், தாழையடி சபாரத்தினத்தின் சிறுகதைகள் அமைந்துள்ளன. மறுமலர்ச்சிக்கால எழுத்தாளர்களின் ஆக்கங்கள், பின்னர்வரும் காலப் பகுதிகளில் முற்போக்குக் கருத்து மேலோங்குவதற்கும், இலங்கைக்கென தனித்துவமான இலக்கியப் பாரம்பரியம் உருவாகுவதற்கும், யதார்த்தப் பண்பு உயர்வடைவதற்கும் வழிகாட்டின.

1947இல் இந்தியா சுதந்திரம் அடைந்தது. அதனால் அங்கு அரசியல், சமூக, பொருளாதாரப் பண்பாட்டுத் துறைகளில் மாற்றம் ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைத் தொடர்ந்து, 1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்தது. சுதந்திரம் ஏற்பட்டு, ஏறக்குறைய இரண்டு வருடங்களுக்குள் இலங்கையில் பாரிய மாற்றங்களேதும் ஏற்படவில்லை.

1946இல் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் அமைக்கப்பட்டது. இச்சங்கம் 1956இலேயே புதிய செயல்வேகம் பெற்று இலங்கைத் தமிழ் இலக்கியத்தைச் செம்மைப்படுத்தி நெறிப்படுத்தத் தொடங்கியது. இலங்கைச் சிறுகதை வளர்ச்சியிலே 1956 தொடக்கம் 1960 வரையான காலப்பகுதி முக்கிய கட்டமாக உள்ளது. அடுத்ததாக, இலங்கைக்கு தமிழ்நாட்டிலிருந்து வந்து சென்ற கி.வா.ஜகந்நாதன், பகீரதன், நா.பார்த்தசாரதி போன்றோர் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களுக்குக் கொடுத்த அறிவுரைகளும், விளக்கங்களும், அவர்களின் தொடர்பும் இலங்கைத் தமிழ்ச் சிறுகதை-களுக்கு புதிய வழி சமைத்தது.

அடுத்ததாக, இலங்கையிலே வெளிவந்த சஞ்சிகைகளும், நடைபெற்ற எழுத்தாளர் மாநாடுகளும், சிறுகதை வளர்வதற்கு உதவின. ‘தினகரன்’, ‘தேசாபிமானி’, ‘மல்லிகை’, ‘சுதந்திரம்’, ‘பாட்டாளி’, ‘பாரதி’ போன்றவை இங்கு குறிப்பிடக்கூடியவை. இக்காலங்களில் அ.முத்துலிங்கம், நா.க.தங்கரத்தினம், பித்தன், சிற்பி, என்.எஸ்.எம். ராமையா, கே.ரகுநாதன், காவலூர் இராசதுரை, நீர்வை பொன்னையன், செ.கணேசலிங்கம், டொமினிக் ஜீவா, டானியல், எஸ்.அகஸ்தியர், எஸ்.பொன்னுத்துரை முதலியோர் சிறுகதைகளை எழுதி-னார்கள்.

இலங்கைத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் 1960 காலப்பகுதி குறிப்பிடக் கூடியதாகும். சிறுகதைகளோடு மட்டும் நின்ற எழுத்தாளர்கள் நாடகம், நாவல் போன்றவற்றை எழுதும் முயற்சியிலும் ஈடுபடத் தொடங்கினர். இதனால் சிறுகதையின் களமும் விரிவடையத் தொடங்கியது. மேலும், 1960களில், பல்கலைக்கழகத்திலும் சிறுகதைகளைப் படைக்கும் முயற்சிகளில் பலர் ஈடுபட்டனர். நீர்கொழும்பு, மாத்தளை, மினுவாங்கொடை, இரத்தினபுரி, குருநாகல், அநுராதபுரம் போன்ற சிங்கள மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளிலிருந்து முஸ்லிம் இளைஞர்கள் இளமைத் துடிப்போடும், உத்வேகத்தோடும் சிறுகதைகளை எழுதப் புறப்பட்டனர். இவர்களின் முயற்சிகளுக்கு மாத்தளை மக்கள் இலக்கியவட்டம், திக்குவல்லை எழுத்தாளர் சங்கம் போன்றவைகளும் சஞ்சிகைகளும் தோள் கொடுத்தன. மற்றும் பல ஆண்டுகளாக விடாமுயற்சியுடன் பாடுபட்டுவரும் ‘மல்லிகை’யும் பெரும்பங்காற்றியது; ஆற்றி வருகின்றது.

1960களில் எழுதத்தொடங்கியவர்களுள் செங்கைஆழியான், தெணியான், செ.யோகநாதன், கே.வீ.நடராசன், நெல்லை.க.பேரன், சாந்தன், செம்பியன் செல்வன், மு.தளையசிங்கம், செ.கதிர்காமநாதன், மருதூர்க்கொத்தன், புதுமைப்பிரியை, க.சதாசிவம், பெனடிக்ற்பாலன், குந்தவை, பவானி, நந்தி முதலியோர் விதந்து குறிப்பிடக்கூடியவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்வைப் பொன்னையனின் 'மேடும் பள்ளமும்', டொமினிக் ஜீவாவின் 'தண்ணீரும் கண்ணீரும்', 'பாதுகை', 'சாலையின் திருப்பம்', கணேச லிங்கத்தின் 'சங்கமம்', 'ஒரேயினம்', 'நல்லவன்', டானியலின் 'உலகங்கள் வெல்லப்படுகின்றன', இரகுநாதனின் 'நிலவிலே பேசுவோம்' முதலியவை தொழிலாளர் போராட்டம், தீண்டாமை, வறுமை, சமூக ஏற்றத்தாழ்வுகள், சுரண்டல் ஆகியவற்றைப் பொருளாகக் கொண்டு எழுதப்பட்டவை.

இவற்றைவிட மலைநாட்டு மக்களின் வாழ்க்கை நிலைகளைப் பிரதிபலித்தும், முஸ்லிம் மக்களின் வாழ்க்கை நிலைகளைப் பிரதிபலித்தும் சிறுகதைகள் எழுதப்பட்டன. கே.வி.நடராசனின் 'யாழ்ப்பாணக் கதைகள்', நந்தியின் 'ஊர் நம்புமா?' அ.முத்துலிங்கத்தின் 'அக்கா', வ.அ.இராச-ரத்தினத்தின் 'தோணி' போன்றவை மனிதாபிமான உணர்வையும், சமுதாய வாழ்வின் மேம்பாடுகளையும் எடுத்துக்காட்டுவனவாக எழுதப்பட்டுள்ளன.

மலையகத் தொழிலாளர்களின் துயரங்கொண்ட வாழ்க்கைப் போராட்டங்-களையும், பிரச்சனைகளையும் துன்பங்களையும் நேரடியான அனுபவத்தின் ஊடாகப் பெற்ற இளைஞர்கள் மலையக இளம் சிறுகதை எழுத்தாளராக 1960 களின் பிற்பகுதிகளில் ஈடுபடத் தொடங்கினர். இவர்களின் வருகைக்கு முன்பும் மலையகத் தொழிலாளர் பிரச்சனைகளை மையமாகக்கொண்டு, பல கதைகள் எழுதப்பட்டுள்ளன. திருச்செந்தூரன், சாரல்நாடல், மலைசெல்வன், பூரணி, என்.எஸ்.எம்.இராமையா, மாத்தளை வடிவேலன், மலரன்பன், நூரளை சண்முகநாதன், பொ.கிருஷ்ணசாமி, பன்னீர்ச்செல்வன், மாத்தளை சோமு, தெளிவத்தை ஜோசப் முதலானோர் மலையக எழுத்தாளர்களுள் குறிப்பிடக் கூடியவர்களாவர்.

1970களில் சிறுகதை எழுத்த் தொடங்கியவர்களுள், பின்வருவோர் குறிப்பிடக் கூடியவர்கள். குப்பிளான் ஐ.சண்முகம், நீள்கரைநம்பி, சௌமினி, க.நவம், சபா.ஜெயராஜா, எம்.எம்.நூர்டீன், துரை.சுப்பிரமணியன், அமுதன், சசி கிருஷ்ணமூர்த்தி, அ.பாலமனோகரன், அ.ச.அப்துல்சமது, அன்ரனி ஜீவா, மு.கனகராசா, எம்.எல்.எம்.மன்சூர், எம்.எச்.எம்.ஷம்ஸ், சட்டநாதன், ப.ஆப்டீன், செ.கந்தசாமி, வை.மு.திருநாவுக்கரசு, சுதாராஜ், எஸ்.ஜெகநாதன், செந்தாரகை, அ.யேசுராசா, எஸ்.எம்.இக்பால், எஸ்.பாக்கியசாமி, மருதூர் வாணன், என்.கே.மகாலிங்கம், சி.சண்முகநாதன், திக்குவல்லை கமால், லெ.முருகபூபதி,, வன்னியூர்க்கவிராயர், போன்றோர் குறிப்பிடக்கூடியவர்கள்.

1980 காலப்பகுதியில் வெளிவந்த சிறுகதைகளில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. முற்போக்குச் சிந்தனைகள் அதிகம் முக்கியத்துவம் பெற்றன. சமூகத்தை முன்னேற்றுபவையாகவும், சமூக பொருளாதார பண்பாட்டுப் பிரச்சனைகளைப் பிரதிபலிப்பனவாகவும், யதார்த்தத்தன்மை கொண்டன-வாகவும், இச்சிறுகதைகள் அமைந்தன.

சமூகத்திலே காணப்பட்ட சீதனப்பிரச்சனை, சாதிப்பிரச்சனை, அடக்கு முறை போன்றவை சிறுகதை எழுத்தாளர்களால் எடுத்தியம்பப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் மீனவர்கள், விவசாயிகள் போன்றவர்களின் பிரச்சனைகளையும் தமது கதைகளில் எழுதினர். இக்காலப்பகுதியில் ரஞ்சகுமார், உமா வரதராசன், பார்த்திபன், கலாமோகன், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் போன்றோர் பல முயற்சிகளில் ஈடுபட்டனர்.

1990 காலகட்டத்தில் சந்திரா தியாகராசாவின் 'நிழல்கள்', உடுவை தில்லைநடராசனின் 'நிர்வாணம்', பத்மா சோமகாந்தனின் 'கடவுளின் பூக்கள்' போன்ற சிறுகதைத் தொகுதிகளும் உருப்பெற்றன. அத்துடன், 'வீரகேசரி', 'தினகரன்', 'சரிநிகர்', 'தினமுரசு' போன்ற பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் சிறுகதை வளர்ச்சியில் தம்மை அதிகமாக இணைத்துக்கொண்டன. அத்துடன், இலங்கையிலிருந்து வெளிநாட்டுக்குப் புலம்பெர்ந்து சென்றோர் வெளிநாடுகளிலிருந்து, புலம்பெயர்ந்தோர் சிறுகதைகள் என்று அவற்றிற்குப் பெயர் சூட்டி தமிழர்களின் பிரச்சனைகளையும், அபிலாஷைகளையும் ஏக்கங்களையும் கருப்பொருளாகக் கொண்டு, பல சிறுகதைகளை எழுதி வருகின்றனர். தற்பொழுது, 'தினமுரசு' பத்திரிகையில் ரூபராணியின் சிறுகதைகள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன. மற்றும் 'வீரகேசரி' போன்ற பத்திரிகைகளிலும் பல சிறுகதைகள் புலம்பெயர்ந்தோர் கதைகளாக வெளி வந்துகொண்டிருக்கின்றன. முருகபூபதியின் 'ஆண்மை', 'தவிப்பு', தேவகி இராமநாதனின் 'போயின போயின தனிமை', அருண்விஜயராணியின் 'கன்னி காதானங்கள்', சுசீந்தனின் 'புருஷவீதிகள்', கலாமோகனின் 'வெகுமை', கருணாமூர்த்தியின் 'தலையில் ஒரு நட்சத்திரம்' என்பன புகலிடம் நாடிச் சென்ற மக்களின் அவலநிலையை புலப்படுத்தும் கதைகளாக உள்ளன. சித்திரா நாராயணன் போன்றோர் இந்திய இராணுவத்தினரால் இலங்கையில் செய்யப்பட்ட கொடுமைகளை கருப்பொருளாகக் கொண்டும் பல சிறுகதைகளை எழுதியுள்ளனர்.

1997-98 காலப்பகுதிகளில் வெளிவந்த சிறுகதைகள் பலவும் 1994, 95, 96 காலகட்டங்களில் இலங்கைத் தமிழர்கள், சிங்கள இனவாதத்தினால் பட்ட துயரங்களையும் அவற்றினால் தமிழர் பண்பாடு சிதைக்கப்படுவதையும் பெருமளவு கருப்பொருளாக கொண்டு எழுதப்பட்டுள்ளன. அக்கதைகளிலே, இளைஞர்கள் மனரீதியாகவும், உடல்ரீதியாகவும் பாதிக்கப்படும் விடயங்கள் இடம்பெறுகின்றன. இளம் தமிழ்ப்பெண்கள் திருமணத்திற்காக வெளிநாட்டுக்குச் செல்வதும் அவர்கள் படுகின்ற துன்பங்களும் கதைகளாக அமைந்து காணப்படுகின்றன. மேலும், பல்கலைக்கழக மாணவர்களின் பகிடிவதைச் செயல்களை மையமாக வைத்தும் சிறுகதைகள் எழுதப்படுகின்றன. அண்மைக்காலங்களில் பல சிறுகதைகள் 'தினமுரசு', 'வீரகேசரி', 'தினகரன்', 'சஞ்சீவி', 'தினக்குரல்' போன்ற பத்திரிகைகளிலும் வெளியாகின்றன.

மேலும், சமகால நிகழ்வுகளைக் கருப்பொருளாகக் கொண்டு இஸ்லாமிய எழுத்தாளர்கள் பலரும் எழுதுகின்றனர். யாழ்ப்பாணத்தின் தற்காலச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலையைக் கூர்மையான நோக்குடன் அணுகி, அங்கு வாழும் புதிய இளந்தலைமுறையினரும் ஏராளமான சிறுகதைகளை எழுதி வருகின்றனர்.

இங்கு தரப்பட்டுள்ள 'இலங்கைத் தமிழ்ச்சிறுகதை பற்றிய மேலோட்டமானதொரு நோக்கு' என்னும் கட்டுரை உயர்தர வகுப்பு மாணவர்களைப் பெரிதும் வாசகர் வட்டமாகக்கொண்டு, மிகவும் எளிமையான நடையில் எழுதப்பட்டுள்ளதாகும்.

சிறுகதை பற்றியோ, பிரதேசரீதியான சிறுகதை பற்றியோ, சிறுகதை ஆசிரியரின் ஆளுமை பற்றியோ முழுமையாக நோக்குவதற்கு ஏற்ற இடம் இதுவல்ல. ஆயினும் சிறுகதை பற்றிக் கற்க முற்படும் மாணவ குழாத்தினருக்கான ஒரு அறிமுக விளக்கமாகவே இக்கட்டுரை கொடுக்கபட்டுள்ளது என்பதை உளத்திருத்துவீராக!

-ஆசிரியர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

# புதுமைப்பித்தன்

புதுமைப்பித்தன் என்ற புனைபெயர் கொண்டு அழைக்கப்படும் இவர் 'சிறுகதை மன்னன்' எனப் பலராலும் பாராட்டப்பட்டவர். 'புதுமைப்பித்தன்' என்று தான் வரித்துக்கொண்ட புனைபெயரிற்கு ஏற்ப தமிழ்ச்சிறுகதை உலகில் தனக்கென ஒரு தனியான இடத்தைப் பிடித்துக்கொண்டார். இலக்கியத்துறையில் இவருக்கு இருந்த புதுமை ஆர்வமும், படைப்புக் கலையில் இருந்த பித்தும் பாராட்டத்தக்கவை. இவை அவரது சிறுகதைகளிலே வெளிப்படுகின்றன. பி.ஏ. பட்டதாரியான இவருக்கு ஆங்கிலக் கல்வியின் மூலம் மேலைநாட்டு இலக்கியங்களில் பரிச்சயம் ஏற்பட்டது. தனது இறுதிக்காலத்திலே தன்னைத் தமிழ்ச் சினிமாத் துறையுடன் இணைத்து திரைக்கதை வசனமும் எழுதினார்.

இவர் தாசில்தார் சொக்கலிங்கத்தின் மகனாக 1906இல் பிறந்தார். இவரின் இயற்பெயர் விருத்தாசலம். இளமையிலேயே தன் தாயை இழந்திருந்த இவர் உண்மை அன்பும் ஆதரவுமற்று விரக்தியுற்றிருந்தார். 1931ஆம் ஆண்டு கமலாம்பாள் என்னும் பெண்ணைத் துணைவியாகக் கைப்பிடித்தார். ஆனால் இவர் செய்த பத்திரிகைத் தொழில் காரணமாக 10 வருடங்கள் மனைவியைப் பிரிந்திருக்கவேண்டிய துர்பாக்கியநிலை ஏற்பட்டது. தொழிலின் நிமித்தம் பல ஆண்டுகள் மனைவியைப் பிரிந்திருந்ததும் அவரைப் பாதித்தது. அவர் மனைவியின் கடிதங்களை எதிர்பார்த்துத் தவித்தமையையும், இருவரிடம் காணப்பட்ட பரஸ்பர அன்பையும் புதுமைப்பித்தன் மனைவிக்கு எழுதிய கடிதங்கள்மூலம் காணக் கூடியதாக உள்ளது. இவர் தனது ஒரே மகளான தினகரியின் மேல் மிகுந்த அன்புடையவராக இருந்தார். இவர் உயிர் துறப்பதற்கு முன் தன் மனைவியிடம், "கமலா! கடைசியாக இந்த உலகத்திற்கு நான் அளிப்பது 'ராஜமுத்திரை' படமும் என் தினகரியும்தான்" என்று கூறினாராம். தன்னைத் தொடர்ந்து வாட்டிய வறுமையினாலும் நோயாலும் பாதிக்கப்பட்டார். இவர் தனது துன்பங்களை மறப்பதற்கு இலக்கியத்திடம் தஞ்சம் புகுந்தார். உயிர் ஊசலாடும் வேளையிலும் அவர் நினைவு, பேச்சு யாவும் இலக்கியம் பற்றியே இருந்தது என்று அவரது நண்பர் சிதம்பரம் தன்னுடைய கட்டுரை ஒன்றில் குறிப்பிடுகின்றார். புதுமைப்பித்தன் காசநோயினால் பீடிக்கப்பட்டு 1948ஆம் ஆண்டு இறையடி சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1930களில் 'சாளரம்' என்னும் சிறுகதையுடன் இவரது படைப்புலகப் பிரவேசம் தொடங்கியது. 1930களிலிருந்து தமிழ்நாட்டிலிருந்து வெளிவந்த 'மணிக்கொடி' என்னும் பத்திரிகையில் இவரது கதைகள் வெளிவரத் தொடங்கின. மணிக்கொடி வந்துகொண்டிருந்த காலம் மகாத்மா காந்தியினால் தலைமைதாங்கி நடாத்தப்பட்டுக் கொண்டிருந்த இந்தியச் சுதந்திரப் போராட்டம் உச்சநிலையை அடைந்த காலகட்டமாகும். இக்காலப் பகுதியில் தமிழ்நாட்டில் அரசியல், சமூக, கலை, இலக்கியத் துறைகளில் பல புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. இக்காலப் பகுதியில் தமிழ்க்கவிதை, உரைநடை இலக்கியம் போன்றவை மஹாகவி பாரதியாரால் புடம் போடப்பட்டு எழுச்சிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன் தொடர்ச்சியாகவே மணிக்கொடிக்காலம் இயங்கியது எனலாம். இக்காலப் பகுதியிலேயே தமிழ்ச்சிறுகதை இலக்கியம் புதுத்தடத்தில் புதுநடை போடத் தொடங்கியது. வீரமாமுனிவர், பாரதியார் முதலியோர் சிறுகதைத்துறையில் ஏற்படுத்திய பலவித பரிசோதனைகளையும் மாற்றங்களையும், புதுமைப் பித்தனும் சிறுகதைத் துறையில் செய்தார் என்றால் மிகையாகாது.

புதுமைப்பித்தன் 90 சிறுகதைகளோடு கவிதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு என்று இலக்கியத்தோடு சம்பந்தப்பட்ட துறைகளில் உழைத்தார். புதுமைப்பித்தனின் சமகாலத்தவர்களான ந.பிச்சமூர்த்தி, சி.சு.செல்லப்பா, கு.ப.ராஜகோபாலன், கு.அழகிரிசாமி, பி.எஸ்.ராமையா, மௌனி போன்றவர்களும் மணிக்கொடியில் சிறுகதைகளை எழுதினார்கள். இவர்கள் எல்லோருக்கும் நடுநாயகமாக புதுமைப்பித்தன் திகழ்ந்தார். இவரது புகழ் பெற்ற சிறுகதைகள் மணிக்கொடியில் வெளிவந்தவையே. இவர் மணிக்கொடி பத்திரிகையைத் தனது சிறுகதை முயற்சிகளுக்கான ஒரு பரிசோதனைக் களமாகவே பயன்படுத்தினார்.

தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியினை ஆராய்கின்றபோது புதுமைப்பித்தன் முக்கியமானவராகக் கணிக்கப்படுவதற்கு முதற்காரணம் அவர் தனது இலக்கியப் படைப்புகளை புனைகதைத் துறையுடன் வரையறுத்துக் கொண்டமையே ஆகும். புதுமைப்பித்தன் காலம்வரை தோன்றிய புனைகதை எழுத்தாளர்கள் அத்துறையையே தமது விசேட இலக்கியத் துறையாகக் கொள்ளவில்லை. வ.வே.சு.ஐயர் முதல் கல்கி வரை சில உண்மைகளைக் காணக்கூடியதாக உள்ளது. புனைகதை மூலம் சிறப்பாக சிறுகதை மூலம் தமிழிலக்கியம் வளர்க்க முனைந்தவர்களுள் முதல்வர் புதுமைப்பித்தன். இவர் அத்துறையே தமது திறமைக்கான வாயில் என்பதை உணர்ந்து உழைத்தவர். இவர் கவிதைகளையும் எழுதியுள்ளார் எனினும் அவர் சிறந்து விளங்குவது சிறுகதைத் துறையிலேயே. இவரைப்போன்று புனைகதைத் துறையையே தமது சிறப்புத் துறையாகக் கொண்டவர்கள் யாவரும் இவருக்குப் பின்னரே இலக்கிய வாழ்வை ஆரம்பித்தனர்.

புதுமைப்பித்தனால் சிறுகதைகள் இலக்கியச் செல்வங்கள் ஆயின. திருத்தக்கதேவர் தொடங்கிய வடமொழிக் காவியமரபு எவ்வாறு கம்பனிடத்தில் தமிழாகித் தமிழின் சிகரமாகி அகில உலகையும் அளந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கின்றதோ, அவ்வாறே வ.வே.சு.ஐயரால் தொடங்கப்பெற்ற சிறுகதை மரபு புதுமைப்பித்தனிடம் தமிழாகி, தமிழ் உரைநடையின் சிகரமாகி அகில உலகிற்கும் தமிழின் பெருமையை எடுத்துக்காட்டி நிற்கின்றது.

புதுமைப்பித்தன் காலம்வரை சிறுகதை தமிழில் எழுதப்பட்டு வந்தது எனினும் இலக்கியப்பரப்பில் வரும் கதைப்பொருள்களையோ இலக்கிய மரபுகளையோ உள்ளடக்காது அவற்றிற்குப் புறம்பாகவே வளர்ந்து வந்தது. புதுமைப்பித்தன் சிறுகதையை தமிழிலக்கிய மரபுடன் இணைத்தார். கதைப் பொருளாலும், கதையைக் கூறும் முறையாலும் அச்சாதனையைச் செய்து முடித்தார். தமிழ் இலக்கியமரபில் வரும் சம்பவங்களைத் தலைசிறந்த சிறுகதைகளாக்கினார். 'அன்று இரவு', 'சாபவிமோசனம்', 'அகல்யை', 'சிற்பியின்நகரம்', 'பாடலிபுரம்' முதலிய கதைகளில் தமிழ் இலக்கிய வரலாற்றுச் சம்பவங்களிற்கு அமரத்துவம் கொடுத்தார். 'அன்று இரவு', 'சாபவிமோசனம்', 'கபாடபுரம்' ஆகியனவும் புதுமைப்பித்தனின் தமிழ் இலக்கிய அறிவினையும் உணர்வினையும் நன்கு விளக்கின.

புதிய கருக்கள், அவற்றிற்குப் புதிய வடிவங்கள் அவற்றை எழுதுவதற்கு மேற்கொண்ட புதுப்புது உத்திகள், புதுவகையான நடை, சமுதாயச் சகவாசிகளைக் கண்டு ஏங்கித்துடிக்கும் இரக்கமுள்ள நெஞ்சம் இவை அனைத்தும் இவருடைய சிறுகதைகளுக்கு உயிரூட்டின.

புதுமைப்பித்தன் நமது பழைய புராணக்கதைகளிற்கு புது வியாக்கியானம் தந்தார். அத்தகைய கதைகளிற்கு 'சாபவிமோசனம்' கதையை எடுத்துக் காட்டாகச் சுட்டலாம். இது கௌதம முனிவரின் சாபத்திற்கு இலக்காகி கல்லான அகலிகையை நவீன கண்ணோட்டத்தில் பார்க்கும் கதை ஆகும். அடுக்குச்சொற்களை வைத்து சித்து விளையாட்டுக் காட்டி ஒரு அமானுஷ்ய உலகை உருவாக்கும் இவர் திறமைக்கு உதாரணமாக, 'பிரம்மராக்ஷதனை' கூறலாம்.

வழக்கிழந்த பழைய தமிழ்ச் சொற்களை விலக்கி வழக்கில் உள்ள சொற்களைக் கையாண்டு தமிழ்நடைக்குப் புதிய விறுவிறுப்புத் தந்தார் புதுமைப்பித்தன். தன்னம்பிக்கை மிகுந்த இவர், தாம் காணும் காட்சிகளையும் தாம் கருதும் கருத்துக்களையும் சிறுகதை வாயிலாகத் தமிழர்களுக்கு உணர்த்திவிட முடியும் என எண்ணினார். அவ்வாறே செய்தும் காட்டினார். நகைச்சுவையும் நையாண்டியும் அவரிற்குத் துணைபுரிந்தன என்று சொல்லக்கூடியவாறு அவருடைய கதைகளில் இயல்பாக வந்தமைந்தது. சமுதாயத்தோடு உறவு கொள்வதற்கும், சமுதாயத்தோடு மோதிப் போராடுவதற்கும் என இருவகையில் அவருக்கு சிறுகதை என்ற கருவியே பயன்பட்டது எனலாம். தம் வெறுப்பைக் காட்டி பிறரைத் தாக்குவதற்கு அவர் பயன்படுத்திய கருவியாகவும் சிறுகதைகள் பயன்பட்டன.

புதுமைப்பித்தனின் அதிசிறந்த சிறுகதைகளை எடுத்து ஆராய்கின்ற போது அவரின் திறமை நன்றாகத் தெரியும். கதையை அமைத்துவிட்டு அந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னணியிலேயே பாத்திரங்களின் இயக்கத்தைக் காட்டுகின்றார் என்பது புலனாகின்றது. இந்த உத்திகளை அவர் கையாளுவதால் அவருடைய கதைகளில் நாடகப்பண்பும், கதை கூறும் முறையும் ஒழுங்கும் காணப் படுகின்றன. அவர் கதைகளில் சிறந்தவைகளாகப் பலராலும் போற்றப்படும் 'அகலியை', 'சாமியாரும் குழந்தையும் சீடையும்', 'சாபவிமோசனம்', 'அன்று இரவு', 'காஞ்சனை', 'மகாமசானம்', 'துன்பக்கேணி', 'கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்', 'இது மிஷன்யுகம்', 'மனக்குகை ஓவியங்கள்' போன்றவற்றில் இப்பண்புகள் சுடர்விடுவதைக் காணலாம்.

புதுமைப்பித்தனின் சிறுகதைகளை வரையறுத்து அட்டவணைப்படுத்தி பார்க்கின்றபோது பொருளைக் கைக்கொள்ளுகின்ற முறையிலும் உருவ அமைதியிலும் படிமுறைரீதியான வளர்ச்சியைக் காணக்கூடியதாகவுள்ளது.

புதுமைப்பித்தன் வித்தியாசமான முறையிலேயே சிறுகதைகளைப் படைத்துள்ளார். அங்கதப்பாங்கான தன்மைகளையும் கற்பனை அம்சங்-களையும் இணைத்துக் கதைகளை அமைத்துள்ளார். அந்த வகையில் 'கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும்' என்னும் சிறுகதையைக் கூறலாம். சமூகத்தின் கையாலாகாத்தனத்தைக் கிழித்துக் காட்டும் ஒரு சமூக விமர்சனமாக இவரது 'பொன்னகரம்' படைக்கப்பட்டுள்ளதையும் இங்கு குறிப்பிடவேண்டும். இவ்வாறு ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு பாணியில் அமைந்திருப்பதே அவரின் சிறப்பிற்குக் காரணம். அத்துடன் பெரும் பாலானோர் கையாளும் இருண்ட பகுதிக்குரிய விடயங்களையும் மிக அழகாகவும், நாசூக்காகவும் வெளிக்கொணர்வதையும் காணக்கூடியதாக உள்ளது. தமிழ்ச் சமூகத்தில் பெண் ஒருத்தியின் கற்பு பெரிதாகப் போற்றப் படும் ஒன்றாகும். ஆனால் வறுமையின் காரணமாக ஒரு தமிழ்ப் பெண் தன் கற்பை விலைகூறவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றாள். இந்த உண்மையை புதுமைப்பித்தன் தனது 'பொன்னகரம்' என்ற கதையின்மூலம் மிகவும் திறமையாகப் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

புதுமைப்பித்தனின் சிறுகதைகள், தமிழ்ச்சிறுகதைகளில் தனக்கேயுரிய கலைவடிவங்கள் ஆயின. சிறுகதையின் ஆரம்பகாலத்திலிருந்து ஏற்பட்ட வளர்ச்சியினை முனைப்பாகவும் இனித் தொடர்ந்து வரப்போகும் வளர்ச்சி-யின் ஊற்றுக்கண்ணாகவும் அவரது சிறுகதைகள் அமைந்துள்ளன. புதுமைப்பித்தனின் சிறப்பைப் பற்றி பேராசிரியர் மீனாட்சிசுந்தரனார், "புதுமைப்பித்தன் சிறுகதை வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை எடுத்து இயம்புகின்றது புதுமைப்பித்தனின் சிறுகதைகள். அவரது சிறுகதைகள் கவிதைகளுடன் போட்டி போடுகின்றன. அவர் சிறுகதைகளில் காணப்படும் சொல்நயமும் ஓசைநயமும் குறிப்பாலுணர்த்தும் கவர்ச்சி உடையனவாகக் காணப்படுகின்றன" எனக் குறிப்பிட்டுள்ளார்.

புதுமைப்பித்தன் சிறுகதை உலகில் சாதனை புரிந்தார் என்றால் அதற்கு காரணம் அவரது பன்முகப்படுத்தப்பட்ட பார்வை, அதற்கேற்ப வளைந்து கொடுக்கும் அவரது எழுத்து, மாறுபட்ட நடை, மாறுபட்ட கதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியனவாகும். 'துன்பக்கேணி', 'நாசக்காரக் கும்பல்', 'பொன்னகரம்', 'கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும்', 'மனிதயந்திரம்', 'பக்த குசேலர்' ஆகிய கதைகளில் புதுமைப்பித்தன் முற்போக்காளராகவும், 'விபரீத ஆசை', 'கயிற்றரவு', 'புரட்சி மனப்பான்மை', 'கோபாலபுரம்' ஆகிய கதைகளில் பழமை பேணுபவராகவும், 'செல்லம்மாள்', 'நினைவுப்பாதை', 'சித்தி', 'சிவசிதம்பர சேவகம்' ஆகிய சிறுகதைகளில் துறவியாகவும், 'காஞ்சனை', 'கபாடபுரம்', 'பிரம்மராக்ஷதன்' ஆகிய சிறுகதைகளில் மாயாவாதியாகவும் புதுமைப்பித்தன் தோற்றம் காட்டுகின்றார். அதனால் இவரை ஒரு 'முரண்பாட்டுக் குவியல்' எனச் சில எழுத்தாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த வகையிலே சிறுகதை, கவிதை, விமர்சனம், மொழிபெயர்ப்பு என்று இலக்கியத்தின் அனைத்துத் துறைகளிலும் இவரது பங்களிப்பினைக் காண முடிந்தாலும் புதுமைப்பித்தனின் ஆளுமை மேலோங்கித் தெரிவது சிறுகதை துறையிலேயே எனலாம். தமிழ்ச் சிறுகதை மரபின் உணர்ச்சியைத் தொட்டு உலகச் சிறுகதைகளின் தரத்திற்கு தமிழ்ச் சிறுகதைகளை உயர்த்திக் காட்டி சிறந்த சிறுகதை மரபிற்கு வித்திட்டு, உன்னதமான கலைப்படைப்புகளைத் தந்தவராக புதுமைப்பித்தன் போற்றப்படுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

# ஒருநாள் கழிந்தது

## புதுமைப்பித்தன்

"கமலம்! அந்தக் கூஜாவிலே தண்ணீர் எடுத்தா! வெற்றிலைச் செல்லம் எங்கே? வச்சது வச்ச இடத்தில் இருந்தால்தானே?" என்று முணுமுணுத்தார் முருகதாசர்.

கையில் இருக்கும் கோரைப் பாயை விரிப்பதே ஒரு ஜாலவித்தை. நெடுநாள் உண்மையாக உழைத்தும் பென்ஷன் கொடுக்கப்படாததால், அது நடுமத்தியில் இரண்டாகக் கிழிந்து, ஒரு கோடியில் மட்டிலும் ஒட்டிக் கொண்டிருந்தது. அதை விரிப்பது என்றால் முதலில் உதறித் தரையில் போட்டுவிட்டு, கிழிந்து கிடக்கும் இரண்டு துண்டுகளையும் சேர்த்துப் பொருந்த வைக்க வேண்டும். அதுதான் பூர்வாங்க வேலை. பின்பு, விடுதலை பெற முயற்சிக்கும் அதன் கோரைக் கீற்றுகள் முதுகில் குத்தாமல் இருக்க, ஒரு துண்டையோ அல்லது மனைவியின் புடவையையோ அல்லது குழந்தையின் பாவாடையையோ எதையாவது எடுத்து மேலே விரிக்க வேண்டும்.

முருகதாசரைப் பொறுத்தவரை - அது அவரது புனைபெயர் - அது இரண்டு பேர் செய்ய வேண்டிய காரியம். மறுபடியும் "கமலா!" என்று கூப்பிட்டார்.

சமையல் + உக்கிராண + ஸ்நான அறை, மூன்று நான்கு கட்டுகள் தாண்டி, துண்டாக, அலாதியாக இருப்பதால், இவருடைய பாய்விரிப்புக் கஷ்டங்கள் அந்த அம்மையாருக்கு எட்டவில்லை. சென்னையில் 'ஒட்டுக்குடித்தனம்' என்பது ஒரு ரசமான விஷயம். வீட்டுச் சொந்தக் காரன், குடியிருக்க வருகிறவர்கள் எல்லோரும் 'திருக்கழுக்குன்றத்துக் கழுகு' என்று நினைத்துக்கொள்வானோ என்னமோ!

'குடித்தனக்காரர் குடியிருக்க இரண்டு ரூம் காலி' என்று வெளியில் போட்டிருந்த போர்டை நம்பித்தான் முருகதாசர் வீடு-வேட்டையின்போது அங்கே நுழைந்தார்.

உள்ளே வீட்டின் பாக வசதிதான் விசித்திரமாக இருந்தது. முன்பக்கம், ஒற்றைச் சன்னல் படைத்த ஒரு சிற்றறை. அதற்கப்புறம், எங்கோ பல கட்டுகள் தாண்டி மற்றொரு அறை. அதுதான் சமையல் வகையறாவுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் அறை படிக்க, படுக்க, நாலுபேர் வந்தால் பேச - இவை எல்லாவற்றிற்கும் பொது இடம். முதலில், முருகதாசர் பொருளாதாரச் சலுகையை உத்தேசித்தே அதில் குடியிருக்கலாம் என்று துணிந்தார். அதனால் தமக்கும் தம் சகதர்மிணிக்கும் இப்படி நிரந்தரமான 'பிளவு' இருக்கும் என்று சிறிதும் எட்டி யோசிக்கவில்லை; மேலும் அவர் யோசிக்கக்கூடியவரும் அல்லர்.

பக்கத்திலிருந்த அரிக்கன் விளக்கை எடுத்துக்கொண்டு, அவர் சமையல் பகுதியை நோக்கிப் பிரயாணமானார்.

இடைவழியில், குழாயடியில் உள்ள வழுக்குப் பிரதேசம், அடுத்த பகுதிக்காரரர் விறகுக் கொட்டில் முதலிய விபத்துக்கள் உள்ள 'பிராட்வேயை' எல்லாம் பொருட்படுத்தாது, ஒருவாறு வந்து சேர்ந்தார். சமையல் அறை வாசலில் ஒரே புகைமயம். "கமலம்!" எனக் கம்மிய குரலில் கூப்பிட்டுக்கொண்டு உள்ளே நுழைந்தார்.

உள்ளே புகைத்திரைக்கு அப்பாலிருந்து, "வீடோ லட்சணமோ! விறகைத்தான் பாத்துப் பாத்து வாங்கிக்கொண்டு வந்தியளே! ஒங்களுக்கிண்ணு தண்ணீலே முக்கிக் கொடுத்தானா? எரியவே மாட்டுதில்லை! இங்கே என்ன இப்போ? விறகு வாங்கின சீரைப் பாத்து மகிழ வந்திட்டியளாக்கும்!" என்று வரவேற்புப் பத்திரம் வாசிக்கபட்டது.

"தீப்பெட்டியை இப்படி எடு! அதுக்காகத்தான் வந்தேன்!" என்று நடைப்பக்கமாகப் பின்னோக்கி நடந்தார்.

"இங்கே குச்சியுமில்லை, கிச்சியுமில்லை! அலமுவெ தீப்பெட்டி வாங்க அனுப்பிச்சேன். மண்ணெண்ணெய் விளக்கே நீங்கதான் துடைச்சுக் கொள்ளணும்!" என்றாள் கமலம்.

"குழந்தையை அந்தியிலே வெளியிலே அனுப்பிச்சையே, நான் வந்தபிறகு வாங்கிக்கொள்ளப்படாதா?" என்று அதட்டினார் முருகேசர்.

"ஆமாம், சொல்ல மறந்தே போயிட்டுதே..... செட்டியார் வந்துவிட்டுப் போனார். நாளை விடியன்னை வருவாராம்!" என்றாள் கமலா.

முருகதாசர் இந்தப் பாசுபதாஸ்திரத்தை எதிர்பார்க்கவில்லை.

"வந்தா வெறுங்கையை வீசிட்டுப் போக வேண்டியதுதான்! வர்ரதுக்கு நேரம் காலம் இல்லை?" என்று முணுமுணுத்துக்கொண்டே வெளியேற முயற்சித்தார்.

"அங்கே எங்கே போயிட்டிஹ, ஒங்களைத்தானே! கொஞ்சம் நல்லெண்ணை வாங்கிகிட்டு வாருங்களேன்!"

"எங்கிட்ட இப்போ துட்டுமில்லை, காசுமில்லை!" என்று திரும்பி நின்று பதிலளித்தார் முருகதாசர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுவும் அப்படியா! இன்னா, இந்த மிளவொட்டியிலே* மூணு துட்டு* இருக்கு; அதெ எடுத்துக்கிட்டுப் போங்க!"

"வந்ததுக்கு ஒரு வேலையா? அங்கே ஒரு பாடு எழுதித் தொலைக்கணும்; இங்கே உனக்கு இப்பதான் எண்ணெ புண்ணாக்கு - பகலெல்லாம் என்ன செய்துகிட்டு இருந்தே? இருட்னம் பொறவா எண்ணை வாங்கிறது! எல்லாம் நாளைக்குப் பாத்துக்கலாம்!"

"சோம்பல் வந்தா சாத்திரமும் வரும், எல்லாம் வரும். ஏன் அண்ணைக்கு போய் வாங்கிட்டு வரலியா - எல்லாம் ஒங்களுக்குத்தான். இப்பத்தான் அப்பளக்காரன் வந்து கொடுத்திட்டுப் போனான். பிரியமா சாப்பிடுவேளென்று சொன்னேன். பின்னே அந்தச் சின்னக் கொரங்கே என்ன, இன்னும் காணலெ! போனாப் போனதுதான்; நீங்கதான் சித்த பாருங்களேன்!"

இவ்வளவிற்கும் அவர் இருந்தால்தானே!விறகுப் பிரதேசத்தைத் தாண்டி வழுக்குப் பிரதேசத்தை எட்டிவிட்டார். புகையையும் பேச்சையும் தப்பி வந்தால் போதும் என்றாகிவிட்டது. முருகதாசரின் ஆஸ்தான அறையின் ஒரு விசித்திரம் என்னவென்றால் சென்னையில் 'லைட்டிங் டைம்' அட்டவணையைக்கூட மதிக்காமல், அது இருண்டுவிடும்.

இம்மாதிரி மண்ணெண்ணெய் நெருக்கடி ஏற்படாத காலங்களில் அந்த அறைக்குத்தான் முதலில் இராத்திரி. ஆனால் எண்ணெய் நெருக்கடிக் காலங்களில், சிவபிரானின் ஒற்றைக்கண் போன்ற அந்த அறையின் சன்னல், எதிர்ப்பக்கம் நிற்கும் மின்சார விளக்குக் கம்பத்திலிருந்து கொஞ்சம் வெளிச்சத்தைப் பிச்சை வாங்கும். கார்ப்பொரேஷன் தயவு வரும்வரை, ஸ்ரீ முருகதாசர் வேறு வழியில்லாமல், தெருநடையில் நின்று அலமுவின் வருகையை எதிர்நோக்கியிருக்க வேண்டியதாயிற்று.

முருகதாசர் வானத்தையளக்கும் கதைகள் கட்டுவதில் மிகவும் சமர்த்தர். 'சாகாவரம் பெற்ற' கதைகளும் எழுதுவார். அந்தத் திறமையை உத்தேசித்து, ஒரு விளம்பரக் கம்பனி மாதம் முப்பது ரூபாய்க்கு வானத்தை அளக்கும் அவரது கற்பனைத் திறமையைக் குத்தகை எடுத்துக் கொண்டது. அதனால் அவர், வீர புருஷர்களையும் அழியாத சித்திரங்களையும் எழுத்தோவியமாகத் தீட்டுவதை விட்டுவிட்டு, சோயா பீன் முதல் மெழுகுவர்த்தி வரையிலும் வெளிநாடுகளிலிருந்து வந்து குவியும் பண்டங்களின் காவியங்களை இயற்றிக் கொண்டிருக்கிறார். 'டபாஸா' வீரிய மாத்திரையின்மீது பாடிய பரணியும், தேயிலைப் பானத்தின் சுயசரிதையும் அந்தத் தமிழ் தெரியாத வெள்ளைக் காரனையும் இவர்மீது அனுதாபம் காட்டும்படி செய்துவிட்டன. அதற்காகத்தான் அந்த முப்பது ரூபாய்!

*மிளவொட்டி (மிளகுப்பெட்டி) ஐந்தறைப் பெட்டி என்பது சகஜமான பெயர்.
*மூணு துட்டு - ஓர் அணா; ஒரு துட்டு என்பது பாண்டி நாட்டில் நான்கு தம்பிடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டு எதிரில் நிற்கும் மின்சார விளக்கின் உதவியைக் கொண்டும் பிள்ளையவர்களால் அலமுலைக் கண்டுபிடிக்க இயலவில்லை. வெற்றிலை, வேலை, குழந்தை வராத காரணம் எல்லாம் அவரது மனதில் கவலையைக் கொண்டு கொட்டின. நடையிலிருந்து கீழே இறங்கிச் சந்தின் மூலைவரை சென்று பார்த்து வரலாமா என்று புறப்பட்டார்.

பக்தி மார்க்கத்தில் ஏகாக்கிரக சிந்தையைப் பற்றிப் பிரமாதமாக வர்ணிக்கிறார்கள். மனம் ஒரே விஷயத்தில் லயித்துவிட்டால் போதுமாம். பிள்ளையவர்களைப் பொறுத்தவரை, அவர் இந்தப் 'பணம்' என்ற மூன்றெழுத்து மந்திரத்தில் தீவிர சிந்தை செலுத்துபவர். பணத்தை வாரிச் சேர்த்துக் குபேரனாகிவிட வேண்டும் என்ற எண்ணம் ஒன்றுமில்லை. கவலையில்லாமல் ஏதோ சாப்பிட்டோம், வேலை பார்த்தோம், வந்தோம் என்று இருக்கவேண்டும் என்பதற்காக, எத்தனையோ வித்தைகளை எல்லாம் செய்துவிட்டார். அவருடையு குடும்பத்தின் வரவுசெலவுத் திட்டத்தை மட்டிலும், அவரால் எப்பொழுதும் சமன்செய்ய முடியவில்லை. நிதிமந்திரியாக இருந்தால், பட்ஜட்டில் துண்டு விழுவதற்குப் பொருளாதாரக் காரணங்கள் காட்டி விட்டு, உபமான்யங்களைத் தைரியமாகக் கேட்கலாம். கவலை இல்லாமல், கொஞ்சமும் உடம்பில் பிடிக்காமல், கடன் கேட்டுப் புறப்படுவதற்கு முடியுமா? குடும்பச்செலவு என்றால் சர்க்கார் செலவாகுமா?

கவலை இருக்கப்படாது என்ற உறுதியின் பேரில்தான் நம்பிக்கை என்ற இலட்சியத்தை மட்டும் திருப்தி செய்விக்க, 'சாகாவரம் பெற்ற' கதைகளைக் கொஞ்சம் கட்டிவைத்துவிட்டு இந்த 'லிப்டன் தேயிலை', காப்பி, கொக்கோ ஆகியவற்றின் மான்மியங்களை அவர் எழுத ஆரம்பித்தார். ஒரு பெரிய நாவல் மட்டிலும் அவர் எழுதிவிட்டால், அது பொன் காய்க்கும் மரமாகிவிடும் என்று அவர் நெஞ்சமுழுத்தத்துடன் நினைத்த காலங்களும் உண்டு. இப்பொழுது அது ஒரு நெடுந்தூர இலட்சியமாக மாறிவிட்டது.

முன்பாவது, அதாவது நம்பிக்கைக் காலத்தில், ஏதோ நினைத்ததைக் கிறுக்கி வைக்கக் காகிதப் பஞ்சமாவது இல்லாமல் இருந்தது. அப்பொழுது ஒரு பத்திரிகை ஆபீஸில் வேலை. ஆனால் இப்பொழுது காசு கொடுத்து வாங்காவிட்டால் முதுகில்தான் எழுதிக்கொள்ள வேண்டும். முருகதாசர் நல்ல புத்திசாலி; அதனால்தான் அவர் முதுகில் எழுதிக்கொள்ளவில்லை. யாராவது ஒரு நண்பரைக் கண்டுவிட்டால் போதும், தமது தூர இலட்சியத்தைப் பற்றி அவரிடமும் ஐந்து நிமிஷமாவது பேசாமல் அவரை விடமாட்டார். நண்பர்கள் எஸ்.பி.ஸி.ஏ. (ஜீவஹிம்சை நிவாரணச் சங்கம்)யின் அங்கத்தினர்களோ என்னவோ, அத்தனையையும் சகித்துக்கொண்டிருப்பார்களோ.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தில் திரும்பிப் பார்த்தால் அலமுவின் ராஜ்யம் நடந்து கொண்டிருந்தது.

"ஏட்டி, என்ன! நீயோ, உன் லட்சணமோ?" என்று ஆரம்பித்தார் முருகதாசர்.

ஒரு ரிக்ஷா வண்டி ஏர்க்கால் பக்கத்தில் வண்டிக்காரன் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். அலமு, ஒரு சுண்டெலி மாதிரி, ஜம்மென்று மெத்தையில் உட்கார்ந்திருக்கிறாள். ரிக்ஷாக்காரனுடன் ஏதோ நீண்ட சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது போலும்!

"ஏட்டி!" என்றார் முருகதாசர் மறுபடியும்.

"இல்லையப்பா? நீ இனிமே என்னை அலமுன்னு கூப்பிடுவேன்னியே!" என்று சொல்லிக் கொண்டே வண்டியிலிருந்து இறங்கப் பிரம்மப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தாள்.

"தீப்பெட்டி எங்கடி?" என்றார் முருகதாசர்.

"கடைக்காரன் குடுக்கமாட்டேங்கிறான், அப்பா!"

"குடுக்காதெ போனா நேரே வீட்டுக்கு வாரது! இங்கே என்ன இருப்பு?"

"அப்படிக் கேளுங்க சாமி! நம்ம கொளந்தென்னு மெரட்டாமே சொல்லிப் பாத்தேனுங்க. வீட்டுக்கு வண்டியிலே கொண்டாந்து வுடணுமுண்ணு மொண்டி பண்ணுதுங்க. எனக்கு காலுலே சுளுக்கு. அந்தச் சின்னாம்பயலே காணும்....." என்று நீட்டிக்கொண்டே போனான் ரிக்ஷாக்காரன்.

"அப்பா, அவன் பங்கஜத்தெ மாத்திரம் கூட்டிக்கிட்டே போறானே!" என்றாள் அலமு. பங்கஜம் எதிர்வீட்டு சப்ரிஜிஸ்திரார் குழந்தை. அது ரிக்ஷாவிலும் போகும் மோட்டாரிலும் போகும். அந்த விஷயம் ரிக்ஷாவுக்குத்தான் புரியுமா? குழந்தைக்குத்தான் புரியுமா?

"அலமு! ராத்திரியிலே கொழந்தைகள் ரிக்ஷாவிலே போகப்படாதுடி! எறங்கி வா!" என்று குழந்தையைத் தூக்கிக்கொண்டு வாடிக்கைக் கடைக்காரனிடம் சென்றார் முருகதாசர்.

பிள்ளையவர்கள் கடையை எட்டுமுன்பே, கடைக்காரன் "சாமி! இந்த மாதிரியிருந்தா கட்டுமா? போன மாசத்திலே தீர்க்கலியே! நானும் சொல்லிப் பார்த்தாச்சு. பாக்கியை முடிச்சு, கணக்கெத் தீர்த்துடுங்க! எனக்குக் குடுத்துக் கட்டாது. நான் பொளைக்க வந்தவன்!" என்றான்.

"நானும் பிழைக்க வந்தவன்தான். எல்லோரும் சாகவா வருகிறார்கள்! மின்னே பின்னேதான் இருக்கும். நான் என்ன கொடுக்கமாட்டேன் என்று சொல்லுகிறேனா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போங்க சாமி! அது ஒண்ணுதான்! பாக்கி ரூ 2-5-4 ஆச்சு. எப்ப வரும்?"

"தீப்பெட்டியைக் குடு சொல்றேன்"

"பெட்டிக்கென்ன பிரமாதம்! இந்தாங்க. எப்ப வரும்?"

"எப்பவா? சம்பளம் நாளைக்குப் போட்ருவாங்கன்னு நினைக்கிறேன். நாளை இல்லாவிட்டால் திங்கட்கிழமை"

"திங்ககிழமே நிச்சயந்தானே? நான் சீட்டுக் கட்டணும்?" என்றான்.

"சரி பார்க்கிறேன்!" என்று திரும்பினார் தாசர்.

"பார்க்கிறேன் என்று சொல்லவேண்டாம். நிச்சயமாக வேண்டும்!"

ஒரு கவலை தீர்ந்தது..... அதாவது திங்கட்கிழமை வரை. பாதிவழியில் போகையில், "அப்பா!" என்றது குழந்தை.

அவர் எதையோ நினைத்துக் கொண்டிருந்ததால் தன்னையறியாமல் கொஞ்சம் கடினமாக, "என்னடி!" என்றார்.

"நீதான் கோவிச்சுக்கிறியே, அப்பா! நான் சொல்ல மாட்டேன் போ!"

"கோவம் என்னடி, கோவம்! சும்மா சொல்லு!"

"அதோ பார் பல்லு மாமா!"

முருகதாசரின் நண்பர் சுப்பிரமணிய பிள்ளைக்குக் கொஞ்சம் உயர்ந்த பற்கள். அவை வெளியே நீண்டுகொண்டு, தமது இருப்பை அநாவசியமாக உலகத்திற்கு அறிவித்துக் கொண்டிருந்தன. அதனால் அலமு அவருக்கு இட்ட காரண இடுகுறிப்பெயர் அது.

"எங்கடி?"

"அதோ பார், வீட்டு நடேலே! என்னை எறக்கி விடப்பா!" அவரது கையிலிருந்து வழுகி விடுவித்துக்கொண்டு வீட்டிற்கு ஓட ஆரம்பித்தது.

"மெதுவா! மெதுவா!" என்றார் பிள்ளை. குழந்தையா கேட்கும்?

"மாட்டேன்!" என்றது. அதற்கப்புறம் ஏக களேபரம். பாவாடை தடுக்கியதோ என்னமோ அலமு வலுக்கட்டாயமாக அங்கப்பிரதக்ஷணம் செய்ய ஆரம்பித்தாள்.

பிள்ளையவர்கள் ஓடிப்போய்க் குழந்தையை வாரி எடுத்தார். ஆனால் இவர் பதட்டத்திற்கு ஏற்ப, அங்கு குழந்தைக்கு ஒன்றும் ஏற்படவில்லை.

"தோளுக்கு மேலே தொண்ணூறு, தொடச்சுப்பாத்தா ஒண்ணுமில்லை!" என்று பாடிக்கொண்டு குழந்தை எழுந்தது.

"என்ன ஸார், குழந்தையை நீங்க இப்படி விடலாமா?" என்று சொல்லிக் கொண்டே சுப்பிரமணியம் அவர்கள் பக்கம் வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன ஸார் செய்யட்டும்! என்ன சொன்னாலும் கேட்கிறதில்லை என்ற உறுதி மனசிலே ஏறிப் போயிருக்கு. வெளியிலே புறப்பட்டாச்சா, அப்புறம் தேடிக் கொண்டு பின்னோட பத்துப்பேர். இவளைக் கடைக்கனுப்பிச்சுட்டா தாயார். இவ்வளவு நேரம் அந்த ரிக்ஷாக்காரனோட தர்க்கம். என்ன செய்கிறது! வாருங்கள் ஸார், உள்ளே! ஒன் மினிட்! விளக்கை ஏத்துகிறேன்"

குழந்தை அலமு அதற்குள் வீட்டிற்குள் "பல்லு மாமா வந்துவிட்டார்!" என்று பொதுவாக உச்சஸ்தாயில் விளம்பரம் செய்துகொண்டு ஓடி விட்டாள்.

"குழந்தை துருதுருவென்று வருகிறதே! பள்ளிக்கூடத்திற்காவது அனுப்பக்கூடாதா?" என்றார் நண்பர்.

"ஆமாம் ஸார், தொந்தரவு சகிக்கலே. அங்கேதான் கொண்டு தள்ளணும். வயது கொஞ்சம் ஆகட்டுமே என்று பார்க்கிறேன்" என்றார் முருகதாசர், விளக்குத் திரியை உயர்த்திக்கொண்டே.

"நேத்து பீச்சுக்குப் போயிருந்தேன். சுந்தரத்தைப் பார்த்தேன்....." என்று ஆரம்பித்தார் சுப்பிரமணியபிள்ளை.

"அந்த ராஸ்கல் வந்துட்டானா? என்றைக்கும் அவன் தொல்லைதான் பெரிய தொல்லையாக இருக்கிறது. இங்கே வந்தான்னா ஆபிஸுக்கு வந்து யாருக்காவது வத்தி வச்சுட்டுப் போயிடரது..... மின்னே வந்தப்போ, என்ன எழவு சொன்னானோ அந்த ஆர்ட்டிஸ்ட் பதி இருந்தானே அவனுக்குச் சீட்டுக் கொடுக்க வழி பண்ணிட்டான்....." என்று படபடவென்று பேசிக்கொண்டே போனார் முருகதாசர்.

"அப்படிப் பாத்தா உலகத்திலே யார்தான் ஸார் நல்லவன்! அவன் உங்களைப்பத்தி ரொம்பப் பிரமாதமாக அல்லவா கண்ட இடத்தில் எல்லாம் புகழ்ந்துகொண்டிருக்கிறான்?"

"சவத்தே தள்ளுங்க ஸார்! பேன் பார்த்தாலும் பார்க்கும், காதை அறுத்தாலும் அறுக்கும். அவன் சங்காத்தமே நமக்கு வேண்டாம்..... நீங்க என்ன சொல்ல வாயெடுத்தீர்கள்?"

"அதுதான், உங்களெப் பத்தித்தான் ஒரு இங்கிலீஷ்காரனிடம் பிரமாதமாகப் பேசிக்கொண்டிருந்தான்....."

"இவ்வளவுதானா! கதையை எழுதரேன். அல்லது கத்தரிக்காயை அறுக்கிறேன். இவனுக்கென்ன.....?"

அதேசமயத்தில், வெளியிலிருந்து "முருகதாஸ்! முருகதாஸ்!" என்று யாரோ கூப்பிட்டார்கள்.

"அதுதான் அவன்தான் வந்திருப்பான் போலிருக்கிறது! பயலுக்கு நூறு வயசு....."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சைத்தான் நினைக்கு முன்னால் வந்து நிற்பான் என்பதுதான்" என்று முணுமுணுத்தார் முருகதாசர்.

பிறகு அவர் எழுந்து நின்று வெளியில் தலையை நீட்டி, "யாரது?" என்றார்.

"என்ன! நான்தான் சுந்தரம், இன்னும் என் குரல் தெரியவில்லையா?" என்று உரத்தகுரலில் கடகடவென்று சிரித்துக்கொண்டு, உள்ளே நுழைந்தார் வந்தவர். அவருடைய சிரிப்புக்கு இசைந்தபடி காலில் போட்டிருக்கும் ஜோடு தாளம் போட்டது.

"என்ன சுந்தரமா? வா! வா! இப்பொத்தான் உன்னைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். நீயும் வந்தாய்! காப்பி போடச் சொல்லட்டுமா? அலமு! அலமு!" என்று உரக்கக் கூவினார் முருகதாசர்.

எங்கிருந்தோ "என்னப்பா!" என்று அலமுவின் குரல் வந்தது.

"அம்மாவை மூணு கப் காப்பி போடச் சொல்லு சீக்கிரம் ஆகணும்!"

"நீ என்ன பத்திரிகையையே விட்டுவிட்டாயாமே! இப்பத்தான் கேள்விப் பட்டேன்"

"வயிற்றுப் பிழைப்பிற்கு எதில் இருந்தால் என்ன? சீலைப் பேன் குத்துகிறதும் ஒரு 'பிஸினஸ்' ஆக இருந்து அதில் ஒரு சான்ஸ் கிடைத்தால் அதனையும் விட்டா வைக்கிறது? நான் பத்திரிகையை விட்டுவிட்டா கதை எழுதாமல் இருந்துவிடுவேனா? ஒரு பெரிய நாவலுக்குப் பிளான் போட்டிருக்கேன். தமிழன்களுக்கு அதிஷ்டம் இருந்தால், எனக்குக் காகிதம் வாங்கவாவது காசு கிடைக்கும். அதில் 'சென்டிரல் ஐடியா' என்ன தெரியுமா?....."

"நீங்க நேற்றுப் பொருட்காட்சிக்குப் போனீர்களாமே!" என்று பேச்சை மாற்ற முயன்றார் சுப்பிரமணியபிள்ளை. இந்த விஷயத்தைத் தொட்டுவிட்டால் முருகதாசர் கீறல் விழுந்த கிராமபோன் பிளேட் மாதிரி, விடாமல் திருப்பித் திருப்பி அதையே கதைத்துக்கொண்டிருப்பார்.

"அப்பா! காப்பியாயிட்டுது. நீதான் வந்து எடுத்துக்கிட்டுப் போகணும். சுடுது!" என்று சொல்லிக்கொண்டு நிலைப்படி இரண்டு பக்கத்தையும் தொட்டவண்ணமாய், ஒற்றைக்காலை ஆட்டிக்கொண்டு நின்றாள் அலமு.

"அம்மா எங்கே?"

"அம்மா சாதத்தெ வடிச்சுக்கிட்டிருக்கா, அப்பா!"

"சரி! இதோ வரேன் போ!"

"வாயேன்!"

"வர்ரேன்னா, போடீ உள்ளே!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காப்பி ஆறிப்போயிடும், அப்பா!"

"இதோ ஒரு நிமிஷம்!" என்று சொல்லிக்கொண்டே உள்ளே சென்றார்.

"மாமா! நீ என்ன கொண்டாந்தே!" என்று கேட்டுக்கொண்டு சுப்பிரமணிய பிள்ளை மடியில் உட்கார்ந்து கழுத்திலிருக்கும் நெக் டையைப் பிடித்து விளையாட ஆரம்பித்தாள் அலமு.

"அதெப் பிடித்து இழுக்காதே! மாமாவுக்கு கழுத்து வலிக்கும்!" என்றார் சுந்தரம்பிள்ளை.

"வலிக்காதே!" என்று மடிப்டியும் ஆரம்பித்தாள்.

முருகதாசரும், மேல்துண்டின் உதவியால் ஒரு செம்பை ஏந்திய வண்ணம், உள்ளே நுழைந்தார்.

"என்னப்பா, மூணு டம்ளர் கொண்டாந்தே! எனக்கில்லையா?"

"உனக்கென்னடி இங்கே, அம்மாகூடப் போய்ச் சாப்பிடு"

"மாட்டேன்" என்று ஒரு டம்ளரை எடுத்து வைத்துக்கொண்டது குழந்தை.

முருகதாசர் காப்பியை ஆற்றி, சுந்தரம் கையில் ஒரு டம்ளரைக் கொடுத்தார்.

சுந்தரம் வாங்கி மடக் மடக்கென்று மருந்து குடிப்பது போல் குடித்துவிட்டு "காப்பி வெகு ஜோர்!" என்று சர்டிபிக்கேட் கொடுத்தான்.

மற்றொரு டம்ளர் சுப்பிரமணியபிள்ளையிடம் கொடுக்கப்பட்டது. "மாமா எனக்கில்லையா?" என்று அவரிடம் சென்று ஒட்டினாள் அலமு.

"வாடி, நாம் ரெண்டுபேரும் சாப்பிடுவோம்!" என்றார் முருகதாசர்.

"மாமாகூடத்தான்!" என்றது குழந்தை. சுப்பிரமணியபிள்ளை கையில் இருந்த டம்ளரில் அலமுவைக் குடிக்கச் செய்தார்.

பாதியானதும், "போதும்!" என்றது குழந்தை.

"இந்தாருங்க ஸார்!" என்று மற்ற டம்ளரையும் நீட்டினார் முருகதாசர்.

"வேண்டாம்! வேண்டாம்! இதுவே போதும்!" என்றார் சுப்பிரமணிய-பிள்ளை.

"நான்சென்ஸ்" என்று சொல்லிவிட்டு, குழந்தை எச்சிற்படுத்தியதைத் தாம் வாங்கிக்கொண்டார் தாசர்.

"நேரமாகிறது. மவுண்டில் ஒரு நண்பரைப் பார்க்க வேண்டும்!" என்று எழுந்தார் சுந்தரம். "அதற்குள்ளாகவா? வெற்றிலை போட்டுக்கொண்டு போகலாம்!" என்றார் முருகதாசர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கையில் எடுத்துக்கொண்டேன். நேரமாகிறது! அப்புறம் பார்க்கிறேன்!" என்று சொல்லிக்கொண்டு வெளியேறினார் சுந்தரம்.

கையில் இருந்த புகையிலையை வாயில் ஒதுக்கிவிட்டு, சிறிது சிரமத்துடன், தமக்கு நேரமாவதைத் தெரிவித்துக் கொண்டார் சுப்பிரமணியபிள்ளை.

தொண்டையைச் சிறிது கனைத்துக்கொண்டு, "சுப்பிரமணியம், உங்களிடம் ஏதாவது சேஞ்ச் இருக்கிறதா? ஒரு மூன்று ரூபாய் வேண்டும்!" என்றார் முருகதாசர்.

"ஏது அவசரம்?"

"சம்பளம் போடலே. இங்கு கொஞ்சம் அவசியமாக வேண்டி இருக்கிறது..... திங்கட்கிழமை கொடுத்துவிடுகிறேன்!"

"அதற்கென்ன!....." பர்ஸை எடுத்துப் பார்த்துவிட்டு, "இப்போ என் கையில் இதுதான் இருக்கிறது!" என்று எட்டணாவைக் கொடுத்தார் சுப்பிரமணியம்.

"இது போதாதே!" என்று சொல்லி அதையும் வாங்கி வைத்துக் கொண்டார் முருகதாசர்.

"அப்பொ....." என்று மீண்டும் ஏதோ ஆரம்பித்தார்.

"பார்ப்போம்! எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது" என்று சுப்பிரமணியமும் விடைபெற்றுச் சென்றார்.

முருகதாசர், தனது ஆஸ்தான அறையின் சிம்மாசனமான பழைய கோரைப் பாயில் உட்கார்ந்துகொண்டு, அந்த எட்டணாவைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டு, நீண்ட யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

"அங்கே என்ன செய்யறீங்க?" என்ற மனைவியின் குரல்.

"நீதான் இங்கே வாயேன்!"

கமலம் உள்ளே வந்து "அப்பாடா" என்று உட்கார்ந்தாள். அவர் கையில் இருக்கும் சில்லறையைப் பார்த்துவிட்டு "இதேது?" என்றாள்.

"சுப்பிரமணியத்திடம் வாங்கினேன்!"

"உங்களுக்கும்.... வேலையில்லையா?" என்று முகத்தைச் சிணுக்கினாள் கமலம். பிறகு திடீரென்று எதையோ எண்ணிக்கொண்டு, "ஆமாம், இப்பத்தான் நினைப்பு வந்தது. நாளைக்குக் காப்பிப்பொடி இல்லை, அதெவச்சு வாங்கி வாருங்களேன்!" என்றாள்.

"அந்தக் கடைக்காரனுக்காக அல்லவா வாங்கினேன்! அதைக் கொடுத்து விட்டால்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திங்கட்கிழமை கொடுப்பதாகத்தானே சொன்னீர்களாம்!"

"அதற்கென்ன இப்பொழுது?"

"போய்ச் சீக்கிரம் வாங்கி வாருங்கள்"

"திங்கட்கிழமைக்கு?"

"திங்கட்கிழமை பார்த்து கொள்ளுகிறது!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

# ஒருநாள் கழிந்தது

## குறிப்புகள்

ஏழை எழுத்தாளரான முருகதாசர் என்ற பாத்திரத்தின் ஒருநாள் வாழ்க்கையை மையமாகக்கொண்டே இக்கதை படைக்கப்பட்டுள்ளது. கதை முழுவதும் அவரது வறுமை பற்றியே அமைகின்றது. அவரும் அவர் மனைவி கமலமும் தங்கள் வறுமையை எதிர்நோக்கும் விதமே கதையின் மையப்பொருளாகும். நாளை நிலை பற்றி அவர் சிந்திப்பதில்லை. அவர்களைப் பொறுத்தவரை இன்றைய பொழுதே பிரதானமானதாகும். தங்கள் நாளாந்த தேவைகளை நிறைவு செய்வதே அவர்களுக்கு ஒரு சாதனையாகும். கதையில் வரும் பாத்திரங்கள், சம்பவங்கள் எல்லாமே அக்குடும்பத்தின் வறுமையைச் சித்திரிக்கின்றன. முருகதாசர் பாய் விரிக்கும் முறை, பாயின் அமைப்பு, வீட்டின் அமைப்பு, கதையில் வருகின்ற உரையாடல், கதைப்போக்கு அனைத்தும் வறுமையைக் கருவாகக் கொண்டே சித்திரிக்கப்பட்டு உள்ளன. கதையில் வரும் பாத்திரங்கள் யாவும் கதைப் போக்கிற்குத் துணையாக அமைகின்றன.

இக்கதையில் வரும் பாத்திரங்கள் பற்றி நோக்கினால் மிக முக்கியமான கதாபாத்திரம் முருகதாசராவர். ஆசிரியர் முருகதாசர் என்ற கதாப்பாத்திரத்தினூடாக வாசகர்களுக்குத் தான் புலப்படுத்த விரும்பிய வறுமை என்ற கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். ஏழை எழுத்தாளரின் நகர்ப்புற வறுமை நிலையைப் புலப்படுத்துவதற்கு ஏற்ற ஒன்றாகவே முருகதாசரை மிக முக்கியமான கதாபாத்திரமாக பயன்படுத்தியுள்ளார். கதையோட்டத்தை நடத்திச்செல்லும் ஏனைய துணைப்பாத்திரங்களாக முருகதாசர் மனைவி கமலம், மகள் அலமு, நண்பர்கள் சுந்தரம், சுப்பிரமணியம், கடைக்காரன், ரிக்ஷாக்காரன், எதிர்வீட்டு சப்ரிஜிஸ்டார், அவர் மகள் பங்கஜம் ஆகியோரைப் படைத்துள்ளார். துணைப்பாத்திரங்களினூடாக ஆசிரியர் தன்னுடைய கருப் பொருளை மெதுவாகக்கொண்டு செல்கிறார். இவற்றிற்கு எடுத்துக் காட்டுகளாக கடைக்காரன், முருகதாசர் மனைவி கமலம் ஆகிய பாத்திரங்களைக் குறிப்பிடலாம். முருகதாசர் ஏனைய பாத்திரங்களோடு உரையாடும் போதும் வறுமையை வெளிப்படுத்திக்காட்ட வைத்துள்ளார் ஆசிரியர். இதற்கு எடுத்துக்காட்டாக, முருகதாசருடைய மனைவி நல்லெண்ணெய் வாங்கச் சொன்னபோது, அவர் "எங்கிட்ட இப்போ துட்டுமில்லை, காசுமில்லை!" என்று கூறுவதைக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதையின் சிறப்பம்சங்களாக மிளிர்பவை

வறுமையை மட்டும் பிரதான இலக்காகக்கொண்டே இச்சிறுகதை பின்னப்பட்டுள்ளது. இக்கதையாசிரியர் முருகதாசர் என்ற கதாபாத்திரத்தின் மூலம் அவரது மனோநிலையையும் வறுமையைப் போக்கக் கையாள வேண்டிய வழிமுறைகளையும் முருகதாசர் மூலமாக எடுத்தியம்பவும் வைத்துள்ளார். இப்பாத்திரத்தின்மூலம் திங்கட்கிழமை என்று எந்நேரமும் சம்பள நாளையே எதிர்பார்த்துக் காத்திருக்கின்ற உணர்வு புலப்படுத்தப் படுகின்றது. பிரதான பாத்திரத்தை மையமாகக்கொண்டு கதை கட்டியெழுப்-பப்பட்டுள்ளது.

கதையில் இடம்பெற்றுள்ள துணைப்பாத்திரங்கள் கதையின் கருப் பொருளைக் கொண்டு செல்வதற்கேயன்றி மையப் பாத்திரங்களாக அமையவில்லை. இச்சிறுகதை தெளிவான உரைநடையில் அமைக்கப் பட்டுள்ளது. சில இடங்களில் பேச்சுவழக்குச் சொற்கள் கையாளப் பட்டிருந்தாலும் அவையும் வாசகர்களுக்கு விளங்கத்தக்க வகையில் அமைக்கப்பட்டுள்ளன. சொற்சுருக்கமும், உணர்ச்சிப்பெருக்கும் கொண்ட-தாக இச்சிறுகதை உருவாக்கப்பட்டுள்ளது. தேவையான இடங்களில் அங்கதப்பாணியில் கதை கூறப்பட்டுள்ளது. சிறுகதை வடிவம் சிறப்புற்று மிளிர்கிறது. தான் கூறவந்த கருத்தை இலகுவில் வாசகர் அறியுமாறு புலப்படுத்தியிருப்பது அதன் வெற்றிக்குச் சான்றாக அமைகின்றது. வீட்டின் அமைப்பு, உரையாடல், கதைநிகழ்வு என்பன போன்ற அனைத்துமே வறுமையைப் புலப்படுத்திக்காட்ட உதவுகின்றன.

முருகதாசர் என்ற பாத்திரத்தின் மூலம் ஒரு குடும்பத்தின் பொருளாதாரக் கஷ்டம், அதனை அவர் எதிர்கொள்ள முயற்சிக்கின்ற வழிமுறைகள் என்பனவற்றை விளக்கிச் செல்கின்றார். வறுமையில் எதிர்நீச்சலடிக்கின்ற பாத்திரமாக முருகதாசர் படைக்கப்பட்டுள்ளார். முருகதாசர் என்ற பாத்திரத்தின் இறந்தகாலத் தொழிலும், நிகழ்காலத் தொழிலும் மிகச் சிறப்பான முறையில் இக்கதையில் விளக்கப்பட்டு உள்ளன. குடும்பத்தின் வறுமைநிலையைப் போக்க 'சாகாவரம்' பெற்ற சிறுகதைகளை எழுதாது வருமானம் பெறக்கூடிய விடயத்திற்கு முதலிடம் கொடுக்கிறார். எனவே, ஒரு ஏழைக்குடும்பத்தின் ஒரு நாளைய வாழ்க்கைப் போராட்டம் எவ்வாறு கழிந்தது என்பதை ஆசிரியர் தன் கதையில் பிரதிபலித்துக் காட்டியுள்ளார். ஒருநாட் பொழுதில் அவர்களின் வயிற்றை நிரப்ப அவர்கள் படும் துன்பங்-களை மையப்பொருளாகக்கொண்டு கதை வளர்த்துச் செல்லப் படுகின்றது. எனவே கதைத் தலைப்பிற்கு கதையோட்டம் பொருந்தக்கூடிய வகையில் இக்கதையினை ஆசிரியர் படைத்துள்ளார்.

## இக்கதையில் வரும் சம்பவங்கள்

முருகதாசர் படுக்கை விரிக்கும் கோரைப்பாயின் தன்மையையும் அவர் பாய் விரிக்கும் முறையையும், பாயின் அமைப்பினையும் ஆசிரியர் சிறப்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கியுள்ளார். மண்ணெண்ணெய் வாங்கப் பணமின்மையால் தெரு விளக்கை நம்பி வாழ்கின்ற நிலைமை, தீப்பெட்டி வாங்குதல், பாத்திர உரையாடல்கள், கமலம் - முருகதாசர் ஆகியோருக்கு நல்லெண்ணெய், தீப்பெட்டி வாங்கப் பணமின்மை, முருகதாசர் - கடைக்காரன் ஆகியோருக்கு இடையிலான உரையாடல், ரிக்ஷாக்காரன், குழந்தை, முருகதாசர் ஆகியோரின் உரையாடல்மூலம் குழந்தையின் அற்ப ஆசையைக்கூட நிறைவேற்ற முடியாதநிலை என்று பல சம்பவங்கள் கோவைபட இடம் பெறுகின்றன. மேலும், சுப்பிரமணியம்பிள்ளையிடம் மூன்று ரூபாய் கடனாகக் கேட்டல், அவர் கொடுத்த எட்டணாவை வைத்துக்கொண்டு நீண்ட யோசனையில் ஆழ்ந்திருக்கும் மனஉணர்வு, திங்கட்கிழமையன்று சம்பளத் தினத்தையே எதிர்பார்த்து நாட்களைக் கடத்துகின்ற நிலைமை போன்றவை இக்கதையில் வரும் சம்பவங்களாகும்.

## கதை நிகழ்வுக்கான களம்

கதையின் களமாகக் கொள்ளக்கூடியது வீட்டின் அமைப்பாகும். இங்கு வீட்டின் பாக அமைப்பை ஆசிரியர் விசித்திரமாகப் படைத்துள்ளார். இங்கு அரிக்கேன் விளக்குப் பாவிக்கப்படுதல், அவரது தொழில் பற்றிய விவரணம், சாகாவரம் பெற்ற கதைகளை எழுதுபவர் குடும்ப வறுமைநிலை காரணமாக வெளிநாட்டுக் கம்பனியின் பொருட்களுக்கு விளம்பரம் எழுதுதல், இதற்காக அவர் பெற்றுக்கொள்ளும் குறைவான ஊதியம் போன்ற விடயங்களை ஆசிரியர் கதை நிகழ்களத்தினூடாகத் தொட்டுச்செல்கிறார்.

## மொழிநடை

இக்கதையின் மொழிநடையில் ஆசிரியரின் நகைச்சுவை கையாளப்பட்டு உள்ளது. இக்கதையில் பேச்சுவழக்குச் சொற்கள் கையாளப்பட்டுள்ளன. ஆங்கிலச்சொற் பிரயோகங்கள் இக்கதையில் இடம்பெற்றுள்ளன. இத்தகைய உத்திகளைக் கையாண்டு வறுமையுற்றவர்களது வாழ்க்கையில் நிகழும் துன்பங்களை யதார்த்தபூர்வமாக ஆசிரியர் உருவாக்கியுள்ளார். அத்துடன் கதையின் முடிவைக் கேள்விக்குறியாக்கி வாசகர் முடிவுக்கு விட்டிருப்பதும் ஆசிரியர் தம் கருத்தை வெளிப்படுத்துவதில் உள்ள சிறப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# கு. ப. ராஜகோபாலன்

1902 இலிருந்து 1944 வரை வாழ்ந்த மணிக்கொடி கால எழுத்தாளரான கு.ப.ராஜகோபாலன் தமிழ்ச் சிறுகதைத்துறைக்கே வளமூட்டிய சிருஷ்டி கர்த்தா என்றால் மிகையாகாது. அதாவது சிறுகதைகளைப் படைப்பதற்கு மிகவும் துணிவுடன் இயங்கியதோடு தன் வாழ்க்கையின் முழுப் பகுதியை-யுமே சிறுகதைக்காக அர்ப்பணித்தார். இவர் தனது மாணவப் பருவத்திலேயே எழுத்துலகிற் புகுந்து கொண்டார்.

'கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்' என்பார்கள். ஆனால் கண்கெட்ட பின்னரும் சூரிய நமஸ்காரம் செய்தவர் கு.ப.ராஜகோபாலன் அவர்கள். தமது முப்பத்திரண்டாவது வயதில் ஏற்பட்ட கண்நோய் காரணமாக தனது 'குமாஸ்தா' வேலையை விட்டு விலகிச்சென்ற நேரத்தில்தான் அவர் அதிகமாக எழுத்துலகில் மூழ்கினார். கண்பார்வை சிலகாலத்தில் முற்று முழுதாக இல்லாமற் போய்விட்டது. அவ்வாறான நிலைமை ஏற்பட்டதும் தாம் சொல்லச்சொல்ல தங்கை கு.ப.சேது அம்மாளை எழுத வைத்தார். இவ்வாறான நிலையிலே எழுத்துலகிலே சஞ்சரித்துக் கொண்டிருந்த இவர், 1944இல் அமரரானார்.

மேற்கூறியவற்றிலிருந்து பார்க்கும்போது கு.ப.ரா. எவ்வளவுதூரம் தன்னை சிறுகதைத் துறையோடு இணைத்துக்கொண்டிருந்தார் என்பது கண்கூடு. எல்லா எழுத்தாளர்களையும் பெரும்பாலும் வாட்டி வதைக்கின்ற வறுமை நோய் இவரையும் சூழ்ந்துகொண்டது. ஆனாலும் சிறுகதைப் படைப்புத் துறையிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளவில்லை. வறுமை அதிகரிக்க அதிகரிக்க பத்திரிகைத் துறைகளுடனும் தன் சிறுகதைகளை இணைத்துக் கொண்டார். இந்நிலைதான் அவருடைய துறவுக்கும் இலட்சியத்திற்கும் காரணமாகும்.

ஐம்பத்தைந்து வருடங்களுக்கு முன்பு தமிழையே நம்பி வாழமுயன்ற இவர், ஏறக்குறைய எண்பத்தைந்து சிறுகதைகளை எழுதியுள்ளார். இவை தொகுதிகளாக வெளிவந்தவையாகும். ஆனால் பத்திரிகைகளில் மட்டும் வெளிவந்த இருபத்தைந்துக்கு மேற்பட்டவையாகும். இவற்றினை விட ஓரங்க நாடகங்களையும் சிந்தனைக் கட்டுரைகளையும் முடிவுபெறாத சில நீளக்கதைகளையும் வசனக் கவிதைகளையும் விமர்சனக் கட்டுரைகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியுள்ளார். 'புனர்ஜென்மம்', 'கனகாம்பரம்', 'காஞ்சனமாலை', 'காணாமலே காதல்', 'சிறிது வெளிச்சம்' ஆகிய தொகுதிகளிலே இவரது சிறுகதைகள் வெளிவந்தன. மற்றும் டோல்ஸ்ரோய் கதைகளையும் 'துர்கேசநந்தினி', 'இரட்டை மனிதன்' என்ற புனைகதைகளையும் மொழிபெயர்த்துள்ளார்.

கு.ப.ராவின் இலக்கிய உலகம் தனியானது இதனால் சிறுகதை உலகில் நிலையான இடம்பெற்றார். அதற்குக் காரணம் அவரின் சிறுகதைகள் வாழ்க்கையினைக் கண்முன் நிறுத்தி இன்பதுன்பங்களைப் பிரதிபலித்துக் காட்டியமையாகும். உள்ளத்து உணர்ச்சித்தூண்டல்களைப் படிப்படியாக வடித்துக்காட்டினார். ஆண்-பெண் உறவு தொழிற்படும் விதம் பற்றிய உளவியற்பாங்கான சித்தரிப்பாக இருப்பதே அதன் தனித்துவம் ஆகும். இந்த வகையிலே இவரின் 'விடியுமா' என்ற சிறுகதை அவ்வாறான தன்மையிலே அமைந்திருப்பதனைக் காணலாம். இவருக்குப் பிடித்தது கிராமத்துச் சூழ்நிலையும், அமைதியான குடும்பத்து இன்பதுன்பமுமே. அந்த வகையிலே கிராமத்து எளிய வாழ்க்கைநிலைகளை சிறந்த கதைகளாகப் படைத்தார்.

கு.ப.ரா. பாலுணர்ச்சி பற்றிய கதைகளையே அதிகம் எழுதியுள்ளார் என்ற கருத்துப் பொதுவாக உள்ளது. ஆனால் அது தவறானதாகும். ஆண்-பெண் உறவு முக்கிய இடம்பெறுகின்றது என்பது மட்டும் உண்மை. ஆனால் அவ்வுறவில் பாலுணர்ச்சி மிகையானதாக இருக்கவில்லை. இவற்றிற்கு விதிவிலக்காகவும் 'அடி மறந்தால் ஆழம்', 'அர்ச்சனை ரூபாய்', 'நடுத்தெரு நாகரிகம்' போன்ற கதைகள் இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

இவர் தமக்கென்று ஒரு தனிப்போக்கினை வகுத்துக்கொண்டு அந்தப் போக்கிலேயே கலையழகு மிளிரும் சிறுகதைகளை எழுதினார். பெரும்பாலும் ஆண்-பெண் உறவுகளால் ஏற்படும் இன்பதுன்ப உணர்வுகளைப் பல்வேறு கோணங்களில் உயிர்ச்சித்திரமாகக் காட்டியுள்ளார். இவர் மனிதர்களின் நுணுக்கமான உணர்வுகளை எழுத்தில் உயிர்த் துடிப்போடு கொண்டு வந்தார். இவரது கதைகளிலே பல கதை மாந்தர்கள் இடம்பெற மாட்டார்கள். ஆனால் இவற்றையெல்லாம் நிறைவுசெய்யக்கூடிய வகையிலே உணர்வுத் தெறிப்புகளும், மோதல்களும் அதனூடாக உணர்வுப் போராட்டங்களும் இடம்பெறும்.

இவ்வாறாக, வாழ்வில் தோன்று வேதனை உணர்ச்சிகளை இலக்கியப் பொருளாகக்கொண்டு கதைகளைப் படைத்த கு.ப.ரா. அவ்வுணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளார். மனிதவாழ்க்கையில் ஏற்பட்ட குறிப்பிட்ட நிலையைச் சித்திரிக்கும் சிறுகதைகள் அவரால் அதிகம் விரும்பப்பட்டது ஆச்சரியப்படக்கூடிய விடயமல்ல. வாழ்க்கையிலும் பார்க்க வாழ்க்கையின் அடியாகத் தோன்றும் உணர்ச்சிகளின் முனைப்புநிலைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இலக்கிய நோக்கினை 'ரோமான்றிசிசம்' என்பர். அத்தகைய இலக்கியப் போக்கினைக் கொண்டதோரே கு.ப.ராவின் இலட்சிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய கர்த்தாக்களாக விளங்கினர். ஷெல்லி, கீட்ஸ் முதலியோரை கு.ப.ரா விரும்பிப் படித்தார்.

இத்தத்துவம்தான் தனது சிறுகதைகளைப் படைப்பதற்குப் பெரும் பங்காற்றின என்று கு.ப.ரா. கூறியுள்ளார். கதைகளைப் படைக்கும்போது கண்டவைகள் மட்டுமின்றி தங்கத்துடன் செம்பு சேருவதுபோல காணாதவைகளும் இணைகின்றன. அந்த அனுபவம் காந்தத்துண்டு போலத் தான் இழக்கக்கூடிய நிகழ்ச்சிகளையும் நிலைகளையும் தன்னுள் உள்வாங்கிக் கொள்கின்றது. தத்துவங்கள் ஆசிரியரின் அனுபவ ஆற்றல்களினால் பல்வேறு வடிவங்களாக கதைகளிலே இடம்பெறுகின்றன.

மனித உறவினைச் சித்திரிக்கின்ற முறைகளிலேயே இவ்வுணர்ச்சி நிலைகள் வெளிப்படும். அவ்வாறு மனித உறவு உணர்ச்சி நிலைகளை வெளிப்படுத்துவதற்கு மனோதத்துவ நோக்கும் அவசியமாகும்.

கு.ப.ரா. கையாண்ட உரைநடை, அவர் வெளிக்கொணர முயன்ற இலக்கியப் பொருளை எடுத்தியம்ப பெரிதும் துணைநின்றன. மென்மையான உணர்வு நிலைகளை வெளிக்கொணருவதற்கு ஏற்ற உரையாடல்களையே அவர் பிரயோகித்தார். அவர் பயன்படுத்திய சொற்கள் உணர்வுக் குறிப்பாற்றல் கொண்டவையாகவே உள்ளன. கவிதைப்பண்பு நிறைந்த சொற்றொடர்களைக் கொண்ட அவரது நடை உணர்ச்சி நிலைகளைக் காட்டுவதில் வெற்றிபெறுகின்றது.

உருவஅமைதி கு.ப.ரா.வின் சிறுகதைகளிலே சிறப்பாக அமைந்துள்ளது. கு.ப.ரா.விடம் அழகான, தீர்ந்த, மாற்றமுடியாத, பளபளப்பான வடிவம் உள்ளது. இவரின் உருவ அமைதியின் தனித்துவத்தைக் காட்டக் கூடியனவாக 'விடியுமா', 'ஆற்றாமை' ஆகிய சிறுகதைகள் உள்ளன.

பொருளால் தமிழ்ச்சிறுகதையை வளம்படுத்திய கு.ப.ரா. உருவ அமைப்பிற்கும் வளம்சேர்த்தார். புதுமைப்பித்தனிலும் பார்க்க கு.ப.ரா. சிறுகதையில் உருவப் பரிசோதனை செய்துள்ளார் என்பதும் அப் பரிசோதனையில் முன்னவரிலும் பார்க்க இவர் வெற்றிபெற்றுள்ளார் என்பதும் க.நா.சுப்பிரமணியத்தின் கூற்றாகும்.

கு.ப.ராவின் தமிழ் நடையைப் பற்றிக் கூறினால் அவர் வெளிப்படுத்த முயன்ற விடயங்களை வெளிப்படுத்துவதற்குப் போதுமான நடை அவரிடம் இருந்தது. சொல்லவந்த விடயங்களை மிகவும் ஆழமாகவும் அழகாகவும் தெளிவுடனும் சொன்னார். தமிழ் வசனநடைக்கு ஒரு புதுமணத்தையும், புதுக் கனத்தையும், பரிமாணத்தையும் தந்தவர் கு.ப.ரா என்றால் மிகையாகாது. அவருடைய 'காணாமலே காதல்' என்கின்ற சிறுகதைத் தொகுதியிலே சரித்திரச் சிறுகதைகளின் நடை மிகவும் அழகாகவும் அழுத்தமாகவும் வந்திருப்பதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கு.ப.ராவின் சிறுகதைகள் தமிழ் இலக்கியத்தில் சிறப்பான ஒரு பகுதியாகும். தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் அவருக்கு சிறப்பான ஒரு பங்குண்டு. பல சிறுகதைகளிலே அவர் முன்னரோ பின்னரோ பலரும் தொடாத பல சிகரங்களைச் சுட்டித் தொட்டுக் காட்டியிருக்கிறார். அவருடைய சிறுகதைகளையும் மற்ற இலக்கியத்துறை எழுத்துக்களையும் இலக்கிய விமர்சனரீதியில் மதிப்பிட்டுப் பார்ப்பது பொருத்தமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# கனகாம்பரம்

## கு. ப. ராஜகோபாலன்

"மணி!" வாசலில் நின்றுகொண்டே ராமு கூப்பிட்டான். நண்பன் வீட்டில் இருக்கிறானோ இல்லையோ என்று அவனுக்குச் சந்தேகம்.

"எங்கேயோ வெளியே போயிருக்கா, நீங்க யாரு?" என்று மணியின் மனைவி கதவண்டை நின்றுகொண்டு மெல்லிய குரலில் கேட்டாள்.

ராமுவுக்குக் கொஞ்சம் தூக்கிவாரிப் போட்டது. மணியும் அவனும் கலாசாலையில் சேர்ந்து படித்தவர்கள். மணியின் மனைவியைப் பற்றி அவனுக்கு அதிகமாகத் தெரியாது. அவளை அவன் அதுவரை பார்த்ததுகூட இல்லை. புதுக்குடித்தனம் நடத்த அவள் சென்னைக்கு வந்து ஒரு மாதந்தான் ஆகியிருந்தது. அந்த மாதம் முழுவதும் ராமு சென்னையில் இல்லை. அதற்குமுன் சாரதாவும் அவனைப் பார்த்ததில்லை.

ராமுவும் மணியைப்போல மிகவும் முற்போக்கான கொள்கைகளை உடையவன்தான். கல்லூரி விவாதங்களில் பேசியபொழுது, ஆணும் பெண்ணும் சரிநிகராகப் பழக வேண்டுமென்றும், பெண்களின் முன்னேற்றம் மிகவும் அவசியமான சீர்திருத்தமென்றும் ஆவேசத்துடன் முழங்கி வந்தான். ஆனால், அந்தக் கொள்கையை நடைமுறையில் கொண்டுவந்தபொழுது அவன் கலவரம் அடைந்து விட்டான். முன்பின் பழக்கமின்றி மணியின் மனைவி தன்னிடம் பேசியது அவனுக்கு வியப்பாக இருந்தது.

அவன் அதைச் சிறிதும் எதிர்பார்க்கவே இல்லை. 'வீட்டில் மணி இல்லாவிட்டால் பதில் வராது. கொஞ்சநேரம் நின்று பார்த்துவிட்டுப் போய் விடுவோம்' என்றே அவன் ஒரு குரல் கூப்பிட்டுப் பார்த்தான்.

மணியின் மனைவி சாரதா படித்த பெண்ணும் அல்ல; அசல் நாட்டுப் புறம். எந்தப் பக்கத்திலும் ரெயில் பாதைக்கே இருபது கல் தொலைவில் உள்ள சோழநாட்டுக் கிராமத்துப் பெரிய பண்ணையாரின் மகள் அவள். அவளுடைய நடை உடை பாவனைகளிலும் அந்தச் சில கணங்களில் அவன் கண்களில் பட்ட மா[illegible] ஒருவித [illegible]யும் காணவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலையுயர்ந்த பெங்களூர்ப் பட்டுச்சேலையை நேர்த்தியாகக் கொசுவம் விட்டுக் கட்டிக்கொண்டிருந்தாள். இதற்கேற்ற நிறம் கொண்ட பழைய மாதிரி ரவிக்கையே அணிந்திருந்தாள். தலைமயிரை நடுவே வகிடெடுத்துத்தான் பின்னிக்கொண்டிருந்தாள். பின்னல்கூட நவநாகரிகப் போக்குப்படி 'தொளதொள' என்று காதை மூடிக்கொண்டு இருக்க-வில்லை. பின்னலை எடுத்துக் கட்டிக்கொண்டிருந்தாள். நெற்றியில் முழுநிலவுபோலப் பெரிய குங்குமப்பொட்டு இருந்தது. உடம்பின் மேலிருந்த வைரங்கள் பூத்துக் கொட்டிக் கொண்டிருந்தன. மூக்கில் புல்லாக்கு இருந்தது. கைக்காரியமாக இருந்தவள், அவசரமாக யாரென்று பார்த்துப் பதில் சொல்ல வந்தாள் என்பது அவள் தோற்றத்திலிருந்தே தெரிந்தது. அப்பேர்ப்பட்டவள் தன்னுடன் வந்து பேசியதும் ராமு மனம் தடுமாறிப் போனான்.

ஒரு பெண் வந்து தன்னுடன் பேசிவிட்டாள் என்பதனால் அவன் கூச்சமடையவில்லை. கல்லூரியிலும் வெளியிலும் படித்த பெண்கள் பலருடன் பேசிப் பழகியவன்தான் அவன். அது அவனுக்குப் பழக்கமாய் இருந்தது. இந்தப் படிக்காத பெண் தன்னுடன் பேசியதுதான் அவனுக்குக் குழப்பத்தை உண்டாக்கிவிட்டது. படித்த பெண்கள்கூடப் புது மனிதருடன் பேசுவது எளிதல்லவே! அப்படியிருக்க, நவநாகரிக முறையில் ஆண்களுடன் பழகுவது என்பதே அறியாத இடத்தில் பிறந்து வளர்ந்த பெண் வேறு ஆடவனுடன் பேசுவதென்றால், அது ராமுவுக்கு விபரீதமாகப்பட்டது. ஆனால் அவள் பேசிய சொற்கள் மெல்லிய தொனி யுடன்தான் வெளிவந்தன. அவனது முகத்தைப் பார்த்துக்கூடப் பேசவில்லை அவள். தலை குனிந்த வண்ணமாகவே இருந்தாள் இருந்தாலும், அவன் மனம் என்னவோ சமாதானப்-படவில்லை.

"நான் - நான் மணியின் சிநேகிதன்" என்று சொல்லி, மேலே என்ன சொல்லுவது என்பது தெரியாமல் தத்தளித்தான்.

"இதோ வந்துவிடுவார். உள்ளே வந்து உட்காருங்கள்" என்றாள் சாரதா.

அதைக் கேட்டதும் உண்மையிலேயே ராமு திகைத்துப் போனான். தலை கிர்ரென்று சுற்றியது. ஏதோ தப்புச் செய்துவிட்டவன்போலச் சுற்றுமுற்றும் பார்த்தான். ஒரு சிறு தனி வீட்டில், தனியாக இருக்கும் இளம்பெண் தன்னை - உள்ளே வந்து உட்காரச் சொன்னால்! - அவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

"இல்லை, அப்புறம் வருகிறேன்" என்று அரைகுறையாகக் கூறித் தலையெடுத்துப் பார்க்காமல் வெகுவேகமாய்ப் போய்விட்டான்.

ஐந்து நிமிடத்திற்கெல்லாம் இலையும், காய்கறியும் வாங்கிக்கொண்டு மணி உள்ளே நுழைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கள் சிநேகிதராமே? வந்து தேடினார்" என்று சாரதா மகிழ்ச்சி பொங்கக் குதித்துக்கொண்டு அவனை எதிர்கொண்டு போய்ச் சொன்னாள். அவளது மேனியும் குரலும் ஒரு படையெடுப்புப்போல அப்பொழுது அவனைத் தாக்கின. மணி புதுக்குடித்தனத்தின் தொல்லைகளிலும் தன்னை வந்து தாக்கிய அந்த இன்ப அலையை அனுபவித்து ஆறுதலடைந்தான்.

"யார் அது?" என்று அவள் கன்னத்தைக் கிள்ளிக்கொண்டு கேட்டான்.

"யார் என்று கேட்கவில்லை" என்று சொல்லிக்கொண்டு வலி கொண்டவள் போலப் பாசாங்கு செய்து "ஆ!" என்றாள்.

திடீரென்று மணியின் முகம் சிவந்தது. கோபம் பொங்கி எழுந்தது.

"எவ்வளவு தரம் சொல்லுகிறது உனக்கு? யார் என்று கேட்பதற்கு என்ன கேடு உனக்கு? ஒரு வார்த்தை கேட்டுவிட்டால் என்ன மோசம், உன் கையைப் பிடித்து இழுத்து விடுவானோ?" என்று வார்த்தைகளை வீசினான்.

ஒரு வாரத்திற்கு முன்புதான் இப்படி ஒரு சம்பவம் நடந்து, மணி சாரதாவைத் தாறுமாறாகக் கடிந்துகொண்டான். "பட்டணத்தில் நண்பர்கள் அடிக்கடி வந்து தேடுவார்கள். பதில் சொல்லாமல் உள்ளே நுழைந்துகொண்டு கதவைச் சாத்திக் கொள்ளக்கூடாது. பட்டணத்தின் நாகரிகத்திற்கு ஏற்றபடி நடந்து கொள்ளவேண்டும்" இந்த மாதிரி உபதேசங்கள் செய்து முடித்தான். அதன் விளைவாக இருவரும் இரண்டு நாள் பேசாமல்கூட இருந்தார்கள்.

இந்தத் தடவை தான் சொல்லப்போகின்ற பதில் மணிக்கு மிகவும் மகிழ்ச்சியை உண்டாக்கப் போகிறது என்ற நிச்சயமான எண்ணத்தில், 'வேண்டிய மட்டும் பேசட்டும்' என்று சாரதா வாயை மூடிக் கொண்டிருந்தாள். பிறகு, அவன் ஓய்ந்ததும் அமைதியாகப் பதில் சொன்னாள்:

"யார் என்று கேட்டேன். சிநேகிதன் என்று சொன்னார். பேர் சொல்லவில்லை. 'உள்ளே வந்து உட்காருங்கள்; வந்துவிடுவார்' என்றேன். அப்புறம் வருவதாகச் சொல்லிப் போய்விட்டார்"

சாரதா ஆவலுடன் மணியின் முகத்தை நோக்கினாள். அதில் எவ்விதமான மகிழ்ச்சிக்குறியும் தோன்றாததைக் கண்டு அவளது முகம் சுண்டிப் போய்விட்டது. சடக்கென்று திரும்பி உள்ளே போய்விட்டாள்.

மணியோ அந்த மாதிரிப் பதிலை அவளிடமிருந்து எதிர்பார்க்கவே இல்லை. முதலில் அவனுக்கு முகத்தில் அடித்தாற்போல் இருந்தது அவள் பதில். பிறகு தான் சொன்னதற்கு மேலாக அவள் நடந்து கொண்டுவிட்டது அவனுக்கு அதிருப்தியை உண்டாக்கிற்று. அதன் பிறகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஏன் அப்படிச் செய்தாள்? நான் சொன்னதற்காகக் கீழ்படிந்து நடந்த மாதிரியா அது? அல்லது.....' என்று கொஞ்சம் அவன் மனம் தடுமாறலாயிற்று. எல்லாம் சேர்ந்து அவன் வாயை அடக்கிவிட்டன. சாரதாவும் அவனை அமைதிப்படுத்தவோ, பேச்சில் இழுக்கவோ முயலவில்லை. அவளுக்கும் கோபம்.

சாப்பாடு முடிந்து வெளியே போகும்வரை மணி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. தெருவழியாகப் போய்க்கொண்டே என்ன என்னவோ எண்ணமிட்டான். அவனது மனம் சொல்லமுடியாத வேதனையை அடைந்தது. சாரதா அவ்வளவு தூரம் போய்விடுவாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. படித்த பெண் அம்மாதிரிச் செய்திருந்தால் அதில் ஒன்றும் குறிப்பிடக்கூடியபடி இராது. ஒரு நாட்டுப்புறப் பெண் முகம் தெரியாதவனை உள்ளே வந்து உட்காரச் சொன்னது மிகவும் அநாகரிகம்! சிநேகிதன் என்ன நினைத்திருப்பான்? 'என்ன தைரியம் இந்தப் பெண்ணிற்கு?' என்றோ அல்லது 'வெறும் அசடு!' என்றோ நினைத்திருப்பான். அல்லது.....

இம்மாதிரி யோசித்துக்கொண்டே போய்க்கொண்டிருந்தான் மணி.

எங்கேயோ போய்விட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்த ராமு, தெருவில் மணி எதிரே வருவதைக் கண்டு தயக்கமுற்றான். அப்பொழுது மணியைக் கண்டு பேசுவதா? வேண்டாமா? என்றுகூட அவனுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. வீட்டுக்கு வந்திருந்ததாகச் சொல்வதா வேண்டாமா? மணியின் மனைவி சொன்னதைச் சொல்வதா வேண்டாமா? இத்தகைய கேள்விகள் அவனது மனதில் எழுந்தன. ஒருவேளை மணியின் அனுமதியின் பேரில் அவள் அப்படிப் பேசியிருந்தால் சரியாகப் போய்விடும். இல்லாவிட்டால் தான் சொல்லுவதால் அந்தப் பெண்ணின் அசட்டுத்தனமோ, அறியாமையோ மணிக்குக் கோபத்தை உண்டாக்கினால்? அவர்களிடையே பெருத்த மனத்தாங்கல் ஏற்பட்டால்? யார் கண்டார்கள்? மனித சுபாவம் எது வேண்டுமானாலும் நினைக்கும். அந்த மாதிரி மனக்கசப்பு நேருவதற்குத் தான் காரணமாகக்கூடாது. அவள் தானாக மணியிடம் முழுவதும் சொல்லியிருக்கிறாள் என்பது என்ன நிச்சயம்? சொல்லியிரா்விட்டால் அசட்டுத்தனம் ஆபத்தாக அல்லவோ முடியும்?

இவ்விதம் எண்ணியவனாக ராமு சடக்கென்று ஒரு சந்தில் திரும்பி மணியின் கண்ணில் படாமல் தப்பினான். ஆனால் அன்று காலையில் நடந்ததைத் தன் மனதைவிட்டு அகற்ற அவனால் முடியவில்லை. அந்தப் பால்வடியும் புதுமுகத்தின் களங்கமற்ற பார்வை, தடங்கல், திகைப்பு, பயம் இவையற்ற அந்தத் தெளிவான சொற்கள்! "இதோ வந்து விடுவார்!" என்றாள் அவள். 'அதில் என்ன நேர்மை! என்ன மரியாதை! இன்னும், தன்னை உள்ளே வரும்படி அழைத்ததில் என்ன நம்பிக்கை! - தன் [illegible]றதால் ஏற்பட்டது. தன்னையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பினாள்...... அவளா அசடு? அவள்தான் உண்மையான பெண்! நான் சந்தித்த முதல் பெண்! அதனால்தான் எனக்கு அந்தக் கலவரம் ஏற்பட்டது. மணியை மாலையில் கண்டு அவனிடம் சொல்ல வேண்டும்' இப்படி எண்ணிக்கொண்டு ராமு நடந்தான்.

ஆனால் தான் முதலில் பேச்சை எடுப்பதற்கு முன்பு, நிலைமை எவ்வாறு இருக்கிறது என்று அறிந்துகொள்ளவேண்டும் என்று தீர்மானித்தான். மாலை ஏழு மணிக்குச் சென்றால் மணி நிச்சயம் வீட்டில் இருப்பான் என்று எண்ணினான் ராமு.

மாலை ஆறு மணியிருக்கும். சாரதா வீட்டு வேலைகளைச் செய்து முடித்துவிட்டு அறையில் தலையை வாரிப் பின்னிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். பக்கத்தில் ஒரு தட்டில் தொடுக்கப்படாத கனகாம்பர மலர்கள், எதிரே முகம் பார்க்கும் கண்ணாடி, ரிப்பன், சீப்பு, வாசனைத் தைலம் முதலியவை இருந்தன.

உள்ளே நுழைந்த மணிக்கு இவற்றையெல்லாம் பார்த்ததும் ஏதோ ஓர் ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது.

"இது என்ன பூவென்று இதை நித்தியம் வாங்கித் தலையில் வைத்துக் கொள்ளுகிறாய்?" என்று அவன் அவலை நினைத்துக்கொண்டு உரலை இடித்தான்.

ஆனால், கனகாம்பரத்தைத்தான் அவன் சொல்லுகிறான் என்று நினைத்துச் சாரதா, அந்தச் சந்தர்ப்பத்தில் அவனது பட்டண நாகரிகத்தை இடித்துக்காட்ட வேண்டும் என்று தீர்மானித்தாள்.

"பட்டணத்திலை எல்லோரும் இதைத்தானே வைத்துக்கொள்கிறார்கள்? சங்கீத சபையிலேகூட இதைத்தானே தலை தாங்காமல் வைத்துக் கொண்டு வந்தார்கள்" என்று சாரதா சொன்னாள்.

"எல்லாம் பட்டணத்திலே செய்வதுபோல செய்யவேண்டுமென்று யார் சொன்னது? அப்பிடி கட்டாயமா? பட்டணத்துப் பெண்கள் மாதிரித்தான் இருக்கிறது அவர்கள் வைத்துக்கொள்ளுகிற கனகாம்பரமும். வாசனை இல்லாத பூவை எங்கேயாவது தலையில் வைத்துக்கொள்வதுண்டா? காக்கரட்டான் பூவைத் தலையில் வைத்துக் கொள்கிற பெண்களுடைய வாழ்க்கைப் போக்கும் அப்படித்தான் இருக்கும்"

"நீங்கள்தானே பட்டணத்துப் பெண்போல இருக்கவேண்டும் என்றீர்கள்? இல்லாவிட்டால் உங்களுக்கு வெட்கமாக இருக்கும் என்றீர்களே?" என்று சாரதா மணியின் முகக்குறியை ஊன்றிக் கவனித்துக்கொண்டு கூறினாள்.

"அதற்காக மூன்றாம் பேர்வழியைப் போய் வீட்டுக்குள்ளே வந்து உட்காருங்கள் என்பதா?" என்று மணி ஆத்திரத்தில் கொட்டிவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரதாவின் முகம் சட்டென்று மாறுதல் அடைந்தது. என்ன நாட்டுப் புறமானாலும் அவள் பெண்; அளவுகடந்த கோபத்துடன் மணியின் முகத்தை ஒரு நிமிடம் ஏறிட்டுப் பார்த்தாள். அவனுடைய எண்ணங்கள் அவனது முகத்தில் அவளுக்குத் தெள்ளத் தெளிவாய்த் தெரிந்தன. தனக்கு - தன் பெண்மைக்கு - அவன் செய்த அவமதிப்பை அறிந்தவள் போல் அவளுடைய முகத்தில் ஓர் ஆழ்ந்த் வெறுப்புக்குறி தோன்றியது. பாதி போட்ட பின்னலை அவிழ்த்து முடித்துக்கொண்டு கனகாம்பரப் பூவைத் தட்டுடன் அப்படியே எடுத்து அலுமாரியில் வைத்துவிட்டுச் சமையலறைக்குப் போய் விட்டாள்.

மணி அயர்ந்து போனான்! அடிபட்ட நாய் போல மவுனமாக அறைக்குப் போய் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு ஒரு புத்தகத்தைப் படிப்பதாக பாசாங்கு செய்தான்.

ஏழு அடிக்கும் சமயத்தில் ராமு வந்தான். மணி கலகலப்புடன் பேச முயற்சி செய்தும் பயன்படவில்லை. வந்ததும் வராததுமாய் ராமு, “மணி நான் காலையில் வந்திருந்தேன் நீ எங்கே போயிருந்தாய்?” என்றான்.

“நீயா வந்திருந்தாய்?” என்று கேட்டுவிட்டு மணி மவுனத்தில் ஆழ்ந்தான்.

“மணி, எனக்கு ஏற்பட்ட வியப்பில் என் பெயரைக்கூடச் சொல்ல மறந்து போனேன்”

ராமுவின் தொண்டை அடைபட்டது. மணி தலை குனிந்துகொண்டான். அவனால் பேசவே முடியவில்லை. நண்பர்கள் இருவரும் சில நிமிட நேரம் மவுனமாக உட்கார்ந்திருந்தார்கள். ராமு நிலைமையை உணர்ந்து விட்டான். திடீரென்று எழுந்தான்.

“மணி, நான் போய்விட்டு வருகிறேன். இதைச் சொல்லத்தான் வந்தேன்”

“இங்கேயே சாப்பிடேன், ராமு?”

“இல்லை, இன்று வேண்டாம்”

இரவு சாப்பாடு பேச்சில்லாமல் முடிந்தது. ஜன்னல் வழியே பாய்ந்த நிலவைக் கவனிப்பதுபோல மணி ஏங்கிப் போய் உட்கார்ந்து கொண்டிருந்தான். சாரதா பால் கிண்ணத்தை எடுத்து வந்து மவுனமாக நீட்டினாள்.

அதுவரையில் அவளுடைய முகத்தைப் பார்க்கக்கூட அவனுக்குத் துணிவு வரவில்லை. அப்பொழுதுதான் தலை எடுத்துப் பார்த்தான். அவளது முகத்தில் தோன்றிய துயரக்குறியைக் கண்டு பதறிப் போனான்; எழுந்து அவளது தோளைப் பிடித்துக்கொண்டான்.

“சாரதா!” என்று சொல்லி மேலே பேசமுடியாமல் நிறுத்தினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேண்டாம்!" என்று சாரதா அவனது முகத்தைத் தடவினாள்.

"நான் சொன்னது!" என்று மணி தன் மனதை வெளியிடலானான்.

"கனகாம்பரம் எனக்குப் பிடிக்காதே! நீங்கள் சொன்னதில் தப்பென்ன?" என்று சாரதா, பெண்களுக்கென்றே அமைந்த முறையில் பேச்சை மாற்றிவிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

# கனகாம்பரம்

## குறிப்புகள்

கு.ப.ரா. அவர்களால் சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட கதை இது. இக்கதை ஆண், பெண் உறவுநிலையை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. முன்பின் தெரியாத அந்நிய ஆடவர் ஒருவருடன் ஒரு பெண் தயக்கமின்றிப் பேசுவது ஓர் அசாதாரண நிகழ்வாகக் கருதப்பட்ட காலகட்டத்தையே இக்கதை நிகழ்வுக் காலமாகக் கொள்ள வேண்டும்.

இக்கதையிலே இடம்பெறுகின்ற மணி, ராமு, சாரதா ஆகிய மூன்று பாத்திரங்கள் இடையேயும் மணி, ராமு ஆகியவர்கள் ஒத்த மனப்பான்மை கொண்ட பாத்திரங்களாகவும், சாரதா இவர்களுக்கு அப்பால் வைத்து எண்ணத்தக்க ஒரு பாத்திரமாகவும் படைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான பாத்திரங்களின் மூலம் ஆசிரியர் ஆண்-பெண் உறவுகளையும் பல சமூகவியல் அம்சங்களையும் சில உளவியல் நடத்தை மனப்பாங்கு-களையும் வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும், இக்கதையிலே பெண்கள் பற்றிய பாரம்பரியமான பல சமூக மனப்பாங்குகளையும், நவீன காலத்திற்கேற்ற புதுமையான சமூகநோக்கு நிலையினையும் எடுத்துக்காட்டி இரண்டினையும் முரண்பட வைப்பதன் மூலம் வாசகர்களின் சிந்தனைப் போக்கைத் தூண்டிவிடுகின்றார். மணி, ராமு ஆகிய பாத்திரங்கள் உயர்கல்வி நிலையங்களில் பல் முற்போக்குக் கொள்கைகளை உடையவர்களாய் விளங்கியிருந்தாலும் தங்கள் கொள்கை-களை தங்கள் வாழ்க்கையோடு இயைபாக்கம் பெற்றவர்களாகக் காணப்பட-வில்லை. சாரதாவின் போக்கினால் இவர்கள் அடைகின்ற பதட்டமும் தடுமாற்றமும் அதனை வெளிப்படையாக எடுத்துக்காட்டுகின்றது. எனவே, இவர்கள் எவ்வளவுதான் முற்போக்குக் கொள்கைகளைக் கொண்டவர்களாக இருப்பினும் பெண்கள் பற்றிய பாரம்பரிய மனப்பாங்கில் மாற்றம் அடைந்தவர்களாக வெளிக்காட்டப்படவில்லை. ஆனால் சாரதா என்ற பெண் பாத்திரம் கணவனுக்கு ஏற்ற ஒரு பெண்ணாக நடந்து கொள்வதாகவே இறுதிவரை கதையில் சித்திரிக்கப்பட்டுள்ளாள்.

இக்கதையின் அமைப்பு, அதன் சிறப்புப் பற்றி நோக்கும்போது மனித-னுடைய வாழ்க்கையையே கு.ப.ரா. அடிப்படையாக வைத்து இக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையினை எழுதியுள்ளார். பொதுவாக இருவேறுபட்ட தன்மை கொண்ட ஆண்-பெண் உறவினையும் அவர்களது உணர்வினையும் இக்கதை தொட்டுச் செல்கின்றது. முற்போக்குக் கொள்கை கொண்டவனான மணி, ஆண், பெண் இருபாலாரும் சமமாகப் பழக வேண்டும் என்னும் எண்ணம் கொண்டவன். சாரதா கிராமத்துப் பெண்ணாக இருந்தபோதிலும் தன்னுடைய கணவனின் எண்ணத்திற்கு ஏற்றவளாக வாழ்ந்து கணவனின் பாராட்டைப் பெற நினைப்பவள். இக்கதையிலே பல இடங்களிலே புதுமணத் தம்பதியரிடையே காணப்படும் உணர்வுகளையும் இடையிடையே தொட்டுச் செல்ல வைக்கிறார்.

புரிந்துணர்வின்மையும் சந்தேகங்களுமே கதையோட்டத்தை வளர்த்துச் செல்கின்றது. மணிக்கும் சாரதாவுக்கும் ஏற்பட்ட விரிசலை கு.ப.ரா. 'கனகாம்பரம்' என்ற பூவைக் குறியீடாக வைத்து நகரவாழ்க்கையையும் கிராம வாழ்க்கையையும் ஒப்பிட்டுக் கிண்டல் செய்வதும் பின்னர் ராமு என்ற பாத்திரத்தினூடாக கதையைச் சுபம் பெறச் செய்வதும் சிறப்பான முறையில் கையாளப்பட்டிருப்பதும் சுவை பொருந்திய ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8

# கு. அழகிரிசாமி

கு.அழகிரிசாமி தமிழ்ச் சிறுகதை உலகின் முன்னோடிகளில் ஒருவராகக் கணிக்கப்படுகின்றார். கவிதைகள், நாடகங்கள் போன்ற துறைகளிலும் தன் ஆளுமையை நிலைநாட்டியுள்ளார். இவர் புதுமைப்பித்தனைப் போன்று உருவம், உத்தி போன்றவற்றில் சோதனைகளை செய்ய முனையவில்லை. ஆயினும் தான் எடுத்துக்கொண்ட கருப்பொருளை நன்கு துலக்கும் சிறுகதைகளை எழுதுவதில் அதிக கவனம் செலுத்தினார். மிகக்கடினமான விடயங்களையும் சாதாரணமுறையில் விளங்கிக்கொள்ளக் கூடிய வகையில் தனது கதைகளை அமைத்துக்கொள்ளும் பண்பு இவரது சிறப்பாற்றலாகும். அதற்கு உதாரணமாக, 'தவப்பயன்' என்ற சிறுகதையைக் கூறலாம். ஆத்மீக அனுபவம் சம்பந்தப்பட்ட துவைதம், அத்வைதம், சொர்க்கம், நரகம் போன்ற விடங்களை 'தவப்பயன்' எனும் சிறுகதை மூலம் எடுத்தியம்பியுள்ளார்.

தமிழ் சிறுகதைகளிற்கு அழுத்தமான காவியமரபு தந்தவர் கு.அழகிரிசாமி. இவர் கதை சொல்லும் கலை கைவரப்பெற்றவர். கருத்துச்செறிவும், சம்பவச் செறிவும் அமைதியான நடையும் கொண்ட அவரது சிறுகதைகள் காவிய மரபின் தொடர்ச்சியாக எண்ண வைத்தன. மொழியை நேர்த்தியாகவும் எளிமையாகவும் கையாண்டார். மனித மன இயல்புகள், வாழ்க்கைச் சிக்கல்கள், நடைமுறைப் பிரச்சனைகள் எல்லாம் அவர் கதைகளில் பிரதானமாக இடம்பெற்றன. 'அன்பளிப்பு', 'திரிவேணி', 'குமாரபுர ஸ்டேசன்', 'இரண்டு பெண்கள்' போன்றவை கு.அழகிரிசாமியின் சிறுகதைகளில் குறிப்பிடக்கூடியவை.

கவர்ச்சியான நடையில் சிறுகதைகளைப் படைத்தவர் கு. அழகிரிசாமி அவர்கள். அவருடைய சிறுகதைகள் அதிகமாக திருநெல்வேலி மாவட்டத்து மக்களின் பழக்கவழக்கங்களைக் கொண்ட கதைகளாக இருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. கிராமத்தில் சிறிய கடை வைத்து சிறு இலாபம் பெற்று அமைதியாக வாழ்க்கை நடத்தி வந்த ஒரு செட்டியாரைப் பற்றிக் கூறுகின்றது அவரது 'புதுஉலகம்' என்னும் சிறுகதை. அதேபோன்று 'வரப்பிரசாதம்' என்ற தொகுப்பும் பல சிறந்த பண்புகளை வெளிக் கொணர்கின்றது.

தனது கதைகளைத் தானே கூறுவார் கு. அழகிரிசாமி. ஆசிரியன் கரந்து நின்று பாத்திரங்களின் இயக்கம் மூலமும் மனப்போராட்டம் மூலமும் கதையைக் கூறும் உத்தியினை இவர் கையாளவில்லை. பாத்திரங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்கூறும் முறையிலும், சம்பவங்களை விளக்கும் முறையிலும், நகைச் சுவைத் திறனிலும் யதார்த்த வாழ்வின் அடித்தளத்தில் காணப்படும் மனிதாபிமான நிலைகளை எடுத்துக்காட்டும் சிறப்பிலும் அழகிரிசாமிக்கு இன்றைய தமிழ்ச்சிறுகதை உலகில் இணை யாருமில்லை என்று கூறலாம்.

ஏனைய மணிக்கொடி கால எழுத்தாளர்களைப் போன்று இவர் தனது கருத்தை வேகத்துடனும் வன்மையுடனும் கூறவில்லை. தான் கூற முற்பட்டவற்றை தனது இலக்கிய நோக்காகக் கொண்ட இவரது கதைகளைப் பலரும் விரும்பி இரசித்துப் படிப்பதற்கு இதுவே முக்கிய காரணம். ஒன்றுக்கொன்று கருத்தாலும், பண்பாலும் வேறுபட்ட சஞ்சிகைகளான 'தாமரை', 'கல்கி', 'கலைக்கதிர்', 'எழுத்து' முதலியவை அழகிரிசாமியின் சிறுகதைகளை மனப்பூர்வமாகப் பிரசுரித்தன.

பாரதத்திலே 1955-59 காலப்பகுதிகளிலே ஏற்பட்ட பஞ்சத்தினை எழுத்தோவியமாகப் படம்பிடித்துக் காட்டுவது இவரின் 'திரிபுரம்' என்னும் சிறுகதை ஆகும். புது உலகத்தில் நம்பிக்கை கொண்டு புதுமை பலவற்றை வாழ்வில் வரவேற்கும் அவர் புதிய உத்திகளைக் கையாளாமல் ஆற்றொழுக்காக கதைகள் சொல்லிப் பல உயர்ந்த நோக்கங்களிற்கும் விளக்கம் தந்துள்ளார்.

அழகிரிசாமியின் கதைகள் தமிழ்ச் சிறுகதையின் வளத்தைக் காட்டுவனவாகவே அமைகின்றன. அவர் புதிதாக ஒரு உத்தியையோ அன்றேல் ஒரு புதுப் பொருளையோ கையாண்டவர் அல்லர். ஆயினும் அவர் கதைகளில் தமிழ்ச் சிறுகதையின் வளர்ச்சியைக் காண்கின்றோம்.

இவரது சிறுகதைகளுள் 'தவப்பயன்' முக்கியமானது. அதற்குக் காரணம் இக்கதையின் கருவாக எடுத்துக்கொண்ட மையப்பொருள், அதை அவர் படிப்படியாக விபரித்துச்சென்று தான் எடுத்துக்கொண்ட நோக்கைப் புலப் படுத்தும் முறை என்பனவாகும்.

மணிக்கொடியின் கடைசிக்கால எழுத்தாளரான அழகிரிசாமி 'சக்தி'யில் கடமையாற்றிவிட்டு மலாயா சென்று, அங்கு 'தமிழ்நேசன்' என்னும் பத்திரிகையின் இலக்கிய ஆசிரியராகக் கடமையாற்றினார். அதன்பின்னர் 1960 களில் இந்தியாவிற்கு வந்து 'நவசக்தி'யில் கடமையாற்றினார். ஆழ்ந்த தமிழ் இலக்கிய அறிவுள்ள அழகிரிசாமி, கம்பராமாயணத்தில் முதல் ஐந்து காண்டங்களையும் அண்ணாமலைச் செட்டியார் 'காவடிச்சிந்தி'னையும் பதிப்பித்துள்ளார். 'இலக்கியச்சுவை', 'இலக்கியத்தேன்', 'இலக்கிய அமுதம்', 'இலக்கிய விருந்து' என்ற கட்டுரைத் தொகுதிகள் இவரது தமிழறிவையும் இரசனைச் சிறப்பினையும் புலப்படுத்துவன.

இலக்கிய அறிவுச் சிறப்புடையவர் எனினும் சிறுகதை ஆக்கச் சிறப்பே அவருக்குத் தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கிய இடத்தினை அளித்தது. 'சிரிக்கவில்லை', 'தவப்பயன்', 'காலகண்டி', 'தெய்வம் பிறந்தது', 'அழகிரிசாமி கதைகள்', இரு சகோதரர்கள்', 'கற்பக விருட்சம்', 'வரப்பிரசாதம்' ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதிகளில் இவரது சிறுகதைகள் பிரசுரமாயின. இவற்றினைவிட 'தீராத விளையாட்டுப்பிள்ளை', 'புதுவீடு', 'வாழ்க்கைப்பாதை', 'டாக்டர் அனுராதா', 'புதுஉலகம்' ஆகிய நாவல்களையும், 'கவிச்சக்கரவர்த்தி', 'வஞ்சிமகள்' ஆகிய நாடகங்களையும் இவர் தமிழ் நெஞ்சங்களிற்கு அளித்துள்ளார். 'டாக்டர் அனுராதா' என்னும் நாவல் இவர் எழுதிய நாவல்களுள் மிகச் சிறப்பானது. மேலும், பல இலக்கியக் கட்டுரைகளையும் எழுதி திறனாய்வுக் கருத்துக்களையும் வழங்கியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

# தவப்பயன்

## கு. அழகிரிசாமி

சுவாமி நிர்மலானந்தரை ஒருநாள் மாலை திடீரென்று ஆஸ்ரமத்தில் காணவில்லை. சாயங்காலம் ஐந்து மணிக்கெல்லாம் அவர் தனியே எழுந்து உலாவப் போவது வழக்கம். அப்போது சீடர்கள் எவரையும் அழைத்துக் கொள்ளாமல் தியானத்தில் ஆழ்ந்தவண்ணம் தன்னந்தனி- யாகவே நடந்து செல்லுவார். அநேகமாகப் பொழுது இருட்டுவதற்குள் சுவாமிகள் ஆஸ்ரமத்திற்குத் திரும்பி விடுவார். திரும்பும்போது மட்டிலும் சிஷ்யர்கள் சிறிதுதூரம் சென்று அவரை எதிர்கொண்டு அழைத்து வருவார்கள்.

அன்று நிர்மலானந்தர் சூரியாஸ்தமனம் ஆகி இரண்டு நாழிகைப் பொழுது கழிந்தும் வராததைக் கண்டு சிஷ்யர்கள் திடுக்கிட்டுப் போனார்- கள். சுவாமிகளிடம் ஞானோபதேசம் பெறும் உயர்ந்த நோக்கத்துடன் சிலரும், திருநீறும் ஆசீர்வாதமும் பெறும் சாதாரண நோக்கத்துடன் சிலருமாக ஒரு சிறு கூட்டம் வழக்கம்போல வந்து ஆஸ்ரமத்தில் அமர்ந்திருந்தது; காத்திருந்தது.

சுவாமிகளை இன்னும் காணவில்லை.

சிஷ்யர்களைவிட பக்தகோடிகள் மிகவும் அதிக கவலையில் ஆழ்ந்தனர்.

சிஷ்யர்களுக்கு ஓரளவு துணிச்சல் இருப்பதற்கு சில காரணங்களுண்டு.

சில சமயங்களில் நிர்மலானந்தர் உலாவப் போகும் நோக்கத்துடன் ஆஸ்ரமத்தை விட்டுப் புறப்படுவார். ஆனால், ஆஸ்ரமத்தின் வேலியைத் தாண்டியதும் வெட்டவெளியில் அப்படியே உட்கார்ந்துவிடுவார்; உடனே பகவத் தியானம்தான். அன்று அவ்வளவோடு உலாவும் காரியம் முடிந்துவிடும். தியானம் கலைந்ததும் நேரத்தைப் பார்த்துக்கொண்டு ஆஸ்ரமத்துக்குத் திரும்பிவிடுவார். இதற்கு விதிவிலக்காக தியானம் கலையும் போது நள்ளிரவு ஆகிவிட்டிருந்தாலும், மேற்கொண்டும் சாயங்காலத்தைப் போலவே பாவித்து, அந்தக் காடாந்தரமான நிசியிலும் உலாவப் போய் வருவது உண்டு.

அன்று அவர் திருவுள்ளம் எப்படி இருந்ததோ அவரைக் கருவியாகக் கொண்டு ஆட்டுவிப்பவரின் திருவுளப்பாங்கு எதுவோ? அவர் அன்று எங்கே, எந்நிலையில், எதற்காகத் [illegible]?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீபத்தில் எங்காவது இருப்பார் என்ற நம்பிக்கையும் நேரம் செல்லச் சொல்ல சிஷ்யர்களுக்குக் குறைந்துவிட்டது.

பக்தர்களின் மனவியாகூலமோ சிஷ்யர்களை அமைதியுடன் அமர்ந்து காத்திருக்கும்படி விடவில்லை.

மூவர் - சிஷ்யர்கள் - புறப்பட்டார்கள். பக்தகோடிகளில் வயதான கிழவர் ஒருவரும் கூடப் புறப்பட்டார்.

நல்ல நிலா அடித்தது.

பொட்டல் வெளியில் சுவடுகள் பதியாவிட்டாலும், நிர்மலானந்தர் எந்த வழியில் சென்றிருப்பார் என்பதைக் கண்டுபிடிப்பது சிரமம் அல்ல. ஏனென்றால் ஆஸ்ரமத்தில் இருந்து தெற்கு நோக்கிச் செல்லும் ஒற்றையடிப் பாதைதான் பரந்தவெளியை நோக்கிச் செல்லும் பாதை. வடக்குப் பாதை ஊரை நோக்கிச் செல்கின்றது. வேறு பாதைகள் கிடையாது.

நான்கு பேரும் நடந்தனர். சமீபத்தில் எங்காவது நிர்மலானந்தர் அமர்ந்திருக்கக்கூடும் என்ற எண்ணத்தினால் கால்நடையில் பயபக்தி தயக்கம் கொடுத்தது. சுற்றிலும் இரையும் சில்வண்டுகளின் ஓசையை நூலளவும் பாதிக்காதவாறு மௌனமாக, காலடி ஓசை கேட்காமல், பாதங்கள் அடி எடுத்து வைத்தன.

இப்படி ஒரு மைல் நடந்தார்கள்.

ஒரு மைலுக்கு மேலும் நடந்தாய்விட்டது.

பாதையின் வலதுபுறத்தில் சப்பாத்திக்கள்ளிப் புதரின் நடுவில் சிறிது மேடான ஒரு கரும்பாறை உண்டு. அது நிலவில், குழியில் விழுந்த யானையின் முதுகுபோலத் தோற்றமளித்தது. அதன்மேல் கரும்பரப்பை வகிர்ந்து கொண்டு செந்நிறத் தூலமாக ஏதோ கிடந்தது.

பரபரப்புடன் மனங்கலங்கி நால்வரும் அந்தப் பாறையை நோக்கி ஓடினார்கள். அவர்களில் ஏழை மனம் படைத்த ஓர் சிஷ்யனின் கண்களில் கண்ணீர் திரண்டது. உடன் சென்ற கிழவரின் இரைகின்ற சுவாசம் அந்த இடத்தில் மட்டுப்பட்டு மௌனம் பூண்டது. நால்வரும் போய்ப் பார்த்தார்கள்.

காஷாயதாரியாகக் கருங்கல் சயனத்தில் கிடந்த நிர்மலானந்தர் 'பூரணம்' பெற்றுவிடவில்லை. அன்றையத் தியானம் சயன அவசத்தில் நடைபெற்றது. எதிர்பார்த்தபடி, சிஷ்யர்கள் பயப்படும்படியாக எதுவும் நடந்துவிடவில்லை. ஆனால்.....

தன்னை மறந்து படுத்திருக்கும் நிர்மலானந்தரின் வாயிலும் வாயருகில் பாறையிலும் காய்ந்து கருதாகிப்போன பெயர் தெரியாத இலைகள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ கிடந்தன. சப்பாத்திக் கள்ளியின் காய்கள் சில பக்கத்தில் இருந்தன. சுவாமிகளின் ஒருகால் பாறையிலும், மற்றொரு கால் சப்பாத்திப் புதரிலும் கிடந்தது. இடையில் சுற்றியிருந்த காஷாயத் துணியின் செம்பாதி காற்றில் மறந்து போய் சப்பாத்தியின் மேல் ஒட்டிக் கொண்டிருந்தது.

நால்வருக்கும் நிஷ்டையைக் கலைக்கப் பயம். ஆனால் சுவாமிகளின் பரிதாப நிலையைக் கண்டு சொல்லொணாத மனவேதனை.

அந்தப் பாறையின் சரிவான ஒரு பகுதியில், சுவாமிகளின் ஸ்தானத்திற்கு சற்று இறக்கமாக, மரியாதையுடன் உட்கார்ந்து ஈஸ்வரத் தியானத்தில் ஆழ்ந்து விட்டார்கள். உண்மையில் அது தியானம் அன்று; மௌனமான பிரார்த்தனையே.

எவ்வளவு நேரம் சென்றதோ?

சற்றே அபூரணம் பெற்ற அன்றைய நிலா, உச்சி வானத்தின் மைய விளிம்பைத் தொட்டதுபோல மேலேறி வந்துவிட்டது.

சுவாமிகளின் சரீரம் சிறிது அசைந்தது. அசைந்ததெல்லாம் இவ்வளவே; பாறையில் கிடந்த மற்றொரு காலையும் எடுத்து சப்பாத்தியின் மேல் போட்டார். தாங்க முடியாத சுமை கீழே விழுந்தது போல், கால் 'தொப்'பென்று சப்பாத்தியில் விழுந்தது. எத்தனை முட்கள் அந்த மிருதுவான கால்களில் குத்தினவோ என்று கவலைப்படத் தொடங்கு முன்பே, நல்ல பாம்பு ஒன்று சப்பாத்திப் புதரிலிருந்து திடீரென்று சீறி எழுந்து, தன் படத்தை அகல விரித்து, தலையைச் சாய்த்தவண்ணம், மிகவும் பலமாக சுவாமிகளின் இடது பாதத்தில் மோதிக் கடித்துவிட்டது. பாம்புகடியினால் சுவாமிகளின் மேனியில் சிறிதாவது சலனம் ஏற்படட்டுமே!

சிஷ்யர்களின் ரத்தம் உறைந்துவிட்டது. அடுத்தவனைப் பாம்பு படம் விரித்துக் கடிப்பதை மனிதவர்க்கமே கண்ணாரக் காண்பது, அதுதான் முதல் தடவையோ என்று கருதக்கூடியவாறு அவ்வளவு பிரத்யக்ஷ நிலையில் நடந்தேறிய இந்த அபாயத்தைக் கண்டு எழுந்து ஓடிய அந்நால்வரும் சப்பாத்தியிலேயே மிதித்தார்கள். ஒவ்வொரு முள்ளும் விஷப்பல்லாகக் குத்தியது. ஆனால் பாம்பு இவர்களை நோக்கி வரவில்லை. வேறு திசையில் நெளிந்துவிட்டது. பாறையின் மேல் மின்னி நெளிந்த அந்த சரீரம், பாறையில் ஏதோ விஷ ஊற்றுக் கிளம்பி வடிந்ததுபோல் இருந்தது.

இனி சுவாமிகளை எழுப்பாமல் இருந்தால் மரியாதைக்கு அர்த்தம் கிடையாது. பூவைப்போலத் தொடுவதுபோய், தரையில் புதைந்த ஆணி வேரைப் பிடுங்குவது போல் அவ்வளவு முரட்டுத்தனமாக சுவாமிகளைத் தூக்கி உட்கார வைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்மலானந்தர் எழுந்து அமர்ந்தார். அவருடைய விழிகள் மலர்ந்தன. வாயிலிருந்த சருகுகளைத் துப்பினார். துப்பும்போது பாதி மென்ற கள்ளிப்பழம் ஒன்று முறிந்த முள்ளுடன் பாறையில் விழுந்தது.

"இதுவா ஆகாரம்?" என்று பிரமித்தார் உடன் சென்ற கிழவர்.

நிர்மலானந்தரின் ஆகாரம் எதுவென்று அவருக்கு இவ்வளவு காலத்-திற்குப் பின் அன்றுதான் தெரியவந்தது. காரணம் கிழவர் ஊருக்குப் புதிது.

"தங்களை விஷம் தீண்டிவிட்டது" என்று சொன்னான் ஒரு சிஷ்யன், வாயை ஒரு கையால் மூடிக்கொண்டே.

மற்ற இருவரும் இரண்டு கால்களிலும் உள்ள சப்பாத்திமுட்களை தடவித் தடவிப் பிடுங்கினார்கள். அவர்களுடைய கைகளில் முள் தைத்த புண்களில் கசிந்த ரத்தம் படிந்து படிந்து, மருதாணியிட்டதுபோல மாறி விட்டது.

"முட்களா? அவற்றை ஏன் பிடுங்கவேண்டும்?" என்று சாவதானமாகச் சொல்லிவிட்டு "எப்போது பாம்பு கடித்தது?" என்று கேட்டார் சுவாமிகள்.

கிழவர் ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்துவிட்டார்.

நடந்த விருத்தாந்தத்தைச் சுருக்கமாகச் சொல்லி முடிக்குமுன்பே, நிர்மலானந்தர், "என் பாரம் தாங்க முடியவில்லை; படுக்கவேண்டும்" என்று பாறையில் சாய்ந்தார்.

பாம்பு கடித்ததன் விளைவாக நிர்மலானந்தர் மயக்கம் எய்திப் பிதற்றுகிறார் என்றே நால்வரும் நினைத்தனர். விஷம் தலைக்கேறிக் கொண்டிருந்தது என்பது உண்மைதான் என்றாலும், பாரம் விஷத்தால் வந்ததல்ல. மாமிச பிண்டத்தைத் தூக்கிச் சுமப்பது நிர்மலானந்தர் நெடு நாளாக அனுபவித்து வரும் வேதனை; அன்று சுமக்கவே முடியாமல் போனதால்தான் பாறையில் போய்ப் படுத்துவிட்டார்.

பின்னும் காலதாமதம் கூடாது என்று நிர்மலானந்தரை மூவரும் எடுத்துச் சுமந்து ஆஸ்ரமத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். தாம் நடக்கவே சிரமப்படும் கிழவர் பரிவோடு ஒரு கையினால், நிர்மலா-னந்தரின் சரீரத்தைச் சுமக்கமுடியா விட்டாலும், தொட்டுக் கொண்டு தள்ளாடி நடந்துவந்தார்.

பாதிவழி தாண்டு முன்பே, சுவாமிகளின் உதடுகள் ஒரு பக்கம் கோணித் திறந்தன. வாயில் கொப்பளித்த நுரை சிலந்திப்பூச்சியின் நூல்களைப் போலக் காற்றில் ஆடி அறுந்தன. நிர்மலானந்தரின் மண்ணுலகத் தொடர்பு நுரைநூலைக் காட்டிலும் இலகுவாக, அவ்வளவு அரவம் அற்று அறுபட்டது. நிர்மலானந்தர் தம் வாழ்நாளெல்லாம் சுமந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரத்தைத் தம் சிஷ்யர்களின் தோளிலும், தலையிலும் இறக்கிவைத்து விட்டுப் போய்விட்டார்.

உபதேசத்துக்காகவும், ஆசீர்வாதத்திற்காகவும் வந்த ஜனங்களின் முன் நிர்மலானந்தரின் சரீரத்தை கொண்டுவந்து சேர்த்தார்கள் சிஷ்யர்களும் கிழவரும்.

மறுநாள் ஆஸ்ரமம் கல்லறையாக மாறியது.

* * * * *

மட்பாண்ட ஓடு உடைந்துவிட்டது. மாயக்குயவர் அந்த ஓட்டைச் சமைத்து அதன் உள்ளே வைத்து அனுப்பிய ஆன்ம அமிர்தம் திவலை கூட மண்ணுலகக் குழப்பத்தில் சிந்தாமல் சிதறாமல் கொடுத்தாலும், குறைவுபடாத நித்ய பூரண வஸ்துவாய், குயவரிடமே திரும்பியது. அமிர்தம் ஆகவேண்டிய காலம் ஆகி, நன்கு பண்பட்டு, சுவையோடும் திண்மையோடும் சுவர்க்கம் புகுந்தது.

நிர்மலானந்தர் மறைந்தார்; நிர்மலானந்தம் எஞ்சியது.

எண்ணற்ற முனிவர்களின், புண்ணிய புருஷர்களின், ஆன்மசொரூபங்கள் இன்பத்தின் பரவெளியில், அமரபோகம் துய்த்துக் கொண்டிருக்கும் அந்தத் தெய்வ மண்டலத்தில் நிர்மலானந்தருக்கு மரியாதை மிகுந்த பீடம் கிடைத்தது. என்றுமாய், எதுவுமாய், காலமும் தூரமும் அற்றிருக்கும் இந்தச் சுவர்க்கபோகம் அல்ல நிர்மலானந்தருடைய நித்திய தபசின் கோரிக்கை. மண்ணுலகத்தைத் துறந்த இதயம், விண்ணுலகத்தில் அதைப் பெற்று அனுபவிக்க விரும்பவில்லை.

இன்னும் 'நான்' நசியவில்லை; 'அவன்' இன்னும் அவனாகத்தான் இருக்கிறான்; 'அவன்', 'நான்' ஆகவில்லை; 'நான்', 'அவன்" ஆகவில்லை. கேவலம் தூல சரீரத்தைக் களைந்துவிட்டால் ஈஸ்வர ஐக்கியம் கிட்டிவிடுமா?

இன்னும் எத்தனை வருஷங்கள், எத்தனை வியாழவட்டங்கள் தபசிருக்க வேண்டுமோ, அந்த அத்வைத நிலையைப் பெறுவதற்கு? நல்ல வேளையாக இங்கு காலம் என்ற பிரக்ஞை இல்லை. ஆனாலும் சுவர்க்கத்தின் போக நிலத்தில், புழுவெனத் துடித்து உபசாந்தப் பரவெளியை நோக்கித் துள்ளித் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தது நிர்மலானந்தரின் ஜீவான்மா.

பரமான்மா வந்தது; பூலோகப் பஞ்சாங்கப்படி நிர்மலானந்தரின் ஆன்மா சுவர்க்கத்திற்குப் போன பதினைந்தாம் நாளில் கடவுள் அந்தப் புதிய விருந்தைக் காணவந்தார். மோனப் பிரார்த்தனை அன்றே கடவுளுக்கு எட்டியது என்றாலும், சுவர்க்கானுபவச் சதுரங்கத்தில் நிர்மலானந்தரின் ஆத்மவிளையாட்டு வெற்றி பெறுகிறதா தோற்கிறதா என பரிசோதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யத் தொடங்கியதுதான் இந்தப் பதினைந்து நாள் தாமதத்திற்குக் காரணம்.

பதினைந்து நாட்களுக்குப் பின் நிர்மலானந்தரின் முன் பிரசன்னமானார் கடவுள். வாழ்நாளெல்லாம் தபசில் கழித்த தம் பக்த சிரோன்மணிக்கு இந்தப் பதினைந்து நாளைய அனுபவம் எவ்வளவு பெரிய சுகத்தை அள்ளிக் கொடுத்திருக்கும் என்று எண்ணி ஆனந்த பரவசத்துடன் பக்தனைக் காண வந்தார். மறுதினந்தான் நிர்மலானந்தரின் கடைசித் தளையை, எஞ்சியிருக்கும் 'நான்' என்ற பிரக்ஞையை கட்டறுப்பது என்பது தெய்வத் திருவுள்ளம்.

தெய்வ விஜயம், பிரக்ஞையைப் போன்ற ஒரு சங்கேதத்தின் மூலம் நிர்மலானந்தருக்குத் தெரிந்தது. இறைவனின் பாதத்தில் மலர்ப்பலி இடுவதைப் போல தம் ஆத்மாவைப் பரிபூரணமாகச் சமர்ப்பித்தார் நிர்மலானந்தர்.

"சுவர்க்கம் பிடிக்கவில்லைப் போலும்! உம் கோரிக்கையை அறிந்தோம். உம் ஆத்மத் தேட்டம் விரைவில் சித்திபெறும்" என்றார் கடவுள்.

கடவுளின் வார்த்தைகளை எல்லாம் கிரஹித்துக்கொண்டாலும், சுவர்க்கம் என்ற பதம் நிர்மலானந்தரைப் பிரமிக்கச் செய்துவிட்டது.

'சுவர்க்கம்!..... சுவர்க்கம் என்றால்..... அப்படியானால் தற்போதைய வாசஸ்தலம் சுவர்க்கம்தானா?' என்ற நினைப்பு நிர்மலானந்தரை ஊமையாக்கிவிட்டது. எழுதாக்கிழவிக்கு நாயகனாக இலங்குபவனுக்குப் பேசாத சிந்தை, தாய்மொழியைப் போலப் பரிச்சயப்பட்ட வஸ்து. நிர்மலானந்தரின் திகைப்பு அவருக்குப் புரிந்தது.

"சுவர்க்கம் இல்லாமல் வேறு என்ன? நரகம் என்று நினைத்தீர்களா?" கடவுள் சிரித்தார்.

"எதுவும் நினைக்கவில்லை. சுவர்க்கத்திற்கும் நரகத்திற்கும் பேதம் காணும் அந்த சரீர பரிசோதகன் என்றோ சாம்பலாகிவிட்டான் என்பது தாங்கள் அறியாதது அல்லவே? மண்ணுலகிலும்கூட மலருக்கும் முள்ளுக்கும் விஷப் பல்லுக்கும் வேற்றுமை கண்டறியாதிருந்த ஜீவன் இப்போது ஐம்பொறிக் கூட்டை உதறிவிட்ட பிறகு, சுவர்க்கத்தை எங்ஙனம் உணரும்? நரகத்தை உணர்வதும் எங்ஙனம்?"

* * * * *

மாயக்குயவர் எத்தனையோ லட்சோபலட்சம் மட்பாண்டங்களை வனைந்து கொண்டிருக்கிறார். அவற்றில் எத்தனை பங்கப்படாமல், விதித்திருக்கும் காலவரையறை வந்து சந்திக்கும் வரையிலும் பயன் பட்டு, விளைபயன்களை விண்ணுக்கு அனுப்புமோ? எத்தனை மட் பாண்டங்கள் கூத்தாடிக் கூத்தாடித் தம்மையே உடைத்துப் பாழாக்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுமோ? மட்பாண்டங்கள், பற்பல உருவில், பற்பல வர்ணங்களில் தயார்ாகிக் குவிந்திருக்கின்றன.

குயவர் ஒரு சிறு பாண்டத்தை, உருவாக்க முயன்று கொண்டிருக்கிறார். அது பூவுலகில் ராஜகுமாரனாக வந்து பிறக்குமோ, ஒரு முனிவனாக வந்து அவதரிக்குமோ தெரியவில்லை. ஆனால் பாண்டம் உருப் பெறாமல் குலைந்து சரிந்துகொண்டிருந்தது. வேறு பல கலவைகளைச் சேர்த்துக் குழைத்துப் பாண்டத்தை உருவாக்க முயன்றார் குயவர். பழையபடியும் அது கருவிலேயே சிதைவுற்றது. மற்றும் பல கலவைகளைக் கலந்து திரும்பவும்.....

கடவுள் நையாண்டிச் சிரிப்புச் சிரித்தார்.

"மாயக்குயவரே! பாண்டத்தின் உருவ அமைப்பைச் சிதையாமல் நிறுத்திவைக்கும் பிரதானமான கலவை என் அடைக்கலத்தில் உள்ளது"

கை சோர்ந்துபோய் வணக்கத்துடன் திரும்பிப் பார்த்தார் மாயக்குயவர்.

ஜீவான்மா ஒன்று மண்ணுலகிலிருந்து விடுதலைப் பெற்றுத் துறக்கம் பெற்றது. பிரம்ம ஐக்கியம், இரண்டறக் கலக்கும் அத்வைத நிலை - இதுதான் அதன் இன்றைய கோரிக்கை. அந்த ஆன்மாவும், அதன் கோரிக்கையும் அந்தரத்தில் நிற்கும்போது பாண்டத்தை உருவாக்குவது எப்படி?

மௌனமாக இருந்தார் மாயக்குயவர்.

மண்ணுலகில் அது மலருக்கும் முள்ளுக்கும் பேதம் காணவில்லை; புலன்களைச் சுட்டறுக்கும் தபசை மேற்கொண்டுவிட்டது. சுவர்க்கம் எய்தியது.

சுவர்க்கத்தின் தன்மை அந்த ஜீவனைத் தீண்டக்கூட இல்லை. சுவர்க்கத்தில் இருக்கின்ற பிரக்ஞையாவது இருக்கட்டுமே! இன்று அதை நரகத்திற்கு அனுப்பினாலும் இன்றைய நிலையை இழக்காத பக்குவத்துடன் அது இருக்கிறது.

அது வேண்டுவது பிரம்ம ஐக்கியம்; பரமாத்ம ஜீவாத்ம சங்கமம். அது கிட்டினால் அந்த ஆத்மா மாறுதல் பெற்றுவிடுமா? இன்பதுன்பத்தை உணராத பேரின்ப உபாசகனாக இருந்த அந்த ஆன்மா எம்மோடு அத்வைத நிலையில் இருந்தால் என்ன, ஆஸ்ரமத்தில் சந்நியாசியாக இருந்தால் என்ன? இரண்டும் ஒன்றுதான்.

இன்பதுன்பத்தை உணராத தபசென்றாலும்கூட இந்தத் தபசு பயங்கரத் தபசு. சுவர்க்க, நரக பேதங்களையும், அத்வைத வெளியையும் ஆஸ்ரம வெளியையும் ஒன்றாக்கும்படியான இந்தப் பயங்கரத் தபசு சுவர்க்கத்திலும் சுகம் காணவில்லை; பரப்பிரம்மத்திலும் சுகம் காணப்போவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. மரத்துப் போனது, செத்தது, எங்கே கிடந்தால் என்ன? முக்தியும், முதல்வனும் சாலையோரச் சத்திரங்களாகி விட்டன; லட்சிய ஸ்தானங்களாக இல்லை. அந்த ஆத்மாவுக்கு இனி எந்த வழியைக் காண்பிப்பது?

தபசிற்குப் பலனாக, சுகமான வாழ்க்கையை, உணர்ந்து துய்க்கும் ஒரு பிறப்பை, பழையபடியும் அதே பூலோக வாழ்க்கையை, அதற்குச் சுட்டிக் காட்டுவதைவிடச் சிறந்த பிரதி உபகாரம் வேறு எதுவும் இல்லை. அதற்குச் செய்யும் பேருதவியும் பரிகாரமும் பிராயச்சித்தமும் அதுவே.

நிர்மலானந்த சுவாமிகள் காலமான பதினாறாம் நாளில், ஆஸ்ரமத் தோட்டத்தின் நடுவே சிவலிங்கம் வைத்து கட்டப்பட்டு இன்னும் உலராது இருக்கும் அவருடைய சிமிண்ட் சமாதியின் தென்புறத்தில், அன்றுதான் பிறந்த ஒரு அணில்குஞ்சு, மண்ணுலகை முதன்முதலாக ஸ்பரித்துக்கொண்டிருந்தது. அதன்மேல் படும் காலை இளவெய்யில் அதற்குச் சுவர்க்கபோகமாக இருந்தது. தன்னை மறந்து, அந்த இன்பத்தில் ஆழ்ந்து, அதில் இரண்டறக் கலக்கவும் செய்தது அந்த அணில்குஞ்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10

# தவப்பயன்

## குறிப்புகள்

அழகிரிசாமியுடைய இக்கதையானது உலகப்பற்று, ஆன்மீக விடுதலை ஆகியவற்றை மையப்பொருளாகக் கொண்டு மிளிர்கின்றது. இக்கதையானது மூன்று சூழல்களில் எடுத்துக்காட்டப்படுகின்றது. ஒன்று ஆஸ்ரமம் அமைந்துள்ள பூலோகம், இரண்டாவது பரலோகம், மூன்றாவது பூலோகம். இக் கதையின் முடிவானது பற்றற்ற வாழ்க்கை, உலக இன்பம் ஆகியன பற்றிச் சிந்திக்கத் தூண்டுகின்றது. இக்கதையின் மிக முக்கிய பாத்திரம் சுவாமி நிர்மலானந்தா. இவர் ஒரு பயங்கரத் தபசி. உலக இன்பங்களைத் துறந்தவர். பரபதம் அடைந்த பிறகும் சுவர்க்கம், நரகத்திற்குப் பேதம் தெரியாத தபசானவர். ஜீவாத்மா, பரமாத்மாவுடன் சங்கமித்தபொழுதும் தன் நிலையை இழக்கவில்லை என்று கடவுள் நினைக்கிறார். இதனால் மீண்டும் அதற்கு விருப்பமான ஒரு பூலோக வாழ்க்கையைக் கொடுப்பதைவிட வேறு சிறந்த வழி எதுவும் இல்லை என நினைத்து அந்த ஜீவாத்மாவை மீண்டும் உலக இன்பத்தை அனுபவிக்கும் ஒரு அணிற்குஞ்சாக அவருடைய பழைய ஆச்சிரமத்திலேயே அவதரிக்கச் செய்கிறார்.

இக்கதையினூடாக நிர்மலானந்தரின் ஆச்சிரம வாழ்க்கை நிலை, சிஷ்யர்கள் பக்தகோடிகள் நிலை, விருப்பு வெறுப்பற்ற மனநிலை, தன்னிச்சையற்ற அவர் செயற்பாடுகள், பாம்பு தீண்டியதையோ, சப்பாத்திக் கள்ளியின் முள் குத்தியதையோ பாதையில் தான் வீழ்ந்து கிடந்ததையோ அறியாத நிலை, சுவர்க்கத்தை அடையும் வாய்ப்பு - இறைவனை அடையக் கிடைத்த வாய்ப்பு போன்ற விடங்களை ஆசிரியர் சிறப்பான முறையில் எடுத்துக் காட்டுகிறார்.

அவர் கற்பாறையில் விழுந்து கிடக்கக் காரணம் யாது என்பதையும் ஆசிரியர் மிகத் தெளிவாக எடுத்தியம்பியுள்ளார். பக்தி மேம்பாடு, நிலையில்லாத உடலை பாரமாகக் கருதியமை, இவ்வுலக வாழ்வின் இறுதிக் கட்ட நிலைக்கு அவரை விதி கொண்டு சென்றமை போன்ற விடயங்கள் கூறப்படுகின்றன.

மேலும், நிர்மலானந்தர் அணிலாகப் பிறப்பதற்குக் காரணம் யாது என ஆசிரியர் தனது கதையில் குறிப்பிடுகையில் அவர் தவத்தில் உயர்ந்தவர் ஆயினும் பற்றற்ற நிலையை அடையவில்லை என்கிறார். சுவர்க்கத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்ததும் அவர் அடையும் ஆச்சரியம், 'நான்' என்னும் ஆணவச் செருக்கு நீங்காமை, இறைவனை அடையக்கூடிய பக்குவநிலை இல்லாமை ஆகியவற்றால் இறைவன் இவருக்கு இன்பமான வாழ்வை உணர்ந்து அனுபவிக்கும் ஒரு பிறப்பை, மீண்டும், பூலோகத்தில் கொடுப்பதைவிட மேலாக பிரதியுபகாரம் வேறொன்றுமில்லை என்ற காரணத்தால் கடவுள் அவருக்கு அணில் பிறப்பைக் கொடுத்தார். இவர் தபசாக இருந்தாலும் மண்ணின்மீது கொண்ட பற்று இவரைவிட்டு அகலவில்லை. என்பதாலுமே நிர்மலானந்தர் மீண்டும் அணிலாகப் பிறக்க நேர்ந்தது என்ற இரகசியத்தை இக்கதையாசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இக்கதையில் சிறப்பம்சமாக ஆசிரியர் சமயதத்துவத்தினை வெளிப்படையாகக் கூறாமல் சிறந்த கதையாக ஆக்கித் தந்துள்ளார். 'நான்' என்ற அகங்காரத்தை கைவிட்ட ஒரு ஆன்மா பரமாத்மாவான இறைவனுடன் இரண்டறக் கலக்கும் என்ற தத்துவக்கருத்தை மையமாகக் கொண்டே இக்கதை மிளிர்கிறது. இக்கருத்தை ஆசிரியர் மிக எளிமையாகவும், திறமையாகவும் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார். இக்கதையானது சமய விடயத்தை கதைக்கருவாகக் கொண்டு மிளிர்கின்றது. தவம் எப்படிப்பட்டதோ அதற்கேற்ப பயன் கிடைக்கும் என்பதற்கு இணங்கவே இக்கதைத் தலைப்புக் கையாளப்பட்டுள்ளது. சுவாமிகளது இறப்போடு கதையை முடித்து விடாமல் சுவர்க்கத்திற்கு வாசகனை கவர்ந்திழுத்துச் செல்கிறார் ஆசிரியர்.

### கதை நிகழ்வுகளம்

கதை நிகழ்வு கட்டத்தை மூன்று கட்டங்களாக விளக்கிச் செல்கிறார். முதலாவது கட்டம் ஆஸ்ரமச் சூழலில் நிகழ்கிறது. இரண்டாவது விண்ணுலகத்தில் கதை நிகழ்கிறது. இறுதிக்கட்டத்தில் ஆஸ்ரமத்திற்கே கதைக் களம் மீளுகின்றது. இக்கதையின் மொழிநடை இலகுவானது. சமய தத்துவ சொற் பிரயோகங்கள் வாசகர் மனதைக் கவரும் வகையில் கையாளப் பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட கருத்துக்கள் கு.அழகிரிசாமி திறமை மிக்க கதாசிரியர் என்பதற்கு பெருமை சேர்த்துச் செல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

# இலங்கையர்கோன்

இலங்கைத் தமிழ்ச் சிறுகதை உலகில் இலங்கையர்கோனுக்குத் தனியான இடம் உண்டு. நவீன இலக்கிய உருவமான சிறுகதை தமிழில் வேர்கொள்ளத் தொடங்கிய காலமாகிய முப்பதுகளில் சிறுகதைகள் எழுதத் தொடங்கியவர் இலங்கையர்கோன். இக்காலப்பகுதியிலேயே தமிழ்நாட்டில் மணிக்கொடி குழுவினர் தமிழ்ச் சிறுகதைகளிற்கு புதிய வடிவமும், வளமும் கொடுத்துக்கொண்டிருந்தனர். புதுமைப்பித்தன், கு.ப.ரா., அழகிரிசாமி, மௌனி போன்ற எழுத்தாளர்களின் முதிர்ச்சி மிக்க சிறுகதைப் படைப்புகள் வெளிவந்துகொண்டிருந்த இக்காலப் பகுதியில்தான் இலங்கையர்கோன் சிறுகதை எழுத ஆரம்பித்தார். இவரின் முதல் சிறுகதையான 'மரியா மதலேனா' என்ற சிறுகதை 'கலைமகளில்' வெளிவந்தபோது இவருக்கு வயது பதினெட்டாகும். இளம்பருவத்திலேயே கலையுலகில் மூழ்கியிருந்த இலங்கையர்கோன் அதற்குரிய காரணத்தை 1958இல் மார்கழி 'கலைச் செல்வி' இதழில் பின்வருமாறு கூறியுள்ளார்: "என்னுடைய இளம் வயதில் எத்தனையோ கனவுகள் கண்டேன். அவற்றுள் ஒன்றுதான் சிறுகதை எழுத வேண்டும் என்ற கனவு".

ந.சிவஞானசுந்தரம் என்னும் இயற்பெயர் கொண்ட இலங்கையர்கோனின் ஆரம்பகாலப் படைப்புகள் 'சூறாவளி', 'மணிக்கொடி', 'கிராம ஊழியன்', 'கலாமோகினி', 'பாரததேவி' ஆகிய தமிழ்ப் பத்திரிகைகளிலே வெளிவந்தன.

இலங்கையர்கோன் 1938ம் ஆண்டிலேயே எழுத ஆரம்பித்துவிட்டாலும் 1938லிருந்து 1948 வரை பதினைந்து சிறுகதைகள் எழுதினார். அதன் பின்னர் 1950ம் ஆண்டிற்குப் பின்னர் ஐந்து சிறுகதைகள் வரையே எழுதினார்.

இலங்கையர்கோனின் எழுதிய சிறுகதைகளின் தொகை முப்பதுவரை இருக்கும் என அறியக்கூடியதாகவுள்ளது. ஆயினும் குறுகிய எண்ணிக்கை-யினுள்ளே ஈழத்துச் சிறுகதை உலகில் தனக்கென இடத்தைப் பிடித்துக் கொண்டார். இவரது பதினைந்து சிறுகதைகள் 'வெள்ளிப் பாதசரம்' என்ற தொகுதியாக வெளிவந்துள்ளது.

இவரின் ஆரம்பகாலச் சிறுகதைகள், கதை எழுதவேண்டும் என்ற வேட்கையினால் தூண்டப்பட்ட படைப்புகளாக இருந்தது. ஆனால் சிறிது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் புதுமைப்பித்தன், கு.ப.ரா. போன்றவர்களின் சிறுகதைகளினால் முதிர்ச்சியடைந்த இவர், தனது சிறுகதைகளில் உருவ அமைதியையும் அதனால் தனக்கென ஒரு தனித் தன்மையையும் பேணத் தொடங்கினார். இத்தகைய முதிர்ச்சி இவரது கதைகளில் தொற்றிக் கொள்ளும்போது அவை இலங்கையின் வடபகுதியின் மண்வாசனை வீசும் கதைகளாக வெளிவரத் தொடங்கின. 'ஈழகேசரி', 'தினகரன்', 'வீரகேசரி' போன்ற பத்திரிகைகளில் வெளிவந்த இவரது கதைகள் இவரது முதிர்ச்சியைப் பறைசாற்றுவனவாய் அமைந்துள்ளன.

இலங்கை நிர்வாகசேவையில் அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய இவர் தமது ஆங்கில அறிவின் காரணத்தால் மேல்நாட்டு இலக்கிய வகைகளால் கவரப்பட்டதன் விளைவாக இவரது சிறுகதைகள் உலகப் பிரவேசம் ஆகியது. இந்த வேட்கை இவரை சமஸ்கிருதம், தமிழ் போன்ற மொழிகளை ஆழ்ந்து கற்க வைத்தது.

இலங்கையர்கோன் அவர்களின் சிறுகதைப் படைப்புக்கள் பிரதானமாக இரண்டு வகையாகப் பிரித்து நோக்கப்படலாம். வரலாற்றுக்கதைகளாக ஒரு பகுதியும், சமூகக் கதைகளாக மறுபகுதியுமாக நாம் இவரது கதைகளைப் பிரித்துப் பார்க்கலாம். புராண இதிகாசங்களில் வரும் உன்னத சம்பவங்களை வரலாற்றுக் கதைகளாகப் படைத்துள்ளார். 'கடற்கோட்டை', 'மணப்பரிசு', 'அனுரா', 'சிகிரியா', 'மரியமதலேனா', 'யாழ்பாடி' போன்றவை வரலாற்றுக் கதைகளாக படைக்கப்பட்ட சிறுகதைகள் ஆகும். அத்தோடு 'மேனகை' என்னும் புராணக்கதையையும் மறுமலர்ச்சியில் எழுதியுள்ளார். இலங்கையர்-கோனின் சமூகக் கதைகளாக 'வெள்ளிப் பாதசரம்', 'ஒருநாள்', 'தாய்', 'துறவியின் துறவு', 'ஓரிரவு', 'மச்சாள்', 'சதிர்காரி', 'தாழை', 'தந்தி வந்தது', 'சக்கரவாகம்', 'என் தமக்கை', 'மரநிழலிலே', 'முதற் சம்பளம்', 'மனி தக்குரங்கு', வஞ்சம்', 'நாடோடி', 'பாரதத்தாய்', 'அநாதை' போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவரது சமூகக்கதைகள் விதந்துரைக்கத்தக்க படைப்புக்கள் ஆகும். இச்சமூகக்கதைகளில் ஈழத்துப் பாத்திரங்கள், அவர்களது தொழில், பண்பாடு, மொழி என்பன சித்திரிக்கப்பட்டுள்ளன.

இலங்கையர்கோனின் 'வஞ்சம்' என்னும் சமூகக்கதை குறிப்பிடக் கூடிய ஒன்றாகும். இது உருவகப்பாணியில் அமைந்த கதையாக அமைந்துள்ளது. இரண்டு சேவல்களையும் ஒரு கோழியையும் வைத்து சமூகத்தில் காணப்படும் ஆண்-பெண் பாலுறவு பற்றிய வெளிக்காட்டலாக அமைந்த சிறந்த கதையாக இது காணப்படுகின்றது.

பொதுவாக இலங்கையர்கோனின் கதைகளிலே அவரது ஆழ்ந்த கலை உணர்வைக் காணலாம். இது அவரது வெற்றி பெற்ற எல்லாக் கதைகளிலும் உள்ளோடி விரவி நிற்பதை நாம் காணலாம். இதற்கு உதாரணமாக, 'வெள்ளிப் பாதசரம்' என்ற சிறுகதையைக் கூறலாம். அத்துடன் இலங்கையர்கோன் பாத்திரங்களின் மனநிலையைச் சித்திரிப்பதிலும் வல்லவராகவே இருந்துள்ளார். இலங்கையர்கோன் பிற்காலத்தில் தன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகத்துறையுடனும் இணைத்துக்கொண்டார். சிறுகதைகளை எழுதுகின்ற போது மேடை நாடகங்களிற்குரிய கதைகளையும் எழுதினார். அவ்வாறு அவர் எழுதிய நாடகங்களுள் சிறந்ததும் பலரால் பாராட்டப்பட்டதுமான 'லண்டன் கந்தையா' என்னும் நாடகமாகும்.

புதுமையும் மறுமலர்ச்சியும் பூத்துக்கொண்டிருந்ததைக் கண்டுணர்ந்த பெருமையும், அதிலே உடனடியாகப் பங்குகொண்ட உணர்வும், பழமையை எதிர்த்த பண்பும், புதிய உரைநடை ஒன்றை வளர்த்தல் அவசியம் என்னும் தெளிவும் அன்று இலங்கையர்கோனிற்கு ஈழத்து இலக்கிய மன்றத்தில் முன்வரிசையையும் தலைமைத்துவத்தையும் அளித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

# வெள்ளிப் பாதசரம்

## இலங்கையர்கோன்

தன் வீட்டுக்கு ஒரு அடுக்குப்பெட்டியும், தனக்கு ஒரு தையற் பெட்டியும் வாங்கவேண்டும் என்று நினைத்து வந்தவளுடைய உள்ளம் விம்மும்படி கோயில் வீதியெல்லாம் பெட்டிகளும், கடகங்களும் மலைமலையாய்க் குவிந்திருந்தன. குஞ்சுப்பெட்டி, அடுக்குப்பெட்டி, தையற்பெட்டி, மூடற் பெட்டி, பின்னற்பெட்டி.....ஊ! எத்தனை வகை! அருகில் மாட்டை அவிழ்த்து அதன் வாயில் பொங்கிய நுரையை வழித்து அதன் மினுமினுக்கும் கரிய முதுகில் தேய்ப்பதில் கண்ணுங் கருத்துமாய் நின்ற தன் கணவனின் கையில் மெதுவாக நுள்ளி, "மாடு தன்பாட்டுக்கு நிற்கட்டும் வாருங்கோ!" என்று கெஞ்சினாள்.

அஸ்தமிக்கும் சூரியனின் கடைசிக் கிரணங்கள் பனைமரங்களின் தலையை இன்னும் தடவிக்கொண்டிருந்தன. கிழக்கு அடிவானத்தில் சந்திரன் வெளுக்க ஆரம்பித்தான். அன்று வல்லிபுரக் கோயில் கடைசித் திருவிழா. "எவ்வளவு சனம் பாத்தியளே! இதுக்காலை எப்பிடிப் போறது?" என்று சொல்லிக் கொண்டே நல்லம்மா தன் கணவனின் அருகில் ஒதுங்கினாள். செல்லையா தன் தோளில் கிடந்த சால்வையை எடுத்து இடுப்பில் வரிந்து கட்டிக்கொண்டு, "பயப்படாமல் என்னோடை வா" என்று தன் மனைவியின் கையைப் பற்றினான்.

கோவில் வீதிகளிலும், கடைகளில் காணப்பட்டதெல்லாம் நல்லம்மா-வின் மனதில் ஒரு குதூகலத்தை உண்டாக்கின; வாய் ஓயாது தன் கணவனுக்கு ஏதோ சொல்லிக்கொண்டே சென்றாள். ஐந்து வயதுச் சிறுமியைப் போல, முழங்கால்கள் தெரியும்படி, தன் ஆடையைத் தூக்கிப்பிடித்துக்கொண்டு வீதியைச் சுற்றி ஒரு கெந்தல் போடவேண்டும் போல் அவளுக்குத் தோன்றியது.... செல்லையா மௌனமாகத் தன் மனைவியின் குதூகலத்தில் மெய்மறந்து அவள் இழுத்த வழியெல்-லாம் போய்க்கொண்டிருந்தான்.

யாழ்ப்பாணத்தின் நீர் வளமற்ற சொற்ப நிலத்தைத் தம் தளராத முயற்சி ஒன்றினாலேயே வளம்படுத்திச் சீவியம் நடத்தும் புதல்வர்களில் அவனும் ஒருவன். இரக்கமற்ற பூமியுடன் தினசரி நடத்தும் போரினால் அவனுடைய தசைநார்கள் முறுக்கடைந்து வச்சிரம்போல் இருந்தன. மன ஒருமைப் பாட்டினால் வாய் மௌனமாகவே இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று மாதங்களுக்கு முன்புதான் அவன் தன் வாழ்க்கைத்துணையைத் தேடிக் கொண்டான். இவளுடைய கலகலத்த வாயும், விடையில்லா ஒரு கேள்வியைக் கேட்பது போல அவனுடைய பார்வையை முறித்து நோக்கும் அவளுடைய விழிகளும், மார்பின் பாரம் தாங்கமாட்டாதது போல் ஒசியும் நூலிடையும் நிர்மலமாக இருந்த அவனுடைய தனிமை வாழ்வில் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கின. சதா மண்ணைக் கிண்டுபவனுக்கு மண்ணிற்குள் எத்தனையோ ரகஸ்யங்களும், மணங்களும், புதுமைகளும் மறைந்திருக்கும். ஆனால் அவைகளைவிட மேலான ரகஸ்யங்களும் மணங்களும் புதுமைகளும் வாழ்க்கையில் எத்தனை மறைந்து கிடக்கின்றன. ஓ! வாழ்வு எவ்வளவு அற்புதமானது! செல்லையா இன்று அணிந்திருக்கும் நாற்பது ரூபா பெறுமதியுள்ள மாறுகரைச் சால்வையைவிட இதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

கோவிலிலுள்ள சனங்கள் தங்கள் இஷ்டப்படி கூக்குரலிட்டுக் கொண்டிருந்தனர். மூலைகளில் கிடத்தப்பட்டிருந்த கைக்குழந்தைகள் அழுதன. பஞ்சகச்சம் அணிந்த பூசகர்கள் அங்குமிங்கும் ஓடினர். இந்த ஆரவாரங்களுக்கிடையில் கர்ப்பக்கிருகத்தில் மணிச் சத்தங் கேட்டது. கூப்பிய கைகள் தலைகளுக்கு மேல் உயர்ந்தன. செல்லையா ஒரு தூணருகே கைகளைக் கட்டியபடி சனங்களின் தலைகளைப் பார்த்துக் கொண்டு நின்றான். நல்லம்மா அவனருகில் கைகூப்பியபடி மூலஸ்தானத்தை ஒருதரம் பார்ப்பதற்காக அங்கும் இங்கும் தலையை அசைத்தாள். எங்கோ தொலைவில் இருளில் சில தீபங்கள் மின்னின. அவைகளின் அருகில் ஒரு தொந்தி பெருத்த பூசகரின் கரும்பட உருவம் கைகளை அசைத்துக்கொண்டு நிற்பது தெரிந்தது. அதற்குப் பின்னால் - அதுதானோ வல்லிபுரப் பெருமாள்?

திருமாலின் திருமண் பிரசாதத்தைப் பெறுவதற்கு ஆரவாரப்பட்ட சனங்கள் ஒரு பக்கத்தில் மேளச்சமா ஆரம்பமாகவே அவ்விடம் நோக்கி நகர்ந்தனர்.

செல்லையாவும் நல்லம்மாவும் கோயிலை வலம்வந்து வணங்கினர்.

தவிற்காரன் தாளவரிசைகளை மெய்மறந்து பொழிந்துகொண்டிருந்தான். அவனுடைய குடுமி அவிழ்ந்த தலையோடு வேறும் ஆயிரந் தலைகள் அசைந்தன. நல்லம்மாவுக்குச் சிரிப்பாகவிருந்தது. தன் கணவனின் உடலோடு தன் உடலை உராய்ந்துகொண்டு "எல்லாருக்கும் பைத்தியம் பாருங்கோ" என்றாள். மௌனியான செல்லையா மௌனம் கலைந்து, "போதும் இனி, வாணை, வெளியாலை போவம்" என்றான்

வெளிவீதிகளிலும் தெருக்களிலும் சனசமுத்திரம் அலைமோதிப் புரண்டது. முத்தையும் வைரத்தையும் பொடியாக்கிச் சிதறிவிட்டது போன்ற அந்த அகன்ற வெண்மணற் பரப்பிலே, கன்னித்தாயின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்திலே அன்புவெள்ளம் பாய்வதுபோல நிலவு வெள்ளத்தை அள்ளிப் பெருக்கும் முழுச்சந்திரனின் கீழ் இரண்டொரு இரவுகளுக்கு வாழ்க்கைப் போரினால் ஏற்பட்ட அலுப்பைக் கொஞ்சம் தீர்த்துக் கொள்வதற்காக யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் வந்து மனிதர்கள் நிரம்பியிருந்தனர்.

சர்பத் கடைக்காரன் பல வர்ணங்கள் கொண்ட போத்தல்களை ஒரு தடியால் அடித்து ஜலதரங்கம் வாசித்தான். மினுக்கு மினுக்கு என்று எரியும் ஒரு கை விளக்கின் அருகில் உட்கார்ந்து, பொலிஸ்காரர்களின் காக்கியுடுப்பு எங்காவது தெரிகிறதா என்று கடைக்கண்ணால் பார்த்தபடி, 'ஒண்டுக்கு நாலு'க்காரன், "ஓடி வா ஓடி வா - போனால் கடலைக்காசு, வந்தால் தேத்தண்ணிக்காசு" என்று ஓலமிட்டான்.

நல்லம்மாவும் செல்லையாவும் தம்மை அறியாமலே ஒரு வளையற் கடையின் முன்னால் போய் நின்றனர். விளக்கொளியில் சுடர்விடும் கண்ணாடி வளையல்களின் லாவண்யத்தில் நல்லம்மாவின் மனம் லயித்தது. செல்லையா அவளுக்கு ஐந்து ஜதை வளையல்கள் வாங்கிக் கொடுத்தான். ஒரு கண்ணாடிப் பெட்டியில் அழகாக வளைத்து வைக்கப் பட்டிருந்த புது மாதிரியான ஒரு பாதசரம் செல்லையாவின் கண்களை ஈர்த்தது. நெருக்கமாகப் பின்னப்பட்ட வெள்ளி வளையம் ஒவ்வொன்றி-லிருந்தும் ஒவ்வொரு வெள்ளிக்குண்டும் வேல் போன்ற ஒரு தகடும் தொங்கிக் கொண்டிருந்தன. முகப்பில் சிங்கமுகம். அதுபோன்ற ஒரு பாதசரம் அவன் முன் ஒருபோதும் பார்த்ததில்லை..... அவன் தன் மனைவியின் முகத்தைப் பார்த்தான்.

குவளை மலரைப் பழித்த அவளது விழிகள் 'காஸ்லைட்' ஒளியில் அகல விரிந்து பளபளத்தன.

அவளிடம் சாதாரணமான காற்சங்கிலிகூட இல்லை. உருண்டை-யாகவும், வழவழப்பாகவும் இருந்த அவளுடைய கணைக்கால்களில் இதுபோன்ற ஒரு பாதசரத்தை அணிந்து பார்க்க வேண்டும் என்ற ஆசை செல்லையாவின் மனதில் தோன்றியது. இந்த ஆசையோடு வேறு எத்தனையோ ரகஸ்யமான இன்ப நினைவுகள் அவன் உள்ளத்தை மயக்கின..... அதை எப்படியும் வாங்கி விடவேண்டும்! அதன் விலை என்னவென்று கடைக்காரனைக் கேட்டான்.

"முப்பத்தைந்து ரூபாய்; வேறுவிலை கேட்க வேண்டாம்." செல்லையா-வின் மடியில் முப்பத்தொரு ரூபாய்தான் இருந்தது.

"இருபத்தைந்து தரலாம். சாமானைக் குடுத்துப்போடு"

"தம்பி! இது நாட்டுப் பெண்டுகள் போடுகின்ற கால்சங்கிலிகள் அல்ல. ராசாத்தியின் கால்களுக்கேற்றது. இந்தியாவிலிருந்து ஸ்பெஷலாய் வந்தது. உமக்கு இது சரிவராது ராசா. கடைசி விலை முப்பது ரூபாய், குடுப்பீரா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி இந்தா....."

பாதசரங்கள் கைமாறி, அவ்விடத்திலேயே நல்லம்மாவின் பாதங்களில் ஏறின.

வெண்மணலில் கால்கள் புதைய இருவரும் மறுபடி கடைகளைச் சுற்றி வந்தனர். மிச்சமாக இருந்த ஒரு ரூபாவைக் கொண்டு ஒரு தையற் பெட்டியும் வாங்கி, ஆளுக்கொரு சர்பத்தும் குடித்தனர். அடுக்குப்பெட்டி வாங்கவில்லை.

நல்லம்மாவின் கால்கள் ஓய்ந்துபோயின. 'இனி வண்டிலடியில் போய்க் கொஞ்சநேரம் இருந்திட்டு, திருவிழாப் பாத்துக்கொண்டு விடியப் போவம்' என்று இருவரும் முடிவுசெய்தனர். செல்லையா அவளை ஒரு சனக் கும்பலுக்கூடாகக் கையில் பிடித்து நடத்திச் சென்றான். கும்பல் கொஞ்சம் வெளியான இடத்திற்கு வந்ததும் நல்லம்மா திடீரென்று நின்று, தன் இடக்காலை உயர்த்திக் கையால் தடவிப் பார்த்தாள்.

"ஐயோ! காற்சங்கிலையைக் காணேல்லை....."

"என்ன.....வடிவாய்ப் பார்!"

"ஒரு காலான் எங்கையோ மணலுக்குள்ளை கழண்டு விழுந்திட்டுது"

கொஞ்சம் கவனமாய் வாறதுக்கென்ன? உனக்கு ஆட்டம் மெத்திப் போச்சு. ஊதாரி நாய்!"

மறுகணம் செல்லையா நாக்கைக் கடித்துக்கொண்டான்.

குண்டூசியால் துளைக்கப்பட்ட றப்பர் பலூனைப் போல நல்லம்மாவின் உற்சாகம் அப்படியே சப்பளிந்து போய்விட்டது. மூன்றுமாத மண வாழ்க்கையில் இதுதான் முதல் தடவையாக இப்படி ஏச்சுக் கேட்க வேண்டி வந்தது. அதுவும் அம்பலத்தில் கூட்டிக்கொண்டு வந்துவிட்டு....! அவள் மனத்தில் கோபம், அவமானம், துயரம் ஆகிய எல்லா உணர்ச்சிகளும் ஒருங்கே தோன்றின. கண்களில் நீர் மல்கியது.

"போதும், உங்களோடை கோயிலுக்கு வந்த வண்டவாளம். இனி நடையைக் கட்டுவம்"

செல்லையா ஒரு படி கீழே இறங்கினான். "நல்லம்மா ஆத்திரத்திலை சொல்லிப்போட்டன். இஞ்சை பார்....."

"வேண்டாம், இப்பவே போகவேணும். வண்டிலைக் கட்டுங்கோ. நீங்கள் வராட்டி நான் தனியாக் கால்நடையாய்ப் போறன். வழியிலை காறுக்குள்ளை வசுவுக்குள்ளை ஆப்பிட்டு நெரிஞ்சு போறன்"

செல்லையா மறுவார்த்தை பேசாமல் தன் திருக்கல் வண்டியை இழுத்து மாட்டை அவிழ்த்துப் பூட்டினான். அவன் ஆண்மகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டின் கழுத்தில் கட்டியிருந்த வெண்டயங்களின் தாளத்திற்கு ஏற்பக் கரடுமுரடான தெருவில் வண்டிச்சக்கரங்கள் 'கடக் கடக்' என்று சப்தம் செய்தன. யாரோ மணமகன் ஊர்வலம் வருவதற்காக விரித்துவிட்ட நிலபாவாடை போல் வளைந்து கிடந்த தெருவின் இரு மருங்கிலும் நெடிய பனைமரங்கள் மௌனப் பூதங்கள் போல் வரிசையாக நின்று ஆலவட்டம் பிடித்தன.

செல்லையா நாணயக் கயிற்றை இளக்கிவிட்டு, மாட்டின் கால்களுக்கிடையில் தன் காலை வைத்தான். ரோசம் மிகுந்த அந்த இளம் காளை உன்மத்தம் கொண்டதுபோல் ஏற்காலை தன் ஏரியில் பட்டும் படாமலும் தாங்கிக்கொண்டு பறந்தது..... ஆத்திரத்தில் சிந்தனையில்லாமல் கூறிய வார்த்தைக்கு இவ்வளவு கோபமா? நிலத்தில் வியர்வை சொட்ட, கை கால் வலியினால் செயலற்றுப் போக, புகையிலைத் தோட்டத்தைக் கிண்டிப் பாடுபட்டவனுக்குத்தான் காசின் அருமை தெரியும்! அவன் ஆண்பிள்ளை. இரண்டு வார்த்தை பேச உரிமையுண்டு. அதைப் பெண் பொறுத்துக்கொண்டால் என்ன? கொண்டுவந்த காசெல்லாம் அவளுக்குத்தானே செலவு செய்தான்.....? தனக்கு ஒரு சுருட்டுக்கூட வாங்கிக் கொள்ளவில்லையே.....

கால்களை வண்டியின் பின்புறம் தொங்கப் போட்டுக்கொண்டு, வண்டியின் கீழ் ஓடும் தெருவைப் பார்த்தபடி நல்லம்மா சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். எவ்வளவு அற்பக் காரியம்!

ஒரு கஷ்டமும் இல்லாமல் திருவிழாப் பார்த்துவிட்டு சந்தோஷமாக வந்திருக்கலாமே, எல்லாம் அவளுடைய பிழைதான். கணவன் இரண்டு வார்த்தைகள் கடுமையாகச் சொல்லிவிட்டால்தான் என்ன?

மாடு களைப்பினால் பலமாக மூச்சு வாங்கியது. நெல்லியடிச் சந்தியில், ஒரு பூவரசமரத்தின் கீழ் செல்லையா வண்டியை நிற்பாட்டினான். அந்த நடுயாமத்திலும் கோயிலுக்குப் போகிறவர்களுக்காக கடைகள் எல்லாம் திறந்து வைக்கப்பட்டிருந்தன. சந்தையில் இரண்டு பெண்கள் அப்பம் சுட்டுக் கொண்டிருந்தனர். தேநீர்க் கடைகளில் தேநீர் கலக்கும் 'கடகட' என்ற சத்தத்தை விட மற்றெங்கும் ஆழ்ந்த நிசப்தம் குடிகொண்டிருந்தது.

செல்லையா மாட்டின் களை தீர அதைத் தடவிக் கொடுத்த பின், ஒரு தேநீர்க் கடை இருந்த பக்கமாகச் சென்றான். அவனுடைய மடியில் ஒரு ஐந்து சதம்தான் இருந்ததென்பது நல்லம்மாவுக்குத் தெரியும். அன்று மத்தியானம் வீட்டில் சாப்பிட்டதுதான். அதன்பிறகு ஒன்றுமே இல்லை..... 'ஐயோ அவருக்கு எவ்வளவு பசியாயிருக்கும், வாய் திறந்து ஒன்றும் சொல்லாமல் இருக்கிறாரே.....' என்று அவள் அங்கலாய்த்தாள். அவளுடைய இதயம் இளகிக்கரைந்தது. தன் கணவனுடைய மனத்தின் பண்பும், அவன் தன்பால் வைத்துள்ள அன்பின் ஆழமும் அவள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்தில் தெளிவாயிற்று. விவாகம் செய்துகொண்ட புதிதில் ஒருநாள் அவன் கூறிய வசனம் ஒன்றை அவள் ஞாபகப்படுத்திக் கொண்டாள். "பெட்டை உனக்காக வேணுமெண்டால் என்ரை உயிரையும் கொடுத்து விடுவேன். நீ ஒண்டுக்கும் பயப்பிடவேண்டாம்"

அவளுடைய நெஞ்சுக்குள் ஏதோ ஒன்று உடைவது போல் இருந்தது. கண்கள் பொருமி உவர்நீரைப் பொழிந்தன. தன் கணவனை ஒரு குழந்தைபோல் மடியில் வைத்துத் தாலாட்டி அவனுடைய உடலின் ஆயாசத்தையும் மனக்கவலையையும் போக்க வேண்டும் போல் அவளுக்குத் தோன்றியது.

செல்லையா வாயில் ஒரு சுருட்டுடன் வந்து மனைவியருகில் ஒரு வெற்றிலை பாக்குச் சுருளை வைத்துவிட்டு, அவளுடைய முகத்தைப் பார்த்தான்..... அவளுடைய கண்ணீர் தோய்ந்த முகத்தின் ஒளி அவனை உலுக்கியது. தன்னுடைய நாற்பது ரூபா பெறுமதியுள்ள மாறுகரைச் சால்வையால் அவளுடைய கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்று மனம் அவாவியது.

"என்ன நல்லம்....."

நல்லம்மாவின் கண்ணீர் வடிந்த முகத்தில், நாணம் கலந்த ஒரு புன்னகை அரும்பியது. "ஒண்டுமில்லை, உங்களுக்குப் பசி இல்லையே? வெளிக்கிடுங்கோவென் கெதியாய் வீட்டை போவம்"

செல்லையா அதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டான். மாட்டின் வெண்டயம் மறுபடி பனந்தோப்புக்களில் எதிரொலித்தது.

வல்லைவெளி!

இந்த அகன்ற பூமிப்பரப்பின மகிமையை அறிந்ததுபோல இதுகாறும் வேகமாய் ஓடிவந்த மாடு, தன் கதியைக் குறைத்து அடிக்குமேல் அடி எடுத்து வைக்க ஆரம்பித்தது.

பேய்க்காற்று 'ஹோ' என்று சுழன்றடித்தது.

வானம் கவிந்து, நாற்புறமும் . நிலத்தைக் கவ்விக்கொண்டிருந்தது. வெளியின் நடுவே தேங்கி நின்ற நீரோடை, ஒரு அரக்கனது பிரம்மாண்டமான மார்பில் அணியப்பட்ட மரகதச்சரடு போல் ஜ்வலித்தது. வானமுகட்டின் உச்சியில் தொங்கிக் கொண்டிருந்த பளிங்குத் தகடு போன்ற சந்திரதீபம் கீழே விழுந்துவிட எத்தனிப்பது போலக் கனிந்து பிரகாசித்தது.

சின்ன மனிதர்களையும் பெரிய எண்ணங்கள் எண்ணும்படி தூண்டும் இந்த வெளிப்பிரதேசத்தில்தான் மனிதனின் ஜீவநாடி நவநாகரிக முறைகளினால் நலிந்துபடாமல் இன்னும் அந்தப் பழைய வேகத்தோடு அடித்துக் கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கோ வெகுதொலைவில் நிலத்தில் இருந்து இரண்டு அடி உயரத்தில் பொட்டிட்டது போன்ற ஒரு ஒளி தோன்றிக் கொஞ்சம் கொஞ்சமாகத் தெருவை நோக்கி நகர்ந்து வந்தது..... செல்லையா அதைக் கண்டதும் அதை நோக்கிக் காறி உமிழ்ந்தான். நல்லம்மா "அது என்ன?" என்று கேட்டாள்.

"ஆரோ மீன்பிடிகாரரர் சூள் கொண்டு போறான்கள்" என்று ஒரு பொய் சொல்லி மழுப்பிவிட்டுச் செல்லையா மாட்டின் வாலை பிடித்து முறுக்கினான்.

அந்த வெளிச்சம் தெருவைக் கடந்து வேகமாய் மற்றப் பக்கத்தில் போய் "பக்" என்று அவிந்தது.....

செல்லையாவின் இடக்கை அவன் மனைவியின் இடையை நோக்கி நகர்ந்தது.

அவனுடைய மனம் வல்லைவெளி போல் விரிந்தது. மெய்மறந்த ஒரு மகிழ்ச்சி அவனை ஆட்கொண்டது. தன் குரலை எழுப்பி, "ஞானகுமாரி" என்ற தேவகாந்தாரி ராகப் பாட்டைப் பாடினான்..... அவனுக்குப் பசியில்லை, தாகம் இல்லை, தூக்கம் இல்லை. எத்தனை கொள்ளி வாய்ப் பிசாசுகள் சேர்ந்தும் அவனை என்ன செய்துவிடமுடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13

# வெள்ளிப் பாதசரம்

## குறிப்புகள்

இக்கதையானது குடும்ப உறவையும், மணவாழ்க்கையிலே உள்ள நெளிவு சுளிவுகளையும் வெளிப்படுத்துகின்றது. புதுமணத் தம்பதிகளான செல்லையாவும் நல்லம்மாவும் கோயில் திருவிழாவிற்குச் செல்லும் ஒருநாள் அனுபவத்தை இக்கதை சித்திரிக்கின்றது. இக்கதையானது கிராமியப் பின்னணியைக் களமாகக்கொண்டு சாதாரணமாக கணவன் - மனைவி இடையே நிலவும் அன்னியோன்யம், கோபதாபம், ஆழ்ந்த அன்பு என்பவற்றைச் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளது. திருவிழாச் சூழல் புதுமணத் தம்பதியரின் மனதில் ஏற்படுத்தும் குதூகலம், குதூகலத்தின் உச்சமாக செல்லையா தன்வசமுள்ள முழுப்பணத்தையும் செலவுசெய்து மனைவியின் கால்களில் வெள்ளிப் பாதசரம் வாங்கி அணிவித்தல், வெள்ளிப் பாதசரம் தொலைந்து போதல், கணவனின் குதூகலம் கோபமாகவும், மனைவியின் குதூகலம் துன்பமாகவும் முடிவடைதல், திரும்பும் வழியில் இருவரும் கழிவிரக்கப்பட்டு கோபதாபங்களை மறந்து மீண்டும் அன்பில் இணைதல் என்பன இயல்பாகவும் நடப்பியலுக்குப் பொருந்துமாறும் அமைந்திருப்பது கதைச் சிறப்புக்குக் காரணமாக அமைகின்றன.

இயற்கையில் மனித உழைப்பின் ஈடுபாட்டினையும், மனித இன்பத்தில் மன உணர்வின் ஈடுபாட்டினையும் ஆசிரியர் பல இடங்களில் அழுத்தமாகச் சொல்கிறார். மனித வாழ்க்கையில் எத்தனை புதுமைகளும் அற்புதங்களும் மறைந்து கிடக்கின்றன என்பது ஆசிரியரால் நன்கு புலப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மண்ணும் அதன் பண்பாடும், மொழியும் கதையினூடாக வெளிப் படுத்தப்பட்டுள்ளன. பிரதேசச் சூழலும், மண்வாசனையும் இக்கதையில் இழையோடுகிறது. மூடநம்பிக்கைக் கருத்துக்களும் தொட்டுச் செல்லப் படுவதுடன் பாத்திரங்களில் ஆளுமை, உளவியல் நடத்தை என்பனவும் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

### செல்லையா, நல்லம்மா ஆகிய பாத்திரங்கள் பற்றிய நோக்கு

இக்கதையில் வரும் செல்லையா நல்ல உழைப்பாளி. மண்ணை நம்பியே சீவியம் நடத்துபவன். உடல் வருத்தி வேலை செய்வதனால் தசைநார்கள் முறுக்கேறப்பெற்றவன். மனைவியைச் சந்தோஷமாக வைத்திருக்கவேண்டும் என்ற எண்ணம் உடையவன். மனைவியின் மீது அக்கறை கொண்டவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியை கோயிலுக்கு அழைத்துச்சென்று வழிபடுவதில் விருப்பம் உடையவன். தனது உழைப்பில் பெரும்பகுதியை மனைவிக்குச் செலவிடுபவன். தான் ஆசைப்பட்டதை மனைவிக்கு வாங்கிக்கொடுக்கும் மனம் படைத்தவன்.

இக்கதையில் வரும் நல்லம்மா ஒரு இளம் கிராமியப்பெண். கணவன் விருப்பப்படி நடந்துகொள்பவள். கணவன் கோபமடைந்தவுடன் தானும் கோபமடைகிறாள். பின் சிந்தித்துச் செயற்படுகிறாள். தனது தவறுக்காக மனம் வருந்தும் மனப்பான்மை கொண்டவள். நல்லம்மா வீட்டுக்குத் திரும்புகையில் கணவனது செயல்களைக் கண்டு கண்ணீர் வடிப்பது பெண்களுக்கு உரிய இயல்பான குணத்தை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

## குடும்ப உறவினை வெளிப்படுத்தும் வட்டார வழக்குச் சொற்கள்

கணவன் மனைவி இடையே ஏற்படும் இன்ப துன்ப உணர்வுகளை வெளிப்படுத்துவதற்குக் கிராமியப் பேச்சுவழக்கைப் பயன்படுத்தியிருப்பது கதைக்கு மெருகூட்டுகின்றது. உதாரணமாக,

*"பயப்பிடாமல் என்னோடை வா"*

*"எவ்வளவு சனம் பாத்தியளே"*

*"காற்சங்கிலியைக் காணேல்ல"*

*"உனக்கு ஆட்டம் மெத்திப்போச்சு, ஊதாரி நாய்"*

போன்ற கூற்றுகள் கிராமியவழக்கு இடம்பெற்றிருப்பதை எடுத்துக் காட்டுகின்றது. மேலும், வல்லிபுரக்கோயில், வல்லைவெளி, பனைமரங்கள் நிறைந்திருப்பது போன்ற காட்சிகள் கிராமியச் சூழலை வெளிப்படுத்துகின்றன என்பதையும் குறிப்பிட வேண்டும். உதாரணமாக,

*கரடுமுரடான பாதை*

*கொள்ளிவாய்ப் பிசாசு*

போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

# சி. வைத்தியலிங்கம்

1930 காலப்பகுதியை இலங்கைத் தமிழ்ச் சிறுகதையின் ஆரம்ப கால கட்டமாகக் கொள்ளலாம். இக்காலப்பகுதியில் தலைதூக்கிய இந்திய சுதந்திரப் போராட்ட எழுச்சியினாலும் அதற்குத் தலைமை தாங்கிய காந்தியத்தினாலும் இலங்கைத் தமிழரும் கவரப்பட்டனர். அதனால் தமிழ்நாடு, யாழ்ப்பாணம் என்ற கலாச்சாரப் பாகுபாடுகளைப் பேணாத காந்தீய சுதந்திரப் போராட்டப் பண்பாடு மேலோங்கி இருந்த காலப்பகுதியாகும். இதனால் சிறுகதை முன்னோடிகளான இலங்கையர்கோன், சம்பந்தன், வைத்தியலிங்கம் போன்றவர்களின் ஆரம்ப சிறுகதைகளில் இந்திய மண் வாசனையே மேலோங்கியிருந்தது. சி.வைத்தியலிங்கம் எழுதிய கதைகளும் இதற்கு விதிவிலக்கு அல்ல. ஆயினும் இவர்களே பின்னர் யாழ்ப்பாணத்து மண்வாசனை கமழும் கதைகளையும் எழுதுவதில் முன்னோடிகளாய் விளங்கினர். சி.வைத்தியலிங்கம் அவர்களின் 'பாற்கஞ்சி' என்னும் சிறுகதை அத்தகைய சிறுகதைக்கு உதாரணமாக உள்ளது.

சி.வைத்தியலிங்கம் அவர்கள் இலங்கையர்கோன் அவர்களின் உறவினர் ஆவார். அத்தோடு அவரைப் போலவே அரசாங்க உத்தியோகத்திலும் இருந்தார். இவ்வாறு இருந்தமையினால் சிறுகதைகளைப் பற்றியும் அவற்றின் தன்மைகளைப் பற்றியும் நன்கு தெரிந்து கொண்டிருந்தார். சிறுகதை பற்றி அவர் கூறுகையில், 'சிறுகதை மேல்நாட்டு இலக்கியத் தினுசுகளில் ஒன்று. கதைப்போக்கும் சுருக்கமுமாக இருக்கும். பாத்திரங்களும் இரண்டு அல்லது மூன்று. ஓர் ஓவியன் சித்திரக்கோல் கொண்டு எழுதும் ஒரு வளைவினால் அல்லது கோட்டால் படத்தில் கொண்டுவரும் பாலமும் உருவும்.....' எவ்வளவு சக்தி சிறுகதை ஆசிரியனுக்கு இருக்க வேண்டும் என்று கூறுகின்றார்.

வைத்தியலிங்கம் அவர்கள் 1930களில் தனது தொழிலின் நிமித்தம் கொழும்பு சென்றார். அவ்வாறு அங்குசென்று தன்னை இலக்கியரீதியாகப் புடம்போடும் சூழ்நிலையைப் பெற்றார். 'ஆனந்தவிகடன்', 'மணிக்கொடி', 'கலைமகள்', 'திரிவேணி', 'கிராமஊழியன்' போன்ற பத்திரிகைகளை வாசிக்கும் வாய்ப்பும் அதனால் அன்றைய பிரம்மாக்களான புதுமைப்பித்தன், கு.ப.ரா., நா.பிச்சமூர்த்தி, க.நா.சு., சிதம்பர சுப்பிரமணியம் போன்றோரின் பரிச்சயமும் கிட்டியது. அத்துடன் கொழும்பிலிருக்கும் சோ.சிவபாதசுந்தரம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ.நடராசா, இலங்கையர்கோன், குல.சபாநாதன், ஆ.குருசாமி போன்ற இலக்கிய ஆர்வலர்களுடனான தொடர்பும் ஏற்பட்டது. இது பலவிதத்திலும் இவருக்கு இலக்கிய உத்வேகத்தை ஏற்படுத்தியது. சி.வைத்தியலிங்கம் கொழும்பில் வாழ்ந்து நகர வாழ்க்கையை அனுபவித்தபோதும் அவர் மனமோ தான் சிறுவனாக இருந்தகாலத்தில் சுற்றித்திரிந்த தன் சொந்த ஊரான ஏழாலை என்னும் கிராமத்தையே வட்டமிட்டது. இத்தகைய ஒரு கிராமியப் பின்னணியிலேயே அவரது 'பாற்கஞ்சி' படைக்கப்பட்டுள்ளது. இன்னுமோர் முக்கிய விடயம் யாதெனில், இவர் கதைகள் யாழ்ப்பாணப் பிரதேசக் கிராமங்களை மட்டும் பின்னணியாகக் கொள்ளவில்லை. சிங்களக் கிராமங்களையும் தன் கதைகளிற்குப் பகைப்புலமாகக் கொண்டுள்ளார். அதற்கு உதாரணமாக 'நெடுவழி' என்ற இவரின் சிறுகதையைக் கூறலாம்.

ஈழத்தில் தமிழ்ச் சிறுகதைப் பிதாமகர்களில் ஒருவராகக் கணிக்கப் படுகின்ற சி.வைத்தியலிங்கம் அவர்கள் 1939 காலகட்டத்தில் சிறுகதைத் துறையில் காலடி வைத்தார். இவரின் படைப்புகள் முதலில் 'ஈழகேசரி' பத்திரிகையில் வெளிவந்தன. இவர் ஏறக்குறைய இருபத்தைந்து சிறுகதைகள் வரை படைத்துள்ளார்.

இலங்கையர்கோனைப் போலவே வைத்தியலிங்கமும் வரலாற்றுக் கதைகளையும், சமூகக் கதைகளையும் எழுதியுள்ளார். வரலாற்றுக் கதைகளாக 'நந்தகுமாரன்', 'பூதத்தம்பி கோட்டை', 'தியாகம்' ஆகியவை படைக்கப் பட்டுள்ளன. 'பாற்கஞ்சி', 'மூன்றாம்பிறை', 'களனிகங்கைக் கரையில்', 'பார்வதி', 'ஏன் சிரித்தார்', 'அழியாப் பொருள்', 'பைத்தியக்காரி', 'புல்லு மலையில்', 'நெடுவழி', 'விதவையின் இதயம்', 'இப்படிப் பலநாள்', 'மின்னி மறைந்த வாழ்வு', 'கங்கா கீதம்', 'பொன்னி', 'டிங்கிரி மெனிக்கா', 'பிச்சைக்காரர்', 'உள்ளப்பெருக்கு', 'என் காதலி' போன்றவற்றை இவர் எழுதிய சமூகக் கதைகளிற்கு உதாரணங்களாகக் கூறலாம்.

இவரின் 'களனிகங்கைக் கரையில்', 'பார்வதி'', 'ஏன் சிரித்தார்', 'அழியாப் பொருள்', 'உள்ளப்பெருக்கு' 'புல்லுமலையில்' போன்ற சிறுகதைகள் ஆண்-பெண் உறவு பற்றிய சித்திரிப்புக்களைக் கொண்டவையாக உள்ளன. இக்கதைகளை வாசிக்கும் ஒருவர் கு.ப.ராவின் செல்வாக்கை இவற்றில் காணலாம். இவர் கு.ப.ராவைத் தன் எழுத்துலக முன்னோடியாகக் கொண்டமையை இதன் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

சி.வைத்தியலிங்கம் அவர்கள் இலக்கியத்தில் பெரிதும் மனம் ஒன்றியிருந்த போதிலும் எழுத்தாளர் மௌனியைப் போல் குறைவாகவே எழுதியுள்ளார். இவர் எழுதிய சிறுகதைகள் முப்பதிற்கு மேல் செல்லாது என்றே கூறவேண்டும். இவர் 'என் காதலி' என்னும் உருவகப்பாணியிலான சிறுகதையைத் தந்துள்ளார். இவர் தனக்கும் தமிழிற்கும் உள்ள உறவை எடுத்தியம்புவதாக இச்சிறுகதை அமைகின்றது. இவரது ஒரேயொரு சிறுகதைத் தொகுதி 'கங்கா கீதம்' என்ற பெயரில் வெளியாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15

# பாற்கஞ்சி

## சி. வைத்தியலிங்கம்

"ராமு, என் ராசாவன்னா குடுச்சிடுவாய், எங்கே நான் கண்ணை மூடிக் கொள்கிறேன். குடிச்சிடு பார்க்கலாம். நாளைக்குப் பாற்கஞ்சி....."

"சும்மா போம்மா, நாளைக்கு நாளைக்கென்று எத்தனை நாளா ஏச்சுப்பிட்டாய். என்னதான் சொல்லேன். கூழ் குடிக்க மாட்டேம்மா."

"இன்னும் எத்தனை நாள் பஞ்சமடா? வயலிலே நெல் முத்தி விளைஞ்சு வருது. ஒனக்கு வேணாம்னா பாற்கஞ்சி தாரனே"

"கூழைப் பார்த்தாலே வவுத்தைப் புரட்டுதம்மா. முடியாதுன்னா முடியாது" என்று சொல்லி அழத் தொடங்கினான்.

"அப்பா பசியோட காத்துண்டிருப்பாரடா வயல்லே. கூழ் கொண்டு போகணும். என்ன பாடுபட்டும் நாளைக்குக் கஞ்சி தந்துடுறனே. ஆம்..... என் கண்ணோல்லியோ"

"நிச்சமாய்ச் சொல்றயாம்மா? நாளைக்குப் பாற்கஞ்சி தருவாயா?....."

சட்டென்று பக்கத்திலிருந்து சிறுவர்கள் தம்பளப்பூச்சி பிடித்து விளையாடும் சப்தம் கேட்டது. அவதி அவதியாய் பத்து வாய் கூழ் குடித்தான் ராமு. எல்லாவற்றையும் மறந்து விளையாட ஓடினான்.

அந்தக் கிராமத்தில் முருகேசனுடைய வயல் துண்டு நன்றாய் விளையும் நிலங்களில் ஒன்று; அதற்குப் பக்கத்திலே குளம். குளத்தைச் சுற்றிப் பிரம்மாண்டமான மருதமரங்கள். தூரத்திலே அம்பிகையின் கோவிற் கோபுரம். இவை எல்லாவற்றையும் சுற்றி வேலி போட்டாற்போல தூங்கிக் கிடந்தன குடிமனைகள்.

மார்கழி கழிந்துவிட்டது. இப்பொழுது மேகத்திலே புகார் ஓடுவதில்லை. ஞான அருள் பெற்ற நாள் வெண்ணிறம் பெற்று வந்தது. ஆம் தைமாதம் பிறந்து துரிதமாய் நடந்துகொண்டிருந்தது.

மாரிகாலம் முழுவதும் ஓய்ந்து தூங்கிக்கிடந்த ஜீவராசிகள் பாட்டுடன் வேலை தொடங்கிவிட்டன. முருகேசனும் வயலிலே வேலை செய்து கொண்டிருந்தான். பனியிலே ஒடுங்கிக் கிடந்த நரம்புகளிலே சூரியஒளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளம் பாயவே, அவன் தேகத்தில் ஒரு சுறுசுறுப்பு உண்டானது. வலிந்து இறுகியிருந்த நரம்புகள் விண்போல் தெறித்தன. எழுந்து நின்று கண்களைச் சுழற்றித் தன் வயலைப் பார்த்தான். நெற்கதிர்கள் பால் வற்றி, பசுமையும், மஞ்சளும் கலந்து செங்காயாக மாறிக் கொண்டி-ருந்தன. "இன்னும் பதினைந்து நாட்களில்....." என்று அவனை அறியாமல் அவன் வாய் முணுமுணுத்தது.

முருகேசன் மனத்திலே பூரிப்பு, ஒரு ஆறுதல், ஒரு மனஅமைதி. அவன் ஒரு வருடமாய் பாடுபட்டது வீண்போகவில்லை அல்லவா? ஆனால் இவற்றிற்கு இடையில் காரணமில்லாமல், "சிலவேளை ஏதேனும்..... யார் கண்டார்கள்?" என்ற இன்பமும் துன்பமும் கலந்து ஒரு மனஏக்கம்.....!

முருகேசனுக்கு வயலை விட்டுப் போக மனம் வரவில்லை. பொழுது உச்சிக்கு வந்துவிட்டது. பசி வயிற்றைக் கிள்ளியது. என்றாலும் பயிருக்குள் நுழைந்து ஒவ்வொரு கதிராகத் தன் கைகளால் அணைத்துத் தன் குழந்தைகள் போலத் தழுவிக்கொண்டிருந்தான்.

கண்ணை மின்னிக்கொண்டிருந்த அந்த வெயிலிலே காமாட்சி கூழுடன் அப்பொழுதுதான் வந்தாள். கூழ் குடித்துக் கொண்டிருக்கும்பொழுது முருகேசன் அவளைப் பார்த்து, "போன வருசந்தான் மழை இல்லாமல் எல்லாம் சப்பையும் சாவியுமாய்ப் போயிருத்து. காமு, அதோ பார். இந்த வருசம் கடவுள் கண் திறந்திருக்கிறார். கருப்பன் செட்டி கடனைத் தீர்த்துப்புடலாம். நமக்கு ஒரு வருடத்துக்குச் சோத்துக்குக் குறைவு வராது. எங்க ராமனுக்கு ஒரு சோடிக் காப்பு வாங்கணும்....."

"எனக்கு ஒட்டியாணம்"

"ஏன், ஒரு கூறைச்சேலையும் நன்னாயிருக்குமே"

"ஆமாங்க, எனக்குத்தான் கூறைச்சேலை, அப்படின்னா ஒங்களுக்கு ஒரு சரிகை போட்ட தலப்பா வேணுமே"

"அச்சா, திரும்பவும் புது மாப்பிள்ளை பொம்புளையாட்டம் ரெண்டு பேரும்..... ஓ..... ஒரே சோக்குத்தான்" என்று சொல்லி அவளைப் பார்த்து இளித்தான்.

காமாட்சி வெட்கத்தினால் தன் சீலைத் தலைப்பால் முகத்தை அரைகுறையாய் மூடிக்கொண்டு "அதெல்லாம் இருக்கட்டும்..... எப்போ அறுவடை நாள் வைக்கப் போறீங்க" என்றாள்.

"இன்னிக்குச் சனிக்கிழமை, சனியோடு சனி எட்டு, மற்றச் சனி பதினைந்தாம் நாள் நல்லநாள். அதே சனிக்கிழமை வைத்திடுவமே"

"தாயே, இதுக்கிடையில் ஒரு விக்கினமும் வந்திடப்படாது" என்று மனதில் சொல்லிக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெருநாளை எதிர்பார்ப்பது போல் காமாட்சியும் முருகேசனும் அறுவடை நாளை எதிர்நோக்கி இருந்தார்கள். காமாட்சி தன் வீட்டில் உள்ள களஞ்சிய அறையைக் கோலமிட்டு மெழுகி வைத்திருந்தாள். லக்ஷ்மி உறையப் போகும் அந்த அறைக்கு ஒவ்வொரு நாளும் தீபம் ஏற்றி வந்தாள். மணையாகக் கிடந்த அரிவாள்களைக் கொல்லன் பட்டடையிற் கொண்டுபோய்த் தேய்த்து வந்தான் முருகேசன். கதிர்ப் பாய்களை வெயிலிலே உலர்த்தி, பொத்தல்களைப் பனைஓலை போட்டு இழைத்து வைத்தான். ஐந்தாறு நாட்களுக்கு முன்னரே அயல்வீட்டுக் கந்தையனிடமும் கோவிந்தனிடமும் "அறுவடை, வந்திட வேணும் அண்ணாமாரே" என்று பலமுறை சொல்லிவந்தான். இருவருடைய மனதிலும் ஓர் ஆவல் துடித்து நின்று இவற்றை எல்லாம் செய்துவந்தது.

அறுவடை நாளுக்கு முதல்நாள் அன்று வெள்ளிக்கிழமை. பகல் தேய்ந்து மறைய இன்னும் மூன்று நாழிகைதான் இருந்தது. நிஷ்களங்கமாய் இருந்த வானத்திலே ஒரு கருமுகிற்கூட்டம் கூடியது. வரவரக் கறுத்துத் தென்திசை இருண்டு வந்தது. அந்த மேகங்கள் ஒன்றுகூடி அவனுக்கு எதிராகச் சதி செய்வதாக முருகேசன் நினைத்தான். அந்தக் கருவானம் போல் அவன் மனதிலும் இருள் குடிகொண்டது. காமாட்சி அவள் மனத்திற்குள் அம்பிகைக்கு நூறு வாளித் தண்ணீரில் அபிஷேகம் செய்வதாகப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் ஒரு காற்று அடித்துக் கூடியிருந்த முகிற்கூட்டம் கலைந்து சிறிதுசிறிதாய் வானம் வெளுத்துக்கொண்டு வரவே, முன்போல் ஆகாயம் தெளிவுடன் விளங்கிற்று. தன்னுடைய பிரார்த்தனை அம்பிகைக்குக் கேட்டுவிட்டதென்று காமாட்சி நினைத்தாள்.

முருகேசன் படுக்கப் போகுமுன் அன்றைக்குப் பத்தாவது முறை கந்தையனுக்கும், கோவிந்தனுக்கும் காலையில் அறுவடையைப் பற்றி நினைப்பூட்டிவிட்டு வந்து படுத்துக்கொண்டான். அவன் நித்திரைக்குப் போனபொழுது நேரமாகிவிட்டது. அவன் படுக்கையிலேயே புரண்டு படுத்துக் கொண்டிருந்தான். நித்திரை அவனுக்கு எப்படி வரும்? அவனுடைய மனம் விழிப்பிற்கும் தூக்கத்திற்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருந்தது. ஆயிரஞ் சிந்தனைகள் பிசாசுகளைப் போல் வந்த அவன் மனதிலே ஓடிக்கொண்டிருந்தன.

அவன் வயலிலே நெல் அறுத்துக் கொண்டிருக்கிறான். பக்கத்திலே கோவிந்தனும், கந்தையனும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அறுத்து வைத்ததை காமாட்சியும், பொன்னியும், சின்னம்மாவும் கட்டுக் கட்டாய் அடுக்கிக்கொண்டிருக்கிறார்கள். கிளிகளையும் காக்கைகளையும் துரத்திக்கொண்டு திரிகிறான் ராமு. அப்பொழுது காமாட்சி; "பள்ளத்து பள்ளன் எங்கேடி போய்விட்டான்" என்று பள்ளு பாடத் தொடங்கினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குப் பொன்னி "பள்ளன் பள்ளம் பார்த்துப் பயிர் செய்யப் போயிட்டான்" என்று சொல்ல, காமு, "கொத்துங் கொண்டு கொடு வாளுங்கொண்டு....." என்று இரண்டாம் அடியைத் தொடங்கினாள்.

அதற்குப் பொன்னி "கோழி கூவலும் மண்வெட்டிகொண்டு" என்று சொல்ல, இருவரும் சேர்ந்து "பள்ளன் பள்ளம் பார்த்துப் பயிர்செய்யப் போயிட்டான்!" என்று முடித்தனர்.

உடனே காமு, "ஆளுங் கூழை அரிவாளுங் கூழை" என்று சொன்னதும் முருகேசன் "யாரடி கூழை!" என்று அரைத்தூக்கத்திலிருந்து கத்திக்கொண்டு எழுந்திருந்தான்.

முருகேசன் - ஆள் கூழை. பாவம் தன்னையே அவள் கேலி செய்வதாக நினைத்து அப்படிக் கோபித்துக்கொண்டான். இப்பொழுது நித்திரை வெறி முறிந்ததும் தான் செய்ததை நினைக்க அவனுக்கு வெட்கமாய் இருந்தது. தனக்குள்ளே சிரித்துக்கொண்டு திரும்பவும் படுத்துக் கொண்டான். அந்தக் கனவுதான் எவ்வளவு அழகான கனவு! அதன் மீதியையும் காணவேண்டுமென்று ஆவலாயிருந்தது. ஆனால், நித்திரை எப்படி வரப்போகிறது? கனவுதான் மீண்டும் காணப் போகிறானா? தன் கற்பனையிலே மீதியைச் சிருஷ்டித்துப் பார்த்து அவன் மகிழ்ந்து கொண்டிருந்தான்.

பாட்டுடன் அறுவடை சென்றுகொண்டிருக்கிறது. வயலிலே நின்று நெல் மூட்டைகளை வண்டியிலே ஏத்துகிறான். வண்டி வீட்டு வாசலிலே வந்து நிற்கிறது. அவனுடைய களஞ்சியம் நிறைந்து பரிபூரணமாய் விட்டது. ராமன் வயிறு நிறையப் பாற்கஞ்சி குடித்துக்கொண்டிருக்கிறான். காமு ஒட்டியாணத்துடன் வந்து அவனை.....

அப்பொழுது வீட்டுக்கூரைக்கு மேலிருந்த ஒரு சேவல் கூவிற்று. முருகேசனுடைய கற்பனை அறுந்துவிட்டது. அக்கிராமத்திலுள்ள சேவல்கள் தொடர்ந்து ஒவ்வொன்றாகக் கூவிக்கொண்டு வந்தன. அவன் வீட்டுக்கு முன்னால் கட்டியிருந்த ஆட்டுக்குட்டி "மேய் மேய்" என்று கத்தத் தொடங்கியது. எங்கிருந்தோ கள்ளத்தனமாய் உள்ளே நுழைந்த மெல்லிய காற்று அவன் மேல் படவே, மீண்டும் குளிர்ந்தது. முருகேசன் பரபரவென்று எழுந்திருந்தான். வாசலை அடைந்து வானத்தை அண்ணாந்து பார்த்தான்.

அவன் படுக்கைக்குப் போனபொழுது வானத்திலே பூத்திருந்த நட்சத்தி-ரங்கள் ஒன்றையும் காணவில்லை. வானம் கறுத்துக் கனத்து எதிலோ தொங்கிக் கொண்டிருப்பதுபோல் தோன்றியது. வீட்டு முற்றத்திலே வந்து நின்றான். ஒரு மழைத்துளி அவன் தலைமேல் விழுந்தது. கையை நீட்டினான். இன்னுமொரு துளி! மற்றக் கையையும் நீட்டினான் இருதுளிகள் வீழ்ந்தன. அவன் தலையிலே வானமே இடிந்துவிழும் போல் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உக்கிப்போய்த் தன் வீட்டுத் திண்ணையிலே அவன் குந்திக்கொண்டான். பொலுபொலுவென்று மழை தொடங்கியது. இடி இடித்தது. மின்னி மழை சோனாவாரியாகக் கொட்டிக் கொண்டிருந்தது.

காலை ஏழுமணியாகியும் மழை விடவேயில்லை. ராமு ஓடிவந்து தந்தைக்குப் பக்கத்திலே குளிர் காய்ந்துகொண்டிருந்தான். காமாட்சி இடிந்துபோய் நின்றாள். மழையுடன் காற்றும் கலந்து "ஹோ" என்று இரைந்து கொண்டிருந்தது.

"அம்மா, இன்னைக்குப் பாற்கஞ்சி தாறதாய்ச் சொன்னியே, பொய்யாம்மா சொன்னாய்?" என்று தாயைப் பார்த்துக் கேட்டான் ராமு.

காமாட்சிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அவள் வயிறு பற்றி எரிந்தது. பச்சைக்குழந்தையை எத்தனை நாட்களாய் ஏமாற்றி விட்டாள்? மழையையும் பாராமல் பக்கத்து வீட்டிற்கு ஓடினாள். காற்படி அரிசி கடனாய் வாங்கிக்கொண்டு வந்தாள்.

முருகேசன் ஒன்றும் பேசாமல் வானத்தைப் பார்த்தபடி இருந்தான். அவனுடைய பார்வை வயல்வெளியை ஊடுருவிச் சென்று எங்கேயோ லயித்துப்போய் இருந்தது.

'வெள்ள வாய்க்காலிலே தண்ணீர் கரைபுரண்டோடிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது குளம் நிறைந்து தண்ணீர் பெருக்கெடுத்துவிடும். என்னுடைய நெற்பயிர்கள் கீழே விழுந்து உருக்குலைந்துவிட்டன. நெற்கதிர்கள் உதிர்ந்து வெள்ளத்துடன் அள்ளுண்டு போய்க் கொண்டிருக்கின்றன' என்று அவன் எண்ணி ஏங்கினான்.

காமாட்சி களஞ்சிய அறைக்குப் போனாள். அது வெறுமனே கிடந்தது. அதைப் பார்த்ததும் அவளுக்கு அழுகை விம்மிக்கொண்டு வந்தது. அங்கே நிற்கத் தாங்காமல் வெளியே வந்தாள். ராமு, "நாளைக்கும் தாரியாம்மா பாற்கஞ்சி" என்று கெஞ்சிக் கேட்டான். அவன் கஞ்சி குடித்த கோப்பை அவளுக்கு முன்னே காலியாகக் கிடந்தது.

அநேகநாள் பழக்கத்தினாலே "நாளைக்....." என்று மட்டுமே அவளால் சொல்ல முடிந்தது. அந்த அரைகுறையான வார்த்தை முருகேசன் வயிற்றிலே நெருப்பை அள்ளிக் கொட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16

# பாற்கஞ்சி

## குறிப்புகள்

இக்கதையானது ஒரு ஏழைக்குடும்பத்தில் சிறு தேவை ஒன்றைக்கூட நிறைவேற்றுவதில் உள்ள பொருளாதாரப் பிரச்சனையையும் அதனால் ஏற்படும் சோகத்தையும் சித்திரித்துக் காட்டுகின்றது. புதுமைப்பித்தனின் 'ஒருநாள் கழிந்தது' மத்தியதர வர்க்கத்தினரின் வறுமைநிலையை எடுத்துக் காட்டுகின்றது. இக்கதையில் 'பாற்கஞ்சி' என்னும் சொல் ஒரு குறியீடாக உள்ளது.

எப்பொழுதும் கூழே குடித்து வெறுப்படைந்த சிறுவனான ராமு, தனது தாயிடம் பாற்கஞ்சி கேட்கிறான். ஒரு நாளைக்காவது தன் பிள்ளைக்குப் பாற்கஞ்சி காய்ச்சிக்கொடுக்க முடியாத வறுமைநிலையினால் தாய் வேதனை அடைகின்றாள். அச்சிறுவனிடம் நாளைக்கு, நாளைக்கு என நாட்களைக் கடத்தவே முடிகின்றது. வயலினை அறுவடை செய்ய முன் அவர்கள் அனுபவித்த கஷ்டங்கள், அவர்களது துன்பங்கள் எவ்வாறேனும் அறுவடைக்குப் பின்னர் தீர்ந்து ஓரளவு நிம்மதியாக வாழலாம் என்ற அவர்களது நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் திடீரென்று ஏற்பட்ட மழையாலும், வெள்ளத்தாலும் நெற்பயிர் அழிந்ததுபோல அழிந்துபோகின்றது. விவசாயி-களின் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளையும், கடன் சுமையினால் ஏற்படும் உளவியல் தாக்கங்களையும், வறுமை அவர்களது வாழ்க்கையில் தொடர்கதையாக அமைவதையும் இக்கதை விளக்குகின்றது.

இக்கதை ராமு பாற்கஞ்சி கேட்பதோடு ஆரம்பித்து, அவ்வாறே முடிவடைவதும் கவனிக்கத்தக்கதாகும். கதையோட்டத்தின் இடையில் முருகேசனின் கனவு விபரிக்கப்படுகின்றது. வறுமையிலிருந்து அக்குடும்பம் விடுதலை பெறுவது என்பது கனவுதான் என்பதை இக்கதை உணர்த்து-வதாகக் கருதலாம்.

ஏழைக்குடும்பத்தின் நிறைவேறாத ஆசைகளை 'பாற்கஞ்சி' என்னும் இக்கதை மூலம் சி.வைத்தியலிங்கம் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார். ஏழை விவசாயக் குடும்பங்களின் எதிர்பார்ப்புகள் எத்தனையோ நிறைவேற முடியாமல் மண்ணாகி விடுகின்றன. ஏமாற்றத்தின் இயல்புகளை அன்றாட நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி 'பாற்கஞ்சி' என்னும் தலைப்பில் ஆசிரியர் கதையைப் படைத்திருப்பது நயக்கத்தக்கதாகும். 'பாற்கஞ்சி' என்னும் கதை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாளைக்குப் பாற்கஞ்சி தருவியாம்மா....." என்ற வினாவிலே தொடங்கி, காமாட்சியின் "நாளைக்கு....." என்னும் விடையுடன் முடிவடைகின்றது. இக்கதையில் வரும் ராமு, முருகேசன், காமாட்சி என்னும் பாத்திரங்கள் மூன்றும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றமுடியாமல் ஏமாற்றமடைகின்றனர்.

இக்கதையில் வரும் பாத்திரங்கள் பற்றி தனித்தனியாக நோக்குவோம்.

**ராமு**

இவன் நாளைக்குப் பாற்கஞ்சி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பிலே இருக்கும் பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளான். இறுதிக்கட்டம் "நாளை....." என்ற ஏமாற்றத்தோடு முற்றுப்பெறுகின்றது.

**முருகேசன்**

இவன் நீண்ட நெற்கதிர்களைத் தன் கையினாலே அளந்து பார்த்து பின்வருமாறு காமுவுக்குக் கூறி ஆசைப்படும் பாத்திரமாகச் சித்திரிக்கப் பட்டுள்ளான். "போனவருடம் மழையில்லாமல் சப்பையும் சாவியுமாய்ப் போயிருந்தது. காமு, அதோ பார்! இந்த வருடம் கடவுள் கண் திறந்திருக்-கிறார்" எனப் பின்னர் நடக்கப் போகும் சம்பவத்தை அறியாதவனாய்க் கூறுகின்றான். நெல் அறுவடைக்குப் பின் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு கருப்பன் செட்டி கடனைத் தீர்த்துவிடலாம்" எனவும், "நெல்லு ஒரு வருடத்திற்குச் சோத்துக்குக் குறைவு வராது" என்றும், எங்க ராமனுக்கு ஒரு சோடிக் காப்பு வாங்கணும்" என்றும் திட்டமிடுகிறான். அறுவடைக்கு நாள் குறிப்பதும், அருவிவெட்டக் கத்தியைக் கூராக்குவதும், ஆள் அழைப்பதும் அவன் எதிர்பார்ப்பாக அமைந்து இறுதியில் ஏமாற்றமடைகின்றான். கதைப் போக்கின் இடையில் இவன் கனவு காண்பதும் அதன் பின்னர் வாழ்க்கையே கனவாக மாறுவதும் இவன் வாழ்க்கையில் ஏற்படும் ஏமாற்றங்களாகும்.

**காமாட்சி**

காமாட்சி என்ற பாத்திரத்தினூடாக இவள் அறுவடைக்கு நாள் கேட்பது, களஞ்சிய அறையினுள் கோலமிடுவது, ஒட்டியாணம் வாங்க ஆசைப்படுவது எல்லாம் மழையினாலே மண்ணாகி ராமுவின் ஆசையைக்கூட நிறைவேற்ற முடியாமல் போயிருப்பது போன்ற அம்சங்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன. வறுமைநிலையை அடைந்தவர்களுக்கு தெய்வமே துணை என்பது முருகேசனின் "கடவுள் காப்பாற்றுவார்" என்ற கூற்றிலிருந்தும், "தாயே இதற்கிடையில் ஒரு விக்கினமும் வந்திடப்படாது" என்ற காமாட்சியின் கூற்றிலிருந்தும் எடுத்துக் காட்டப்படுகின்றது.

ஏமாற்றத்திலே ஏழை விவசாயக் குடும்பத்தின் வாழ்வு செல்கின்றது என்பதை சி.வைத்தியலிங்கம் கிராமத்து வட்டார வழக்குச் சொற்களைக் கையாண்டு வெளிப்படுத்தியிருப்பது கதையானதாகும். எனவே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கதையில் வயல் அறுவடைக்குப் பின்னே என்னென்ன ஆசைகளை எல்லாம் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்புகளையும் இவ் எதிர்பார்ப்புகள் ஏமாற்றத்தில் முடிவடைவதையும் எம்மால் அறியக்கூடியதாக உள்ளது.

இக்கதையில் வைத்தியலிங்கத்தின் மொழிநடை சரளமான போக்கில் செல்கிறது. இக்கதையில் வரும் பாத்திரங்களின் உரையாடல்கள் இயல்பான பேச்சுவழக்கிலே அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

# ஆர். ஷண்முகசுந்தரம்

தமிழ்நாட்டில் வடமேற்கிலுள்ள பெரியார் மாவட்டம் (முன்பு கொங்கு நாடு) கீரனூரில் 1917 இல் எம்.இரத்தினாசல முதலியார், ஜானகி அம்மாள் ஆகியோருக்கு மகனாக ஆர்.ஷண்முகசுந்தரம் பிறந்தார். ஷண்முகசுந்தரம் ஐந்தாம் வகுப்பு வரை சொந்த ஊரிலேயே கல்வி கற்று, அதன்பின் திருப்பூர் உயர்நிலைப் பள்ளியில் படித்து தன் படிப்பை முடித்துக்கொண்டார். பள்ளிப் படிப்பில் பிரகாசிக்கவில்லை. சென்னையில் தியோலொஜிகல் ஹைஸ்கூலில் ஆறாம் பாரம் வரைக்கும் படித்தார். ஹிந்தி மொழியையும் கற்றுக் கொண்டார். இவருடைய சகோதரன் திருஞானசம்பந்தம். இவரும் மொழியாற்றல் நிறைந்தவரே. இவர் 'ஹிந்துஸ்தான்' என்று சென்னையில் இருந்து வெளியாகிய பத்திரிகையின் உதவி ஆசிரியராகப் பணியாற்றியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. தாளாப்பாளையம் என்னும் கிராமத்தைச் சேர்ந்த வள்ளியம்மையை மணம்செய்து இல்லறத்தில் இணைந்தார். ஷண்முக சுந்தரம் தனது அறுபது வயதுவரை இலக்கியத்திற்காகவே வாழ்ந்தார். 1977ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார்.

இளவயதிலேயே ஷண்முகசுந்தரத்திற்கு காங்கிரஸ் கட்சியின்மீது ஈர்ப்பு இருந்தது. கீரனூரிலேயே வாழ்ந்தாலும் பத்திரிகை, கதைகள், கட்டுரை, புராண இதிகாசங்களை படிப்பதிலும் தீவிர ஆர்வங்கொண்டார். 'மணிக்கொடி' பத்திரிகையில் அவருக்கிருந்த அபிமானம் அவர் சிறுகதை எழுதத் தூண்டு-கோலாயிற்று. இவர் முதன்முதலில் எழுதிய 'பாறைக்கருகில்' என்ற சிறுகதை 'மணிக்கொடி'யில் வெளிவந்தது. இதுவே அவருடைய படைப்புலக பிரவேசத்திற்கு வழிகாட்டியாயிற்று.

மணிக்கொடியில் இவரது எழுத்து வெளிவந்த பின்னர் ஷண்முகசுந்தரம் சென்னையில் வசிக்க ஆரம்பித்தார். இச்சந்தர்ப்பத்திலே திரு. கு.ப.ரா அவர்களினதும், ந.பிச்சமூர்த்தி அவர்களினதும் நட்பு கிடைத்தது. கு.ப.ரா. உடன் ஷண்முகசுந்தரம் கொண்ட நட்பு அவருடைய இலக்கிய வாழ்க்கை-யின் திருப்பு முனையாயிற்று. "நாகம்மாள்" என்னும் கிராமிய வாசனைவீசும் நாவலை எழுத முனைந்ததே கு.ப.ராவின் ஊக்கவித்தலினால் ஆகும்.

கிராமத்திலேயே வாழ்ந்து மணிக்கொடி காலத்தில் எழுதத் தொடங்கிய ஆர்.ஷண்முகசுந்தரம் தம் வட்டாரத்தில் கிராம வாழ்க்கையின் மாறுதல்கள் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமாக விவசாயிகளின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை மனித நேயத்தோடும் நடப்பியல் தன்மைகளோடும் சித்திரித்துக் காட்டினார். இந்த வகையில் வட்டார நாவல்களை தமிழில் முதன்முதலில் எழுதியவர் என்ற பெருமையும், வட்டார நாவல்களைப்பற்றி முதன்முதல் தமிழில் ஆராய்ந்தவர் என்ற பெருமையும் ஆர்.ஷண்முகசுந்தரத்திற்கு உண்டு.

இவரது நாவல்களில் கொங்கு வட்டாரத்தின் தன்மைகள், வாழ்வுக் கூறுகள் ஆகியவை எவ்விதப் புனைவுகளின் துணையுமின்றி இயல்பாக வெளிப்படும் முறையில் அமைந்துள்ளன. இவர் பிறந்த காங்கேயத்தை அடுத்துள்ள கீரனூரின் மண்வாசனையால் இவருடைய வாழ்க்கையும் கிராம மக்களுடன் இரண்டறக் கலந்துவிட்டது. எனவேதான் கிராம மக்களின் இன்ப துன்பங்கள், விருப்புவெறுப்புகள், பழக்கவழக்கங்கள், ஏற்றத்தாழ்வுகள், பேச்சு, செயல் வழக்குகள் அனைத்தையும் ஆழமாக உணர்ந்து அப்படியே எழுத்து ஓவியங்களாகப் படைக்கும் ஆற்றலை இயல்பாகப் பெற்றுவிட்டார்.

ஆர்.ஷண்முகசுந்தரம் இருபது நாவல்கள்வரை எழுதியுள்ளார். அவற்றுள் "நாகம்மாள்" (1942), "அறுவடை" (1960), "பூவும் பிஞ்சும்" (1961), "சட்டி சுட்டது" (1964), "அழியாக் கோலம்" (1965), "மாயத்தாகம்" (1965), "அதுவா இதுவா" (1966), "மனநிழல்" (1967), "சுாணாச்சுனை" (1968), "வரவேற்பு" (1969) பொன்ற நாவல்கள் குறிப்பிடத்தக்கன. மற்றும் "பனித்துளி", "மாலினி" போன்ற நாவல்களும் குறிப்பிடக்கூடியன.

இவர் முதன்முதல் எழுதியது "நாகம்மாள்" என்ற நாவல். இதனைத் தொடர்ந்து "பூவும் பிஞ்சும்" "பனித்துளி" ஆகிய நாவல் எழுதிவிட்டு 15 வருடங்கள் வரை எந்த நாவல்களையும் எழுதவில்லை. பின்னர் 1959 இல் இருந்து 15 நாவல்கள் வரை எழுதியுள்ளார். அவற்றுள் "அறுவடை", "சட்டி சுட்டது" என்ற நாவல்கள் நல்ல தரத்தை எட்டின.

ஷண்முகசுந்தரத்தின் நாவல்களில் கொங்கு நாட்டுப் பேச்சுவழக்கு கவிதை உணர்ச்சியுடன் கையாளப்பட்டுள்ளது. தமிழில் "ரீஜனல் நாவல்" என்று சொல்லக்கூடிய பிரிவை ஆரம்பித்து வைத்த முதல் நாவலாசிரியர் இவர்தான். அரசியல் ரீதியில் இந்தியப் பிரிவினை பற்றிப் பேச்சு எழுந்து அடிபட்டுக் கொண்டிருந்த காலத்தில் ஒரு குடும்பத்தில் பாகப்பிரிவினையும் அது சம்பந்தமாக எழக்கூடிய ஆட்சேபங்களையும் விவரிக்கின்ற "நாகம்மாள்" என்கின்ற இவரின் நாவல் தமிழில் மிகச் சிறந்த நாவல்களில் ஒன்று. கிராமிய வாழ்வின் தோற்றங்களும் மன இயல்புகளும் அவலமும் ஆசிரியரால் தனது 22 வயதிலேயே உணரப்பட்டு எழுதப்பட்டுள்ளது.

ஷண்முகசுந்தரத்தின் "அறுவடை" என்னும் நாவல் பொருந்தா மணத்தை கண்டிக்கின்றது. "பூவும் பிஞ்சும்" என்ற நாவல் ஊர் ஒற்றுமையைக் காதல் மூலம் உருவாக்கலாம் என்று உணர்த்துகின்றது. "சட்டி சுட்டது" என்ற நாவல் 'பெத்தமனம் பித்து பிள்ளைமனம் கல்லு' என்பதை விளக்குகின்றது. இந்நாவலில் கூட்டுக்குடும்பச் சிதைவுதான் கதையாகி உள்ளது. பிள்ளைகளின் தவறான போக்குப் பற்றியும் சொல்லப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அழியாக் கோலம்" என்ற நாவல் குடும்பங்களில் ஏற்படும் பிரச்சனை-களை விளக்குகின்றது. "மாயத்தாகம்" என்ற நாவலில் கிராமத்து பொருளா-தாரச் சிக்கல் விளக்கப்பட்டுள்ளது. இவரது "அதுவா இதுவா" என்ற நாவல் கிராம வாழ்வின் மாற்றங்களைச் சித்திரிக்கின்றது. "மனநிழல்" என்ற நாவல் ஒரு காதல் கதை. இவரது "தனிவழி" நாவல் கிராம வாழ்வு நகர வாழ்வால் ஏற்படும் மாற்றத்தை காட்டுகின்றது. ஷண்முகசுந்தரத்தின் "காணாச்சுனை" என்ற நாவல் கிராம மக்களின் நகர ஈடுபாட்டினையும் கூட்டுக்குடும்பச் சிதைவையும் எடுத்துக் காட்டுகின்றது.

ஷண்முகசுந்தரத்தின் கிராமங்கள் நிஜமானவை. அவை பெரும்பாலும் அவர் பிறந்த கீரனூர் இல்லாவிட்டால் சிவியார் பாளையம், வெங்கமேடு. வரண்ட நீர்நிலைகள், அனல்காற்று, சிற்சில இடங்களில் ஏதோ சிறிது பசுமை பருத்தி அல்லது சோளம் அல்லது புகையிலை. ஆண்களும் பெண்களும் தோட்டத்தில் வேலை செய்வது. நாச்சி, கெட்டியப்பன், சின்னப்பன், முத்தாயா, வீராயி, ராமாயி இப்படிப்பட்ட பெயர்கள் இவரின் நாவல்களில் இடம்பெற்றுள்ளன.

"இதுவரை எழுதிய நாவல்களில் "மாயத்தாகம்" எனக்குப் பரிபூரண திருப்தியையளித்தது. உள்ளத்தை வேகவைத்துக் கொண்டிருந்த வேட்கை, உள்ளுக்குள் கும்மாளமிட்ட உவகை, தாபம், தவிப்பு, மகிழ்ச்சி, மனோகரம் யாவுமே இதனுள் மண்டிக் கிடக்கின்றது. சொந்த அனுபவங்கள் சுகமாக இழைந்து சொல்வதனால் அதிலே ஒரு தனி இன்பம்" என்று சொல்கின்றார் ஆர்.ஷண்முகசுந்தரம்.

ஆர்.ஷண்முகசுந்தரம் தமிழில் நாவல்கள் எழுதியதோடு மட்டும் நில்லாது வங்காள நாவல்கள் சிலவற்றையும் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்துள்ளார். வங்காளம், ஆங்கில மொழி நாவல்களை மொழிபெயர்ப்புச் செய்துள்ளார். இவர் ஏறத்தாழ நூற்றிருபது நூல்களைத் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்துள்ளார். அநேக வங்க நாவல்களை மொழிபெயர்த்துள்ளார். இவர் முதன்முதலாக சரத்சந்திரரின் 'அசலா' என்னும் நாவலை மொழிபெயர்த்தார். மற்றும், 'சந்திரநாத்', 'கிரகதாகம்' 'ஜமீன்தாரிணி' என்னும் வங்க நாவல்களை தமிழில் மொழிபெயர்ப்புச் செய்துள்ளார். அத்துடன் அமெரிக்க எழுத்தாளரான ஜக்ஷாபர் எழுதிய 'The Pioneers' என்னும் சிறுகதைத் தொகுதியை "முன்னோடிகள்" எனத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

அத்துடன் 'புதுப்புனல்' என்னும் நாடகநூலையும் வெளியிட்டார். இந்நூல் முதுகலைப் படிப்பிற்குப் பாடநூலாகத் தெரிவானது. இவர் 'கானல் நீர்' என்ற திரைப்படத்திற்கு வசனமும் எழுதியுள்ளார். அத்துடன் கவிதைகள், அரசியல் விமர்சனம் போன்றவற்றையும் எழுதியுள்ளார்.

ஷண்முகசுந்தரத்தின் ஆரம்பகால எழுத்துலகப் பிரவேசத்திலேயே 'சரத் நினைவு நாள்' பரிசைப் பெற்றார். 'ஆரோக்கிய நிகேதன்' என்ற வங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலின் தமிழ் மொழிபெயர்ப்புக்கு சாகித்ய அக்கடமி விருது கிடைத்தது. அதே இலக்கியத்திற்கு 'ரவீந்திரன் ஸ்மார்க்' என்ற விருதும் கிடைத்தது.

1969இல் கோயமுத்தூரில் ஷண்முகசுந்தரத்தை கௌரவிப்பதற்காக இலக்கிய விழா ஒன்று நடைபெற்றது. தைமாதம் 14 தொடக்கம் 16 வரை நடைபெற்ற இவ்விழாவில் முன்னணி இந்திய எழுத்தாளர்கள் பலரும், தமிழ் படைப்பாளிகள், மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இலக்கியத்தின் பன்முகப்பட்ட வடிவங்களிலும் தன் முத்திரையைப் பதித்துள்ள ஆர்.ஷண்முகசுந்தரத்தின் படைப்புகள் காலத்தால் அழியாது போற்றப்படும் இலக்கியப் பொக்கிஷங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18

# நாகம்மாள்

## ஆர். ஷண்முகசுந்தரம்

## 1

சந்தைக் கூட்டம் மெதுவாகக் கலைய ஆரம்பித்தது. சோளத் தட்டுக்களை கடித்து அசைபோட்டுக்கொண்டிருந்த காளைகள் மணிகள் ஒலிக்க எழுந்து நின்று வண்டியில் பூட்டத் தயாராயின. சக்கரத்தடியில் கிடந்த சாக்குகளை எடுத்து சிலர் தட்டினர். வாங்கி வந்த சாமான்களை வண்டியில் சிலர் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். சந்தைக்குள்ளே நிழலுக்காக முளையடித்துக் கட்டியிருந்த துணிகளையும், விற்பதற்குப் பரப்பியிருந்த பண்டங்களையும் அவரவர் பரபரப்பாக எடுத்தனர். பெண்களும் ஆண்களும் தங்கள் தங்கள் கிராமத்துப் பாதை வழியே வேகமாக நடக்கலானார்கள். இரண்டொரு உள்ளூர்காரச் சிறுவர்களும் அங்குமிங்கும் எதையோ தேடுவதைப் போல் திரிந்துகொண்டிருந்தார்கள்.

வெங்கமேட்டில் வாரத்திற்கு ஒருமுறை புதன்கிழமை சந்தை கூடும். சுற்று வட்டாரத்திற்குச் சுமார் பத்து இருபது கிராமத்தவர்கள் வீட்டுச் சாமான்கள் வாங்குவதற்கு இங்குதான் வருவது வழக்கம். உப்புத் தொட்டுக் கற்பூரம் வரை சாதாரணமாக எல்லாச் சாமான்களுமே அங்கு கிடைக்கும். அந்தப் பக்கத்துக்கே பெரிய சந்தை அதுதான்.

பிரதிவாரமும் 'எனக்கு முந்தி, உனக்கு முந்தி' என்று பொழுது சாய்வதற்கு முன்பே சகலரும் பயணம் கட்டிவிடுவார்கள். ஆனால், இந்தவாரம் 'சிவியார் பாளையத்தில்' சாமி சாட்டியிருந்ததால் சந்தையிற் கூட்டம் அதிகமாவதோடு, இருட்டும்வரை அவர்கள் ஊர் போவதையே மறந்து வியாபார முசுவில் நேரம் பண்ணிக் கொண்டிருந்து விட்டார்கள்.

வெங்கமேட்டிற்கு மேற்கில் மூன்றாவது மைலில் இருக்கிறது சிவியார் பாளையம். ஆற்றுப்பாசனம் அதிகமில்லாவிட்டாலும் நீர் கொழிக்கும் ஊர் அது. தோட்டக் கிணறுகளில் எட்டித் தொடுமளவு தண்ணீர் எந்தக்காலத்திலும்; ஊரைச் சுற்றி பூக்குலுங்கும் பசுமையான மரங்கள், கண்ணுக்கினிய காட்சிகளே நாலா பக்கங்களிலும் நிறைந்திருந்தன. வரட்சி என்பது அங்கு வெகுதூரத்துக்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவியார் பாளையத்திலிருந்துதான் இன்று அனேகர் வந்திருந்தார்கள். பொங்கல் கொண்டாடப்போகும் ஆனந்தத்தில் வெகு குதூகலமாகச் சம்பாஷித்துக்கொண்டே அவர்கள் நடந்தார்கள்.

அவர்கள் போய்க் கொண்டிருந்த இட்டேரி மிகக் குறுகலானது. அத்தோடு குண்டு குழி நிறைந்து கரடுமுரடானது. இந்தத் தடத்தில் நல்ல பழக்கமில்லாது புதிதாக நடப்பவர்கள் அதுவும் அந்த மசமசப்பான நேரத்திலே, ஒரு எட்டு அப்பாலே எடுத்து வைக்க முடியாது. வேண்டுமென்று நாம் ஒரு நாளைக்கு அந்தக் கஷ்டமான பரீட்சையில் இறங்கினாலும், கல்லும் முள்ளும் நம் பாதத்தைப் பதம் பார்க்காது விடமாட்டாது. இப்படிப்பட்ட இக்கட்டான பாதையில் அப்பெண்கள் எளிதாகச் செல்வதைப் பார்த்தால் நமக்கெல்லாம் ஆச்சரியமாகத்தான் இருக்கும். வரிந்து கட்டின மாராப்புச் சேலையுடன், நேராக நிமிர்ந்து தலையில் வைத்திருக்கும் கூடை விளிம்பில் இரு பக்கங்களையும் உயர்த்திப் பிடித்து ஒய்யாரமாக அவர்கள் பேசியவாறே சென்றனர். வரிசையாக ஒருவர் பின் ஒருவராக எறும்புச் சாரை போல் அவர்கள் போகும் தினுசு வெகு அழகாயிருந்தது.

அப்போது மணி அடித்தாற்போல் ஒரு குரல் எழுந்தது. முன்பின் போகிற பத்து முப்பது பேரும் 'கப்'பென்று பேச்சை விட்டனர். "நா எல்லா வாங்கியும் ஒண்ணே மறந்திட்டேனே!" என்று கணீரெனும் ஒரு குரல் எழுந்தது.

யார் இந்த வெண்கலத் தொண்டையில் பேசியது! பெண்ணுக்கா பிரமன் இவ்விதமான குரல் மகிமையை அளித்தான். இந்தப் பெண் நாகம்மாள். கணவன் இறப்பதற்குப் பத்து வருஷத்துக்கு முன்பிருந்தே ஒரு ராணி போலவே நடந்து வந்திருக்கிறாள் என்றும், பிறருக்கு அடங்கி நடக்கும் பணிவும் பயமும் என்னவென்றே அவள் அறிய மாட்டாள் என்றும் இப்போது குறிப்பிட்டாலே போதும்.

"இந்தப் பாழாய்ப்போன ஊட்டிலே நா நெனச்சுப்பாத்து ஒண்ணு வாங்கினா உண்டு. இல்லாட்டி நாளைக்கி இதேங்கிற சமயத்திலே அதுக்கா வண்டி கட்டிக்கிட்டுப் போறது" என்றாள் நாகம்மாள்.

அது என்ன? எதை மறந்துவிட்டாள் என்பதைக்கூடக் கேட்காமலே இரண்டொருத்தி 'ஆமாம்' என்று ஆமோதித்தனர். ஒருவேளை என்ன என்று விசாரித்தால் "கொட்டைப்பாக்கில் சின்னரகம் வாங்காதது" போன்ற பதில் கிடைக்கும் என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தது போலும்!

இந்தச் சங்கதி ஒன்றும் காதில் போட்டுக்கொள்ளாது தன் பாடு, பரப்பைப் பற்றியே யோசித்துக்கொண்டு வந்த ஒரு பெரியவள், "அந்த வெந்தயக்காரன் அரைக்காசு சொல்லி மூணரைத் துட்டுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டானே! நான் மூணு துட்டுக்கே கேக்காது போனம் பாத்தியா?" என்று தனக்குத் தானே வாய்விட்டுச் சொல்லிக் கொண்டாள்.

அதைக் கேட்கவும் நாகம்மாள் கூடச் சிரித்துவிட்டாள்.

"எல்லாம் இப்படித்தான் ஏமாந்தா தலையிலே கல்லைப் போடற நாளாத்தான் இருக்குது. யாரை நம்பரது? யாரை உடர்ரது? என்று உபதேசம் செய்யும் பாணியில் ஒருத்தி தொடங்கினாள்.

"தூர ஏம் போவோணும்?" என்று நாகம்மாள் தனக்கு முன் சொல்லியவளின் பேச்சை அங்கீகரிக்கும் விதமாய் "என்னையே எடுத்துக்குவோம்" என்று ஆரம்பித்தவள் ஏனோ சடக்கென, உதட்டைக் கடித்துக்கொண்டு நிறுத்திவிட்டாள்.

இந்த சமயத்தில் பக்கத்துக் கிழுவமர வேலையைத் தாண்டி நாலைந்து பேர் ஓர் முயலைத் துரத்திக் கொண்டு ஓடிவந்தார்கள். திடுதிடுவென வருவது யாரெனத் தெரியாமல் இரண்டொரு பெண்கள் சத்தமிட்டனர். நாகம்மாள் போன்றவர்கள் 'அட மொசல் எந்தச் சந்திலே போச்சோ! இங்கே ஏ வந்து இப்படி ஏறறீங்க?' என்று கூறவும், சந்தடி மட்டுப்பட்டது. ஓடிவந்த ஆட்களும் ஏமாந்த முகத்தோடு நின்று விட்டார்கள்.

இக்காட்சிக்குப் பின்னர் முயல்களைப் பற்றி அங்கு கிளம்பிய கதைகள் எல்லாம் நமக்கு வேண்டாம். எப்படியோ ஊர்வந்து நாகம்மாளும் தன் வீடு போய் 'ச்சோ' வென்று சலிப்போடு திண்ணையில் கூடையை இறக்கி வைத்தாள். கீழ் வானில் நிலவும் பூத்தெழுந்தது.

## 2

நாகம்மாளின் நான்கு வயதுக் குழந்தை முத்தாயா நிலாவெளிச்சத்தில் வாசலில் விளையாடிக்கொண்டிருந்தாள். தன் தாயைக் கண்டவுடன் "எனக்கு என்னம்மா வாங்கியந்தே?" என்று கேட்டுக்கொண்டே ஓடி வந்தாள். முத்தாயாளுக்காக எத்தனையோ சாமான்கள் தாயார் வாங்கி வந்தாள். பழம், பொரிகடலை, முறுக்கு, மிட்டாய் முதலிய தின் பண்டங்கள். ஆனால், நாகம்மாள் இப்போது அவைகளையெல்லாம் எடுக்காமல் மேலேயிருந்த முறுக்கை மட்டும் ஒடித்துக் குழந்தையிடம் கொடுத்தாள். முறுக்கைப் பார்க்கவும் குழந்தைக்குப் பரமானந்தம் உண்டாயிற்று. அதைக் கடித்துக் கொண்டு ஆனந்தக் கூத்தாடியதால் பாதி முறுக்கு கைநழுவிக் கீழே விழுந்தது கூடக் குழந்தைக்குத் தெரியவில்லை. "உங்க சின்னையன் இன்னும் வல்லையா?" என்று நாகம்மாள் தன் மகளிடம் கேட்டாள்.

அப்போது குழந்தைக்கு இருந்த சந்தோஷத்தில் சின்னையனே எதிரில் வந்திருந்தாலும் கண்ணெடுத்துப் பார்த்திருக்குமா என்பது சந்தேகமே. தாயின் கேள்வியை கவனியாது முறுக்கைச் சுவைப்பதிலேயே முத்தாயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூழ்கியிருந்தாள். "நல்ல சின்னையன்!" என்று நாகம்மாள் சப்புக் கொட்டினாள்.

இவள் இப்படிச் சலித்துக்கொள்ளும் சின்னையன் யார் என்பதைப் பற்றி இரண்டு வார்த்தை சொல்லுவது அவசியம்.

நாகம்மாளுடைய கணவனுடன் பிறந்த தம்பிதான் சின்னையன் என்கிற சின்னப்பன். சின்னப்பனேதான் இப்போது குடும்பத் தலைவன். அநேகமாக நாகம்மாளுடைய அரசுதான் வீட்டில் நடக்கிறது என்றாலும் சின்னப்பனுக்கும் அவனுடைய மனைவி ராமாயிக்கும் இதுவரை எவ்விதமான தீங்கும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. சின்னப்பனைக் குழந்தை முத்தாயா 'சின்னையன்' என்று கூப்பிடுவதால் நாகம்மாளும் அவனை அந்தப் பெயரிலேயே குறிப்பிடுவது வழக்கம்.

வெளியே 'கடக்' என்று சத்தம் கேட்டது. "வண்டி வந்திட்டுது போல் இருக்குதே" என்று நாகம்மாள் திண்ணையிலிருந்து எழுந்தாள்.

இத்தனை நேரம் உள்ளே வேலை செய்துகொண்டிருந்த ராமாயி "அரிசி வண்டி இதுக்குள்ளே வந்திருமாக்கா" என்று மெதுவாகச் சொல்லிக் கொண்டு வந்தாள். "சரி, அடுப்பு வேலை எல்லாம் ஆச்சா?" என்று நாகம்மாள் கேட்டாள்.

ராமாயி பொழுது போவதற்கு முன்பிருந்தே காரியம் செய்ய ஆரம்பித்திருந்தும் ஒன்றும் முடிந்தபாடில்லை. ஆனால் 'இல்லை' என்று சொன்னால் 'எக்காளமாக' ஏதாவதொன்று சொல்வாள் என்பது தெரியும் ஆதலால் "நீ தண்ணீர் வாத்துக்கிறதுக்குள்ளே ஆகாதையா போயிருது, எந்திரியக்கா" என்றாள்.

"நா மேலுக்கு ஊத்திக்கிறதுக்குள்ளே அந்த முறத்திலிருக்கிற அரிசி மாயமா வெந்து போயிருமா? பேச்சைப் பாரு பேச்சை! மொதல்லே அரிசி கழுஞ்சு ஒலையிலே போடு. சோறு ஆக்கியானதுக்கப்புறம் வேறே வேலெ பார்க்கலாம்" என்று நாகம்மாள் சொன்னாள்.

ராமாயி பதில் பேசாது முறத்திலிருக்கிற அரிசியை எடுத்துக்கொண்டு உள்ளே போனாள். நாகம்மாள் கூப்பிட்டு "இத்தனையுமா போடப் போறாய்?" என்றாள்.

"ஆமாக்கா நாம நாலு சீவனுக்கு இதுதா வேண்டாமா!"

"நல்லாக் கணக்குப் போட்டாய்! இப்படிப் பார்த்தா வீடு வாசலாயிறாதா? உன்னையும் உன்ர ஊட்டுக்காரரையும் என்னையும் இந்தப் பூப் பாலனையும் ஒரே கணக்கிலே சேத்தினையே! இந்தக் கொழந்தை காப்பிடி தின்னுமா?"

"சரி, இரண்டு வட்டச் சோற்றை எடுத்துப் போடட்டாக்கா?" என்று கேட்டுக் கொண்டு ராமாயி திரும்பினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகம்மாள் சட்டென்று "சுண்டைக்காயிலே வெக்கிறது பாதி கடிக்கிறது பாதி என்ன? போட்டதை ஏ எடுக்கிறாய்? மிச்சமிருந்தா காலம்பர பழையது ஆகுது, வேலெயப் பாரு" என்றாள்.

"அதோடு சாணித் தண்ணி போட்டு இந்தக் கூடையை உள்ளே எடுத்து வை" என்று கட்டளையும் இட்டாள்.

சாணித்தண்ணீர் போட்டுவிட்டால் எல்லாத் 'தீட்டும்' போய்விட்டதாக அர்த்தம். சந்தையிலிருந்து வந்து சாமான்களை உள்ளே கொண்டு போகுமுன் சாணியை நீரில் கலக்கி அதைச் சாமான் நனையாமல் தெளித்து விடுவது, சாமான்களுக்கு மட்டும் சாணித் தண்ணீரைப் போட்டுக் கொள்வதோடு சிலர் தங்களுக்கும் போட்டுக் கொண்டு குளிக்காமலே சும்மா இருந்து விடுவதும் உண்டு. ஆனால் நாகம்மாளைப் போன்றவர்கள் அப்பேர்ப்பட்டவர்களை ரொம்பவும் இழிவாகக் கருதுவார்கள். அந்த மாதிரி விஷயங்களை நாகம்மாள் வரிந்து கட்டிக்கொண்டு பாட்டுப் பழமொழிகளுடன் பேச ஆரம்பித்து விட்டால் கிட்டத்தில் இருப்பவர்களுக்குப் பொழுது போவதே தெரியாமல் பேசிக்கொண்டே இருப்பாள்.

## 3

பத்து வருஷமாக கொண்டாடாதிருந்த மாரியம்மன் உற்சவம், இந்த வருஷம் கொண்டாடப்படுகிறது. கற்கள் கீழே விழுந்தும் வங்கு பறித்தும் க்ஷீணதசையடைந்திருந்த கோயிலின் சுவர்கள் மண்ணும் சுண்ணாம்பும் அடிக்கப்பட்டு பளிச்சென்று இருந்தன. நாலு பக்கத்தின் உச்சியிலும் வேப்பிலைக் கொத்துக்கள் செருகப்பட்டு இருந்தன. கோவிலுக்கு முன்பாக தென்னோலையிலே வேயப்பட்ட பசும் பந்தல் மிக அழகாய் இருந்தது. பந்தல் கூரையின் அடிப்புறத்தில் வண்ணான் மாத்து கட்டப்பட்டிருந்தது. சுவாமியின் சந்நிதானத்திற்கு நேர் எதிராக வெளிப் புறத்தில் பூவோடு வைக்கும் முக்கோணப் பாச்சா மரக்கம்பம் நடப்பட்டி-ருந்தது. கம்பத்துச்சியில் மஞ்சள் துணியில் நவதானியங்களுடன் ஒரு செப்புக் காசும் வைத்துக் கட்டியிருந்தார்கள். ஊர்க் கிணற்றுப் பாதை, சருகு சத்தைகள் ஒதுக்கிச் சுத்தமாக்கப்பட்டிருந்தது. பாதை பூராவுமே தண்ணீர் தெளித்து 'குளுகுளு' எனச் செய்திருந்தார்கள்.

ஊர் முழுவதும் இதே பேச்சுத்தான். ஒவ்வொரு வீட்டிலும் சபைகள் கூடி அடுத்தநாள் எடுத்துச் செல்கின்ற மாவிளக்குத் தட்டங்களைப் பற்றியும், தங்கள் வீட்டுக்கு வந்திருக்கும் விருந்தினருக்குச் செய்யப் போகும் பலகாரங்களைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்தார்கள். மணியகாரரர் வீட்டில் அன்று மத்தியானம் ஊர்ப் பிரமுகர்கள் எல்லாரும் கூடி இருந்தார்கள். வெகுகாலமாக இருந்துவந்த விபூதித் தகராறையும் இப்போது ஒத்திவைத்து விட்டார்கள். பூஜைபண்ணி பண்டாரம் விபூதியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்தினர்களுக்குக் கொடுத்துவிட்டு விபூதித் தட்டை கீழே வைத்து விடுவது, பின்பு இஷ்டப்பட்டவர்கள் யார் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது. மணியகாரர் தலையாரியைக் கூப்பிட்டு, எல்லோருக்கும் தாகத்திற்கு இளநீர் கொண்டுவரும்படி சொன்னார். அவன் சாலையோரத்தில் காலையிலே வெட்டிக் குவித்திருந்த இளநீர்க்காயை எடுத்து வந்து அங்குள்ளவர்களுக்கு எல்லாம் சீவிக்கொடுத்துக் கொண்டிருந்தான்.

அதே சமயம் பொன்ன பண்டாரத்தின் வீட்டிலும் அந்த மாதிரித்தான் ஒரு காட்சி நடந்து கொண்டிருந்தது. அங்கு நாலைந்து வீட்டுப் பண்டாரங்களும், உள்ளூர் தோட்டி தலையாரிகளும், பழங்காலத்தில் பூஜை செய்து வந்த முறை மறைந்து ஜனங்கள் ஆத்தாளை மறந்ததால், அவள் காட்டும் கோபம் இப்படியிருக்கிறதென்றும், இதை விக்கினமின்றி நிறைவேற்றுவதோடு, தங்களுக்கு இத்தனை நாளாக நிறுத்தி வைத்திருந்த வரவினங்களோடு சேர்த்துக் கொஞ்சம் அதிகமாகவே செய்யச் சொல்லி மணியகாரரிடம் கேட்பதென்றும், முடிவு செய்தார்கள். இதேமாதிரித்தான் பட்டியிலும், களத்திலும், காட்டிலும் பெரியவர்களும், சின்னவர்களும் பொங்கலைப் பற்றியே பேசிக்கொண்டு இருந்தார்கள்.

அன்று இரவு ஏழு மணிக்குத் தப்பட்டைச் சத்தம் 'டிம்டிம்' என்று 'தெரப்பாக' எழுந்தது. பத்துப் பதினைந்து பறையர்கள் கம்பத்தடியில் உட்கார்ந்து அடித்துக் கொண்டிருந்தார்கள். அந்தச் சத்தத்தைக் கேட்டவுடன் சாப்பாட்டைப் பாதியிலே வைத்துவிட்டுக் குழந்தைகள் ஓடி வந்தனர். பெரியவர்களும் அவசர அவசரமாகச் சாப்பிட்டுக் கொண்டி-ருந்தார்கள். பெண்களெல்லாம் மாலையிலே தலைக்குத் தயிர் தேய்த்துக் குளித்து முகத்துக்கு மஞ்சள் பூசி மினுமினுப்பாக்கிக் கொண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். வீட்டிற்குள் அடைந்து கிடக்க முடியாமல் அவசர அவசரமாகச் சாதம் பரிமாறிக் கொண்டிருந்தனர். பூவோட்டில் நெருப்பு 'தகதக'வென்று எரிந்து கொண்டிருந்தது. நாச்ச பண்டாரம் விரதம் கலையாமல் பத்துப் பழங்களையும் ஒரு படி பாலையும் குடித்துவிட்டு, புகையிலையை வாயில் அடக்கிக்கொண்டு பயபக்தியுடன் சுவாமியை எண்ணையாலும், தண்ணீராலும், பாலாலும் ஆனந்தமாக அபிஷேகம் செய்து கொண்டிருந்தான். நெய் விளக்குகள் அம்மன் பக்கத்திலே எரிந்து கொண்டிருந்தன. கன்னங்கரேலென்று கறுத்திருந்த அம்மனுக்கு இடுப்பளவு புடவை சுற்றி கண்ணுக்கு கண்ணடக்கமும், இடைக்கு ஒட்டியாணமும் இன்னும் சில நகைகளும் அணிந்திருந்தார்கள். அந்த அம்மனின் தோற்றம் அங்கு பார்த்துக் கொண்டிருந்தவர்களின் மனதில் அபார பக்தியை ஏற்படுத்துவதாய் இருந்தது. பார்க்கப் பார்க்கச் சனங்கள் வந்து கூடி விட்டார்கள். 'கொட்டுங்கடா' என்ற சத்தம் கேட்டது. பறையர்கள் 'டண.. டண்.. டணக்...' என்ற இசையில் குச்சியைத் தம்பட்டத்தில் செலுத்தினார்கள். மனதிலே ஒரு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஏற்படுத்துவதாய் இருந்தது அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளின் இசை. 'ஜல் ஜல்' என்று சதங்கைகள் ஒலிக்கக் கம்பத்தைச் சுற்றிச் சிறுவர்களும் பெரியவர்களும் ஆடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்கள் ஆட்டத்திற்குத் தகுந்த பாட்டுகள் பாடிக்கொண்டே கம்பத்தைச் சுற்றி வந்தார்கள். வயதானவர்களும் பெண்களும் கோயில் ஓரத்திலும், அரச மரத்தடியிலும் நின்றுகொண்டிருந்தனர். அந்த ஆட்டக் காரர்களிலே ஒருவன் அடிக்கடி பறையர்கள் அடிப்பதைக் குற்றம் குறை சொல்லி வந்தான். அதிகாரம் தொனிக்கும் குரல், உயரத்திற்கேற்ற பருமன், உருட்டிக் கட்டின வேஷ்டி, சரியான தலைக்கட்டு. அவனைக் கண்டு கூட இருப்பவர்கள் சந்தோஷம் கொள்வதும், அவன் அதட்டும்போது 'கொல்' என்று சிரிப்பதுமாய் இருந்தார்கள். கம்பத்திற்கு எதிரில்தான் அரசமரக் கட்டிடம். அதன்மீது ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்தார். அவருக்கு வயது அறுபது எழுபது இருக்கும். அவர்தான் ஊர்ப் பண்ணாடியின் தகப்பனார். வயது அதிகமாகி கண் பார்வை மங்கிவிட்ட போதிலும் ரொம்ப உற்சாகமாவே அவைகளை ரஸித்துக் கொண்டிருந்தார். அங்கே போகிற வருகிறவர்களை விடாமல் ஏதோ வாயைக் கிளறிக் கொண்டிருந்தார். "யாரடா சின்னு இந்த அதிகாரம் பண்ணுறவன்?" என்று அவர் கேட்கவும், பக்கத்தில் இருந்தவன் "அது நம்ம கெட்டிப்பனுங்க" என்றான். அந்தப் பெயரைக் கேட்டவுடன் "இப்படி ஏண்டா ரவுசு போடறான்? வெடிய வெடிய அடிக்கிற பறையனுக்கல்ல கயிட்டம் தெரியும்" என்றார். அத்தோடு அவர் "அவனுக்குக் குடிக்கிறதற்கு காசு எங்கிருந்து கெடைக்குதோ?" என்றார்.

"அவனுக்கு எப்படியோ கெடச்சுப் போகுதுங்க" என்று ஒருவன் சொல்லவும் அருகிலிருந்த எல்லோரும் சிரித்தார்கள்.

அவனுக்கு எப்படிப் பணம் கிடைக்கிறது? என்ன ஏதாவது மந்திரம் தந்திரம் கற்று வைத்திருக்கிறானா? அதெல்லாம் ஒன்றுமில்லை; கெட்டியப்பனுக்கு இருந்த காடொன்றையும் தொலைத்து விட்டான். அவன் வேறு ஒன்றும் செலவு செய்யவில்லை; இட்டலியும், கள்ளும் அந்தக் காட்டை விலைக்கு வாங்கி விட்டது! இப்போது வெறும் ஆள். அந்த 'விடுதூளை'. யாருக்கும் பயப்படமாட்டான். ஊரில் எல்லோரும் அவனை ஒருமாதிரியாகத்தான் நடத்துவார்கள். அவனிடம் பகைத்துக் கொண்டால் போச்சு. அன்றைக்கு விரோதித்துக் கொண்டவனுக்கு வாழைத் தோட்டம் இருந்தால் பத்துப் பன்னிரெண்டு தாராவது பிஞ்சோடும் பூவோடும் அறுபட்டுப் போய்விடும். அல்லது தென்னந் தோப்பு உள்ளவராய் இருந்தால் இருபது முப்பது குலையாவது பாளை குருத்தோடு காணாமல் போயிருக்கும். அவனிடம் தன்னைப் போன்ற நாலைந்து ஆட்களும் உண்டு. கெட்டியப்பனைப் பற்றி வளர்த்தினா வளர்ந்துகொண்டே போகும். இப்போது அவனது ஆட்டத்தைப் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏனுங்க மாப்பிளே, இந்தப் பறயர்க அடியெல்லாம் மறந்துட்டானுக" என கையிலிருந்த கவையை ஓங்கிக்கொண்டு கெட்டியப்பன் தம்பட்டம் கொட்டுகிறவர்களை அடிப்பது போலப் போனான்.

"அடே கெட்டி, கெட்டி வாண்டாம்!" என்று சத்தம் போட்டுக்கொண்டு பண்ணாடிக் கவுண்டர் ஓடிவந்தார். அதேசமயம் "ஏனுங்க சாமி! இந்த வெளக்கு புசுபுசுன்னு போகுது" என்று சொல்லிக்கொண்டே நாச்ச பண்டாரம் வந்தான். "எக்கேடோ கெட்டுப் போங்கடா" என்று சொல்லிக் கொண்டு கெட்டிப்பன் தன் சாளையை நோக்கி நடந்தான்.

## 4

எண்ணெய் நிறைய இருந்தும் காற்றுக் குறைந்து விட்டதால் 'கேஸ் லைற்' கொஞ்சங் கொஞ்சமாக உயிர்விட்டுக் கொண்டு வந்தது. பிரகாசமாக எரிந்து கொண்டிருந்த விளக்குக்கு என்ன நேர்ந்து விட்டதோ? இனி 'லைற்றுக்காரனை' கூப்பிட்டுத்தானே இதை 'ரிப்பேர்' செய்ய வேண்டும் என்று அவர்கள் நினைத்தார்கள். அந்த மாதிரி விளக்குகளைக் கண்டிருக்கிறார்களே தவிர, பாவம், அதைப்பற்றி ஒன்றுமே தெரியாது. யாராவது சிறுகுழந்தை விளக்கருகில் சென்றாலும் அவர்கள் அதட்டுகிற அதட்டில் குழந்தைகள் நடுநடுங்கிப் போய்விடும். நாலு நாள் வாடகைக்கு வாங்கி வருவார்கள். கூடவே விளக்கைக் கொளுத்த, அணைக்க ஒரு ஆளையும் கையோடேயே கூட்டிவந்து விடுவார்கள். இந்த விசித்திர வேடிக்கைகளைப் பிரமாண்டமான கூட்டம் கண்டு களிக்கிறதே! ஆனால், விளக்குக்காரன் எங்கே?

அவன் எந்த வீட்டுத் திண்ணையில் படுத்துத் தூங்குகின்றானோ? ஊர்ப் பண்ணாடி தீவட்டிக்காரனை கூப்பிட்டவுடன், அரைத்தூக்கத்தில் இருந்த ராம வண்ணான் ஒரு பந்தத்தைக் கொளுத்திக் கொண்டு ஓடி வந்தான். அவன் தலைமயிர் அந்த வெளிச்சத்தில் சிவப்பு வர்ணம் பூசியிருப்பது போல் தெரிந்தது. அடிக்கடி கையிற் தொங்கவிடப்பட்டிருக்கும் கலயத்தி-லிருந்து எண்ணெயைக் கரண்டியில் எடுத்துவிடும் போதெல்லாம் தன் மேலும் சிந்திக் கொண்டான். சற்றுநேரத்திற்கு முன் அங்கு காணப்பட்ட உற்சாகம் கொஞ்சம் சோபை குன்றிவிட்டது. ஊர்ப் பண்ணாடி உத்தரவிடவும், நாலைந்து பேர்கள் 'லைற்றுக்காரனை'க் கூட்டிவர நாலு திக்குகளிலும் ஓடினார்கள். அப்போதுதான் நிலவு வெளிக்கிளம்பி எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தது. மங்கலாக இருண்டிருந்த வழிகளில் அவர்கள் வேகமாகச் செல்லும்போது தட்டுத்தடுமாறிக் கொண்டே ஓடினர். வீட்டுத் திண்ணையில் பகல் பூராவும் துணி துவைத்த சலிப்பில் வீராயி தூங்கிக் கொண்டிருந்தாள். பண்டிகை நாளானதால் ஏராளமான வேஷ்டியும் புடவையும் அலசி. அலசி எடுத்து அவள் இடுப்பு முறிந்திருந்தது. அந்த ஆயாசத்தோடு அவள் அயர்ந்து தூங்கும்போது, ஒரு சிறுவன் ஓடிவந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தடதட' என்று அவளைத் தட்டி எழுப்பினான். "சீக்கிரம் வா விளக்குப் போச்சு" என்று அவசரமாக அச்சிறுவன் சொல்லவும், அலறியடித்துக் கொண்டு அவள் எழுந்தாள். அவள் முகத்தைக் கண்டதும் சிறுவன் பெரிய ஏமாற்றத்தோடு திரும்பி வேகமாக நடக்கையில் வாசலில் அடித்திருந்த முளை தடுக்கிவிடவும் கரணம் போட்டுக்கொண்டு வீதியில் விழ்ந்தான். இந்தவிதமாக அந்த இரவு 'லைற்றுக்காரனை'த் தேடப் போனவர்களுக்கு நேர்ந்த விபத்துகள் எவ்வளவோ!

கடைசியாகப் பாதித் தூக்கத்திலும் முழுத் தூக்கத்திலும் திண்ணையில் தூங்கிக் கொண்டிருந்த முக்கால்வாசிப் பேர்களை எழுப்பியான பிறகு, நடராஜனைக் கண்டுபிடித்து விட்டார்கள். நடராஜனுக்கு முதலில் இவர்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லை. ஆனால் கண்ணைத் துடைத்துக் கொண்டு "உடைந்து விட்டதா?" என்றான்.

அவர்கள் சொல்வதிலிருந்து 'லைற்றுக்கு' என்ன நேர்ந்துவிட்டது என்று அவனால் ஊகிக்க முடியவில்லை. பின்னர் அவன் கோவிலுக்கு வந்து சேர்ந்தபோது கூட்டம் முக்கால்வாசிக்கு மேல் கலைந்துவிட்டது. பந்தம் பிடிப்பவன் கீழே உட்கார்ந்திருக்கும் நடராஜனை சுட்டுவிடுபவன் போல் பந்தத்தைச் சாய்த்துப் பிடித்துக்கொண்டிருந்தான். அதிலிருந்து கிளம்பும் எண்ணெயைப் புகையை அவனால் சகிக்க முடியவில்லை. சற்று நேரத்தில் 'கேஸ்' ஏற்றவும் பழையபடி வெளிச்சம் வீசியது.

அடுத்த நாள் புதன்கிழமை. ஒவ்வொரு வீட்டிலிருந்தும் 'கிண் கிண்' என்று நெற் குத்தும் மனோகரச் சத்தம்; கோவிலுக்கும் வீட்டிற்கும், வீட்டிற்கும் கோவிலுக்கும் சனங்கள் ஓயாமல் நடந்து கொண்டிருந்தார்கள். அன்று ஒரு தோட்டத்திலும் ஏற்றம் இறைப்பாரைக் காணோம். ஏன்? தோட்டத்திற்கு யாரும் போவதைக் காணோம். ஏதாவது வாழைக் காய், வாழையிலை, மிளகாய், இளநீர் வேண்டுமானால் துள்ளிப் பாயும் இரண்டொரு சிறுவர்களே தோட்டத்துப் பாதையிற் காணப்பட்டார்கள். மாரியம்மன் பண்டிகைக்காக முறுக்கு, மிட்டாய், வெற்றிலை, பாக்கு, தூபம், சாம்பிராணிக் கடைகள் பக்கத்தூரிலிருந்து செட்டியார்கள் கொண்டு வந்திருந்தார்கள். பொரிகடலைக் கடைகள் தான் அதிகம் வந்திருந்தது. ஒரு வளையற்காரன் "அம்மா வளையல்! வளையல்!!" என்று கத்திக்கொண்டே ஊருக்குள் சுற்றிக் கொண்டிருந்தான். கோவில் முன்னால் கருங்கல் அடுப்புக்கள் அநேகம் தயாராய் இருந்தன. அவைகளின்மீது அழகான புது மண் பாத்திரங்களில் சாதம் கொதித்துக் கொண்டிருந்தது.

அதோ, வெண்கலத் தொனியிலே ஒரு பெண் பேசுவது கேட்கிறதே அது யாரது? அந்தப் புடவைக் கட்டிலிருந்தும் பாய்ச்சல் நடையிலிருந்தும் நாகம்மாளாகத்தான் இருக்கவேண்டும் என்று ஊகித்துக் கொள்ளலாம். ஆமாம் நாகம்மாள்தான்! சுழிக்கும் மின்னல் போல அங்குமிங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிந்து கொண்டிருக்கிறாள். சற்றைக்கொருதரம் ராமாயியிடம் வந்து "கல்லைச் சரியாய் தள்ளிவெய்; கரண்டியெ அந்தப் பக்கம் வெக்காதே; குழந்தையெப் பார்த்துக்கோ, அடுப்புக்கிட்டே போகப் போகுது" என்று சொல்லிக் கொண்டிருந்தாள். ராமாயிக்கும் இதெல்லாம் சுத்தமாகப் பிடிக்கவில்லை. கஷ்டப்பட்டுக் கஷாயம் குடிக்கும் குழந்தையைப் போல பொறுமையுடன் ஏற்றுக்கொண்டாள். சிலசமயம் 'எனக்கே இதெல்லாம் தெரியும்' என்பாள். உடனே நாகம்மாளுக்கு பிரமாதமாகக் கோபம் வந்து விடும்.

'அப்படியா? இதே நா போயிடறே' என்று நாலு எட்டு வைத்துவிட்டுத் திரும்பி, 'உனக்கோசரம் நா போயிட்டா பின்னே என்ன இருக்குது?' என்று நின்று கொண்டு உருட்டி விழிப்பாள்.

அங்கு கடல் ஒலி போல் முழங்கும் அத்தனை கதம்பக் குரல்களையும் கூட ராமாயியினால் சகித்துக்கொண்டு சந்தோஷமாக இருக்க முடிந்தது. ஆனால் கெட்டியப்பன் அங்கு செய்யும் அட்டகாசங்களை அவளால் கண்கொண்டு பார்க்க முடியவில்லை. காட்டுராஜா போல கண்களை எதற்காக அவ்வளவு சிவப்பாக்கிக் கொண்டிருந்தானோ? பெருங் காற்றைப் போல கும்பலில் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தான். ஒரு கடைக்காரனை அந்த இடத்தில் சாமான் விற்கக்கூடாது என்பான். ஒருபுறம் கட்டியிருக்கும் தோரணத்தைப் போய் அறுத்து விடுவான். எங்காவது ஒரு மூலையில் யாராவது ஒரு சக்கிலிப்பெண் கல்லடுப்புக் கூட்டி அப்போதுதான் நெருப்பு மூட்டுவாள்; இவன் பார்க்காதவன் போல காலால் உதைத்துக்கொண்டே செல்வான். இதையெல்லாம் பார்த்து ராமாயி 'பகவானே அவனுக்குக் கூலி கொடுப்பார்' என்று சும்மா இருந்தாள். ஆனால் அவன் தன் பாத்திரங்களைக் கேட்காமல் எடுத்துக் கொள்வதும், திடீரென்று எங்கோ போய் பஞ்சாமிர்தம், பழங்கள் கொண்டு வருவதும், குழந்தையை எடுத்துக் கொஞ்சுவதும் அவளுக்குப் பிடிக்கவில்லை. இத்தனைக்கும் மேலாக அவனது ஆட்டபாட்டங்களைக் கண்டு நாகம்மாள் ஆனந்தப்பட்டுக்கொண்டு அவனிடம் பேசுவதையும் சிரிப்பதையும் காணக் காண ராமாயிக்குக் கோபமும் வெட்கமும் பொங்கிக் கொண்டு வந்தது. 'இந்த மாதிரிப் பெண்ணும் உலகத்தில் இருப்பாளா! என்ன மான ஈனமில்லாத்தனம்' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள். மாலை நாலு மணிக்குப் பூஜை முடிந்து யாவரும் பொங்கலோடு வீடு திரும்பினர். குழந்தை முத்தாயாளை எடுத்து இடுப்பில் வைத்துக்கொண்டு இன்னொரு கையில் சாமான்கள் இருந்த கூடையைத் தலையில் வைத்துக்கொண்டு ராமாயி வீட்டுக்குப் புறப்பட்டாள். அதேசமயம், கோயிலுக்குப் பின்புறத்தில் நாகம்மாள் கெட்டியப்பனுக்கு என்னவோ மடியிலிருந்து எடுத்துக் கொடுத்தாள். அதைக்கண்டு முகத்தைச் சுளித்துக்கொண்டு ராமாயி வேகமாக நடந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

ராமாயி பொங்கல் பாத்திரத்தை வீட்டில் இறக்கி வைத்துவிட்டுத் தன் புருஷனைக் கூட்டிவரக் காட்டிற்குக் கிளம்பினாள். முத்தாயாளும் கூட வருவேன் என்று அழுதாள். "நீ இங்கேயே இரு முத்து. நான் சீக்கிரமா வந்திடரே" என்று கால்படி உழக்கை எடுத்து ஒரு குத்துப் பொரியை அதில் போட்டுவிட்டு அவள் புறப்பட்டாள். அவள் புருஷன் எருமைக்குப் புல் கொண்டு வருவதற்காகத்தான் இன்று காட்டுக்குப் போயிருந்தான். இன்று விசேஷ நாளானதால் வழக்கம்போல் வரும் சக்கிலிப் பையனும் வரவில்லை. அதனால் சின்னப்பனே இன்று காட்டுக்குப் போயிருந்தான். ஆனால் பொழுது போயும் ஏன் வீடு வரவில்லை என்பது ராமாயிக்கு விளங்கவில்லை. அதற்காகத்தான் தானே போய்ச் சீக்கிரமாகக் கூட்டிவரச் சென்று கொண்டிருந்தாள். காடு சுமார் அரை மைலுக்கு மேல் இருக்கும். குறுக்கு வழியாகச் சென்றால் மூன்று காடு தாண்டினால் போதும், அதனால் இட்டேறியில் செல்வதை விட்டுவிட்டு காட்டுப் பாதையில் ராமாயி நடந்தாள். வழி பூராவும் தட்டைக்காய்க் கொடிகள் ஒன்றோடொன்று பின்னிக்கிடந்தன. நடக்கும்போது கால்களை சுற்றிக்கொண்டு தடுமாறச் செய்தன. காட்டில் விதையாமல் முளைத்தி-ருந்த வெங்கக் கற்கள் காலைக் காயப்படுத்தின.

அந்திவேளை, சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்தான். சூழ்ந்திருந்த ஊஞ்சல் மரங்களிலும் சங்கம் புதர்களிலும், பொன்னிற மின்னல் கம்பிகள் ஊசலாடிக் கொண்டிருந்தன. இடையிடையே ஓணான்களும் பூச்சி புழுக்களும் போவதால் 'சரசர' என்ற சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. ராமாயி வேகமாக நடந்தாள். எதிரே யாராவது வருகிறார்களா? என்று தலையைத் தூக்கிப் பார்த்துக்கொண்டாள். அடுத்த ஊருக்குப் போய் நூல் போட்டுவிட்டுப் பஞ்சு வாங்கி வந்த மணியகாரரின் தாயாரைக் கண்டதும் அவளுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. "இந்த வயதிற்கூடப் பணம் சேர்ப்பதில் எவ்வளவு ஆசை பார்" என்று சொல்லிக் கொண்டாள்.

பெரியவள் ராமாயியைக் கண்டதும் "அடி ஆத்தா இந்த நேரத்தில மஞ்சளு மணமுமா இந்தப் பக்கம் தனியா வரலாமா?" என்று சொல்லி கன்னத்தில் கை வைத்தாள்.

ராமாயிக்கும் மனதிற்குள் கொஞ்சம் பயந்தான். இருந்தாலும் மனத்தை தேற்றிக்கொண்டு "என் ஊட்டுக்காரரை கூட்டியாரப் போரேன்" கிழவி கன்னத்திலிருந்த கையை எடுக்காமல் கொஞ்சம் நெற்றியைச் சுளித்துக் கொண்டு "அவன நீதான் கோல் பிடித்துக் கூட்டியாரோணுமா? எனக்கும் எழுபது வயதாச்சு; இந்த அதிசயத்தைக் கண்டதில்லீம்மா என் கல்யாணமான வருஷம்....." என்று பெரிய பேச்சாக ஆரம்பிக்கவும், ராமாயி தடுத்து "இல்லே நேரமாச்சு, பூசையெல்லாம் பண்ணியாச்சு; இன்னம் காணமேன்னு போறேன்" என்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவி வாயெடுப்பதற்குள் மீண்டும் ராமாயி "நீங்களே போய் பஞ்சு வாங்கியாரணுமா? யாராச்சு போறவங்ககிட்ட கொடுத்திட்டா வாங்கியார மாட்டாங்களா?" என்றாள்.

"கொறப் பயங்கிட்ட கொடுத்துட்டாக்கூட செட்டி பஞ்சு கொடுத்திடுறா. ஆனா என் நூற்புக்கு எல்லோரையும் போலவா துட்டு வாங்குவேன்? இண்ணக்கி மூணு அணா எச்சா வாங்கியந்திருக்கிறேன்" என்று இடுப்பில் செருகியிருந்த முடிச்சைத் தொட்டுக் காட்டினாள். கிழவியின் சாமர்த்தியத்தைக் கேட்டுச் சிரித்துக்கொண்டே "நான் போயிட்டு வாறே" என்று ராமாயி நடந்தாள்.

தனது புருஷன் கிணற்றடியில் இருப்பான் என்று பார்த்தாள். ஆனால் அங்கே காணோம். இரண்டொரு ஆட்டுக்குட்டிகள்தான் வேலி முட்களை தின்று கொண்டிருந்தன. வெகு தூரத்தில் இவளுடைய புடவையைக் கண்டதும் மாடு 'அம்மா' எனக் கத்தியது. 'சரி குடிசைக்குள் தான் இருப்பார் ஆமாம் இந்நேரத்தில் குடிசையில் என்ன செய்கிறார்?' என்று யோசித்துக்கொண்டே போனாள்.

சின்னப்பன் குடிசைக்குள் இருந்த கயிற்றுக் கட்டிலின் மேலே உட்கார்ந்திருந்தான். அந்தக் கிராமத்திலிருந்தும்கூட அவன் தேகம் திடகாத்திரமானதல்ல. அதிலிருந்தே இளமையில் அவ்ன் அதிக நோயினால் கஷடப்பட்டிருக்கிறான் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அவனது முகத்தில் வாழ்வின் சஞ்சலச் சாயைகள் ஒன்றுமில்லை. கஷ்ட ஜீவனத்தின் கவலைகள் இல்லை ஆதலால், கண்களில் ஜீவகளை தளும்பிக் கொண்டிருந்தது.

சின்னப்பனுக்கு அவளைக் கண்டதும் பெரிய ஆச்சரியமாய் இருந்தது. "நீ இங்கே ஏ வந்தா? நானே வரலாமெனுருந்தேனே" என்றான். அவள் பேசவில்லை. அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவனுடைய குரலைக் கேட்ட அவளுக்கு என்னமோ போலிருந்தது.

"இங்கே ஏ உட்கார்ந்துகிட்டு இருங்கீங்க?" என்று சொன்னவள், அதற்குள் அங்கே கட்டிப் போட்டிருந்த புல்லைப் பார்த்துவிட்டு "எடுத்துக்கிட்டு வராமே நல்லா ரோசனை பண்ணீட்டிருந்தீங்க" என்றாள்.

சின்னப்பன் "வந்தாப் போவுது" என்றான். அவனுடைய கண்கள் கலங்கி இருந்தன. ரொம்ப மெதுவாகப் பேசுவதிலிருந்தே அதிக வருத்தம் அடைந்திருந்தான் என்பது தெரிந்தது.

ராமாயி "செரி, சொன்னா ஒரு பேச்சிலே எந்திரியுங்கொ" என்றாள். அவள் முகம் துயர அலைகளால் வாடியது. இளங்காற்றில் நழுவிப் போயிருந்த மாராப்புச் சேலையைக்கூட எடுத்துச் செருகவில்லை. ஒரு காலைக் குடிசைக் கம்புமேல் வைத்து நின்றுகொண்டிருந்தாள். சின்னப்பன் கட்டில் கயிற்றை ஒவ்வொன்றாகத் தடவியவாறே, "அதோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் தப்பட்டைச் சத்தம், அதைக் கேக்க எனக்கு எப்படியிருக்குது தெரியுமா?" என்றான்.

அவன் 'அந்தச் சத்தம்' என்றவுடன் மெதுவாகக் கேட்டுக்கொண்டிருந்த சப்தம் புலமாகக் கேட்பது போலிருந்தது அவளுக்கு. அரைகுறையாக அர்த்தமானாலும் முழுதும் தெரியவேண்டி "என்ன?" என்றாள்.

"என்னவா? உங்கிட்ட சொன்ன கதைதெதா உம்..... என்னமோ நம்ம ஊர் பூரா தலகால் தெரியாது குதிக்குது. ஏமாளியாய் இருந்தவங்ககூட கொம்மாளம் போடறாங்க. இப்படிதா பத்து வருசத்துக்கு முன்னே பொங்கலப்போ நானும் என் அண்ணனும்....." என்று நிறுத்தினான்.

"அந்தக் குப்பையைக் கிளர்றதுல என்ன சொவம் இருக்குது. உடம்பிலெ வாணம் பட்டு மேனாடு போன மவராசன் புண்ணிவான்னு சொல்லுங்க" என்றாள் ராமாயி. "அது நெசந்தா. கமுந்த பாலு கலயம் ஏராது. ஆனா அதெ நெனக்க நெனக்க..... அடடா! அண்ணக்கி ஆட்டம் கட்டினதில் இருந்து சாமத்துவரே எப்படிக் குதிச்சுக்கிட்டிருந்தோ, அண்ணக்கி ராத்திரி வாணத்திலே அண்ண ஒடம்பு வெந்து போகுமின்னு எவந்தான் நெனச்சா! உம்..... ஆத்தா இத்தனை நாளா கொண்டாடாதிருந்தது கூட எமக்கு ஒரு விதத்திலே நல்லதாயிருந்தது. ஆனா இப்போ அந்த நெனப்பெல்லா புத்தீசல் போலப் பொலபொலன்னு வருதே!" என்றான்.

ராமாயி கணவன் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றாள். வெளியில் ஒரே இருட்டு; குடிசைக்குப் பக்கத்திலிருந்த பட்டியிலிருந்த ஒரு ஆடு, 'மே மே' எனக் கத்தியது. ராமாயி என்னவோ நினைத்துக்கொண்டு வந்து அது எப்படியோ முடிந்துவிட்டது; தன் புருஷனை அதிக சந்தோஷமூட்ட வந்தவள் தானே அவனுடைய சோகத்திற்கு அதிக தூபம் போட்டவளானாள். ஆனால், இதையெல்லாம் சமாளித்துக்கொண்டு, "இப்படி உட்காரதில என்ன லாபம்? போவலாமே" என்றாள்.

சின்னப்பனும் அவள் சொன்னதைத் தட்டாமல் எழுந்தான். அவன் கையிலுள்ள புல்கட்டைத் தான் வாங்கிக்கொண்டு "இந்த வருஷம் உங்க அக்கா கூட ஏம் பொங்கலுக்கு வல்லே?" என்றாள்.

"அவ கைக்கொழந்தைக்கு மாந்தமாம். ஒரு வாரமா படுத்துக்கிட்டு இருக்குதாம். அதனாலே இங்கே நலக்கத்தோடு எடுத்திட்டு வரோணுமின்னு நின்னிட்டா. அவ புருஷன் கூட வரமுடியாது போச்சு" என்றான்.

அப்போது ராமாயிக்கு அன்று மாலை நாகம்மாள் நடந்து கொண்டது ஞாபகத்திற்கு வந்தது. ஆனால், தன் கணவன் எங்கே கோபித்துக் கொள்வானோ என அஞ்சி ஏதோ சொல்ல வாயெடுத்தவள் அடக்கிக் கொண்டாள்.

"இருந்தாலும் ஒரு பொம்பள, அத்தன பேருக்கெதிரில கெட்டியப்பனோடு அப்படி சிரிப்பும் விளையாட்டுமா இருப்பாளா அந்தப் பேச்சையே எடுக்காதே" என்று கண்டிப்புடன் சின்னப்பன் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

அடுத்தநாள் காலை அமைதி கலைக்கப்படுவதற்கு முன்பே சின்னப்பன் கலப்பையை தோளில் சாத்திக்கொண்டு தோட்டத்திற்குக் கிளம்பினான். இன்று எள்ளு விதைப்பு நாள். அதனால் தோட்டத்து ஆளிடம் முன்னமேயே எருதுகளைப் பிடித்துக்கொண்டு போகும்படி சொல்லி இருந்தான். போகும் போது நாகம்மாளைச் சீக்கிரமாக வரச்சொல்லி இருந்தான்.

ராமாயி வாசலில் பாத்திரங்களைப் பரப்பி விளக்கிக் கொண்டிருந்தாள். அன்று அவளுக்குச் சாதாரணமான நாளைவிட வேலை சற்று அதிகமாகவே இருந்தது. "நீ இப்படி ஒய்யாரமா உட்கார்ந்துகிட்டு இருக்கிறா. நாம போக வேண்டாமா?" என்றாள் நாகம்மாள்.

"ஆச்சு, இதோ தண்ணிய சுடவச்சுக் கொடுத்துடரே" என்று சொல்லி விட்டு வேகமாகக் காரியத்தைக் கவனித்தாள்.

அப்பொழுது அவளைப் பேசச் சொல்லியிருந்தால் 'சாலிட்டு வந்து குளித்துத் தொலையிறதுதானே' என்ற வார்த்தைகள் வெளிவந்திருக்கும். ஆனால் அவள் வாயைத் திறக்கவில்லை. அப்படிச் சொன்னால் வீடே கிடுகிடுத்து விடுமே! இவள் சும்மா இருந்தாலும் நாகம்மாள், "ராத்திரிப் பூரா தலெவலி. படாத பாடு பட்டே. இப்போ இந்தக் கதகதப்போடேயெ ஓடு என்கிறாயா? அப்படிப் போய்ப் பாடுபட்டு கடசியில நானா தலெயில கட்டிக்கிட்டுப் போறே?" என்று உக்கிரமாக மொழிந்தாள். ராமாயி பதில் பேசவில்லை. அவளிடம் பேசுவதால் வீண் வம்பை விலைக்கு வாங்கிக் கொள்வதாகும் என்று எண்ணி மௌனமானாள். நாகம்மாள் மறுபடியும் என்னவோ தூற்றிக் கொண்டே வீட்டிற்குள் போனாள். அடுப்பில் பால் 'குபுகுபு'வெனப் பொங்கிக் கொண்டிருந்தது. கதவோரம் கூட்டின குப்பை ஒதுக்கி வைத்திருந்தது. அதைப் பார்த்து விட்டு 'இதெ வழித்துக் கொட்டக்கூட நேரமில்ல! அப்படி வேல பறக்கிறது" என்று முணுமுணுத்தாள். அவள் சொல்வதைக் கேட்காதவள் போல அவசர அவசரமாகப் பாத்திரங்களைத் துலக்கி வைத்துக் கொண்டிருந்தாள் ராமாயி. 'இந்த ராணியம்மாவின் லீலைகள் என்றுதான் அடங்குமோ' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டாள். அவளை எதிர்த்துப் பேசுவது புருஷனுக்குப் பிடிக்கவில்லை. தனக்கும் என்ன காரணத்தாலோ அவளைத் தட்டிச் சொல்ல மனம் வருவதில்லை. இதை இப்படியே விட்டால் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டுதானே போகும். ஆனால் அதற்காக என்ன செய்வது? "முத்து இங்கே வா. தலெயிலெ இதென்ன மண்ணா? ஆமா. இந்த ஊட்டிலெ உன்னக் கவனிச்சு குளிப்பாட்டி உட யாரும் உண்டா" என்று அங்கலாய்த்துக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வார்த்தைகளைக் கேட்க ராமாயிக்குப் புண்ணில வேலை விட்டு உபத்திரவிப்பது போல் இருந்தது. இருந்தாலும் சகித்துக் கொண்டு ஒன்றும் பேசாமல் இருந்தாள்.

நாகம்மாள் ஸ்நான பானம் பண்ணுவதற்குள் வெயில் நன்றாக வந்து விட்டது. ஆனாலும் அவள் புறப்பட்டபாடில்லை. தெரு வரையிலும் போய்விட்டு மறுபடியும் வீட்டிற்குள் வருவாள். என்னவோ வைத்து மறந்துவிட்டவள் போல அங்குமிங்கும் தேடிவிட்டு, "எதுதா வெச்ச இடத்தில சீரா இருக்கிறதா?" என்பாள். "இந்தப் பொகையிலெயை அடுக்குச் சந்தில வெச்சதாரோ? எங்கே கொண்டு போக வெச்சதோ?" என்பாள். 'எங்க அம்மா ஊட்டுக்குத்தா கொண்டு போலாமின்னு ஒழிச்சு வச்சே' என்று சொல்லிவிடலாம் என ராமாயி நினைப்பாள்.

ஆனால் அவளிடம் விவாதம் செய்வதில் பயன் ஒன்றும் இல்லை எனக் கண்டு, "முத்து, மத்தியானம் ஆகிவிட்டது. மாட்டுக்கு கழுநீர் களிஞ்சு வெக்கலெ, வா போகலாம்" என்று குழந்தையைக் கூப்பிட்டுக்கொண்டே ராமாயி நகர்ந்தாள்.

நாகம்மாள் குழந்தையைத் தரதர என இழுத்துக்கொண்டு, "உனக்கு விடியறப்பவே மத்தியானம் ஆயிடும். மத்தியானமான இருட்டீட்டது என்பாய் பகலே இருட்டோ எண்ணு சொல்றதுதானே! எதுக்கு இத்தனை திருகுதண்ட ஏ" என்று ஆத்திரமாகச் சொன்னாள்.

"நா சண்டெக் காட்டுக்கு இளைச்சவளக்கா" என்று சொல்லிக் கொண்டே ராமாயி கட்டுத்தரைப் பக்கம் கழி தட்டுக்களை ஒதுக்கப் போய்விட்டாள். முத்தம்மாளுக்கு இந்த நாடகம் விளங்கவில்லை. எப்பொழுதும் சொந்தத் தாயைவிட, அதிகச் செல்லமாக ராமாயி வளர்த்து வருகிறாள்; ஆதலால், "சின்னம்மா, நா உங்கூட வர்றே" என்று அவள் பின்னால் ஓடினாள் முத்து.

"உன்னையும் நாளக்கு அவளெப் போல ஒரு 'தட்டுவாணி' ஆக்கிப் போடுவா. அங்கே போகாதே வா! அங்கு போகாதே" என்று தன் மகளுக்கு நற்புத்தி கூறி நாகம்மாள் குழந்தையின் கன்னத்தில் ஒரு இடி கொடுத்துவிட்டு நடந்தாள்.

காலம் மகத்தான மாறுதலைச் செய்து விடுகின்றது. இந்த கர்வம், அதட்டல், அகங்காரம் எல்லாம் ஒரு நாளைக்கு மண்ணில் தலை சாய்ந்து விடும். ஒளியின் வேகத்திற்கும் ஒரு எல்லை உண்டு. வீணாக ஏன் மனத்தை அலட்டிக்கொள்ள வேண்டும்? ஆனால் ராமாயி இத்தச் சித்தாந்தங்களை நினைத்ததாகவே தெரியவில்லை. அவள் கண்களில் தளும்பிய நீரைத் துடைத்துக்கொண்டே, கூடையிலிருந்த சாணியை குப்பை மேட்டில் கொட்டி விட்டு கட்டுத் தரையில் வீழ்ந்து கிடந்த கழி தட்டுக்களைப் பொறுக்கிக் கொண்டிருந்த முத்தாயியைக் கூப்பிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னம்மாவின் குரலைக் கேட்டதும் குழந்தை தன் கையிலிருந்த தட்டுகளை எறிந்துவிட்டு ஓடிவந்து அவளைக் கட்டிப்பிடித்துக்கொண்டே "அம்மாளை எங்கே போவச் சொன்னாய்?" என்றது.

ராமாயி தன்னையும் அறியாமல் "சுடுகாட்டுக்கு" என்று விட்டாள். ஆனால் அடுத்த கணமே 'ஐயையோ ஏன்தான் இப்படி வார்த்தை வருதோ?' என்று தன்னையோ நொந்து கொண்டாள்.

அதே சமயம் "நீ போகச் சொன்னவுடன் போயிடுவாளா?" என்ற சத்தம் கேட்கவும் திடீரெனத் திரும்பிப் பார்த்தாள்.

ஆழ்ந்து யோசியாமல் உணர்ச்சியின் வேகத்தில் ஒவ்வொரு சமயம் நிதானமின்றிச் சொல்லிவிடுகிறோம் காலம் கழிந்துவிடும்; வார்த்தை நிற்கும். அதனால் சில சமயங்கள் பெரிய அபாயம் கூட நேர்ந்து விடுகிறதுண்டு. ஆனால் அப்படியொன்றும் இப்போது ராமாயிக்கு நேர்ந்து விடவில்லை. ஏனென்றால் இந்தக் கேள்விக்கு சொந்தக்காரி-யான செல்லக்காள் அப்படிப்பட்ட குணம் படைத்தவள் அல்ல.

"காத்தால எப்பவும் இதுதானா?" என்றாள் செல்லக்காள்.

"நீயும் பக்கத்திலே பார்த்துகிட்டுத்தானே வருகிறாய்?" என்றாள் வருத்தத்தோடு ராமாயி.

"அவ குணம் தெரிந்தே இருக்குதே; நீ ஏ வாய் குடுத்துக்கிறாய்?" என்று செல்லக்காள் கேட்கவும் "நானா வாய் கொடுக்கிறேன்" என்று தலை மேல் கை வைத்தாள் ராமாயி.

## 7

நாகம்மாள் தோட்டத்திற்கு வந்து சேரும்போது சூரியன் மரக்கிளைக்கு மேலே எட்டிப் பார்த்துக்கொண்டு இருந்தான். அசைந்தாடிக் கொண்டி-ருந்த கிளைகள் மேல் சூரிய வெளிச்சம் பட்டு மின்னிக் கொண்டிருந்தது. காக்கைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக மண்ணுக்கு மேலே சிதறிக் கிடந்த எள்ளுகளைக் கொத்த ஆரம்பித்தன. வேலியோரத்தில் ஒரு மாடு மேய்ச்சலுக்காகக் கட்டப்பட்டிருந்தது. அப்போது இரண்டு நெடும் பாத்திக்கு மேலே சின்னப்பன் உழுதிருந்தான். காளைகள் பஞ்சுப் பூமியை உழுவதைப் போல, சுலபமாக தலை குனியாமல் போய்க் கொண்டிருந்தன. சின்னப்பன் கையிலிருக்கும் உழவுக் கோலால் கொழுவில் மண்ணை அடிக்கடி தட்டிக்கொண்டே சென்றான். இவ்வளவு நேரம் சாலிட்டுக் கொண்டிருந்த கருப்பன் எள்ளுக் கூடையை நாகம்மாளிடம் கொடுத்துவிட்டு, பட்டி திறந்து விடுவதற்காகப் போனான்.

அவன் நாலடி போவதற்குள் "அடே கிராகி, காட்டிலெ பண்டம் பூந்திடப் போவுது" என்றாள் அதட்டலாக. 'சரி' என்று தலையசைத்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றவனைக் கூப்பிட்டு, "ஏண்டா சொன்னது காதிலெ கேக்கலையா?" என்றாள். அவன் திருதிருவென விழித்தான். இந்த மாதிரி அதட்டல் அதிகாரம் எல்லாம் சின்னப்பனுக்குத் துளி கூடப் பிடிக்காது. "அவனெ ஏ பயப்படுத்தோணும்? இங்கே எள்ளு சரியா விளாவில உழறதில்லெ" என்றான் சின்னப்பன்.

"ஆமாம். நாத்தா ஊட்டிலிருந்து கருப்புக் கம்பளியைப் போத்துக்கிட்டு வந்திருக்கிறே; உங்களக் கண்டா எல்லோரும் பயப்படுவாங்க" என்றாள் நாகம்மாள்.

"ஏ அவனெ மறுபடியும் கூப்பிட்டீங்க?"

"தண்ணி கொண்டாரத்தா. குடிக்காமே தாகமாகவே இருந்திரமுடியுமா?"

"தண்ணீங்கிற பேச்சே எடுக்கக் காணமே! நீங்க மனசுக்குள்ளவே சும்மா நெனச்சிருப்பீங்க" என்றான் சின்னப்பன்.

அவள் வெறுப்போடு அவன் முகத்தைப் பார்க்காமல் கூடையிலிருந்து குத்துக் குத்தாக எள்ளை வாரி இறைத்தாள். கருப்பன் திரும்பிக்கூடப் பார்க்காமல் வேகமாக நடந்தான். ஏனென்றால், பார்த்துவிட்டால் அது கூட ஒரு குற்றமாகி விடாதா?

நேர்கோடு கிழித்ததைப் போல கலப்பை பூமியைப் பிளந்துகொண்டு தெற்கே போகும். பின்பு வளைந்து மறுபுறம் திரும்பும். நாகம்மாள் மௌனமாகச் சாலிட்டுக் கொண்டே வந்தாள். இள மத்தியானத்திற்குள் பாதிக்காடு உழுதாகிவிட்டது. அப்போது ஒரு சிறுமி பழைய சாதத்தைக் கொண்டுவந்து வேலா மரத்தடியில் இறக்கி வைத்தாள். சின்னப்பனும் ஏரை நிறுத்திவிட்டு கை கால் அலம்பிக் கொள்ள கிணற்றுப் பக்கம் போனான். நாகம்மாள் கூடையை வரப்போரத்தில் வைத்து விட்டு அங்கேயே உட்கார்ந்து விட்டாள். வந்த பெண் கூடைக்குள் இருந்த சோற்றுக் கலயத்தை எடுத்து வெளியே வைத்தாள். ஒரு கொட்டைச் செடியிலிருந்து இலையைக் கிள்ளி வந்து சோற்றுக் கலயத்தை மூடிவிட்டு "ஏக்கா! பல் வௌக்கியாச்சா?" என்று நாகம்மாளைப் பார்ததுக் கேட்டாள்.

நாகம்மாள் அவள் கேட்டதற்கு பதில் சொல்லவில்லை. "உங்க அம்மா உன்னச் சோறு கொண்டு போகச் சொன்னாளா?" என்றாள்.

வழக்கத்துக்கு மாறாக இன்று, பக்கத்து வீட்டுச் சிறுமி சாதம் கொண்டு வந்ததால் இப்படிக் கேட்டாள் நாகம்மாள்.

"ஆமா, எங்க அம்மாதா போகச் சொன்னா" என்றாள்.

"எப்பவும் இல்லாத அதிசயமா இண்ணக்கு ஏது போகச் சொல்லீட்டா?" என்று சிரித்துக்கொண்டே நாகம்மாள் கேட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏங்கம்மா நீயாச்சி கொண்டு போய் சோறு கொடுத்திட்டு வா. பாவம் ராமாயி ஒருத்தியும் கயிட்டப்படுறா என்றாள். நானும் எங்க தோட்டத்-துக்கு இதிலெ தானே போகோணும். இதெயும் வாங்கிட்டு வந்தேன்" என்றாள்.

இந்தச் சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு இன்னும் நடந்த விஷயங்களை எல்லாம் கேட்டறிய வேண்டி, "பாப்பா! உங் குணம் தங்கமான குணம். அதனாலெதா உன்னக் கண்டா எனக்கு பேசோணுமினு இருக்குது. உம்..... அப்புற என்ன பேசினாங்க?" என்றாள்.

பாப்பாவும் உலகத்தைப் புரட்விடுகிற பெரியதொரு ரகசியம் தன்னிடம் இருப்பதைப் போல "உன்னப் பத்தித்தான் என்னமோ பேசிட்டு இருந்தாங்க" என்றாள்.

சிறுகுழந்தைகளுக்கு இம்மாதிரி விஷயங்களில் சிரத்தையே கிடையாது. வீணாக அவர்களுடைய வாயைக் கிளறினால் இல்லாததை கூட கண்டபடி சொல்ல ஆரம்பிப்பார்கள். பின்பு அதனால் எத்தனை சண்டைகளோ!

நாகம்மாள் துருவித் துருவிக் கேட்டாள். அவளுக்குத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற பேரவா மிகுந்திருந்தது.

இதற்குள் சின்னப்பன் அருகில் வந்துவிட்டான். தலைத் துண்டை விரித்துப் போட்டு அதற்கு மேல் உட்கார்ந்தான். சிறுமி சாதத்தைக் கரைத்துக் கையில் ஊற்றினாள். நாகம்மாள் உட்கார்ந்த இடத்திலிருந்து அசையவில்லை. அவள் மனத்தில் பல சிந்தனைகள் உருண்டோடிக் கொண்டிருந்தன. இந்த மாதிரி கானலிலும் காற்றிலும் உழைத்து என்ன பயன்! ஏன் இப்படி அவர்களுடன் ஒட்டுக் குடித்தனமாக வாழ வேண்டும்? இந்தப் பரந்து கிடக்கும் காட்டிலும் தோட்டத்திலும் தன் கணவனுக்குச் சேர வேண்டிய பாகம் பாதி இல்லையா? தானும், தன் குழந்தையும் ஏன் சுகமாகத் தன் காலத்தைக் கழித்துக் கொண்டு போகக் கூடாது? தன் குழந்தைக்கு அழகான சீலை, ஒரு நகைநட்டு பண்ணிப் போட்டுப் பார்த்தால் எப்படியிருக்கும்? மாதத்திற்கு நாலு பேருக்குக் குறையாமல் அவர்களுக்கு வேண்டியவர்கள் சொந்தம் பாராட்டிக் கொண்டு வந்துவிடுகிறார்கள். இதெல்லாம் யார் சம்பாதித்தது? நல்லதோ கெட்டதோ எதுவும் இப்படித்தான். ஒரு சிறு வித்து எப்படி பிஞ்சும் பூவும் குலுங்கும் விருட்சமாகி அதன் நிழலிலே எத்தனையோ ஜீவராசிகளுக்கு குளிர்ந்த நிழலைத் தருகின்றதோ அந்த மாதிரி இந்தச் சிறு கனல் பொறியும் அவள் மனதில் மகா பெரிய அனல் மலையை வளர்க்கலாயிற்று. அப்படியே சிலை மாதிரி உட்கார்ந்து கொண்டிருந்-தாளே ஒழிய, எழுந்திருக்கவில்லை.

சின்னப்பன் பாப்பாவிடம் மெதுவாக, "அவுங்களயும் சோறு குடிக்கச் சொல்லு" என்றான். "புல்லு வெளக்கச் சொன்னே, அதெயெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கலையே" என்றாள் பாப்பா. அவள் சொல்லியது அருகிலிருக்கும் பத்துப் பேருக்குக் கேட்கும் போலிருந்தது.

நாகம்மாள் வெடுக்கென்று, "இந்தத் தலைவலியிலெ பழைய சோத்த நா வாயில ஊத்த மாட்டேன்" என்றாள். சின்னப்பன் அதைக் கேட்டு "தலவலியான ஊட்டுக்குப் போயிடறது" என்றான்.

"போயிட்டா சாலிட வேற ஆள் இருக்குதாக்கும்?"

"அடே மாரா, மாரா" என்று கூப்பிட்டான் சின்னப்பன்.

"மாரனும் வேண்டா, செல்லனும் வேண்டா" என்று தானே எழுந்தாள்.

"இல்லெ. வெயிலில் இருந்தா இன்னும் நோவு எச்சாகிவிடும்" என்று சின்னப்பன் மறுபடியும் மாரனைக் கூப்பிட ஆரம்பித்தான்.

மாடு மேய்த்துக் கொண்டிருந்த மாரன் சத்தத்தைக் கேட்டுஎழுந்து ஓடி வந்தான். நாகம்மாள் சற்று நிழலில் உட்கார்ந்திருந்தாள். பாப்பாத்தி மீதி சாதம் எவ்வளவு இருக்கிறது என்று அளவு பார்த்துக் கொண்டே குடிக்க ஆரம்பித்தாள். இதைக்கண்ட நாகம்மாள் அவசர அவசரமாகக் கையைக் கழுவிக்கொண்டு "கலயத்தை இப்படிக் குடு" என்று கையை நீட்டினாள். சின்னப்பனுக்கு . இதைக் காண ஆச்சரியமாக இருந்தது. திடீரென்று தோன்றிய நோவு மாயமாகத்தான் மறைந்து விடுமாக்கும் என்று நினைத்துக் கொண்டு, "தாய் தாய்" என்று காளையைத் தட்டினான். அந்தி வானத்தைக் கிழித்துக்கொண்டு செல்லும் சூரியனைப் போல கலப்பையும் பூமியைக் கிழித்துக் கொண்டு சென்றது.

## 8

அந்திநேரம் மிருதுவான காற்று வீசிக்கொண்டிருந்தது. மெல்லிய காற்றால் கலைக்கப்படும் மேகக் கூட்டங்கள் விதவித உருவங்களாக வானத்தை அலங்கரித்த வண்ணம் இருந்தன. நொய்யல் நதியில் குருகுருவென்று ஓடிவந்த நீரைக் காலால் அடித்தவாறே வெண் மணலில் ஒரு மனிதன் நடந்து கொண்டிருந்தான். அவன் தலையில் ஒரு ஐந்து முழ நீளமுள்ள துப்பட்டியை உறுமாலாகச் சுற்றிக்கொண்டி-ருந்தான். உருட்டியூ வேட்டியைக் கையால் தடவிக் கொண்டே கரையேறி ஒற்றயடிப் பாதையில் இறங்கி நடந்தான்.

கறுப்பு கோடு போல கரையருகே இருண்டிருந்த் மரங்கள் அசையும் போது சில சில பழுப்பு இலைகள் உதிர்ந்து கொண்டிருந்தன. அவன் போய்க் கொண்டிருந்த காட்டின் இடக்கோடியில் ஒரு குடிசை பனை ஓலைகளால் வேயப்பட்டிருந்தது. அக்குடிசையின் ஓரத்தில் இரண்டொரு ஓலைகள் தலை தூக்கிக் கொண்டிருந்தன. அதன் அருகே எப்போதோ கள்ளோ அல்லது தெழுவோ குடித்துவிட்டு எறிந்த பனங்கொட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றும் ரொம்பநாளைக்கு முன் மாமிசம் வறுத்ததற்கு அடையாளமாக உடைந்து போய்க் கிடந்த சட்டித் துண்டுகளும், அடுப்புக் கல்லும் தங்களை இந்த நிலைக்கு கொண்டுபோய்விட்ட அன்பனின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருப்பது போல் இருந்தது.

நாம் முன்பு சொன்ன ஆள் நடுக்காட்டிற்கு வந்ததும் குனிந்து ஒரு கல்லை எடுத்தான். பின்பு என்ன நினைத்துக் கொண்டானோ கல்லைத் தூர எறிந்து விட்டு, "யாரடா அது எருமையை வேலியோரம் கட்டியது?" என்றான். அந்தன் குரல் வெங்கல மணியிலிருந்து எழுந்த நாதம் போல வெகு தூரத்திற்கு விசிறி அடித்தது. ஆற்றங்கரையோரம் இடிந்து போய்க் கிடந்த கோயிலில் அதன் பிரதித் தொனி 'கணக்'கென எழுந்தது. இந்த அமானுஷ்யமான குரலிலிருந்து அந்த நபர் கெட்டியப்பன்தான் என விளங்கியிருக்கும். திடீரென்று பிறந்த இந்த 'அதிகாரம்' வெகு பேருடைய வேலையைத் தடைசெய்யும் என்று கெட்டியப்பன் எண்ணியிருக்கவே முடியாது.

பக்கத்துக் காட்டில் மரமேறிக் கொண்டிருந்த சடையமூப்பன் பாதி மரத்திலேயே 'டக்'கென்று இடைக் கயிற்றை நிறுத்தி சுற்றுமுற்றும் பார்த்தான். அவன் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை தெரிந்த ஜீவன்கள் எல்லாம் தங்கள் பாட்டில் இயங்கிக் கொண்டிருந்தன. ஆனால் இந்தத் தொனிக்குச் சொந்தக்காரர் யார் என்பதை அவனால் தெரிந்து கொள்ள முடியவில்லை. சூனியத்திலிருந்து வெடித்து வீசிய பேய்க் காற்றாக்கும் என்று எண்ணிக் கொண்டான் போல் இருக்கிறது. அதனால் மூப்பன் 'டப் டப்' என்று முன்னோக்கி மேலேறி உச்சியின் அமிர்த கலசத்தை அடைய் முயன்றான்.

பண்டம் பாடிகளை ஓட்டிக்கொண்டு போகின்ற சிறுவர் சிறுமியரும் அவசர அவசரமாக புல் புடுங்கிக் கொண்டிருந்த கருப்பாயியும், சோளங் காட்டிற்குத் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்த குப்பனும், இன்னும் மற்றவர்களும் ஏக காலத்தில் நாற்புறமும் திரும்பிப் பார்த்தார்கள் என்பதைச் சொல்லுவது அநாவசியம். ஆனால், இதற்குள் அந்த எருமைக்குச் சொந்தக்காரன் மந்திரவாதியைப் போல மாயமாகத் தோன்றி எருமையுடன் மறைந்து விட்டான்.

குடிசைக்கு முன்னால் மூடியிருந்த தென்னந் தடுக்கை எடுத்து உசரத்தில் போட்டுவிட்டு உள்ளே நுழைந்தான். உட்புறம் ஒரே இருட்டாயிருந்தது. அதனால, அங்கே போட்டிருந்த கட்டிலில் நெற்றி 'பட்' என்று மோதி விட்டது. "உஸ்..... ஆ....." என்று கொண்டே தீப்பெட்டியை எடுக்க ஓலைக்கிடையே கையை விட்டான். "ஓ...... அடி பலமா பட்டுவிட்டதா?" என்று யாரோ கேட்கவும் கெட்டியப்பன் சடக்கெனப் பின்னால் நகர்ந்தான். அகாலத்தில் வந்த இந்த அபூர்வக் குரல் மனிதக் குரல்தானா அல்லது பேயோ பிசாசோ என அவன் மிரண்டு நிற்கையில், மெதுவாக ஒரு பெண்ணின் குரல் "நீதா கெட்டியப்பன் ஆச்சே" என்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அட! நீயா! மாரியாத்தா மாதிரி இந்த நேரத்தில இங்கே வந்து ஒளிஞ்சிருக்கிறே?"

"ஆமா. நா ஒளிஞ்சுதா போனே" என்றது அந்தப் பெண்குரல். எடுத்த எடுப்பிலேயே இப்படிச் சுடச்சுடப் பதில் கொடுப்பது நாகம்மாள்தான். அவள் 'மசமச'வென்று இருக்கும்போதே வந்துவிட்டாள். வரம் கொடுக்கும் வரை பக்தன் பார்த்துக் கொண்டிருப்பதைப் போல் தன் அன்பன் வரும்வரை பொறுமையுடன் இருந்தாள். அன்று சிக்கலான சில விஷயங்களை அவளுடைய அரிவாள் மூளையினால் தெரிந்து செல்ல வந்திருந்தாள்.

"வெளக்கில்லயா?" என்றாள் நாகம்மாள். "அதுக்குத்தா தீப்பெட்டி எடுக்கப்போற போது நீ பயப்படுத்தி உட்டாயே" என்று சொல்லிக் கொண்டே ஓலைக்குள் கையை விட்டுத் துழாவினான். அவன் கை பட்டு ஓலை சரசரத்ததது. "இந்தா சத்தம் செய்யாதே" என்று சொல்லிக் கொண்டே நாகம்மாள் தான் கொண்டு வந்திருந்த பலகாரங்களை மடியிலிருந்து எடுத்தாள்.

"இங்கே யாருமில்லெ, காளியையும், நாச்சோறு கொண்டுகிட்டுவர போகச் சொல்லிட்டேடே. இந்தா வெளியே எட்டிப்பாரு பட்டி சாத்திருக்குதா?" என்றான்.

"என்ன நானா போய்ப் பார்க்கிறது? ஆ்ராச்சு இந்தப் பக்கம் வருவாங்க போவாங்க"

"அடடா!" என்றவன், எத்தனையோ வார்த்தைகளில் பேசுவதைச் சொல்லி விட்டான். நாகம்மாள் ரொம்பத் தணிவாக, "அதுக்காகச் சொல்லலெ உனக்குக் கூட" என்றவள் கொஞ்சம் பலமாக "இதென்ன அசிங்கியம்" என்றாள். அவள் வார்த்தைகளிலே உண்மையான வருத்தம் கலந்திருந்தது.

ஆமாம். இது சகஜம் தானே, தன் நடத்தையின் சாயல் ஒரு தரம் மின்னி விழுந்தது. காரிருளில் கன்னம் வைக்கும் கொலைகாரன் கூட தன் செய்கையை எண்ணி உள்ளூர அதிகமாக ஒவ்வோர் சமயம் வருத்தப் படுவதில்லையா? கெட்டியப்பன் விளக்கைக் கொளுத்திக் கொண்டு "இண்ணக்கி காட்டிலே ரொம்ப வேலையா? இப்படி வெய்யில்லெ ஒழைச்சா உன்னுடம்பு என்னவாகும்?" என்றான்.

வாழைக் குருத்தைப் போல தளதளவென்றிருக்கும் அவளுடைய தேகம் கறுப்பாகி விடுமோ என்று அவன் சஞ்சலப்பட்டான் போலும்!

நாகம்மாள் எந்த விஷயத்தைப் பற்றிப் பேசலாமென்று வந்தாளோ அந்த விஷயம் ஆரம்பிக்கும் முன்பே எதிர் வந்து நிற்கிறது! இனி என்ன மனத்தில் உள்ளதை வெளியிட வேண்டியதுதானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உனக்கு எப்பவும் பச்சை மாவுதானே புடிக்கும்!" என்று இலையிலிருந்த பலகாரங்களை அவன் முன் நகர்த்தினான்.

கெட்டியப்பன் ஒப்புக்கு அதைத் தொட்டு ஒரு வாய் போட்டுக் கொண்டு, "ராமாயி எனக்கு கொடுத்தா. பொழுதோடை தின்னது இன்னம் பசியே இல்லை நெஞ்சைக் கரிக்குது" என்றான்.

"என்ன நெசம்மாவா? ராமாயி கொடுத்தாளா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள். "நீ எப்போ ஊட்டுக்குப் போனாய்?"

"மத்தியானம் தூங்கி எழுந்ததும் அங்கதா வந்தேன். நீ காட்டிலெ இருந்தாய். கொஞ்சநேரம் உட்காந்திருந்தே. என்ன இருந்தாலும் ராமாயி கொஞ்சம் விதரணெ தெரிஞ்சவதா"

நாகம்மா எதைப் பற்றியோ யோசித்துக் கொண்டிருந்தாள். காற்று கொஞ்சம், கனத்தடித்ததால் வாரி வெளியில் 'தொப்'பென்று ஒரு தேங்காய் விழுந்து உருண்டு சென்றது.

"எல்லாம் எப்படி இருக்குது? சும்மா கையைக் கட்டி உக்காந்திட்டாயா?" என்றான்.

அவள் ரொம்பத் தணிவாக, "நான் அவங்ககிட்டிருந்து விலகிடப் பாக்கிறேன்" என்றாள்.

"நீ சொன்னதும் ஒத்துக்குவாங்களா?" என்றான்.

"அதுக்குத்தானே உம்பட ரோசனையைக் கேக்கிறே"

"இந்தத் தோட்டம், காடு எல்லாம் உம் புருசன் சம்பாதிச்சது தானே?"

"புது மனுசனாட்டம் பேசறியே!"

"சரி, இதிலே குடுக்க மாட்டேண்ணு சின்னப்பன் தகராறு செஞ்சா என்ன பண்றது? என்று கெட்டியப்பன் சந்தேகத்தோடு கேட்டான்.

நீதான் என்னவாவது பண்ணெணும்" என்றாள் அவள் அவன் முகத்தை பார்த்துக் கொண்டு. கெட்டியப்பன் சிறிது நிதானித்துவிட்டு, எப்படியும் பார்த்தே தீருவது. அப்பிடி கன்னா பின்னான்னா மணியாரென நம்ம கைக்குள் போட்டுக் கொள்றது கடைசியிலே நா இருக்கிறே" என்றான்.

நாகம்மாள் நிமிர்ந்து உட்கார்ந்தாள். அவள் கண்களிலே சற்று முன் காணாத ஒரு ஒளி வீசியது.

"உம் நேரமாச்சு நா போறெ இப்படி ஓரச்சு சொல்லறதுக்கு ஒரு ஆள் இல்லையேன்னுதா தவம் கிடந்தே" என்று சொல்லிக் கொண்டே தலையை வெளியே நீட்டிப் பார்த்தாள். யாரோ வரப்பின் மீது வருவது தெரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே அவசரமாக "நா போறெ" என்று அடியெடுத்து வைத்தாள். "அது ஆருமிருக்காது" என்று கூறிக்கொண்டே அவள் பின்னால் வெளியே வந்தான் கெட்டியப்பன். துரிதமாக மறையும் பட்டுப்பூச்சியைப் போல அந்த இருளில் கண நேரத்திற் பறந்து சென்றாள் நாகம்மாள்.

# 9

பொங்கல் கழிந்து ஒரு மாதமாயிற்று. ஆயினும் அதைப் பற்றிய பேச்சே இன்னும் ஊரில் அடிபட்டுக் கொண்டிருந்தது. பள்ளுப்பறை பதினெட்டுச் சாதிக்கும் இந்தப் பேச்சே உபயோகமான பொழுது போக்காயிருந்தது. "அக்கா என்னூட்டிலே அப்படி குபுகுபுன்னு பொங்கல் சாஞ்சிருக்காட்டி என்னாவது நடந்திருக்கும்" என்பாள் ஒருத்தி.

"ஆத்தா கிருபே இல்லாட்டி இந்தக் கட்டாப்பு எம் பொண்ணு பொழக்கிறதேது!" என்பாள் மற்றவள். இப்படி அம்மனுக்குக்கூட கௌரவம் உயரத்தான் செய்தது. இந்த வைபவத்தை ஒரு மாதமல்ல. ஒரு வருஷத்துக்குப் பின்னும் பேசிக் கொண்டிருக்கச் சிலர் தயாராய் இருந்தார்கள். ஒரு விஷயம், அது நல்லதோ, கெட்டதோ, அவசியமோ, அனாவசியமோ என்ன சங்கதியானாலும் அதை வளர்த்திக் கொண்டே பொழுதைக் களிப்பதில்தான் சிலருக்குப் பிரியம். அம்மாதிரி விபரங்கள் அவர்களோடு நிற்காமல் வீட்டுக்கு வீடு பரவி, கூடிய சீக்கிரம் கிராமம் முழுவதும் வியாபித்து விடும். இப்போது இப்படிப்பட்டவர்களுக்குத் தான் கெட்டியப்பன் - நாகம்மாள் கிடைத்து விட்டார்களே! இனிச் சும்மாவா விடுவார்கள்!

காட்டிலும், மேட்டிலும், களத்திலும், இட்டேறியிலும் முதலில் ஓரிருவர் இரகசியமாகப் பேசிக் கொண்டிருந்தது, பின்பு பகிரங்க இரகசியம் ஆயிற்று. உள்ளே இருப்பவர்களுக்குத் தெரியாததெல்லாம் எப்படித் தான் வெளியில் இருப்பவர்களுக்குத் தெரிந்து விடுகிறதோ! ஒருவேளை கற்பனை ரொம்பவும் உதவி செய்கிறது போலும்! 'நாலைச் சொல்லி வைப்போமே', 'பத்துக் கல்லுப் போட்டால் ஒரு கல் குறியாக விழாதா?' என்பது அவர்கள் எண்ணம். அதன் பின் நுணுக்கமாக ஆராய்ச்சி செய்யத் தலைப்பட்டு விடுகிறார்கள். சின்னப்பனுக்கு இதைக் கேட்கும் தோறும் ஒரு சாண் கயிற்றை எடுத்துச் சுருக்குப்போட்டுக் கொள்ளலாமா என்று தோன்றும். பரம்பரையாக அவனுடைய பாட்டன் பூட்டனெல்லாம் எவ்வளவோ மான மரியாதையாக வாழ்ந்திருந்தார்கள். அவனுடைய தகப்பனார் காலத்தில் அவர்தான் ஊருக்குப் பெரிய மனிதர். அதாவது, தோட்டி முதற்கொண்டு தொண்டைமான் வரையிலும் அனைவரும் தங்களுடைய வழக்குகளைத் தீர்த்துக் கொள்ள அவரிடம் தான் வருவார்கள். அவர் குணத்திலும் தங்கமானவராக இருந்ததைப் போலவே, பல்வேறு சச்சரவுகளையும் இரண்டு கட்சியாரும் சரி என ஒத்துக்கொள்ளும்படி சொல்வார். கடைசியாக மனஸ்தாபத்தோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவர்கள் மகிழ்ச்சியோடு 'மவராசன் எது சொன்னாலும் ரண்டு கண்ணுக்கும் மூக்கு வெச்சது போலத்தான்' என்று வாழ்த்திக் கொண்டே போவார்கள். சின்னப்பனும் தன் தகப்பனாரைப் போல நேர்மையானவன் தான் என்றாலும் இப்போது இவனிடத்தில் யாரும் எந்த வழக்குகளையும் தீர்த்து வைக்கச் சொல்வதில்லை. இதற்குப் பல காரணங்கள், முக்கியமாக ஊருக்குள் இரண்டு கட்சி இருப்பதுதான்.

யாரும் நேரடியாகத் தன்னிடம் நாகம்மாளின் நடத்தையைப் பற்றிச் சொல்வதில்லையென்றாலும், அப்போதைக்கப்போது நடப்பு விபரங்கள் சின்னப்பனுக்குத் தெரிந்து கொண்டுதான் இருந்தன. ஒருநாள் இதை மனதில் வைத்துக்கொண்டு தன் மனைவியை இரண்டு அடி பலமாகப் போட்டு விட்டான். பாவம், எதிர்த்துச் சொல்லக்கூடத் தெரியாத ராமாயி தன் தலைவிதியை நொந்துகொண்டே குப்புறப்படுத்துக்கொண்டு அழு அழு என்று அழுததுதான் மிச்சம். இன்னொரு நாள் மனைவியிடம் "நீதான் சொல்லக் கூடாதா?" என்றான்.

"என்ன?" என்று அவள் கேட்டாள்.

"என்னவா? அதுதான் ஊர் சிரிக்குதே. உங்காது செவிடாவா போச்சு?"

"அதெல்லா கேட்டுத்தா இருக்கிறே, என்னெ என்ன பண்ணச் சொல்றீங்க" என்பாள்.

சின்னப்பன் பேசாமல் இருந்தான். அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இப்படியே விட்டு வைப்போமா? அப்படியானால் தெரிந்தேதான் சும்மா இருப்பதாக பிறர் நினைப்பார்கள். என்ன அசிங்கம்! குடும்பத்தின் பேரைக் கெடுக்கத் தோன்றி விட்டாளே! இந்த நாசக்காரியால் இன்னும் என்னென்ன அநர்த்தங்கள் விளையுமோ என்று நினைக்கும்போதே அவனுக்கு நடுக்கமெடுத்தது.

"எழுந்து போங்க. பால் கறக்க நேரமாவிலையா? என்னத்துக்கு விருமத்தி புடிச்சாப்பல உக்காந்திட்டே இருக்கிறீங்க" என்றாள் ராமாயி.

சின்னப்பனுக்கு அப்போதுதான் பால் கறக்காமல் சும்மா உட்கார்ந்து கொண்டு இருக்கிறோம் என்பது தெரிந்தது. 'உம்' என்று ஒருவித சலிப்போடு எழுந்தான். ஒரு மூலையில் ஒதுக்கி வைத்திருந்த குப்பை-யைப் பார்த்து "இதெ வழிச்சுக் கொட்டப்படாதா?" என்றான் வெறுப்போடு. அதேசமயம் திண்ணையோரம் கோழிக்கூடு இன்னமும் மூடப்படாமலிருப்பதையும், கோழியும் குஞ்சும் சத்தமிடுவதையும் கண்டான். இவைகளெல்லாம் காணக் காணச் சின்னப்பனின் கோபம் அதிகரித்துக் கொண்டே வந்தது.

"ஏ இதெல்லா அப்படியே யப்பிடியே கெடக்குது? பாங்காக் கெவனிக்க ஒருத்தரும் இல்லையா?" என்றான் கோபமாக. அதட்டிப் பேசினாலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விறுக்கெனப் பயந்து கொள்கிற சுபாவமுடைய ராமாயி, தன் கணவன் என்ன கேட்டான் என்பதையே மறந்துவிட்டு "இதெல்லா அக்காதா பார்த்துக்குவா" என்றாள்.

"அவளுக்கு வரவர புத்தியும் கெட்டுப் போச்சு" என்றான். சாதாரணமாக தன் அண்ணன் மனைவியிடம் சின்னப்பனுக்கு எப்போதும் மதிப்புண்டு. ஆதியிலிருந்தே அவர்கள், 'நீங்கள்' என்ற மரியாதை தப்பி ஒருபோதும் குறிப்பிட்டதில்லை. ஆனால் இன்று அவன் வாயிலிருந்து 'அவள்' என்று வருகின்றது. இதெல்லாம் நடத்தையின் பலன் போலும்!

அப்போது நாகம்மாள் எங்கிருந்தோ வந்துவிட்டாள். ஆகையால், இவர்கள் சம்பாஷணை அப்படியே பாதியில் நிற்கவேண்டியதாயிற்று. சின்னப்பன் அருகிருந்த பால் கலயத்தை எடுத்துக்கொண்டு கட்டுத் தரைக்குப் போனான். அவனிடம் இப்போது நாலு எருதுகள் தான் இருக்கின்றன. இரண்டு பசுக்களில் ஒன்றை போன வருஷம் திருப்பூர் தேரில் விற்றுவிட்டான். அதற்குப் பதில் வேறு பசு வாங்கவில்லை. குழந்தை முத்தம்மாள் பால் குடியை மறந்து விட்டாள். ஆதலால் அந்த ஒரு பசுவே அவர்களுக்கு எதேஷ்டமாக இருந்தது. காளைகள் எப்பொழுதும் தோட்டத்திற்தானிருக்கும். பசுவையும் பால் கறந்தவுடன் தோட்டத்துக்குப் பிடித்துக்கொண்டு போய்விடுவான்.

சின்னப்பனைக் கண்டவுடன் கன்றுக்குட்டி துள்ளிக் குதித்தது. 'இந்த வாயிலாப் பண்டத்திற்குக்கூட விசுவாசமிருக்கிறது. அந்தப் பழிகாரிக்கு இல்லையே!' என்று நினைத்தான். வேட்டியை முழுங்காலுக்கு மேல் இழுத்து கோவணம் போட்டுக் கட்டிக்கொண்டு எதிரில் துடிதுடித்துக் கொண்டிருந்த கன்றிடம் "பால் குடிக்க ரொம்ப ஆசையா?" என்று அதன் கோமளமான முதுகைத் தடவிக்கொண்டே அவிழ்த்து விட்டான். கன்று நாலுகால் பாய்ச்சலில் சென்று அடி மடியை நாலு மோது மோதி முலையிலே வாயை வைத்துச் சப்பியது. அருகே, எங்கோ சென்று கொண்டிருந்த எருமையொன்று இந்தக் காட்சியை இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டு நின்றது. எருமையையும் பசுவையும் சின்னப்பன் மாறி மாறிப் பார்த்தான். ஒருவேளை அந்த வெள்ளைக்கும் கறுப்புக்கும் உள்ள ஒற்றுமையைப் போலத்தான் குடும்பத்திலும் தற்போது ஒற்றுமை இருக்கிறது என்று நினைத்தானோ என்னவோ!

பால் கறந்து கொண்டு வீட்டுக்குத் திரும்பினான். வீதித் திண்ணையோரம் முத்தாயா ஒண்டியாக நின்றிருப்பதைக் கண்டதும் "இங்கே ஏனாத்தா நிற்கிறாய்?" என்று அன்பாக அதனுடைய கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனான். "அம்மாளப் பார்த்துகிட்டு இருந்தே" "இப்பத்தா மாமே கூட்டிப் போனாங்க" என்றாள் முத்தாயா.

மாமன் என்ற வார்த்தையைக் கேட்டதும் திகில் என்றது சின்னப்பனுக்கு. சகஜமாக மாமன் என்று முத்தாயா கெட்டியப்பனைத்தான் சொல்வாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி கண்ணு. நீ இப்படி விளையாடிட்டு இரு. அம்மா வருவாங்க" என்று கூறி விட்டு அவன் உள்ளே போனான்.

ராமாயி உள்ளிருந்தவாறே "நா போயிட்டா வெடுக்கின்னு போயிடும். இந்தச் சங்காத்தம் ஒழிஞ்ச மாதிரி" என்று உரக்கச் சொல்லிக்கொண்டு வந்தாள். சின்னப்பன் தெரிந்து கொண்டவனாய் "நீயும் போகவேண்டாம். அவளும் போக வேண்டாம். இந்தா! பாலைக் காச்சு போ!" என்று பால் கலயத்தைக் கொடுத்தான்.

ராமாயி என்னமோ முணுமுணுத்துக் கொண்டே உள்ளே போய் அடுப்பை மூட்டினாள். சின்னப்பன் திண்ணை மீது மேல் துண்டை விரித்துப் படுத்தான்.

முத்தாயா "சின்னையா என் கிலுகிலுப்பையப் பாத்தாயா?" என்று ஆனந்தப் பெருக்குடன் ஓடி வந்து அவன் மடிமீது விழுந்தாள். சின்னப்பன் அவளிடம் இருந்த கிலுகிலுப்பையை வாங்கிப் பார்த்தான். புத்தம் புதிதாக பளபளவென்று மேல் தகடு இன்னும் மெருகு போகாது இருக்கக்கண்டு 'இது ஏது' என்று ஆச்சரியப்பட்டான். ஒருவேளை பொங்கலில் வாங்கியதாக இருக்குமோ? குழந்தைதான் உடைக்காமல் இன்னும் விட்டு வைக்குமோ?

சின்னப்பன் குழந்தையின் தலையை அன்புடன் தடவி விட்டுக்கொண்டு "இது உனக்கு ஆரு கொடுத்தாங்க?" என்று கேட்டான். அதற்குள் தலையில் நிறைய மண் இருப்பதைப் பார்த்து நன்றாகத் தட்டி விட்டுக் கொண்டே "யாராச்சு தலையில மண்ணப் போட்டுக்கிட்டா விளையாடு-வாங்க?" என்றான்.

"எல்லாம் மண்ண அள்ளிப் போட்டுக்கிறப்போ நா போட்டுக்காம எப்படி இருக்குறது சித்தப்பா?" என்று கேட்டது குழந்தை.

சின்னப்பனுக்குச் சிரிப்பு வந்தது. 'ஆமாம், வாஸ்தவம்தான். கோவணம் கட்டாத ஊரில் கோவணம் கட்டியவன் பயித்தியக்காரன்தான். ஆனாலும் இந்தக் குழந்தைக்கு இருக்கிற யூகம் இதைப் பெற்றவளுக்கு இல்லையே! எல்லோரும் யோக்கியமாக ஒழுங்காக இருக்கிறபோது அவளுக்கு ஏன் புத்தி இப்படிப் போச்சு' என்று எண்ணினான். முத்தாயா என்னன்னவோ கேட்டுக் கொண்டே இருந்தாள். அவள் கேட்கிற போதெல்லாம். "ஆம்", "இல்லை" என்று சொல்லிச் சொல்லிக் கொண்டே இருந்தான் சின்னப்பன்.

"என்னப்பா அப்பனும் மவளும் கொம்மாளம் போடறீங்க" என்று குரல் கேட்கவும் சின்னப்பன் திரும்பிப் பார்த்தான். தடியை ஊன்றிக் கொண்டு மேக்காகலவளவுப் பெரியவர் நிற்பதைப் பார்த்து, "வாங்க மாமா வாங்க! வாங்க! ஏது இந்தப் பக்கம் அத்தி பூத்தாப்பல?" என்று எழுந்து உட்கார்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அட இல்லீப்பா! நம்ம செங்காளி காங்கயம் போயிருந்தானாக்கு. அந்த ஏழவு கிலுகிலுப்பை ரண்டு மூணு வாங்கியாந்திட்டா. அவனூட்டுப் பிள்ள பசங்க அதை வச்சிக்கிட்டு குடுகுடுன்னு ஆடறதுகள். அதெப் பார்த்து வளவுப் பைய கத்தறான். இந்தக் கெரகம் என்ன சொன்னாலும் கேக்க மாட்டீங்குது. நாளைக்கு நீ சந்தைக்குப் போனா ஒண்ணு வாங்கியாந்து தொலச்சிடுப்பா"

அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே தன் வீட்டுக் குழந்தைக்கு கிலுகிலுப்பை கிடைத்த விஷயம் விளங்கிவிட்டது. செங்காளி வகையறாக்கள் கெட்டியப்பனுடைய அத்தியந்த நண்பர்கள். அவர்களிடம் சின்னப்பனைச் சேர்ந்தவர்கள் சரியாகப் பேச்சுவார்த்தை கூட வைத்திருக்க மாட்டார்கள். 'ஓஹோ....! அங்கிருந்துதான் கைக்கு கை மாறி நம்ம வீட்டுக்கு கிலுகிலுப்பை வந்ததா? இதுதான் இங்க எதற்கிருக்கிறது?" என்று முத்தாயா கையில் வைத்திருந்த கிலுகிலுப்பையை எடுத்தான். அவள் தூங்கி விட்டதால் மெதுவாகக் கிலுகிலுப்பையை விட்டு விட்டாள்.

அதை எறிந்துவிட உத்தேசித்தவன் அதையே பெரியவரிடம் கொடுத்து விடலாம் என நினைத்தான். பின்பு ஏனோ "நாளக்கிப் போன வாங்கியாரனுங்க. அதுக்காக இன்னேரத்திலே வராது போனா என்னங்க!" என்று அவரைத் தாட்டிவிட்டான். அப்புறம் அந்த சாமானை வெகுதூரத்துக்கு அப்பால் போய் விழும்படி விசிறி எறிந்தான். உடனே 'வெடியால குழந்தை வெளயாடக் கேட்டா எதக் கொடுப்பது?' என்று எண்ணினான். ராமாயி வேலையை முடித்துக் கொண்டு தன் கணவனைச் சாப்பாட்டுக்கு அழைக்க வந்தாள். தூங்குகிறான் என சற்று நின்று நிதானித்தாள். பிறகு "என்னுங்க....." என்று குரல் கொடுத்தாள். சின்னப்பன் விழித்துக் கொண்டுதான் படுத்திருந்தான். என்றாலும் ஏனோ பேச இஷ்டப்படாமல் 'கம்'மென்று இருந்தான். ராமாயி மறுபடியும் கூப்பிட்டு விட்டு தட்டி எழுப்பலாம் எனக் கீழே உட்கார்ந்தாள்.

"நா சும்மாதா படுத்திருக்கிறே. வேல இருந்தாப் போய்ப் பாரு" என்றான்.

"நீங்க சோறு....." என்று ஆரம்பிக்கும்போதே "எனக்கு வாண்டாம்" என்று சின்னப்பன் சொல்லி விட்டான்.

"அப்படியானால் சோத்துக்கு தண்ணி ஊத்தி மூடிடட்டுமா? அக்காளும் வாண்டாமின்னுட்டா"

சின்னப்பன் மௌனமாகவே படுத்திருந்தான். ராமாயிக்கு இதெல்லாம் பிடிக்காது. யார் எக்கேடு கெட்டுப் போனால் என்ன? நாம் ஒழுங்கா இருந்தாப் போதும் என்று நினைப்பவள் அவள். எந்த மூதேவியின் பொருட்டோ தன் கணவன் பட்டினி கிடப்பது சுத்தப் பைத்தியக் காரத்தனம் என்று அவள் நினைத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்படியே நீங்க சாப்பிடாமத்தா இருந்திடப் போறீங்களா?" என்றாள்.

"அப்படியிருந்திட்டா சௌக்கியமாப் போகுமா?"

"ஆமா. அப்படியே உட்டுட்டாலும் இன்னும் சிலபேருக்குக் கொண்டாட்டந்தா"

"இதெல்லாம் விதி. இந்த மூக்குப் போன மூதேவியெல்லாம் உதிர்த்திட்டுத் திரியுதே!"

"நீங்க பேசறது எனக்கொண்ணும் தெரியல. இப்படி இல்லாததெல்லாம் நீங்களே உண்டுபண்ணிடுவீங்க போலிருக்குதே! என்னமோ ஆரு கண்டது? சும்மா ஏன் சமுசயப்படணும்?" என்றாள் ராமாயி.

சின்னப்பன் அவளையே கொஞ்சநேரம் உற்றுப் பார்த்தான். பின்பு "கொழந்தையை எடுத்துப் போயி உள்ளே படுக்க வை." என்று கூறிவிட்டு விர்ரென்று எழுந்து வெளியே போனான்.

"எங்கேயாவது ரவிசு ரச்சைக்குப் போகாதீங்க" என்று சொல்லியபடியே அவள் ஸ்தம்பித்து நின்றாள்.

## 10

செல்லக்காள் ஏனோ சில நாளாக ராமாயி வீட்டுப் பக்கம் வருவதில்லை. முன்பெல்லாம் இரண்டு நாளைக்குச் சேர்ந்தாற் போல் வராமல் இருக்க மாட்டாள். இங்கே வந்து எங்கெங்கே என்ன நடக்கிறதோ அதை-யெல்லாம் விஸ்தாரமாகப் பேசுவாள். அவள் ரொம்பவும் ராமாயிக்கு நம்பிக்கை உள்ளவள். இங்கே பேசுவதை வேறெங்கும் சொல்ல மாட்டாள். அதனால் இவர்களுக்குள் எப்பொழுதும் மனஸ்தாபம் வருவதற்கு இடமில்லை. ராமாயிக்கு சில சமயம் ஆறுதல் சொல்லவே இங்கு வருவாள். அதோடு சில விசேஷ நாட்களில் ராமாயி பண்ணும் பலகாரங்களை ருசி பார்க்கவும், சாதாரண நாட்களிலும் குழம்பு, பொரியல் தினுசுகளுக்கு உப்பு, காரம் சொல்லவும் வரத் தவற மாட்டாள்.

செல்லக்காள் வீடு தென் புறம். அடுத்ததுதான். ஒரே ஒரு சுவர். அதுவும் கொஞ்சம் இடிந்த குட்டிச் சுவர்தான் இவர்கள் இருவருக்கும் மத்திய பாலம். அநேகமாக அந்த மதிலோரத்தில் நின்று கொண்டு தான் இருவரும் பேசுவார்கள். பக்கத்து நடைக் கதவைத் திறந்து கொண்டு அந்தப் புறம் போவதில் சலிப்பு ஏற்படும்போது ராமாயி இந்த முறையைக் கையாள்வாள். செல்லக்காளும் தன் வீட்டுக் கொல்லைப் புறத்தில் நின்று கொண்டே "உனக்குப் பல சோலி இருக்கும். வரமுடியாது. எனக்கும் வேலை தலைக்கு மேலிருக்கு" என்று சொல்லிக் கொண்டே மணிக்கணக்கில் பேசுவாள். இப்படிப்பட்ட அருமையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினேகிதியைக் காணாவிட்டால் யாராக இருந்தாலும் என்ன சங்கதி என்று தெரிய முயற்சி செய்வார்கள் அல்லவா?

ஒரு நாள் ராமாயி இலை கொண்டு வந்து போடும் ஆண்டிப் பையனைக் கேட்டுப் பார்த்தாள்.

அவன் "என்னமோ தெரியலீங்க, ஆனா அவுங்க மக ஊரிலயிருந்து வந்திருக்காங்க. மகளுக்குத்தா ஒண்ணில்லாட்டி ஒண்ணு ஒடம்புக்கு வந்திருக்குமே! தெரிஞ்சதுதானே" என்றான்.

இந்தப் பேச்சிலிருந்து செல்லக்காள் ஏன் வரவில்லை என்று சுத்தமாகத் தெரியாவிட்டாலும் மகள் நோயுற்றிருக்கிறாள் என்றால் தாயார் வேண்டிய சிசுருஷை செய்து கொண்டிருப்பாள் அல்லவா? அதனால் வர நேரமில்லை என்ற அர்த்தம் கலந்திருந்தது. இதையெல்லாம் யோசித்து அறிந்து கொள்ள வேண்டியதுதான்.

ராமாயி ஒரு நாள் மதிற்புறம் போய் எட்டிப் பார்த்தாள். அங்கு பின் புறத்தில் ஒரு கட்டில் போடப்பட்டு பாயும் விரித்திருந்தது. தலையணை காலுக்கு ஒன்று, தலைக்கு ஒன்று, இன்னுமொன்று எச்சாக இருப்பதி-லிருந்து செல்லக்காளின் மகளே தன் படுக்கையையும் ஊரிலிருந்து தயாராகக் கொண்டு வந்து விட்டாள் என்பதை விளக்கிற்று. அதே சமயம், செல்லக்காள் தன் மகளை உள்ளே இருந்து கூட்டி வந்து கட்டிலில் படுக்க வைத்தாள். "ஏக்கா மேலுக்கு எப்படி இருக்குது? எனக்கு இத்தனெ நாளாத் தெரியாது போ!" என்றாள் ராமாயி. செல்லக்காள் தலையை நிமிர்ந்து பார்த்து "ஐயோ நீயா ஆயா! ஆரோன்னு இருந்தே. ஆமாத்தா இந்தப் பாழு முண்ட காச்சத்தா இருபது நாளா கனலா காயுது" என்று வாய் மேல் கையை வைத்தாள்.

"ம்..... என்னத்தெ பண்ணிப் போடுது? ஏதாச்சும் மருந்து கொடுக்கி-றீங்களா?" என்றாள் ராமாயி.

"ஆமாய். கொடுத்துகிட்டுத்தான் வருது. என்ன பண்ணுறது? இதெ விட்டுட்டு வர துளிகூட நேரமில்ல. இங்கேயே காத்துகிட்டு கிடக்கிறேன். இதுதான் உங்க வளவுப்பக்கம் கூட எட்டிப்பாக்க முடியல"

"அதனால என்ன! இது நல்லானாப் போதும்" என்று அங்கலாய்த்தாள் ராமாயி.

ஆனால் அவள் மனதிற்குள் 'ஐயோ பாவம். இது எங்கே நன்றாகப் போகிறது' என்று நினைத்துக் கொண்டாள்.

செல்லக்காள் மகளுடைய சமாச்சாரம் குழந்தையிலிருந்தே ஒரே மாதிரியாகத்தான் இருந்து வருகிறது. சதா நோய்வாய்ப்படுதலே அவள் தொழிலாகி விட்டது. அவள் இரத்தத்திலே அணு அணுவாய் நோய்க் கிருமிகள் கலந்து தேகம் பூராவும் வியாபித்து விட்டதால் கஷாயமும், பத்தியமும், அதுவும், இதுவும் அவளைக் குணப்படுத்துவதாய்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணோம். அவள் கலியாணம் செய்துகொண்டு ஒரு சுகத்தை-யும் காணவில்லை. ஒரு காடு தோட்டம் பருத்தி பம்பலுக்குப் போய் நாலோடே ஒன்றாய்த் திரிந்து வேலை வெட்டியிலே கெட்டிக்காரியாய் இருந்தால்தான். கட்டினவனுக்கும் சந்தோஷமாய் இருக்கும். புகுந்த இடத்திலும் போற்றுவார்கள். இந்த நோக்காட்டுச் சீவனைக் கண்டால் யாருக்குத்தான் பிடிக்கும்? அதுக்குத்தான் பத்திலே பதினைஞ்சிலே தாய் வீட்டுக்கே வந்து விடுவது. செல்லக்காள் சொல்வது போல 'அவள் தலையிலே இதையெல்லாம் காண எழுதி இருக்கிறதாக்கும்!'

"கால் வலிக்குமே, எந்நேரம் நிண்ணபடி இருப்பாய்? எனக்குத்தா வர முடியல்ல. போகுது, இதென்ன ராமாயி! ஊருக்குள்ள கசமுசன்னு பேசிக்கிறாங்க நெசந்தானா?"

"என்ன அது?"

"அது என்னன்னு சொல்றது போ. அந்த மானங்கெட்ட பேச்சை!" என்று செல்லக்காள் நிறுத்தினாள்.

ராமாயிக்கு உள்ளுக்குள் வருத்தமும் கோபமும் பொங்கிக் கொண்டு வந்தாலும், "என்னக்கா, வாய உட்டுச் சொன்னாத் தெரியுமா? சொல்லாது போனத்தா போ" என்று அந்தப் பேச்சை அப்படியே மறைக்கப் பார்த்தாள்.

"நாம் இருந்திரலாம். ஆனா உல வாய மூடினாலும் ஊர் வாய மூட முடியுமா?" என்று அவள் உட்கருத்தை அறிந்தவள்போல செல்லக்காள் பேசினாள்.

"என்னமோ நீ பேசறது மூடு மந்திரமாய் இருக்குது?" "செரி, நேரமாச்சு. மாட்டுக்குத் தண்ணி வைக்கோணும்" என்று கிளம்பினாள்.

"என்ன இருந்தாலும் நாகம்மாள் இப்படியா கெட்டுத் திரிவா!" என்று செல்லக்காள் பேசி முடிப்பதற்குள், "எம் பேச்சு யாராச்சும் எடுத்தா கையில் இருப்பதுதான் கிடைக்கும்" என்று நாகம்மாள் சொல்லிக் கொண்டே அங்கு வந்தாள். திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்த ராமாயி நடுங்கிப் போனாள். அப்போது நாகம்மாளுடைய கையில் விளக்குமாறு வைத்திருந்தாள் ஆகையால் அந்தப் பேச்சு அடங்கிவிட்டது என்பதை-யும், செல்லக்காள் இமுக்குப் பெடுக்கென பேசவில்லை என்பதையும் தெரிவிப்பதே போதுமானது.

## 11

இந்தச் சம்பவம் நடந்த சில தினங்கள் வரை குடும்பம் எவ்வித ஆட்ட அசைவுமின்றிச் சென்று கொண்டிருந்தது. சிற் சில சமயங்களில் புயல் கிளம்புவதற்கு அறிகுறிகள் தோன்றும். ஆனால், அதற்குக் காரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதமான சண்டமாருதமே நிறுத்திக் கொள்ளும். நாகம்மாளின் வேகத் தணிவைக் கண்ட சின்னப்பன், 'ஒரு நல்ல வேளை புத்தி வந்து விட்டதாக்கும்' என்று ஆறுதலடைந்தான்.

இதற்கிடையில் சோளக்காடு அறுவடை வேறு வந்து சேரவே, ஊரிலும் இப்பேச்சு சற்று மட்டுப்பட்டது. காலையில் எழுந்திருந்ததும் எழுந்திரா-ததுமாய் காக்கை, குருவி போல் தோட்டக் காட்டை நோக்கி ஓடிக் கொண்டிருக்கும் போது, வீண் பேச்சுப் பேச நேரம் ஏது? தவிர, கதிர் கொய்யும்போது நான் முந்தி நீ முந்தி என்று அவளவள் காரியமாய் இருக்கையில் இந்த அத்துவானச் சங்கதியிலா பொழுதைப் போக்கு-வார்கள்?

நல்லவேளையாக சின்னப்பன் காரியத்தில் கண்ணாயிருந்ததால் சோளக்காடு ஊருக்கு முந்தி போரடித்துத் தவசம் கூட மூட்டை ஏறி விட்டது. இனி பருத்தி வெடி தான் பாக்கி.

ஒரு நாள் காலை, ராமாயி அடுப்படியிலே வேலை ரொம்ப முசுவாகச் செய்த வண்ணம் இருந்தாள். நாகம்மாள் தயிரைக் கடைந்து, மத்து, சட்டி, பானைகள் எல்லாம் சீராகக் கழுவி வைத்து விட்டு, அடுக்குச் சந்தில் துணிமணிகளைப் புரட்டிக் கொண்டிருந்தாள். கூடையைத் தூக்கி வைப்பதையும், குண்ணாவை நகர்த்துவதையும், உரிச்சட்டியை துளாவு-வதையும் பார்த்தால் அன்றைக்கு வேலைகள் வெகு வேகமாகப் போய்க் கொண்டிருப்பது தெரியும். "முத்து கடுகை எடுத்துக் கொடுக்கச் சொல்லி வாங்கியா கண்ணு" என்று ராமாயி சொன்னாள். நாகம்மாள் தானே கடுகுச் செப்பை எடுத்துக் கொண்டு எண்ணெயும் கொண்டு போனாள். "கத்தரிக்கா இன்னும் அரியலயா?" என்று நாகம்மாள் கேட்டாள்.

"இல்லையக்கா இதோ அரிஞ்சு வெக்கிறே"

"இல்லெ ஆயா; இந்தா நீ தொஞ்சம் சாணியைப் போட்டு அந்த சின்ன ஊட்டை மாத்திரம் வழிச்சிரு. இண்ணக்கு வெள்ளிக்கிழமையல்ல, நா பூராப் பாத்துக்கிறே" என்றாள் நாகம்மாள். "அப்புறம் சும்மா ரெண்டு சொம்பு தண்ணீல வழிச்சிட்டு கண்மூடி விழிப்பதற்குள்ளே வாயா. பருத்திக் காட்டுக்கு முன்னலேயே போயிடலாம். தோட்டம் போறபோது சொல்லீட்டுப் போனாங்க" என்றாள். ராமாயிக்கு ஒருபுறம் சந்தோஷம். இந்த மாதிரி தன்னிடம் சந்தோஷமாக நாகம்மாள் பேசி எவ்வளவோ நாட்கள் ஆகிவிட்டன. கலியாணமான பத்தடியில் எவ்வளவோ கொஞ்சிக் குலாவி அன்பாக ஆதரவாகப் பேசியிருக்கிறாள். அதற்குப் பிறகு அதுவும் சமீப காலத்தில் வீட்டில் ஒரே சண்டையும் சச்சரவும்தான். பழையபடி இன்று அந்த சிரித்த முகத்துடன் மிருது வசனத்தைக் கேட்ட அவளுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. இதிலிருந்து நாகம்மாள் எப்போதும் கடுகடுத்தவளாக இருக்கவில்லை என்பதும் விதரணை தெரிந்தவள்தான் என்பதும் விளங்கும். பொதுவாக எல்லோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்திலும் இனிமையும், இளச்சமும், கனிவும், காதலும் பொங்கித் தான் நிற்கின்றது. சந்தர்ப்ப பேதங்களினால் சிலர் வேண்டும் என்றே இதயத்தை கடினமாக்கிக் கொள்கிறார்கள் போலும்!

இன்று நாகம்மாள் காட்டும் நயப்பெருக்கு வேறொரு காரணத்தைப் பற்றியது. பாம்புக்குட்டி புரண்டு விளையாட வந்தாலும் கொத்துவதைத் தவிர வேறு எதற்காக இருக்கமுடியும்?

நாகம்மாளும் ராமாயியும் பருத்திக் காட்டுக்கு வந்து சேர்ந்தபோது மற்றப் பெண்களும் தயாராகக் காத்துக் கொண்டு இருந்தார்கள். அந்தப் பெண்களில் முக்கால்வாசிக்கு மேல் இள வயதுடையவர்கள்தான். அவர்கள் புடவைத் தலைப்பை எடுத்து, இடுப்பைச் சுற்றி மடி கூட்டி இருந்தார்கள். கெண்டைக் காலுக்கு மேல் தூக்கிக் கட்டிய கொசுவம் வைத்திருந்த கொரநாட்டுச் சேலையுடன் நடு நெற்றியில் வாகு எடுத்துச் சிலர் கொண்டை போட்டிருந்தார்கள். இன்னும் சிலர் ஈரக் கூந்தலை உலர்த்துவதற்காக கோடரி முடிச்சுப் போட்டிருந்தார்கள். அவர்களது மினுமினுப்பான உடம்பும், கரங்களின் உறுதியும் பார்க்கப் பார்க்க இன்னும் பார்த்துக் கொண்டே இருக்கலாம் எனத் தோன்றும். இளமை பூத்து நிற்கும் அங்க வனப்பை அள்ளி எறிவதைப் போல சும்மா ஒரு உலுக்குக்குலுக்கி, குனிந்து பருத்தி எடுக்கும்போதும், நிமிர்ந்து அவர்கள் கலகலவென்று பேசும்போதும், சிரிக்கும் போதும், திரும்பும் போதும், கால் மிஞ்சிகள் ஒலிக்க நடக்கும் போதும், செடிகளை ஒதுக்கி விட்டு அவர்கள் முன்னோக்கிச் செல்லும் போதும் அவர்களுடைய ஒவ்வொரு அசைவிலும் மனத்தை மகிழ்விக்கும் மாயம் ததும்பி நின்றது! இவர்கள் எல்லாம் சின்னப்பன் காட்டிற்குக் கூலிக்குப் பருத்தி எடுக்க வந்திருக்கிறார்கள். பத்துப் பேர் முன்னுக்கு பாத்தி தாண்டிப் போகும்போது, ஒருத்தி தளுங்கி விட்டால் சிரிக்க மாட்டார்களா? இவ்வளவு தானே என்று கேலிக்கு இடமாகி விடுமே! எந்த ரோசக்காரி தான் 'அத்துவானம்' என்ற பட்டத்தைச் சுமக்கச் சம்மதிப்பாள்?

இப்படி இள மான்கள் போல் அவர்கள் செடிகளுக்கிடையே துரிதமாகப் போய்க் கொண்டிருக்கையில், நாகம்மாள் என்ன செய்கிறாள் என்பதைக் கவனிப்போம். அவள் இரண்டு பாத்தி எல்லோரிடத்தும் சரியாகப் பேசுவாள். பின்பு தங்கிக் கொள்வாள். அப்புறம் பருத்தி எடுக்க ஆரம்பிப்பாள். ரொம்பக் களைப்பு அடைந்தவள் போல் உட்கார்ந்து கொள்வாள். இவளது தளர்வைக் கண்டு, பக்கத்தில் வருவோர் சலித்துப் போய் விட்டாள் என நினைக்கவில்லை. ஏனென்றால், நாகம்மாளை மிஞ்சி யாரும் அடி எடுத்து வைக்க முடியாது. இது மட்டுமல்ல. எந்த வேலையிலும் கெட்டிக்காரிதான். ஆனால் இன்று என்ன வந்து விட்டது?

"என்ன நாகம்மா! காலில ஏதாச்சும் கட்டை பட்டுட்டதா?" என்றாள் கூட நின்ற பெரியவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருத்தி "அக்கா, அக்கா இந்தத் துணியெ நனைச்சுச் சுத்து" என்று சிகிச்சைக்கு உதவ முன் வந்தாள். கண நேரத்தில் காடே இவள் பக்கம் திரும்பி விட்டது. 'நாகம்மாளுக்கு என்ன? நாகம்மாளுக்கு என்ன?' என்ற குரல்களுக்கு எதிரொலிக்கு எதிரொலீ கிளம்பியது. இதற்குள் ராமாயி ஓட்ட ஓட்டமாக ஓடி வந்து, "என்னக்கா! எப்படி இருக்கு? தண்ணி குடிக்கிறயா?" என்று பதட்டத்துடன் கேட்டாள்.

நாகம்மாள் ஒன்றையும் கவனியாதவள் போல "எப்படியோ வெடுவெடுப்பாய் வருது" என்றாள். காட்டு வேலை செய்கிறவர்களுக்கு எல்லாம் சாதாரணமாக 'வெடுவெடுப்பு'த்தான் வருவது வழக்கம். அப்படிச் சொன்னாத்தான் உடனே பக்கத்தில் இருப்பவர்கள் 'அப்படியானால் ஏறு வெயிலில் நிற்கக்கூடாது. நிழலுக்குப் போய் உட்கார்ந்து கொள்' என்பார்கள். இந்த வெடுவெடுப்பிலே தலை சுற்றல், மயக்கம், வாந்தி, கண்ணடைப்பு எல்லாம் அடங்கியிருக்கிறது என்றால் அவ் வியாதியைப் பற்றி நாம் அதிகமாகச் சொல்லத் தேவை இல்லை. இதற்குள் ஒரு பெண், ஒரு செம்புத் தண்ணீருடன் ஓடி வந்தாள். ராமாயி அதை வாங்கி "இந்தாக்கா, குடி. வாந்தி வராப்பல இருக்குதா?" என்றாள் துக்கமாக.

இன்னும் பல குரல்கள் அதே கேள்வியை, அதே தொனியில் சற்று ஏற்றியும் இறக்கியும் கேட்டார்கள். நாகம்மாளின் பதில் மௌனம் என்பதைச் சொல்லாமல் விட்டு விடுவதே மேல். ஆனால், இந்த நடிப்புக்குப் பிறகு என்ன நடந்தது என்பதையும் பார்ப்போம்.

நாகம்மாள் ஒரு வாய்த் தண்ணீரைக் குடித்துவிட்டு, "போதும், போதும். தேவலாம். நீயே பார்த்துக்கிட்டு வந்து சேரு. முத்தாயா, செடி கொடிகளுக்குள்ளே போகப் போறா. கவனமாய்ப் பாத்துக்கோ. நா ஊட்டுக்குப் போறே" என்று ராமாயியிம் கூறிவிட்டு கிளம்பினாள். தோட்டத்தை தாண்டி அவர்கள் கண்ணுக்கு மறைந்ததும், நாகம்மாளுக்கு இந்த ஓட்ட நடை எங்கிருந்து வந்தது என்று கேட்காதீர்கள்!

## 12

நாகம்மாள் நேராக வீட்டுக்கு வந்ததும், தாவாரத்தில் செருகியிருந்த சாவியை எடுத்து, மளமளவென்று பூட்டைத் திறந்து உள்ளே போனாள். உடனே, அடுக்குச்சந்தருகே எதையோ எடுக்கப் போனவள், அருகிருந்த கண்ணாடிச் சுவரின் மேல் கை வைத்தாள். அவள் கை பட்ட வேகத்தில் அங்கிருந்த மயிர்கோதி 'சொத்'தென ஒரு மண் பானை மேல் விழுந்தது. அந்தப் பானை உடைந்ததா, தூர் விட்டதா என்பதைக் கூட அவள் கவனிக்கவில்லை. ஒரு பானைக்குள் கையை விட்டு என்னவோ துணியில் சுற்றியிருந்த முடிச்சை எடுத்துக் கொண்டு, கதவைக் கூடச் சாத்தாமல் ஆற்றங்கரைப் பக்கம் நடந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழே மண் வெகு வேகமாகச் சூடேறிக் கொண்டிருந்தது. சுற்றுப்புறம் எங்கும் ஒரே மெளனம். ஒரு வீட்டிலும் துளி கூடச் சத்தம் கிடையாது. திண்ணையிற் படுத்திருக்கும் இரண்டொரு கிழவர்கள் இருமுவதுதான் இலேசாகக் கேட்டுக் கொண்டிருந்தது. நேரம் தப்பிக் கூவும் சேவல்களைத் தவிர, அப்போது அரவம் செய்ய யாருமில்லை. சின்னஞ் சிறுசுகளும் தங்கள் தாயாரின் பின்னாலேயே காடுகளுக்குள் ஓடிப் போயிருந்தன. நாகம்மாள் ஆற்றுக்குப் போகும் பாதையை விட்டு மேட்டில் ஏறி நடந்தாள். காலில் செருப்பு இல்லாததால் அவ்வப்போது முட்கள் குத்தும்போது நிற்க வேண்டியிருந்தது. இச் சிறு தாமதத்தையும் பொறுக்காது அவள் முகத்தைச் சுளிப்பதிலிருந்தும், மேலெல்லாம் வியர்வை வழிவதிலிருந்தும் அவளுடைய பாய்ச்சல் நடையிலிருந்தும், ஏதோ முக்கியமான காரியமாகத்தான் போகிறாள் என்பது விளங்கும். ஆனால், பருத்திக் காட்டில் வெடுவெடுப்பு என்று வேஷம் போடுவானேன்? இப்போது எங்கே போகிறாள்? வீட்டிலிருந்து எடுத்துச் செல்வது என்ன? என்ற கேள்விகளுக்கு ஒரேயடியாக பதில் சொல்வது என்பது சிரமம். ஆனால் உச்சி வேளையில் மடுவுத் தோப்புக்குப் போகிறாள் என்பதையும் அதுவும் கெட்டியப்பனைக் காணத்தான் என்பதையும் தெரிவித்து விடுகிறோம்.

மடுவுத் தோப்பு என்ற பெயரைக் கேட்டாலே அந்தப் பக்கத்திலுள்ள பெரியவர்களும் 'அப்பாடா' என்று வாய் மேல் கை வைப்பார்கள்.

ஆற்றுக்கப்பாலே, வெங்கக் கற்காடு, வெகு தூரத்திற்குப் பயிர், பச்சை சாகுபடிக்கே லாயக்கற்று நீண்டு கிடக்கிறது. அதற்கப்புறம் ஊசிப்புல் என்ற ஒரு வகைப் புல் படர்ந்திருக்கிறது. சாதாரணமாக, அங்கெல்லாம் மழைக் காலத்தில் புல் இன்னும் அடர்த்தியாகத் தழைத்து நிற்கும். அப் புற்காட்டிலே மாடு கன்றுகளை மேய விடுவது வழக்கம். அக்காட்டிற்கு அப்பால் கொஞ்ச தூரம் ஒரு அடர்ந்த சோலை. பல ஜாதி மரங்கள் ஒன்றோடொன்று இணைந்து நீண்டு வளர்ந்திருக்கும். அந்த இடம் சதா இருண்டிருக்கும். ஒருபுறம் ஆறு, மறு புறம் விஸ்தாரமான மேட்டங்காடு. எதிராக பின்னிரு புறங்களிலும் சிறு சிறு குன்றுகள். இப்படியாக அந்த மடுவுத் தோப்பு மனிதப் போக்குவரத்துக்கே அதிகம் உபயோகப்படாத நிர்மானுஷ்ய பூமியாக இருந்து வந்தது. யாராவது தப்பித் தவறி பண்டப் பாடிகளை விட்ட சிறுவர்கள் கூட உள்ளே செல்ல அஞ்சுவார்கள். இல்லாத பொல்லாத மிருகங்கள் எல்லாம் அங்கு உலாவுவதாகக் கதைகள் உண்டு. இன்னொரு முக்கியமான பயம் என்ன என்றால், கரைக்கு எதிர்ப் புறத்திலுள்ள சுடுகாட்டுப் பேய்கள் எல்லாம் வாசம் செய்வது அந்த இடத்தில்தான் என்ற நம்பிக்கை. ஆனால், கெட்டியப்பன் போன்றவர்கள் இதையெல்லாம் தூசி போல ஊதி விட்டு 'நெறுநெறு' என்று உள்ளே நுழைவார்கள். அப்படித் தைரியமாக உள்ளே நுழையாவிட்டால் அந்த இருண்ட பிரதேசத்தில் அவ்வளவு அடுப்புக் கற்களும், சட்டிகளும், எலும்புகளும் ஏது? ஒரு பட்டியிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடு திருட்டுப் போய்விட்டது என்றாலோ வீட்டிலிருந்து கோழி களவு போய்விட்டது என்றாலோ, இன்னும் அரசாணிக்காய், வாழைக்காய், அது இது எல்லாம் காணாமல் போன அடுத்த நாள் நிச்சயம் இந்த இடத்தில் ஏதாவது அடையாளம் இல்லாமல் போகாது.

நாகம்மாள் அங்குதான் இப்போது முக்காட்டை எடுக்காது மும்மரமாய் போய்க் கொண்டிருந்தாள். காட்டு யானையே எதிரில் வந்திருந்தாலும் நிறுத்த முடியாத அவளைப் பக்கத்து ஊர் உபாத்தியாயர் நிறுத்தி விட்டதுதான் ஆச்சரியம். ஆனால், பலத்தில் யானையைத் தோற்கடிக்க முடியாவிட்டாலும் அப்புலவர் பெருமான் இரண்டு யானைகளுக்கு ஒரே சமயத்தில் குழி வெட்டக் கூடிய அளவிற்கு சமர்த்தர். "வாத்தியாரே, அவசரமாப் போறேன்" என்று நாகம்மாள் நகர்ந்தாள்.

"ரொம்ப அவசரமா?"

"ஆமா, ஆமா!" என்று கூறிக்கொண்டே நிற்காது போனாள்.

"ஒரு பேச்சு" என்று கெஞ்சும் குரலில் பின்தொடர்ந்தார்.

"இல்ல வாத்தியாரே, வெகு அவசரம்"

"நானும் ரண்டு வார்த்தையில முடிக்கிறேன். ஒரு நாலு வள்ளம் கம்பு வேணும். ஆனால், ஆரிருந்தாலும் நம்ப வளவிலே சொல்லோணுமா? அதென்னமோ நா பொறப்பட்ட வேள கும்புடப் போன தெய்வம் குறுக்க வந்தாப்பல" என்று அடுக்கிக் கொண்டே ஓடி வந்தார் புலவர் பெருமான்.

அந்தச் சமயத்தில் நாலு வள்ளமல்ல நாற்பது வள்ளம் கேட்டிருந்தாலம் கூட நாகம்மாள் கொடுப்பதாக வாக்களித்திருப்பாள். ஏனென்றால் அவ்வளவு அவசரத்தில் இருந்தாள் அவள்.

"அதற்கென்ன, காரத்தாலே வந்து வாங்கிக்குங்க" என்று அவரை வழி அனுப்பினாள். பின்னர் மேட்டிலிருந்து இறங்கி ஆற்று மணலில் அடி எடுத்து வைத்தாள்.

## 13

ஆற்றில் பாதத்தளவு ஜலம் 'குருகுரு'வென ஓடிக் கொண்டிருந்தது. சில இடங்களில் பாறை ஓரத்தில் முழங்கால் அளவு ஜலம் கூட நின்றிருந்தது. அங்கெல்லாம் ஆற்று நீரிற் சின்னச் சிறு மீன்கள் துள்ளி விழுந்து கொண்டிருந்தன. அவற்றைச் சமயம் பார்த்து அடித்துக் கொண்டு போவதற்கு இரண்டொரு கொக்குகளும், வேறு சில பட்சிகளும் கரையோரத்தில் உட்கார்ந்திருந்தன. நாகம்மாள் அக்கம் பக்கம் பார்த்துக்கொண்டே தோப்பின் உள்ளே அடியெடுத்து வைத்தாள். அவள் இப்போது போய்க்கொண்டு இருக்கும் இடம் சற்று வழுக்கலான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதை. ஆற்றங்கரை மேட்டிலிருந்து நீர் வரை பெரும் பாறை பாசி பூத்து புல்லும் பூண்டும் நிறைந்திருந்தது. அங்கே ஜாக்கிரதையாகத்தான் காலடி எடுத்து வைக்க வேண்டும். கொஞ்சம் தவறினாலும் முழங்கால் உடைந்து விடும். நாகம்மாளுக்குச் சொல்ல வேண்டுமா? காந்தப் பூமியை இரும்பு பற்றி இழுப்பது போல் அல்லவா அவள் பாதங்கள் ஒட்டிப் போகின்றன. கணத்தில் பாறை தாண்டி மேலே நடந்தாள்.

இனித்தான் வெளிச்சத்திலிருந்து இருட்டிற்குவந்த தடுமாற்றம் ஏற்படும். ஆனால் பழக்கமானவர்களுக்கு இது ஒரு பொருட்டே அல்ல. நாகம்மாளின் வீச்சு நடையிலிருந்து இதற்கு முன்னும் அவள் இங்கு வந்து பழகியிருக்கிறாள் என்று தெரிகிறது. அப்போது நல்ல மத்தியான வேளைக்குக் கிட்டத்தட்ட ஆகிவிட்டது என்றாலும், அங்கு 'கரு கும்' எனவே இருந்தது. அவ்விடத்தில் ஒரு மனிதனல்ல மலையே இருந்தாலும் வெளியில் உள்ளவர்கள் பார்த்துத் தெரிந்து கொள்ள முடியாது. நாகம்மாள் நேராகப் போய்க் கொண்டிருந்த பெரிய வழியை விட்டு, குறுக்கு வழியாக ஒரு சந்துக்குள் புகுந்தாள்.

சிறிது தூரத்தில் ஒரு சம சதுரமான இடத்திற்கு வந்தாள். மறைவான அவ்விடத்தில் ஒரு சிறு மைதானம் பூசி வழித்த களம் போல அவ்வளவு சுத்தமாக எப்படி இருக்கிறது என்ற சந்தேகம் எழலாம். அந்த இடம் இரண்டொரு வருஷத்துக்கு முன்பெல்லாம் ஒரு காரியத்துக்காக உபயோகிக்கப்பட்டு வந்தது. ஆனால், பொலீஸாரின் ஒரு நாளைய பிரவேசத்தால் சட்டி முட்டிகளும் வேலாம் பட்டைகளும். மூங்கில் குழாய்களும், இன்னும் கட்டுப்பானைச் சாராயம் காய்ச்சுவதற்கு வேண்டிய உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன. பின்பு அந்த இடத்திற்கு அவ்வளவாகப் போக்கு வரவு இல்லை. தன்னுடைய உல்லாச நண்பர்களை இழந்துவிட்டதனாலோ என்னவோ அந்த இடமும் வரவரச் சோபை இழந்து வருகின்றது.

அந்த மைதானத்தைத் தாண்டி சிறிது தூரத்தில் இரண்டு நாக மரங்கள் கிட்டக் கிட்ட முட்டிக்கொண்டு இருக்கின்றன. அங்கு வந்தவுடன், நாகம்மாள் தன் வீச்சு நடையை நிறுத்தி விட்டு மரத்தடியில் உட்கார்ந்தாள். அதே சமயம் "வந்திட்டாயா?" என்ற குரல் எங்கிருந்தோ வந்தது.

என்ன இது? இந்தத் தனியிடத்தில் யார் இப்படி அழைப்பது? பேயா, பிசாசா, காட்டேரியா அல்லது வன தேவதைதானா என்ற சந்தேகம் வேண்டாம். இதோ, அந்தக் குரலுக்குச் சொந்தக்காரனான கெட்டியப்பன் கீழே இறங்கி வருகின்றான்.

"நான் வெகு நேரமாப் பாத்துக்கிட்டிருந்தேன். ஏன் இவ்வளவு நேரம்? தடத்திலெ ஆருக்கிட்டயோ நின்னு பேசிக்கிட்டிருந்தயே?" என்று கெட்டியப்பன் கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன இங்கிருந்து தெரியுதா!"

"ஆமா. உச்சாணிக் கொம்பிலிருந்து பாத்தேன். சற்று மங்கலாய்த் தெரிஞ்சுது"

"உந் தீரமே தீரம்!" என்று வியந்துகொண்டே நாகம்மாள் "வெளியில் தலைகாட்ட முடியல்லெ" என்றாள்.

"ஏன் அப்படி?"

"என்னத்தச் சொல்றது? நா இந்தப் பத்து இருபது நாளா வாயே தெறக்கிறதில்ல. பேசாம என்ன நடக்குதுனு சோதிச்சுப் பாத்தே. பேச்சு அப்படியே தணியுது".

"நீ சொல்றது ஒண்ணுமே தெரியல"என்றான் கெட்டியப்பன்.

"இதுக்கு ஒரு வழி சொல்லு. இனி என்னால அவுங்களோடு சேர்ந்திருக்க முடியாது. அவனும் அவெ பெண்டாட்டியு எக்கேடோ கெட்டுப் போகட்டும். அதப் பத்தி துளியும் எனக்கு அக்கறை இல்ல. பிரிஞ்சு வந்தாலே போதும்."

"நானு அதெத்தானெ சொல்லீட்டிருக்கறெ" என்றான் கெட்டியப்பன்.

"ஆமா, இன்னும் எத்தனை நாளக்குப் பேசாமலே இருப்பது?"

"ஏ? நீ சொல்லலயா? நேராச் சொல்றதுதானே! தெரிஞ்சு போகுது"

"எப்படிச் சொல்றதுன்னுதான் எனக்குக் கயிடமாக இருக்குது. ஏ சொல்லாமலே வுட்டுவுட்லாமிண்ணுகூடப் பார்க்கிறே"

"சே சே அதுக்குத்தானா இமுட்டுக் கூடிப் பேசியது? கடசில இப்படிச் சொல்லுவீன்னு தெரிஞ்சிருந்தா நா முன்னுக்கு வந்திருக்கவே மாட்டே!" என்று சலிப்போடு கூறினான் கெட்டியப்பன்.

"நீ அப்படி என்ன நெனைக்காதே. நான் கேட்டுடுறே அங்கயே"

"அங்கண்ணா எங்க? சின்னப்பங்கிட்டத்தானே?" என்று அவன் அவசரமாகக் கேட்டான்.

'ஆமா' என்று நாகம்மாள் தலையசைத்தாள்.

"சரிதா மொதல்ல என்னவோ சொன்னயே. அது என்ன? ஆர் என்ன சொல்றாங்க?"

"ஆரா? காலுக்கு வராத சில்லறைகள். அந்த வெட்டிப் பேச்சு பேசுது. நா பாகத்தைப் பிரிக்கச் சொன்னா முடியாதுன்னு சொன்னா நா என்ன செய்யறது?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன செய்யறதா? அப்பறம் சின்னப்பெ ஏத்துப் பூட்டிடுவானா? தண்ணி காடு பாஞ்சிடுமா? அவ தோட்டத்துக்குள்ள காலெடுத்து வச்சுற முடியுமா?" என்று கோபமாகக் கேட்டான் கெட்டியப்பன்.

"இதெல்லாம் வம்புதானே!"

"இதில் வம்பு கிம்பு ஒண்ணுமில்ல அவெ ஒழுங்கா ஒத்துவராமப் போனாத் தானே வம்பு தேடிக்கிறா? நீ வம்புக்கொண்ணும் போகலியே! இதிலெ தப்பென்ன? உம் புருஷ சம்பாதிச்சதில ஒனக்கு பாகமில்லயா? இப்படி நீ சும்மாவே இருந்தா அவெ தோட்டம் காடெல்லாம் வித்துக்கிட்டு மாமியாரு ஊரு போயிடறான். அவ போட்ட மாயப்பொடி தானே இது!"

"ஆமா, ஆமா. நீ சொல்லறது சரிதா. அந்த முண்டெ வந்து போனதுக்கு அப்புறம் தானே எனக்கு விசயம் பூராத் தெரிந்தது. எப்படியோ ஒரு தப்புத்தண்டா இல்லாமெ காரியம் ஆனாப் போதும்"

"அதெப் பத்திக் கவலைப்படாதே. நா அப்படி உன்ன மாட்டிடுவனா? வீணா நீ ஏ அங்கலாய்க்கிறாய்? சட்டுப் புட்டென்று காரியத்தில கண்ணாயிருந்து சாதிக்கப் பாரு. வீணா நாள ஓட்டாதே" என்றான் கெட்டியப்பன்.

"அப்படியே ஆகட்டும். நீ மற்றவங்க கிட்டயும் இதெப் பத்தி கலந்துக்க. அவுங்க என்ன சொல்லறாங்க பார்ப்போம்."

"என்ன, மணியகார அண்ணங்கிட்டத் தானே? நல்லாச் சொன்னாய். அவுங்க இதுக்கு அட்டி சொல்ல மாட்டாங்க" என்றான் கெட்டியப்பன்.

"என்னமோப்பா நீயெல்லாம் பார்த்து என்ன எப்படிச் சொல்றீங்களோ அப்படிச் செய்யறே. எங்கிட்ட வஞ்சகம் இல்ல. அதுதா சொல்ற-தெல்லா சொல்லீட்டே நான் போறே" என்று கிளம்பினாள் நாகம்மாள்.

"செரி செரி. சொன்னதெல்லாம் மனசில இருக்கட்டும். ஏனோ தானோன்னு இருந்திட்டா கடசீல நீயும் உம் மவளும் ஓடெடுக்க வேண்டியதுதான்" என்று எச்சரித்துவிட்டு "நானும் கூட வாறே. போவேண்டியதுதா" என்று புறப்பட்டான்.

"நல்ல கூத்து. நா போற மட்டும் இங்கேயே இரு. இதுவேற ஆராச்சும் கண்டாக்காப் போச்சு. ஊறு தின்னா பறக்கிறதுன்னு சொல்லும் சனங்கோ. அப்புறம் என்ன வேணுமானாலும் ஆரம்பிச்சுடுவாங்க" என்றாள்.

"அப்படி எவனாச்சும் வாயசச்சா குதிக்காலு நரம்பை வெட்டிட மாட்டனா? நீ ஒண்ணுக்கும் அதறாதே" என்றான் கெட்டியப்பன்.

"நானு அப்படித்தா. மிரட்டிக்கிட்டு வாறே" என்று கூறிக்கொண்டே நாகம்மாள் நடந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

யாருடைய வருகைக்கு முன் தன் காரியத்தை முடித்துக்கொள்ள நாகம்மாள் எண்ணி இருந்தாளோ, எவருக்குச் செய்தி எட்டும் முன்பே எல்லாவற்றையும் தீர்த்துக்கொள்ள ஆலோசித்தாளோ, எந்த முகத்தைக் காணுமுன்பே பிரிந்துவிட நினைத்தாளோ அந்த முகம் இன்று பிரசன்னமாகி விட்டது. சின்னப்பனுடைய மாமியார் ஊரிலிருந்து வந்திருந்தாள். அந்த அம்மாள் தான் இவ்வளவு கசப்புக்கும் காரணம். அவளே இக்கிளர்ச்சியை முதலில் கிளப்பி விட்டவள்.

போன வருஷத்தில், மகளைப் பார்த்துவிட்டுப் போக வந்திருந்தவள், பேச்சு வாக்கிலே கெட்டியப்பனிடம் "ஊருக்குள்ளே கச்சி பெலமா இருக்குதாம்" என்றாள். அப்போதெல்லாம் கெட்டியப்பன் அடிக்கடி வீட்டுக்கு வருவது கிடையாது. எப்போதாவது ஒரு நாள் வருவான். சின்னப்பனிடம் வெளியிலிருந்தே பேசிவிட்டுப் போய் விடுவான். அவன் அடாவடிப் பேர்வழிதான், கவைக்காகாதவன்தான், இருந்தாலும் இரண்டு கட்சிக்கும் பொதுவாக நடந்து கொள்வதில் விருப்பமுள்ளவன். இல்லாவிட்டால் இரண்டு இடத்திலும் செல்வாக்குப் பெற முடியாது அல்லவா? இப்படிப்பட்ட ஆளை தன் மருமகன் கட்சியில் சேர்த்துவிடச் செய்த முயற்சியின் விளைவுதான் இது. கெட்டியப்பன் இதனைப் பயன் படுத்திக் கொண்டு, "நா இருக்கிறபோது எந்தப் பயல் வாலாட்டுவான்? நீங்க கவலைப்படாதிங்க" என்றான். காளியம்மாள் "அதாங் கேட்டே. நீங்கல்லா இவ்வளவு அனுசரணையா இல்லாட்டி இருக்கிற பூமிய வித்திட்டு மகளயும் மருமகனையும் எங்கூருக்குக் கூட்டிக்கிட்டு போயிடலாமினு பார்த்தே பாவம்! ஒண்டிக்காரனெ இத்தன கசக்கு முசக்குக்குளே ஏந் தனியா வுட்டு வைக்கோணு? நா இருக்கிற, அங்கும் பண்ணையும் பாச்சலையும் பாத்துக்கிட்டு பையனுக்குத் தொணையா இருப்பாங்களேண்ணு பாத்தா....." எனத் தொடர்ந்து பேசினாள்.

கெட்டியப்பன் சமயம் பார்த்து "நாகம்மா சங்கதி என்ன?" என்றான்.

"அவளுக்கு என்ன வந்திட்டுது. இருந்தா வீட்டைக் காத்துக்கிட்டு இங்கிருக்கிறா. இல்லாது போனா அங்கதா வாறா. இனி அவளுக்கு என்ன? சாகிறவரைக்கும் சோறும் சீலையும் தானே! கொழந்தை பெரிசானா சித்தப்பெ இருக்கிறாங்க. கண்ணாலங் கட்சி எல்லாம் பாத்துக்கிறாங்க. இங்க என்ன பத்துக் கொழந்தையா இருக்கு?"

கெட்டியப்பனுக்கு அப்போது தோன்றிய யோசனைதான் நாகம்மாளை பங்கு கேட்கத் தூண்டிவிட்டு இவ்வளவு தூரத்துக்கு வந்திருக்கிறது.

தன்னுடைய தாயார் ஊரில் இருந்து வந்திருக்கிறாள் என்றால் எந்தப் பெண்ணுக்குத்தான் சந்தோஷம் இல்லாமல் இருக்கும்? ராமாயி சிரிப்பும் விளையாட்டுமாய்த் திரிந்து வந்தாள். குழந்தையை எடுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சுவாள். அதேசமயம் மேல் உலைத் தண்ணீரை எடுத்துப் புளி கரைத்துக் கொள்வாள். வாசலுக்குப் போவாள். வீட்டுக்குள் வருவாள். அப்படியே தன் தாயாரிடம் கேட்டதும் விட்டதுமாய் இரண்டொரு பேச்சு பேசிக்கொள்வாள். இப்படியாக உற்சாகத்திலே தேக்கித் திளைத்துக் கொண்டிருந்தாள் ராமாயி. ஆனால், நாகம்மாளோ மூன்றாவது மனுஷியைப் போல "வாம்மா" என்று கேட்டதைத் தவிர வேறு வார்த்தையே வைத்துக் கொள்ளவில்லை. என்னவோ பெரிய வியாதி வந்து விட்டவர்களைப் போல பெரிய துப்பட்டியை எடுத்துப் போர்த்தி, ஒரு மூலையில் படுத்துக் கொண்டாள். ராமாயி "சாதத்திற்கு என்ன போடறதக்கா?" என்று பல தடவை கேட்ட பிறகு, "என்னெ கட்டைலே வச்சிட்டா ஆரைப் போய்க் கேட்பாய்?" என்று கடிந்து மொழிந்தாள்.

இந்த வார்த்தைகளைப் பாதி கேட்டும் கேட்காதவள் போல் விஷயம் விளங்காத காளியம்மாள் "ஒடம்புக்கு ஒண்ணுமில்லயே?" என்று நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். சௌக்கியமாய் இருக்கிற தேகத்தில் என்ன தெரியும்? எப்போதும் போலவேதான் உடம்பு இருந்தாலும் காளியம்மாள் "கொஞ்சம் கணகணப்பா இருக்கிறாப்போல் இருக்குது. வட்டச்சேரை, கொத்தமல்லியப் போட்டு கசாயம் வச்சுக் கொண்டு வரட்டுமா?" என்றாள். "எனக்கொரு பண்டிதமும் வேண்டாம்" என்று ஒரே பேச்சில் சொல்லி விட்டு நாகம்மாள் இழுத்துப் போர்த்திக் கொண்டாள். காளியம்மாளுக்கு விஷயம் கொஞ்சம் கொஞ்சமாக விளங்கிற்று. அதற்குள் ராமாயி தன் தாயாரின் கையைப் பிடித்து வெளியே கூட்டி வந்து "இந்த ரண்டு மாசமா இந்தக் கூத்துத்தா. இன்னஞ் சங்கதியெல்லா கேட்டா நீ இங்க பச்சத்தண்ணி கூட வாயில ஊத்தாமலே இப்போதே போயிடுவே" என்று தன் தாயாரிடம் சொன்னது நாகம்மாள் காதிலும் இலேசாகப் பட்டிருக்க வேண்டும். அதனால்தான் என்னவோ போர்வையை எடுத்து எறிந்து விட்டு, களைக் கொத்தையும், கூடையையும் எடுத்துக் கொண்டு "புல்லுக்குப் போறே. நீ எங்காச்சு வீட்டுக்கு வெளீல கால எடுத்து வெச்சே பாத்துக்க!" என்று தன் மகளை எச்சரித்துவிட்டுப் புறப்பட்டாள். "இதென்ன நோவம்மா? வந்தபடியே போயிட்டுதே, திப்புத் திப்புன்னு புல்லுக் கொண்டாரப் போறாளே!" என்று காளியம்மாள் ஆச்சரியப்பட்டாள்.

## 15

காளியம்மாள் வந்து இரண்டு வாரமாயிற்று. அவள் இன்னும் எத்தனை நாளைக்கு இருப்பாள்? எப்போது போகப் போகிறாள்? எதற்காக வந்திருக்கிறாள்? என்ன பேச்சு வார்த்தைகள் நடக்கிறது என்ற விபரம் எல்லாம் மர்மமாகவே இருந்தது. குடும்பத்தில் எவ்வித அதிர்ச்சியும் இல்லை. குமுறல் கொந்தளிப்பு இன்றி அமைதியாகவே சென்று கொண்டிருந்தது. இந்தச் சமயத்தில் அடைமழை காலமும் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தது. புரட்டாதி கழிந்து ஐப்பசி ஆரம்பம் வானவீதியில் எந்நேரமும் சாயை படித்து, கருமுகில்கள் கவிழ்ந்த வண்ணம் இருந்தன. திடீரெனறு மழை கொட்டும். அடுத்த கணம் கம்மென்று நின்றுவிடும். எதையோ நினைத்துக் கொண்டதைப் போல மறுபடியும் சோ சோ எனத் துளிக்கும். இப்படிப் பெய்யும் மழையைப் பார்க்கும்போது யாரோ ஒரு தாய் தன் வாலிப மகனைப் பறிகொடுத்ததை எண்ணி ஏக்கத்தால் பலபல என்று நின்று நின்று கண்ணீர் விடுவது போல் இருந்தது.

இங்ஙனம் அடைமழை சொல்லாமல் கொள்ளாமல் வந்தாலும் பட்டி தொட்டிக்குப் போகிறவர்கள் நிற்கவேயில்லை. ஓலைக் கூடைகளையோ, பனந்தட்டுகளையோ அல்லது கோணிப்பைகளையோ போட்டுக் கொண்டு தங்கு தடையின்றி அவரவர் வேலைகளைக் கவனித்துக் கொண்டனர். வயது வந்த கிராமச்சிறுமிகள் ஆடைகளைச் சரியாகக்கூட மார்பில் போடாமல் சில்லிட்ட சாரலில் இட்டேறித் தடத்தில் செல்லும் காட்சியே காட்சி! ஆட்டு மந்தைகளின் பின்னாலே வேலி ஓரங்களிலோ, காட்டின் நடுவிலோ, வாரி வழிகளிலோ அவர்கள் செல்வதைப் பார்த்தால் எங்கோ மாய உலகத்திலிருந்து வந்த மதன மோகினிகள் திரிந்து கொண்டிருப்பதைப் போல் இருக்கும்.

இக்கூட்டங்களுக்கு மத்தியில் சின்னப்பனும் கலந்திருந்தான். அரை நாழிகை வீட்டில் சாய்ந்து கொண்டிருக்க மாட்டான்.

ஒரு நாள் ராத்திரி சின்னப்பன் சாப்பிடும்போது காளியம்மாள் என்னவோ குசுகுசுவென்று சொல்லிக் கொண்டிருந்தாள். ராமாயி கிட்டத்தில்தான் நின்றுகொண்டிருந்தாள். "எஞ் சொந்தப் புள்ளீயோடை சொல்ல-றாப்பல சொல்றே. இன்னங் கொஞ்ச நாள்ல பாருங்க, நாகம்மா உன்ன கூத்துடப் போறா"

சின்னப்பன் சாதத்தைப் பிசைந்து கொண்டே என்னவோ யோசனையில் இருந்தான். "எங்கிட்ட நடந்துகிறதில இருந்தெ தெரிகிறதே. எல்லாங் கூடி எப்படியோ சதி பண்ணிப் போடுவாங்க. வேணுமானா நெசம் பொய் பின்னால் பாருங்க" என்று காளியம்மாள் மிகவும் தணிந்த குரலில் சொன்னாள். ராமாயி அதையெல்லாம் வேடிக்கை பார்ப்பதைப் போல பார்த்திருந்தாள்.

"அதுக்கு என்ன பண்ணறது?" என்றான் அவன்.

"அதுக்குதா போயிடலாமெங்கிற. போவத்தா வேணுமிங்கிறே" என்றாள் சற்றுப் பலமாகவே. இந்தச் சமயத்தில் நாகம்மாள் உள்ளே நுழையவே, பேச்சு வேறு வழியில் திரும்பியது. "போவத்தா வேணுமெங்கிற. இதுக்கு பட்டறைக்குப் போகாமப் போனா ஆசாரி உருளே செய்தாப் போலத்தா. நாளைக்கு எப்படி ஏத்துப் பூட்டுறது?" என்று அந்த வாக்கில் பேச்சுச் சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், நாகம்மாளுக்கா இந்தத் தில்லுமுல்லெல்லாம் தெரியாது? வார்த்தை துளிகூடக் கேட்காது போனாலே ஊகித்து விடக் கூடியவள். அரையும் குறையுமாகக் கேட்டுக் கொண்ட பிறகு எப்படி மாற்றினால் தான் வேறு ஏதோ என நினைக்கவா போகிறாள்? ஒன்றும் தெரியாதவள் மாதிரி "அதுக்குப் போகாட்டி என்ன? அப்புறமா சொல்லிவிட்டாப் போகுது" என்றாள் நாகம்மாள். ஆனால் ஆசாரி உருளை செய்து இரண்டு நாள் ஆயிற்று என்றும், இன்று காலையில் சின்னப்பன் அந்த உருளையில்தான் ஏற்று இறைத்து வருகிறான் என்பதும் இவர்கள் இருவருக்கும் தெரியாது. நாலு நாளைக்குமுன் கேட்ட விஷயத்திலி-ருந்தே இவ்வளவு பேச்சும் நடக்கலாயிற்று. சின்னப்பன் சிரித்துக் கொண்டே "நமக்கெல்லாம் குளிர் என்றாலே நடுக்கம் எடுக்கிறதே! நம் முத்துக்கு ஒண்ணும் செய்யறதில்லயே!" என்றான். உடனே நாகம்மாள் "முத்து! முத்து!" என்று தெருவுக்கு வந்தாள். இந்த வேடிக்கையை நினைக்க நினைக்க சின்னப்பனுக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்தது. அதே சமயம் மற்ற இருவரும் சிரித்தனர். இச்சிரிப்புச் சத்தத்தைக் கேட்ட நாகம்மாள் தன்னைப் பற்றித்தான் பேசிச் சிரிக்கிறார்கள் என்று எண்ணினாள்.

அன்று இரவு படுக்கையில் படுத்துக்கூட நெடுநேரம் இதைப் பற்றியே யோசித்தாள். 'என்ன பேசியிருப்பார்கள்? அவள் எப்படித் தந்திரமாகப் பேச்சை மாற்றுகிறாள் பார். ஜாலக்காரி! போவத்தான் வேண்டுமாம். போடுகிறாளே சொக்குப் பொடிய. போகத்தான் போகிறாளா? எல்லாம் வித்துக்கிட்டா? ஐயையோ! அப்புறம் என் கதி! சே சே அப்படி ஒன்றும் என்னைத் தெருவில் விடமாட்டார்கள். ஆனாலும் அந்தப் பொல்லாத கிழவி இருக்கிறாளே? என்ன பேசியிருப்பார்கள்? நான் இந்த ஒரு வாரமா எப்படி எல்லாம் என் மனதிலுள்ளதை ஒளிச்சு நடந்து வாறேன். அவளிடம் வெகு விசுவாசமாய் இருக்கிறேனே. என்னையா இப்படித் தூற்றுவாள்! ம்...... யார் கண்டது!'

நாகம்மாள் இரண்டொரு தடவை சண்டை சச்சரவில்லாமல் அவர்களோடு ஒத்துப் போய்விட்டால் என்ன என்று யோசிப்பாள். ஆனால் அங்கே போய்ப் பிச்சைக்காரியைப் போல் 'நீ போடுவாயா? நான் திங்கறே' என்று காத்துக் கொண்டிருப்பதா? இந்த ஜென்மத்திலே இல்லை என்று திடம் செய்து கொள்வாள்.

அந்த இருபது நாளாக கெட்டியப்பனைப் பற்றியும் ஒரு சங்கதியும் தெரியவில்லை. இதையெல்லாம் அவனிடம் தெரிவிக்க வேண்டும் என்கிற ஆசை. ஆனால் ஆசாமி ஊரில் இருக்கிறது இல்லாதது தெரியவில்லையே! யாரையாவது கேட்கலாம் என்றால் தோதாக எந்த நபரையும் காணவில்லை. யாரோ பேசிக் கொண்டார்கள், 'போன வாரம் ஆற்றில் மீன் பிடிக்கையில் இரண்டு பேரோடு சண்டைக்குப் போய் அடித்து விட்டானாம். அந்தக் கலவரத்தில் கால் வழுக்கி விழுந்து கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறிந்து விட்டதாம்' நாகம்மாள் மனதிற்குள்ளாகவே வேதனையில் ஆழ்ந்தாள்.

'கெட்டியப்பனுக்கு கையும் முறியாது, காலும் முறியாது. நெசமா அவன் திக்கசமாட்டத்தான் இருப்பான். அவனுடைய விரோதிகளின் விருப்பமாக்கும் இவையெல்லாம். எதுக்கும் நாளைக்கு மணியகாரனைப் பார்த்தா கெட்டியப்பன் சங்கதி தெரிஞ்சுவிடுது. இதுதான் நல்லது' என்று நாகம்மாள் முடிவு கட்டினாள்.

காலையில் எதிர்பாராத ஒரு சம்பவம் நிகழ்ந்தது. விடிந்ததும் விடியாததுமாய் நாகம்மாள் வெளியே போகும்போது ஒரு சக்கிலி எதிரில் வந்தான். நாகம்மாளைக் கண்டதும் கையைச் சொறிந்து கொண்டே "ரொம்ப சங்கட்டமாய் இருக்குதுங்க" என்றான். நாகம்மாளுக்கு ஒன்றும் புரியவில்லை.

"யாருக்குச் சங்கட்டம்?" என்றாள்.

"சுல்லிவலசிலிருந்து வாறனுங்க. நம்ம ம்..... சின்னக் கவுண்டனுக்குத் தானுங்க" என்றான். அப்போதுதான் நாகம்மாளுக்குச் சங்கதி தெரிந்தது. காளியம்மாளின் மகனுக்கு எப்போதும் நெஞ்சுவலி உண்டு. ஒரு தடவை தூக்க முடியாத பாரத்தைத் தூக்கியபோது உள்ளுக்குள்ளே சுளுக்கி நரம்பு புரண்டு விட்டது.அப்புறம் அதற்கு என்ன செய்தும் பூரண குணமாகவில்லை. இந்தச் சேதி வீட்டில் தெரிந்தவுடன் காளியம்மாள் உடனே புறப்பட ஆயத்தமானாள். அங்குமிங்கும் ஆவிப் பறந்து திரிதலிலிருந்து எவ்விதம் வருத்தப்படுகிறாள் என்பது தெரியும். இருப்பதோ ஒரே ஒரு மகன். அவனுக்கும் இப்படி வந்துவிட்டதென்றால் யாருக்குத்தான் துக்கம் இராது. சிறிது நேரத்தில் பயணமாகி விட்டாள். பத்து பதினைந்து மைல் தூரம் ஒருத்தியை அனுப்புவது எப்படி என்று சின்னப்பன் கூடப் புறப்பட்டான்.

போகும்போது நாகம்மாளிடம் "நேரத்துக்கு நேரம் மாட்டுக்குத் தண்ணி வெக்க மறந்திடாதீங்க. அந்தக் கெரகத்துக்கு என்ன தெரியும்? பத்திரமா எல்லாத்தையும் பாத்துக்குங்க. ஊரிலே வுட்டதும் மாப்புளையைப் பாத்திட்டு வந்திடறேன்" என்று கூறினான். நாகம்மாளும் 'இது மெப்புக்கு ஒப்புக்கோ என்று மனதில் எண்ணிக் கொண்டு "அப்படியே ஆகட்டும். தம்பிக்கு நல்லானா அதுவே போதும்" என்று மரியாதையாக வழியனுப்பினாள்.

## 16

தோப்பிலிருந்து பிரிந்து சென்ற கெட்டியப்பன் விபரம் என்ன? அவன் வாக்குறுதி செய்து தந்தபடி காரியத்தில் கண்ணாயிருக்கிறானா? அவனை நம்பியவள் உருப்பட என்னென்ன காரியங்கள் செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறான்? இவற்றைத் தெரிந்துகொள்ளுமுன் சிவியார் பாளையம் மணியகாரனைப் பற்றியும் கொஞ்சம் தெரிந்து கொள்வது அவசியம்.

மணியகார ராமசாமிக் கவுண்டர் நல்ல பாராசாரியான ஆள். கருவேலங் கட்டை மாதிரி அவர் காலும் கையும் உறுதியாய் இருக்கும். அவருடைய நிறமும் கருஞ்சாந்து போலத்தான். கிருதா மீசைக்கும், அவரது மேனிக்கும் வித்தியாசமே தெரியாது. அவரது முறுக்கு மீசையில் எலுமிச்சங் கனியை நிறுத்தலாம்! என்ன நிறுத்தியே காண்பித்திருக்கிறார்! அவருடைய மார்பு கடப்பைக் கல் போன்று இருந்தது. இன்னும் மற்ற அவயவங்களும் கச்சிதமாக அமைந்திருந்தன. அவர் ஏதாவது தேகப் பயிற்சி செய்கிறாரா இல்லையா என்பது நமக்குத் தெரியாது.

இந்தத் தேகக்கட்டு இவர்கள் வம்சத்துக்குப் பரம்பரைச் சொத்து. இவருடைய தகப்பனாரும் இப்படித்தான் நல்ல ஆஜானுபாகு. எப்போதும் வெளியே போகும்போது நெற்றிக் கட்டுத் தடியுடன்தான் செல்வார். தம்மைக் கண்டவர்கள் குறுகி, ஒடுங்கி, எண்சாண் உடம்பும் ஒரு சாணாகப் போக வேண்டும் என்பது அவரது ஆசை. ஆனால், அவரது ஆசை எவ்வளவு தூரம் பூர்த்தியாயிற்று என்பது நமக்குத் தெரியாது.

அந்தக் காலத்தில் சின்னப்பனின் தந்தை ராமசாமிக் கவுண்டர்தான் ஊரிலே என்ன சச்சரவு நடந்தாலும் பஞ்சாயத்துச் செய்து வைப்பார். இதைக் காண ஊர் மணியகாரருக்குப் பிடிக்கவில்லை. 'என்னடா இது! நம்முடைய மதிப்பு என்ன! அந்தஸ்து என்ன! எந்நேரமும் தோட்டி, தலையாரி வாசலில் காத்துக் கிடக்கிறாங்க. நினைத்தபோது பத்துப்பேர் வா என்றால் வருவார்கள். போ என்றால் போவார்கள். அப்படியிருக்க ஊரிலே இவன் பெரிய நாயக்காரனாய் போயிட்டானா! இவனிடம் போய் பந்தக் காலைக் கட்டிக்கொண்டு நிற்பதாம்! இவன் சொல்றதைக் கேட்பதாம்! என்ன இது' என்று இப்படி நினைத்தார். அத்தோடு ராமசாமிக் கவுண்டரை ஒரு கை பார்த்துவிடுவது என்று தீர்மானித்துக் கொண்டார். இந்தச் சங்கை ஊதிவிட்டு நெருப்பாக்க அவர் அருகே அநேகர் தயாராய் காத்துக் கொண்டிருந்தனர். நல்ல யோசனை சொல்லத்தான் சுலபத்தில் யாரும் முன்னுக்கு வரமாட்டார்கள் என்றால் இப்படி துர்ப்புத்தி சொல்ல ஆட்களா இல்லை! ஏற்கனவே வீராப்பில் இருந்த மணியகாரர் ராமசாமிக் கவுண்டர் தன் எல்லையில் மரம் வெட்டி சுண்ணாம்பு சுட்டதை புறம்போக்கில் மரம் வெட்டிச் சுண்ணாம்பு சுட்டதாக தாசில்தாருக்கு 'றிப்போட்' செய்தார். இதை விசாரித்த மேலதிகாரி உண்மையை அறிந்து 'அப்படித்தான் புறம்போக்காய் இருந்தாலும் மரத்தை வெட்டி, அடுக்கி, சுண்ணாம்புக் களவாயில் போட்டுச் சுட்டு, சுண்ணாம்பு எடுத்து, புதுவீடு கட்டும் வரையிலும் நீர் என்னையா செய்து கொண்டிருந்தீர்? இதுதானா வேலை பார்க்கிற லட்சணம்!" என்று மணியகாரருக்கே ஐந்து ரூபாய் அபராதம் விதித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பூசலுக்குப் பிறகு எவ்வளவோ குட்டிக் கலவரங்கள். அப்போது தோன்றிய கட்சி, பிரதி கட்சிதான் இன்னும் ஊரிலிருந்து வருகிறது. தன் தகப்பனார் காலத்தில் தோல்வி மேல் தோல்வியானாலும் தானாவது வெற்றி கண்டுவிட வேண்டும் சின்னப்பனையும் அவன் பங்காளி-களையும் பிரித்து விட்டு மட்டந்தட்ட வேண்டும் என்று கங்கணங் கட்டிக் கொண்டிருந்தார் மணியகாரர். இதில் அவர் அநேகமாக வெற்றியும் அடைந்து விட்டார். இப்பொழுது சின்னப்பனை என்ன செய்தாலும் கேள்வியில்லை. அதற்குத் தகுந்தாற்போல நாகம்மாள் சங்கதி வேறு கிடைத்திருக்கிறது. எப்போதும் மணியகாரருக்கு யோசனை சொல்வ-தற்கு அநேக மந்திரிகள் உண்டு. அவர்களில் முதன்மையானவன் நாராயணமுதலி. இவன் புழுகுணி. குண்டுப் புரட்டன். எங்கு என்ன நடந்தாலும் துளி விடாது வந்து சொல்லி விடுவான். இதற்கு இப்படிச் செய்ய வேண்டும், அவர்கள் சங்கதி அப்படி, அது இது என்றெல்லாம் யோசனை சொல்வான். மற்றவர் யோசனையானால் மணியகாரர் நிராகரித்து விடுவார். ஆனால், நாராயணசாமி முதலியார் விஷயம் அப்படியல்ல. பொட்டுக் குறித்தாற் போல் சொல்லுவான். எங்கே கல் எறிந்தால் எந்தப் பழம் விழும் என்ற சங்கதி எல்லாம் தெரிந்தவன். சாதாரணமாகக் கோட்டு விஷயங்களில் அபாரத் திறமை. மற்றும் சாட்சிக்குச் செல்லும்போது சாப்பிடுவதற்கு எந்த ஓட்டலுக்குப் போனா ரொம்ப திவ்வியமா இருக்கும், குறிப்பிட்ட மனிதர்களை அங்கு அழைத்துச் செல்வது என்பதெல்லாம் மனப்பாடம். அதனாற்தான் மணியகாரர்கூட அதே 'என்னப்பா, நம்ம நாராயண சொன்னா எள்ளத்தன மாறுமா? அவெ நமக்காக வேல வெட்டி எல்லா வுட்டுட்டு வாறான்' என்று சொல்லுவார்.

வேலை என்ன பறக்கிறது என்று நினைத்துக் கொண்டே "உங்கள விட வேல என்னுங்க பிரமாதம்? நீங்க வரச்சொல்லிட்டா என்ன இருந்தாலும் ஒதறிப் போட வேண்டியதுதானுங்க" என்று சமயம் அறிந்து பேசுவான். "அதுதா நீ இல்லாமலே நா ஒண்ணும் செய்யறதில்லயே!" என்று கடகடவென்று சிரித்துக்கொண்டே மணியகாரர் சொல்லுவார். அதுதான் சமயம் என்று ஐந்து, பத்து கடனாகக் கேட்டு வாங்கிக் கொள்வான். அப்புறம் திருப்பிக் கொடுக்கிறத்துக்குத்தான் இன்னும் ஐந்தோ பத்தோ வேண்டியிருக்கிறதே! அதையும் மணியகாரரிடமே வாங்க வேண்டி இருப்பதால், அவரும் முதலியாரிடம் பணம் திருப்பிக் கேட்பதில்லை.

இன்று மணியகாரர் மந்திராலோசனை சபை கூடியிருக்கிறது. அங்கே நாராயணசாமி முதலியாருக்கு அருகில் கெட்டியப்பன் கம்பீரமாக வீற்றிருக்கிறான். வழக்கமாப் பேசும் ஆசாரத்தில் இன்று கூடவில்லை. ஏனென்றால், வாசலில் நின்றாலும் பேச்சுச் சத்தம் கேட்கும். உட்கார்ந்திருப்பதும் வெளியில் தெரியும். ஆகையால் இரகசியமாக இருக்கட்டும் என உட்புற அறைக்குச் சென்று விட்டார்கள். பேச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பமாயிற்று. "என்ன கேட்டீங்ன? சங்கதி எப்படி இருக்குது? காரியம் சல்தியா நடக்காது போலிருக்குதே?" என்றார் மணியகாரர். "அதென்னங்கண்ணா அப்படிச் சொல்லுறீங்க! மமிட்டிப் புடியில ஒரு தட்டுத் தட்டினா காரியம் நடக்கிறாப்பல இருந்தா அதுக்குள்ள கக்க வச்சிருக்கலாம்" என்றான் கெட்டியப்பன். "ஆமா. இதுதா உங்களுக்குத் தெரியும். நீங்க கக்க வக்கவு, வாந்தி எடுக்கவுந்தான் செய்வீங்க. காரியத்தில பின்ன என்ன சாதிப்பீங்க?" என்று சிரித்துக் கொண்டே முதலியார் பேச ஆரம்பித்தார்.

"அதுக்கு என்ன பண்ணித் தொலக்கிறதுங்க? நான் இன்னும் அந்தப் பக்கமே போகலியே!"

"இப்படிப் போகாத ஆளுக்கு இந்த வேல எதுக்குன்னு கேளுங்க. இவங்கள நம்பித்தானே நாம இந்தக் காரியத்தில இறங்கியிருக்கோம். இல்லாட்டி எங்களுக்கென்ன இதில அக்கறை?" என்று நாராயணசாமி மணியகாரரைப் பார்த்து கண்ணடித்துக் கொண்டே சொன்னார். முதலியார் இதைப் பல தடவை மணியகாரரிடம் கூறியிருக்கிறார். "எதற்கும் நாம்தான் என்று காட்டிக்கொள்ளக்கூடாது. எவனோ ஒருவனை முன்னுக்குத் தள்ளிவிட்டு நாம் பின்னால் இருந்து வேலை செய்ய வேண்டும். இதை அப்படி அப்படி என்று விடக்கூடாது" என்று அநேக தடவை எடுத்துச் சொல்லியிருக்கிறார். "என்ன கெட்டியப்பா, தலையச் சொறியிறாய்?" என்றார் மணியகாரர்.

"அண்ணா, அதுதான் சொன்னனுங்களே. நான் போகலாமுனுதா இருந்தே. அதுக்குள்ள அவெ மாமியா வந்திருக்கிறா, போவட்டும். அப்புறம் விசயம் தெரியாமலா போயிடும்? என்று சும்மா இருந்திட்டே"

"செரி. எப்படியும் நாளைக்குப் போய்த் தெரிஞ்சுகிட்டு வந்திடுங்க. அதற்கு அப்புறந்தா யோசிக்கணும். அதெ தெரியாதுக்கு முன்னே பேசுவதில் பிரயோசனமில்ல" என்றான் நாராயணசாமி.

"ஆமா. அப்படித்தா செய்" என்றார் மணியகாரர். இவர் நாராயண சாமியின் பேச்சுக்குப் பின் இப்படித்தான் சொல்வது வழக்கம்.

"ஆனா நாகம்மா ஏதாச்சுக் கேட்டா என்ன சொல்றது?" மணியகாரர் நா அசைப்பதற்குள் நாராயணசாமி "இங்க கையோடு கூட்டீட்டு வரமுடியாதா?" என்று அவசரமாகக் கேட்டான்.

"கூட்டி வாறதா? இப்படி நொடிச்சா வர மாட்டாளா?" என்றான் கெட்டியப்பன்.

"அப்ப செரி" என்றான் நாராயணசாமி.

"இங்கெதற்கு....." என்று கெட்டியப்பன் ஆரம்பிக்கையிலேயே "நா சொல்றே" என்று இருமிக்கொண்டே ஒரு கிழவர் அங்கு வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

திடும் பிரவேசமாக தங்கள் பேச்சுக்கிடையே ஒருவர் பிரவேசிக்கவே, இருவரும் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தனர். மணியகாரரர் முதலிலேயே பார்த்துக் கொண்டதால் ஆச்சரியப்படவில்லை. ஆனால் தானுண்டு, கட்டிலுண்டு என்று படுத்திருப்பவர் ஏன் எழுந்து வந்தார் என்பதைப் பற்றியே அவர் ஆச்சரியப்பட்டார். அப்பெரியவர் மணியகாரரின் பெரியப்பா. தன் காலத்தில் அமர்க்களமான ஆட்டபாட்டத்துடன் வாழ்ந்தவர்தான். இன்று எல்லாம் அடங்கி ஒடுங்கி உட்கார்ந்து விட்டார். வேளா வேளைக்கு வீட்டில் உள்ள யாரோ ஒருவர் கிண்ணத்தில் சாதத்தைப் போட்டு வைத்து விடுவார்கள். அவர் உட்கார்ந்த இடத்திலே அதை வாயில் போட்டுக் கொண்டு, அப்படியே படுத்துவிடுவார். கயிறுகள் அறுந்து தொங்கும் கட்டிலும், இரண்டு தலையணையும், ஒரு கிழிந்த துப்பட்டியுமே அவருடைய சொத்து. எதிர்பாராத விதமாக அவர் வந்து சேரவும், "ஏது, உங்களுக்கும் பேச்சில ருசி வுழுந்திட்டுது போல் இருக்குது. பக்கத்திலே வந்து இப்படிப் பாயிலே உட்காருங்க" நாராயணசாமி சொன்னான்.

"இல்லப்பா. இப்படியே இருக்கட்டும். எங்கிருந்தா என்ன எல்லா ஒண்ணுதானே! என்னவோ கெட்டியப்ப சொன்னானே?" என்றார் கிழவர்.

"ஏனுங்க மாமா, நீங்க சொல்றதா வந்தீங்களே! அப்புற எங்களக் கேக்கிறீங்களே?" என்றான் கெட்டியப்பன்.

"ஆமா, நாந்தா சொல்ல வந்தே. எம் வார்த்தைய கேட்டா கேளுங்க, கேக்காட்டிப் போங்க. ஆனா பாக்குக் கடிக்கிற நாழி உக்காந்தா அதுவே போதும்" என்றார்.

"நாங்க என்ன ஓட்டத்திலா நிக்கிறோம்? தாராளமாகச் சொல்லுங்க. அவசரம் ஒண்ணுமில்ல" என்று முதலியார் கூறவும், பெரியவர் தொடங்கினார்.

"கெட்டிப்பா, பூனயாட்டப் படுத்திருந்தாலும் என்னென்ன நடக்குதுங்கிறது தெரியாமப் போகல்ல. நாங் கேட்டுக்கிட்டுத்தா வர்றே. உங்க பேச்சு அப்படியே காத்தில கசம்பில விழாமப் போகல. ஆனா இந்தக் கொட்டு முழக்கெல்லா என்ன ஆகுமின்னு யோசிச்சுப் பாருங்கடா! கெட்டிப்பா, இப்படி முன்னுக்கு வந்து உக்காரு..... எனக்குக் கிட்டத்தில வா..... இன்னும் பக்கத்தில வந்து உக்காரு..... சும்மா சிரிக்காதே. பேசாம வா இப்படி"

மணியகாரருக்கு இது வேடிக்கையாக இருந்தது. மாமனுக்கு என்னவோ பல்லுப் பரபரப்பு பேச வந்திட்டார் என்று கெட்டியப்பன் நினைத்துக் கொண்டான். நாராயணசாமிக்கு அவருடைய பூர்வாசிரம வாழ்க்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் தெரியும். இப்போது வேதாந்தம் பேச வந்துவிட்டார். எல்லாம் தொலைக்கிறதுக்கு முன் இந்த ஞானோதயம் உண்டாகவில்லை-யாக்கும் என எண்ணி குறும்பாகச் சிரித்துக் கொண்டு, "சொன்னா கேளுங்க. பெரியவங்க சொல்லத் தட்டலாமா? முன்னுக்குப் போங்க" என்று கெட்டியப்பனுக்கு ஒதுங்கி வழிவிட்டான்.

பெரியவரும் புன்னகையுடன், "அடே கெட்டிப்பா! உம் மண்டெல என்னடா இருக்குது? நீ மாமா மச்சானா இருந்தாலும் என் புள்ள மாதிரி. அடே புடே என்னா கோவிச்சுக்குவாயா என்னப்பா?" என்று மென்று விழுங்கினார்.

"இல்லீங்க மாமா, இல்லீங்க மாமா, நீங்க சொல்லுங்க" என்று கெட்டியப்பன் நகர்ந்து உட்கார்ந்தான்.

பெரியவருக்குச் சற்று உற்சாகம் அதிகரித்தது. ஒரு தரம் கனைத்துக் கொண்டு "கேளடா ராஜா! மலெ போலெ மண்டிக் கெடந்த கள்ளிகள் எல்லா மாயமா மறைஞ்சது பார்த்தாயா? நாம எத்தண நா கத்தியிலும் அரிவாளிலும் வெட்டித் தள்ளியும் வெட்ட வெட்டக் கொழுத்தது. எப்படிப் பூண்டற்றுப் போச்சுப் பார்த்தாயா? கள்ளியெ நாசம் வெள்ளப் பூச்சியப் பாத்திருப்பாய். அது கடுகாட்ட சின்னஞ்சிறுசாத்தானே இருந்தது. நம்முடைய கத்தியு, கவையு முடிக்க முடியாத வேலையெ வெகு சுளுவில பூச்சி முடிச்சிட்டது. என்ன கெட்டிப்பா! இண்ணக்கி ஒரு ஆனையைக் கூட தூக்கி அடிக்கலாமுனு உனக்குத் தோணுது. மீசையை முறுக்கி வுடறாய்! கையைக் காலைத் தட்டறாங்க! வாய்ப் பேச்சு வாயிலிருக்க கை வைக்க ஆரம்பிக்கிறாய். ஆனா இந்த நல்ல ரத்தம் நொடியில மறைஞ்சுடும் அப்பா! ஒரு பூச்சி வேண்டா, புழு வேண்டா. சும்மா இருக்க இருக்க மாயமாப் போயிடும்" வயோதிகர் சற்றுப் பேச்சை நிறுத்தினார். அவருடைய உணர்ச்சிகள் மேலுக்கு மேல் பொங்கி வருவது தேகத்து நரம்புகள் புடைப்பதிலிருந்தே நன்றாகத் தெரிந்தது. அருகிலிருப்பவர்கள் வாய் திறக்கவில்லை. கிழவனார் தொடர்ந்து பேசினார்.

"கெட்டிப்பா... உனக்கு மாத்திரமில்ல. எல்லோருக்குந்தா சொல்றே. ஏண்டா கெட்டுப் போகிறோம், உண்டு உடத்தியா கெடறோ? சீர் சிறப்பிலா நாசஞ் செய்யிறோ, இன்னொருத்தனுக்கு ஒவகாரம் செய்தா கெட்டுப் போகிறோ? இதெல்லா கொஞ்ச யோசிச்சுப் பாரு"

"அடேயப்பா..... ஊருக்கு மேற்கால இட்டேரி எப்படி அசங்கியமா, ஆபாசமா இருக்குது பார்த்தியா! அதுவு இந்த மழை காலத்தில, எல்லா ஒரே துர்நாத்தம். மூக்கைப் பிச்சுக்கிட்டு போற மாதிரி வீசுலெ! அதெ சுத்தம் பண்ண ஒரு புள்ள பொறக்கலையெ! இன்னுங் கேளு, ஊர்ச் சாவடிக் கட்டிடம் கல்லுக பேர்ந்து ஆட்டங் கொடுத்துட்டுதே! அதெ எடுத்துக் கட்ட எவனாச்சும் முன்னுக்கு வர்றானா? இல்ல..... இல்ல..... பின்ன என்ன? எல்லாம் ஒரே கோளு, குண்டுணி கட்சிதா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தக் கச்சியிலெ நம்மவங்க அழிஞ்சு போனது. கச்சேரிக்கும் வூட்டுக்கும், வூட்டுக்கும் கச்சேரிக்கும் நடந்துகிட்டிருந்தா, காட்டுச்சங்கதி என்னாகுமினு பாருங்கடா! இதில 'ரோட்டல்' சோத்துக்கு பொய் சாச்சி சொல்லப் போறவங்க எத்தன பேர்? நானும் எத்தனையோ பட்டு மாஞ்சுக்கிறே. அடடா... என்ன பாவம்! 'ரோட்டல்' சாப்பாட்டை எண்ணிப் பொய்யைச் சொல்றதா? அட, ஓங்களுக்கு ஏழேழு சென்மங்களுக்குத்தா சொர்க்க கெடக்கிமா?"

அவர் வருத்தத்துடனும் ஆத்திரத்துடனும் பேச்சை நிறுத்தினார். "என்னங்க மாமா, இனி ஒண்ணும் பாக்கி இல்லீங்களா?" என்றான் கெட்டியப்பன். மற்றிருவரும் தாங்காது சிரித்து விட்டனர். பெரியவர் முன்னிலும் சாந்தமாகவே உட்கார்ந்தார். வந்த ஆத்திரம் கூட ஏனோ அடங்கி விட்டது. அவர் என்னவோ சொல்ல வாயெடுத்தார். அதற்குள் கெட்டியப்பன் "ஏனுங்க மாமா, இத்தனை விஷயத்த வெச்சுக்கிட்டா இவ்வளவு நாளா பேசாதிருந்தீக!"

"அட போடா பதரே! செவிடன் காதில சங்கு ஊதின மாதிரி. உங்கிட்ட நீதி ஓதி என்ன புண்ணியம். சும்மா படுத்திருந்தாலு களைப்புக் காணாது" என்றார் சலிப்போடு.

"அதுதானுங்க உங்களுக்கு நல்லது" என்றான் நாராயணசாமி. "ம்.... முதலி லேசுப்பட்டவனா? எந்த முண்டச்சியோ தண்டுவனோடு கெட்டுப் போறதுக்கு பெரிய குடும்பத்த தெருப் பண்ணுறதுக்கு யோசனை சொல்லப்பா... சொல்லு!" என்று பெரியவர் முடிக்குமுன்னே, "நீங்க விசயம் தெரியாம பேசறீங்க" என்று நாராயணசாமி சற்று அழுத்த-மாகவே சொன்னான்.

மணியகாரரும் "ஆமாங்க, நீங்க போய்ப் படுத்துக்கொள்ளுங்க" என்றார்.

அதே சமயம் காலடிச் சத்தம் கேட்கவும், மூவரும் திரும்பிப் பார்த்தனர். வெகு வேகமாக அங்கு வந்த செங்காளி "காளியம்மா ஊருக்குப் போன சமாசாரம் தெரியுமா? அவளொட சின்னப்பனும் போயிருக்கான்" என்றான்.

"அப்படியானால் நல்ல வேட்டைதான். நான் நாகம்மாளைக் கண்டு வாறேன்" என்று கெட்டியப்பன் ஒரு குதியோடு போனான்.

"செரி, நாம தோட்டப்பக்கம் போவோம்" என்று நாராயணசாமியுடன் மணியகாரரர் எழுந்தார்.

## 18

சிவியார் பாளையத்தில் மற்றெந்தப் பாகத்தையும் விட கிழக்குப் பாகத்தில் தான் அழகு மலர் சொரிந்து நிற்கிறது. பிஞ்சு பூவோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலுங்கும் பச்சை மரம் போலும், நுரை அலையோடு கூடிய நிறை நதி போன்றும் அங்குதான் குளிர்ச்சி செழித்திருக்கிறது. குடை பிடித்தாற் போல குவிந்திருக்கும் கருவேல மரங்களும், மலர் குலுங்கும் ஊஞ்ச மரங்களும் பூச்சொரிந்து வேலியைச் சுற்றியிருக்கும் கொடி வரிசைகளும், ஓயாது மணங் கலந்து வீசும் ரஞ்சிதத் தென்றலும் சேர்ந்து அப்பிரதேசத்திற்கு அத்தனை வனப்பை அளித்திருந்தது. வழிநெடுக மெது மணல்; அடியெடுத்து வைக்க ஓசை கேளாது. அவ்வழி நடக்கையில் பாதத்திற்கு மட்டுமல்ல, மனத்திற்கே ஒரு உற்சாகம் பிறக்கும். சுற்றிலுமிருக்கும் அச்சுகச் சூழலில் நாம் நம்மையே மறந்து விடுவோம்.

இப்போது அந்த வழியாகத்தான் மணியகாரரும், நாராயணசாமியும் களத்துக் காட்டுக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்கள் சுவாரசியமாகப் பேசிக் கொண்டு போனார்களே ஒழிய, இக் காட்சிகளைக் கண்டு களிக்கவில்லை. ஒருவேளை தினம் பார்ப்பதால் சலிப்பு ஏற்பட்டு விட்டதாக்கும்!

நாராயணசாமி உறுதியான குரலில், "சீக்கிரமா முடிவு கட்டீடோணும். நீங்க சும்மா அப்படியே அவளிடம் அசைச்சு வைங்க. அந்தப் பூமி நம்ம விட்டு எங்க போயிடும்? நம்ம களத்துக் காட்டோரம் இருக்குது. பக்கத்து எனம், எனத்தோடயே சேர்த்திடட்டும். நா எல்லா வழி செய்து விடறே. அவெ எங்க நம்மெ வுட்டு பறந்திடப் போறாள்?" என்றான்.

"ஆமாப்பா! அதெ எப்படியாச்சு வாங்கினாத்தா புல்லுக்குப் பஞ்சம் இருக்காது. மாடு கன்னுகள கொறையிலெ கட்டிடலாம். தீவனத்திற்கு அடித்தட்டறபோது வண்டியைக் கட்டிக்கிட்டுப் போகவேண்டியதில்ல"

"அப்படித்தா செய்யணும். வசப்பட்டா ஒட்டணக் கூப்பிட்டு வெட்டுக் கூட வுட்டுப் பாக்கோணு" என்றான் நாராயணசாமி.

"கெணத்து சமாச்சாரமெல்லா நெலெத்த வாங்கிறத்துக்கு முந்தியேவா? இது தானப்பா எருமை வாங்கிக் கட்டின கதெ" என்று மணியகாரர் சொல்லிச் சிரித்தார்.

"நல்லாச் சொன்னீங்க!" என்று கூடச்சேர்ந்து கை தட்டிக்கொண்டே சிரித்தான் நாராயணசாமி.

மணியகாரர் உற்சாகமாக "என்ன நாராயணா, எல்லாஞ் சரிதா. நாகம்மா பக்க நாமெல்லா நின்னு, கடைசியில ஒண்ணும் எடுபடாது போனா என்ன செய்யறது? அவ்மானமாவல்ல போயிடும்?" என்றார்.

"ஒருக்காலும் போகாது. நம்மை மீறி அப்படிப் போயிடுமா?"

"போகாதுன்னா கையில புடிச்சு நிறுத்திற விஷயமா? சின்னப்பன் கோட்டு வரையிலும் பாக்கிறதா இருந்தா.... செபம் சாயுமா?" என்றார் மணியகாரர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சின்னப்பனாவது கோட்டுக்குப் போறதாவது! கனாவில் கூட நெனக்க மாட்டா. பத்துப்பேரு பார்த்து நாம சொல்றதுதா சட்டம். இதுக்கு அப்பீலே கிடையாது."

"அப்படிச் சொல்லலாமா?"

"ஏன் கூடாது? என்னதா செய்வான் சொல்லுங்க. அப்படி வித்திட்டுப் போறதானாலும் எவன் வாங்க வருவா? எங்க விரல் விடுங்க பாக்கலாம்" என்று அபாரக் கோபம் வந்தவன் போலக் கேட்டான்.

"ம்..... பார்ப்போ" என்று கூறிவிட்டு "அதோ அங்க பாரப்பா! ஆரு நம்ம ராமசாமியா எதிர்ல வாறது?" என்று கைநீட்டிக் காட்டினார்.

"நாராயணசாமி பார்த்துவிட்டு "என்னமோ தெரியல்ல. ஆனா ராமசாமியின் சாயல் இருக்குது. இருந்தாலும் கால் எடுத்து வைக்கிறதையும் தலையை அசைக்கிறதையும் பாருங்க. ராமசாமி இப்படியா நடப்பான்?" என்றான்.

இவர்கள் இப்படிப் பேசப் பேச அந்த மனிதரே அருகில் வந்துவிட்டார். அவரை கண்டவுடன் மணியகாரர் மரியாதைக் கும்பிடுடன் அமோகமாக வரவேற்றார். "அடடா! எங்களையெல்லா மறந்திட்டீங்களா? ஏ உங்க ஊரை வுட்டு அக்கட்டாலெ வாறதில்ல? இண்ணைக்கி மழெ கட்டாயம் வரும்" என்றார்.

"என்னக் கண்டா மழெ வந்தா நித்தம் உங்க ஊருக்கு வந்திட்டு போறே! என்ன முதலியாரு உங்க மணியகாரர் சொல்றதை பாத்தியா?" என்றார் வந்தவர்.

"எந்தப் புத்தில எந்தப் பாம்பு இருக்குமோ? நீங்களுந்தா வந்து பாருங்களே. ஒருவேளை வெங்கமேட்டார் வந்தா மழையுந்தா வருமோ என்னமோ" என்று நாராயணசாமி சொல்லவும், கடகடவென அங்கே சிரிப்பொலி கிளம்பியது. அதற்குப் பின் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தனர். அப்புறம் "ஏனப்பா நீங்க இத்தனை பேர் இருந்தும் சின்னப்ப நெலத்தை வெளியூரானுக்கு விக்க விடுவதா? நீங்க ஆராச்சு வாங்க ஐவேசு இல்லயா?" என்று வெங்கட மேட்டுக்காரர் கேட்டார்.

"என்ன சொன்னீங்க?" என்று இருவரும் ஏக காலத்தில் கேட்டனர். இவர்களுடைய ஆச்சரியத்தையும், முகத்தில் பரவிய திகைப்பையும் கண்டு வெங்கமேட்டார், "உங்களுக்கு அப்படியானா இந்தப் பேச்சே எட்டலியா?" என்றார்.

முதலியார் விடாது "யாரோ சொன்னாங்க. ஆனா அந்த ஆளுக்கு வாங்க மொதல் ஏது எண்ணு நெனைச்சோ" என்றான்.

"மொதல் ஏதா? என்னங்க, நம்ம சரளைக் காட்டாரு மவெ குட்டியப்பை இப்போ தணிவாவா பேசுதுங்க! இந்த வருச பருத்தியிலெ ரண்டு காகிதத்துக்கு மேலே அடிச்சுட்டானுங்களே!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியா! சரளைக் காட்டார் மவெ வாங்குறாங்குன்னு உங்ககிட்ட ஆரு சொன்னது?"

மணியகாரரின் குழப்பத்தையும் கலக்கத்தையும் கண்ட முதலியார், கோபப் பார்வையுடன் கண்ணடித்துக் கொண்டே, "இப்படித்தா கேளா மாதிரி பேச்சுக் கிளம்பும். அப்பறம் அடங்கிப் போவும்" என்றான். "எப்படியப்பா! எங்கிட்டெயே குட்டியப்பன் சொன்னான். இப்பொ அவெ யோசிக்கிறதெல்லா பூமியப் பத்திக் கூட அல்ல. சின்னப்ப அண்ணன் வூட்டுக்காரி குறுக்கே பூந்துகிட்டு விளாறு வுடறாளா. இதுக்குத்தா புடியா பேச்சுக் குடுக்க மாட்டீங்கிறா"

இதைக் கண்ட இவர்கள் இருவரும் இன்னும் பூரா விபரங்களையும் கிரகிக்கலாம் என "ஊர்ல ஒரு ஏழை எளியவ இருந்தா, இருப்பதா எங்காச்சு ஓடிப்போவதா? உங்களுக்கே தெரியுமே, சின்னப்ப ஆளோடு ஆளாக இருந்தவெ தானே! அவன் அண்ணன் தோணி கஷ்டப்பட்டு சம்பாதிச்சான். அவெ குடுத்து வெக்காம போயிட்டா. என்னமோ இருக்கிற வரையிலு ஒழுங்கா இருந்தா செத்தவனைப் பத்திப் பேசி என்ன பய? இல்ல.... இதை எதுக்கு சொல்ல வந்தேன்னா, அப்படிப் பொழைச்சவ புள்ளையும் பொண்டாட்டியு திண்டாடடும்னு வுட்டுட்டு எல்லாத்தையும் சின்னப்பன் தானே சுருட்டிட்டுப் போவட்டும் எங்கிறீங்க, அவ்வளவுதானே!" என்றார் மணியகாரர்.

வெங்கட மேட்டார், "அப்படியும் இந்த அக்ருமம் நமக்கு வேண்டாம். ஏதோ கால் அரை அவளுக்கும் ஒதுக்கிடச் சொல்லலாம்" என்றார்.

"இதென்ன தானம் கொடுக்கிற மாதிரி! அவெ ஏ அப்படி வாங்கிக் கொள்றா? தன் புருஷ சொத்தில் பாதி வந்தா வரட்டும். இல்லாட்டி வேண்டியதில்லன்னு அவெ சொல்லீட்டிருக்கிறா" என்றார் மணியகாரர்.

"வேண்டாம்னா அதெயு எழந்திட்டுப் போவறதா? அவெ ஒரேடியா இல்ல என்கிறான்னு வச்சுக்குவம் சின்னப்ப கிட்ட இவெ எப்படி வாங்குவா?"

"அதென்ன நீங்க அப்படிச் சொல்றீங்க? எப்படியும் நாயம் இவளுக்கு இருக்கிறப்போ வாங்காமலா' வுடுவா? அதுக்கெல்லாந்தா நீங்க இருக்கிறீகளே! என்றார் மணியகாரர்.

வெங்கட மேட்டார் "நாங்க இருந்து என்ன சாமி செய்யிறது? இவளுக்கு பங்கு பாகை சரியா கொடுக்கணுமின்னா கேட்டவங்க சிரிப்பானுங்களே"

மணியகாரர் சற்று வேகமாக "நீங்க ஒரே பேச்ச திருப்பித் திருப்பிப் பேசறீங்க. கதெயச் சொல்லி விடுவிச்சா கேக்க ஒத்துக்குவானா மாட்டானா? சின்னப்ப குறுக்கே கெடந்த துரும்பெ எடுத்தவன் அல்லவே......"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமா, ஆமா அதுவும் அப்படித்தா. எப்படியு சின்னப்ப போயிட்டா கச்சே கிச்சே ஒண்ணும் இருக்காது" என்று வெங்கமேட்டார் கூறி முடிப்பதற்குள், "இப்போது இருந்துதான் என்ன அரக்கிட்டான்?" என்றார் முதலியார்.

வெங்கமேட்டார் "அப்படியா! கட்சின்னு பேருக்கு ஒருத்த இருந்தாக் கூடக் கட்சிதா. அவெ பங்காளிகளும் நாலு பேர் அவன வுட்டுடு-வாங்களா? என்னமோ அவெ மச்சின கெட்டிக்காரனா இருந்தா அவெ ஏம் போகிறா? அது போகட்டும். இந்தக் கெட்டியப்ப அங்க கொஞ்ச எடவாடுங்கிறாங்களே! கடசீல பொம்பளை முண்டெப் பேரைக் கெடுத்திட்டா. இந்த எழவு அசிங்கயமல்லெ!" என்றார்.

"நீங்களே இப்படி ஆரம்பிச்சுட்டா அப்புற ஆர் என்ன சொல்வி இருக்குது? நாகம்மா சங்கதி உங்களுக்குத் தெரியாதா? இத்தென வருஷமா இல்லாம இனியா அவ அப்படித் திரியப்போறா. சே சே என்னத்தைச் சொல்றது போங்க" என்றார் மணியகாரர்.

"ஆமாமா! அந்த மசப்புள்ள அப்படியெல்லா போகமாட்டா. செரி செரி எல்லா பார்ப்போம். இன்னிக்கு சாவகாசமா பேச முடியல. இன்னொரு நாளைக்கு வர்றே" என்றார் வெங்க மேட்டார்.

"எங்களுக்கும் நேரமில்ல. அடடா! பொழுதே போயிட்டுதே. சரி போய் வாங்க" என்று இருவரும் மேலே நடந்தார்கள்.

## 19

சின்னப்பன் ஊரிலிருந்து வந்துவிட்டான். ஆனால், தான் போய் வந்த விபரத்தையும் மைத்துனன் உடல்நிலை பற்றியும் இரண்டே வார்த்தை-களில் சுருக்கமாகக் கூறினான். வேறு அதிகப்படியாக ஒன்றுமே சொல்லவில்லை. அவன் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த ராமாயி, எப்படியோ, ஏதோ எனக் கலங்கினாள். ஆள் சோபையற்று இருப்பதையும், முகம் கருகி வழிந்து, கண் உள்ளே போய் கவனம் இல்லாது இருப்பதையும் கண்ட அவள், ஏதாவது தன்னிடம் சொல்ல அஞ்சி மறைக்கிறானோ என்றுகூட நினைத்தாள்.

இரவு படுக்கைக்குப் போகு முன்பு கணவனிடம் "எப்படியிருக்குது? தேவலாமா?" என்றாள். இதே கேள்வியை அவனிடம் எண்ணற்ற முறை கேட்டிருக்கிறாள். ஆனாலும் அவள் மனம் என்னவோ சலித்துக் கொண்டே இருந்தது.

"இல்ல அப்படியேதா இருக்குது"

"அப்படின்னா இன்னும் நோக்காடு நீங்கலியா? எப்படித்தா இருக்குது, நல்லாச் சொல்லுங்கோ, கட்டில விட்டு எழுந்திருக்க முடியல்லையா? சோறு தண்ணி குடிக்கிறானா என்ன?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதெல்லாம் எப்போதும் போல உங்கறான். ஆனா நரம்புதா அடிக்கடி பளீர் பளீர்னு தொந்தரவு கொடுக்குது. படுத்தாலும் உக்காந்தாலும் பொறுக்க முடியலீங்கிறா" என்று சின்னப்பன் சொன்னான்.

ராமாயிக்கு வருத்தம் தாங்க முடியவில்லை. சகோதர வாஞ்சையில் அவள் உள்ளம் பொருமிக் கொண்டிருந்தது. எங்கோ தூரத்தில் நெளிந்து புரண்டு அவஸ்த்தைப்படுகிற அவள் தமையனுடைய சங்கடத்தைக் கற்பனை பண்ணி வேதனை அடைந்தாள். அவள் கண்களில் கண்ணீர் திரண்டது.

விம்மலுடன் "இப்போ ஏதாச்சும் பண்டிதம் பாக்கிறாங்களா? எப்படித்தா இருக்குது?" என்று கேட்டாள். சின்னப்பனுக்கு இக் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. ஓயாது எப்படி இருக்கிறான், எப்படி இருக்கிறான் என்றால் எதைச் சொல்வது! "ஒண்ணும் செய்யாது" என்று மட்டும் சொன்னான். அதே சமயம் 'கடிகடீரென்று' தலைக்கு மேல் கூரையிலிருந்து பல்லி சொல்லிற்று. இருவர் மனத்திலும் சுருக்கென்றது. ஏனெனில், அந்த இடத்திலிருந்து சொல்லும் பல்லி மகா கெட்டது என்று சொல்லுவதுண்டு.

"ஐயோ! நச்சுக் கெரகம் சொல்லுதே" என்றாள் ராமாயி.

சின்னப்பன் "உச்சத்தில் சொன்னா அச்சமில்ல. நல்லதுதா்ன்" என்றான் சற்றுத் திடமாக.

அவளுக்கு உடனே போய்த்தான் பார்த்துவிட்டு வந்திடலாமே என்று ஆவல். ஆனால், தலைக்குமேல் காத்திருக்கும் வேலையெல்லாம் தான் அவளுக்குத் தெரியுமே! பருத்தி எடுத்து முடிப்பதற்குள் கம்மங் காடு விதைப்பு வந்துவிடும். இந்த ஒரு வாரமாக சின்னப்பன் இல்லாததினால் எவ்வளவோ காரியங்கள் தடைப்பட்டுவிட்டன. அடுத்த-டுத்து இப்படி ஊர்ப்பயணம் போனால் குடும்பம் முன்னுக்கு வந்த மாதிரித்தான்! எந்தக் குடியானிச்சிதான் இதற்குச் சம்மதிப்பாள்? இதை எல்லாம் யோசித்து அவள் தன் கணவனிடம் வாய் திறக்கவில்லை. காலையில் சின்னப்பன் தோட்டத்திற்குப் போனான். எதிரில், குறுக்கே, அங்கே, இங்கே காண்பவர்களெல்லாம், அடே, எங்கெ சின்னப்பா பத்து நாளாக் காணம். உம் மச்சினனுக்குத் தேவலையா? அது என்ன நரம்புச் சுளுக்குத்தானே! நம்ம சிக்கிரிச்சி பாளையம் வண்ணான் மந்திரிப்பதில் சூரனாச்சே! கூட்டிவந்து காட்டினீங்களா? என்று தங்கள் அனுதாபத்-தையும், பரிகாரத்தையும் பலவிதமாக தெரிவித்தார்கள். சின்னப்பன் எல்லாவற்றிற்கும் அப்படி அப்படியே பதில் சொல்வதற்குள் அவனுக்கு போதும் போதும் என்றாகிவிட்டது. அவர்கள் எல்லோரையும் விட ராமமூப்பன்தான் 'வாட்டி வளவெடுத்து' விட்டான். "நரம்புச் சுளுக்காம்! இதுக்குப் படுத்துக் கொள்ளுறதாம். கொஞ்சம் விளக்கெண்ணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டுத் தேச்சா ஓடிப்போகும். இல்லாட்டி வாய்க்காலில் திடுதிடுன்னு தண்ணி வுளறப்போ உக்காந்து வலிக்கிற இடத்தக் காட்டினா பறந்திடும். அப்படியும் தீரலைனா ஆத்தா பேரைச் சொல்லி பிடி சாம்பலைப் போட்டிட்டு, ஒரு மஞ்சள் துணியை எடுத்து காணிக்கை முடிஞ்சு வச்சிட்டு, மேலக்கி ஒரு ஆடு வெட்டினாப் போகுது. இதுதான் எல்லாம் தெரிஞ்சவங்களுக்கு கொஞ்சம் தெரியாதென்று சொல்லுவாங்க" என்று தன் மேதாவிலாசம் முழுதும் காட்டிவிட்டான். சின்னப்பனுக்கு 'ஆமாம்' 'ஆமாம்' என்று சொல்வதைத் தவிர வேறு வழியில்லாது போயிற்று.

ராமாயியிடமும் இப்படித்தான் சகலரும் விசாரித்த வண்ணமிருந்தனர். பருத்திக் காட்டுக்குள் "என்ன ராமாயி! அண்ணனுக்கு எப்படி இருக்கிறது?" என்பாள் ஒருத்தி. மற்றவள் "ஐயோ பாவம்! இந்த அக்காளுக்கு இப்படி மிசிற நேரமில்லாம இருக்குதே. இல்லாதெ போனா இங்கெ நிப்பாளா? இப்பவும் உசிரு அங்கெயும் கட்டை இங்கெயுமாத்தான் இருக்கா" என்பாள்.

வேறொரு பெண் குனித்த தலை நிமிராமலே "அதுவும் பொல்லாத நோக்காடு தானம்மா. எங்க ஐயனுக்கு அதுதானே எமனா முடிஞ்சுது" என்பாள். கொஞ்சம் இளகிய மனதுடையவள் "என்ன பண்ணிப்போடும்! நீ ஆருக்குச் சூதுவாது செய்ய நெனச்சிருக்காய்? மலை போல வந்தாலும் பனி போல நீக்கிடும். ராமாயி ஆரு என்ன சொன்னாலும் நீ காதில போட்டுக்காத" என்று ஆறுதல் கூறுவாள்.

இவ்வித ஆறுதலும், அனுபாதமும் கிடைத்தாலும் அவள் மனது சாந்தி அடையவில்லை. என்று நல்லசெய்தி வரும் என்ற ஏக்கத்தில் இருந்தாள்.

ஒரு நாள் காலை ராமாயி வீட்டு வேலைகளை மும்மரமாகக் கவனித்துக் கொண்டிருந்தாள். வாசலில் பாத்திரங்கள் எல்லாம் துலக்குவதற்கு எடுத்து வைக்கப்பட்டிருந்தது. அருகிருந்த கூரை மேல் ஒரு காகம் வந்து உட்கார்ந்து கத்தியது. அந்தச் சத்தத்தைக் கேட்ட ராமாயியின் முகம் மலர்ந்தது. 'இண்ணக்கி ஊரிலிருந்து யாராச்சும் வருவாங்க' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டாள். ஆனால் சற்று நேரத்தில் ஏழெட்டுக் காகங்கள் எங்கிருந்தோ வந்து கத்தவே, அவள் கையைப் பலமாகத் தட்டினாள். காகங்கள் போவதாகக் காணோம். பறப்பதும் உட்காருவது-மாகவே கத்திக்கொண்டு இருந்தன. 'இதென்னடா எழவாயிருக்குதே' என்று சின்னப்பன் அங்கு வந்து ஒரு கோலை எடுத்து வீசினான். காக்கைக் கூட்டம் கண் காணாது பறந்தது.

ராமாயி காரணமற்ற பயத்துடன் "காக்கை கத்தினா ஒண்ணும் கெட்டதில்லயே" என்றாள். சின்னப்பன் "வாறது வழியிலா தங்கிடும்" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20

துக்கமும் சுகமும் மாறி மாறி வருவதுதானே! துக்கம் வந்தால் சோர்வடைவதும், சுகம் வந்தால் களிப்படைவதும் சான்றோர் செய்கை ஆகுமா? இந்தத் தத்துவத்தை உணர்ந்தவர் போலத்தான் நாகம்மாள் குடும்பத்தில் எவ்வித பேச்சும் வைத்துக் கொள்ளவில்லை. அதனால் 'ஓடுமீன் ஓடி உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் கொக்கை'ப்போல தன் காரியத்தில் கண்ணாயிருந்தாள். அடைபட்ட சிங்கம் அறுத்துக் கொண்டு போகும் வேகத்தில் அவர்களிடமிருந்து பிரிந்து செல்ல ஆயத்தம் செய்து கொண்டிருந்தாள்.

முன்பொரு நாள் அந்தி வேளையில், அவள் கெட்டியப்பனைச் சந்தித் அதே குடிசையில் இன்று நாகம்மாளைக் காண்கிறோம். ஆனால் முன்னதிற்கும் இப்போதைக்கும் எவ்வளவோ வித்தியாசம். மனிதர்கள் தான் மாறுகிறார்கள் என்றால் குடிசையும் அல்லவா மாறிக் கொண்டிருக்கிறது! அச்சின்னஞ்சிறு குடிசையும் ஏனோ வேண்டா வெறுப்பாக தன் மீது போர்த்தியிருந்த தென்னங் கீற்றுகளைத் தூக்கி எறிந்து விட்டது. என்ன கோபமோ! இரண்டொரு சட்டங்களும் பேர்ந்து போகட்டுமா? நிற்கட்டுமா என்று கேட்பதைப் போல், ஓரங்களில் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அதோடு குடிசையைக் கபளீகரம் செய்யக் கிளம்புவது போன்று சுற்றிலும் செடிகள் அடர்த்தியாக வளர்ந்திருந்தன. முன்பு துளி வெளிச்சத்தையும் புகவிடாது தடுத்த குடிசை இப்போது பால் நிலவைக் கொட்டிக் கொள்கிறது. ஒருவேளை சந்திர வெளிச்சத்தின் மேல் ஏற்பட்ட மோகமாயிருக்கலாம். கெட்டியப்பன் ஏதோ பிரமாதமாக யோசித்துக் கொண்டிருந்தான். 'என்ன இவன் கூடவா விஷயங்களை இங்ஙனம் ஆழ்ந்து சிந்திக்கிறான்!' என்று ஆச்சரியம் எழலாம். ஆம். நல்லதோ கெட்டதோ எதற்கும் யோசனை வேண்டித்தானே இருக்கிறது.

நாகம்மாள் அவனுக்கு எதிரில் சற்றுத் தள்ளி குடிசை வாயிலைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள். வெகு தூரத்திற்கப்பால் வேலிக் கொடியும், அதற்குப் பின்னும் அவள் கண்களுக்குத் தெரிந்தன. இங்கும் வெண் காந்தி உள்ளத்தை அள்ளிக்கொள்ளும் வண்ணம் குளிர்ச்சியுடன் படர்ந்து கிடந்தது.

"என்ன சும்மாவே இருக்கிறியே! உனக்காக நா எல்லா செய்து தயாரா வைச்சிருக்கிறே" என்றான் கெட்டியப்பன்.

நாகம்மாள் எங்கோ பார்த்துக் கொண்டே "அப்படி என்ன பண்ணீட்டே, சின்னப்ப என்னக் கூப்பிட்டு ஒண்ணும் கேக்கலியே!" என்றாள்.

"நீ இப்படி இருந்தால் கேட்காதது மட்டுமா? சொல்லாமலே போயிட மாட்டானா?" என்றான் கெட்டியப்பன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கே?"

"எங்கேயா?"

"பின்னே, சொன்னால்ல தெரியும். எங்க அந்தச் சனியன் புடிச்ச ஊருக்கா?" என்று சற்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

"பின் வேற எங்க?"

நாகம்மாள் பெருமூச்சுடன் "சரிதா. நிச்சமாயிட்டுதா எல்லா. எனக்குத் தெரியரதே" என்றாள்.

"உனக்கு எதுதா தெரிஞ்சிருக்கு? இனி கிணத்திலே போட்ட கல்லு மாதிரி சும்மா இருந்து சுகமில்ல. உடனே ரண்டில ஒண்ணு சொல்லச் சொல்லு" என்றான் கெட்டியப்பன்.

நாகம்மாள் என்னவோ ஞாபகப்படுத்திக் கொள்ள முயலுகிறவள் மாதிரி தலையைக் குனிந்து கொண்டு ஆலோசித்தாள்.

கெட்டியப்பன் கைநெட்டை எடுத்துக்கொண்டு "நீ என்ன பண்ணலாம்னு இருக்கிறாய்? கள்ளம் போன மூணா நாள் கதவை இழுத்துச் சாத்தி பிரயோசனம் என்ன?" என்றான்.

"செரி. நான் கட்டாயம் கேட்கிறேன். ஆமா, என்ன சொல்லுவாங்க? நா சொல்றத காதில போட்டுக்குவாங்களா? மாட்டாங்களா?"

"இதென்ன இது! கொழந்தை பொறக்கிறத்துக்கு முன்னால பெண்ணா ஆணா என்று கேட்கிறதப் போல இருக்குதே. நீ கேளு, சரியா ஒத்து வந்தா செரி. இல்லாதபோனா ஊர் கூடி நாயம் போடலாம். பத்துப் பேர் முன்னால வந்து சொல்லட்டும். இதெயெல்லா மணியகார வூட்டிலெ பேசியிருக்கிறோம். நீ ஒண்ணப் பத்தியு அஞ்சாதே! என்ன வந்தாலும் மணியகாரர் தாக்காட்டுவார், நீ சும்மாயிரு. சின்னப்ப எப்படி இல்லன்னு கையை விரிப்பான்னு பார்ப்போம்"

"இதில் இன்னொரு பாவி வந்து குறுக்கே நிக்கிறாளே! அந்த எமன் இல்லாது போனாப் பரவாயில்ல. சாமி வரங் கொடுத்தாலும் பூசாரிக்கு மனம் வராதே" என்றாள் நாகம்மாள்.

கெட்டியப்பன் கொஞ்சம் எக்களிப்பாக "அவதா தொலஞ்சிட்டாளே, அவ மகன எடுத்து நடு வூட்டிலெ போட்டிருக்கிறபோது நிப்பாளா?" என்றான். நாகம்மாள் மனத்தில் இந்த வார்த்தைகள் சுருக்கெனத் தைத்தது. முகத்தைச் சுளித்துக் கொண்டு "சும்மா ஏ சத்தம் போடுறே, ஆராச்சும் இந்தப் பக்க வரப் போறாங்க"

"இங்கெ எவ வருவா? நீ ஏ அப்படிப் பயந்து சாவறே?"

நாகம்மாள் எழுந்தாள். அவள் எழுந்து விட்டாள் என்றால் மின்னல் வேகத்தில் மறைந்து விடுவாள். "சரி, நா போகட்டுமா?" என்று அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கு முன்பு சடக்கென கெட்டியப்பன் கை உயர்ந்தது. ஆனால் யாது காரணத்தாலோ அப்படியே கையைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டான்.

நாகம்மாள் அதோ வேலிக்கு மேல நெலா வந்திட்டுது. கிழக்காலக் காட்டை சுத்திப் பார்த்து வர நேரமாச்சுன்னுதா சொல்லோணும்" என்று கூறிவிட்டு திரும்பிப் பாராமல் நடந்தாள்.

கெட்டியப்பன் குடிசைக்கு முன்னால் அவள் போவதைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்தான். செடி, கொடி, மரம், மட்டை, வானம், பூமி சகலமும் நிலவில் குளித்துக் கொண்டிருந்தன. சுற்றிலும் ஒரே நிலாக் காடு. அந்த மனோகரமான மயக்கத்தை தாங்க மாட்டாதுதானோ என்னவோ கெட்டியப்பன் கீழே கிடந்த தென்னந் தடுக்கின் மேல் தலை சாய்த்தான்.

நாகம்மாள் வீட்டு வாசற்படியில் அடியெடுத்து வைத்தாளோ இல்லையோ "ஆரது" என்று கோபத்துடன் சின்னப்பன் கேட்டான்.

"ஏ" என்றபடி மேலே நடந்தாள். சின்னப்பன் எழுந்து வந்து "எம் மானம் போவுதே" என்றான் சற்றுக் கடினமாக.

"மானமும் ஈனமும் போறது ஏனோ? அப்படி ரோசக்காரரா இருந்தா பிரிச்சு வுடுங்களே" என்று நாகம்மாளும் அதே தொனியில் சொன்னாள்.

எதிர்பாராத இந்தப் பதிலால் திகைப்படைந்தாலும் சட்டென, "உங்கள யாரு கட்டிப் போட்டிருக்காங்க? நல்லாப் பிரிஞ்சு போகலாமே?" என்றான் வேகமாக.

"எனக்கு உண்டான பங்கை ஒதுக்கீட்டா வெலகிக் கொள்றே. உங்களுக்கு வேணுமானா ஒரு கும்பிடு கூடப் போட்டிட்டுப் போயிடறே" என்றான்.

சின்னப்பனுக்கு கோபம் முன்னிலும் அதிகமாகப் பொங்கிக்கொண்டு வந்தது. இத்தனை நாளாக யார் யாரோ சொல்லியதைக் கூட காதில் போட்டுக் கொள்ளாமல் விட்டிருந்தான். இன்றுதான் தெரிந்தது. "ஓஹோ.... பங்கு வேணுமா? செரி. எந்தக் காமாட்டிப் பய கேக்கச் சொன்னானோ அவன வரச் சொல்" என்று உக்கிரமாக மொழிந்தான்.

நாகம்மாளும் கப்சிப்பென்று அடங்கி விட்டாள். சின்னப்பனுக்கு பங்கு கேட்டவள் பேரில் கூட அவ்வளவு கோபம் இல்லை. அவளைத் தூண்டி விட்டு வேடிக்கை பார்க்கிறவர்கள் பேரில்தான் அபார கோபம் வந்தது. 'பார்க்கலாமே சாமர்த்தியத்தை! எப்படித்தா வாங்கிவிடுவாங்களோ!' என்று இன்னும் கண்டபடி வைதுகொண்டு அப்பால் சென்று விட்டான்.

## 21

திருடன் புகுந்த வீடு மாதிரி சாமான்கள் கண்டபடி ஒழுங்கின்றி அலங்கோலமாகச் சிதறிக் கிடந்தன. படுக்கை, பாய் சுருட்டி வைக்கப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. புகையிலைக் காம்புகளும், பாய்க்கோரைகளும், காய்த் தொல்லிகளும் இன்னும் பல தினுசான தூசி தும்புகளும் பெருக்காத-தால் எங்கும் நிறைந்திருந்தன. எதற்கோ இறக்கி வைத்த பானை ஒன்று அடுக்கேறாமல் கீழே தனித்து இருந்தது. அடுப்பு நிறையக் கிடந்த சாம்பல் வழித்தெறிய வரும் ஆசாமி எங்கே என் று காத்திருந்தது. ஏன் இப்படி? தினம் இவ்விதம் வீடு இருந்தது கிடையாதே! இன்று மட்டும் யாது காரணம் என்று கேட்டால், கடந்த இரவு நடந்த சம்பவத்தின் விளைவுதான் இவ்வளவுமென்று சொல்லவேண்டும். ராமாயி என்னவோ கனாக்கண்டவள் போல உட்கார்ந்திருந்தாள். விடிந்தது தெரியும். தன்னுடைய கணவன் “பால அடுப்பில வச்சிருக்கிறே. ஏதாவது பூனை கீனை உருட்டிடப் போவுது” என்று சொன்னதும் தெரியும். ஆனாலும் என்ன? அவள் மனத்திற்கு ஒன்றும் தெரியவில்லை. முழுதும் விளங்காத விடுகதையைப் போல நெரடாக இருந்தது.

நாகம்மாள் கண், காது தெரியாமல் இழுத்துப் போர்த்துக்கொண்டு தூங்குகிறாள். தூங்குகிறாளோ, விழித்திருக்கிறாளோ! அடித்துப் போட்ட மாதிரி அசையாது இருக்கிறாள். முத்தாயா “அம்மா, அம்மா” என்று கூப்பிடுவதும், ராத்திரித் தின்ன மறந்த கருப்பட்டியை ருசி பார்ப்பதுமாய் இருந்தாள். சின்னப்பன் வழக்கப்படி வெகு நேரத்திலேயே படுக்கையை விட்டு எழுந்து விட்டான். ஆனால் வெளியே செல்லவில்லை. காலை-யிலே எழுந்ததும் எழாததுமாய் வெளியில் வரும்போது பட்டென நெல அடித்தது. “ஆ” என்று அடிபட்ட இடத்தைத் தடவிக்கொண்டே, என்ன துர்ச்சகுனமோ விடிந்ததும் விடியாததுமாய் என்ற கலவரத்துடன் பாலைக் கறந்து கொண்டு வந்தான். அன்று ஏனோ தோட்டத்துக்குப் போக அவனுக்கு மனமில்லை. ஆனால் சும்மா இருக்கவும் பிடிக்க-வில்லை. ஒரு மாதமாக கட்டுத்தரைக்கு ஒரு முளை வேண்டியிருந்தது. இன்று செய்து முடிப்போமென்று ஒரு வேப்பங் கொப்பை எடுத்துச் செதுக்க ஆரம்பித்தான்.

சின்னப்பன் ‘லொட்லொட்’ என்று அரிவாளால் வெட்டும்போது சிறுசிறு மரத் துண்டுகள் தெறிக்கும். முத்தாயா அவைகளை ஒன்றுவிடாது பொறுக்கி விளையாட விறகு சேர்த்துக் கொண்டு இருந்தாள். இதுதான் சாதம் செய்ய, இதுதான் குழம்பு செய்ய என்று முத்தாயா சொல்லும் போதெல்லாம் சின்னப்பன் மெதுவாகச் சிரிப்பான். சில சமயம் துண்டுகள் விழாதபோது, குழந்தை அருகில் வந்து “என்ன சின்னையா, எனக்கு விறகு கொடுக்க மாட்டாயா?” என்று கேட்டாள். அவனுக்கு அது ஒன்றும் காதில் விழாது. ஆயிரம் யோசனைகள் அவன் உள்ளத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கையில் குழந்தையின் கேள்வி எங்கே பதியப் போகின்றது. ‘என்ன நாகம்மாளா பங்குப் பேச்சைக் கிளப்பியிருக்கிறாள்? இவளுக்கா இந்த யோசனை உதித்தது? இருக்காது! இவ்வளவு நாளாகத் தாய் போன்று ஒற்றுமையாகக் குடும்பத்தை நடத்தியவளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிக்க முயல்கிறாள்? நல்லதனம் திடீரென்று மறைந்து விடுவதும் உண்டோ!' என்று எண்ணுவான்.

'நல்லதனமா? இப்பாதகி எப்போதும் தான் மனதில் இப்படி விஷத்தை வைத்துக் கொண்டு இருந்தாளோ என்னவோ!' ஆனால், அடுத்தகணமே 'இல்லை, இந்த வெள்ளை மனதில் இப்போது யாரோ கரியைத் தடவி விட்டார்கள். ஆனால், அவன் யாராயிருந்தாலும் சரி, பிரமாவாய் இருந்தாலும் சரி, பார்த்து விடுகிறேன்' என்று தனக்குத் தானே கோபப் படுவான்.

பொழுது வேலிக்கு மேல் வந்துவிட்டது. வெயில் சுள்ளென்று அடித்தது. பந்தக் காலில் கட்டியிருந்த ஆட்டுக்குட்டி 'ம்மா... ம்மா' எனக் கத்தியது. அதைத் தொடர்ந்து எங்கோ ஒரு சேவல் படபடவென இறக்கையை அடித்துக் கொண்டது. 'ஏண்டா, யாரடா வேலியோரம் ஆட்டை வுட்டது" என்று பெண் குரலும் ஓங்கி எழுந்தது. சின்னப்பன் குடல் அறுந்தவன் போலக் காரணம் இன்றித் திடுக்கிட்டுப் பின்னும் தன் காரியத்தைத் தொடங்கினான். ராமாயி அவன் அருகே வந்து நின்றாள்.

"ஏதாவது வேல இருந்தாப் போய்ப் பாக்கிறதுதானே! ஏ இப்படி பனைமரம் மாதிரி நிண்ணுகிட்டு இருக்கிறாய்?" என்றான். ராமாயி சுற்றிலும் பார்த்து விட்டு உள்ளே போனாள். மத்தியானம் வரையில் சின்னப்பன் முளை செதுக்குவதிலேயே இருந்தான். அதற்குள் ராமாயி வீட்டு வேலைகளை எல்லாம் செய்து முடித்துவிட்டு தன் கணவனைச் சாப்பிடக் கூப்பிட்டாள். சின்னப்பன் "நா அப்புறம் சாப்பிட்டுகிறே. புள்ளெயக் கூப்பிட்டுச் சோறு போடு" என்று சொல்லிவிட்டான்.

ராமாயி மெதுவாக "அக்காள் இப்பத்தான் எழுந்திருந்தாள் போலிருக்கு. சாப்பிடக் கூப்பிடட்டுமா?" என்றாள்.

"தினம் கூப்பிடறதுதான் வழக்கமா?"

"இல்லை இல்லை...." என்று இழுத்தாள் ராமாயி.

"கோவிச்சிட்டுப் பேசாதிருந்தாலும் இருப்பா. ஒரு பேச்சுக் கூப்பிட்டதினாலே என்ன குறைஞ்சு போயிடும்?"

சின்னப்பனும் இதயம் உள்ளவன்தான். இதயமற்ற போக்கே அவனுக்கு பிடிக்காது. என்னவோ தெரியாத்தனத்தில் கேட்டிருப்பாள் என்று நினைத்தான்.

"செரி, போய்க் கூப்பிடு" என்றான்.

ராமாயி உடனே குழந்தையைத் தேடுற மாதிரி "முத்து இங்கயா இருக்கிறே?" என்று கேட்டுக்கொண்டே நாகம்மாள் படுத்திருக்கும் அறைக்குள் போனாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இங்கே அவ இல்லை" என்று நாகம்மாளே பதில் சொன்னாள்.

ராமாயி கனிவுடன் "எங்கேயாவது அந்தப் பக்கம் இருப்பாக்கா. நீயாவது வாக்கா சோறு திங்க" என்றாள்.

"உடம்புக்கு நல்லாயிருந்தா நீ சோல்லோணுமாஆயா?" என்று எழுந்து உட்கார்ந்து "கொஞ்சம் சுடுதண்ணி இருந்தாக் கொண்டா" என்றாள்.

உண்மையிலே வெந்நீருக்கு அவசியமே இல்லை. ஆனால் நிஜ வியாதிக்காரி என்று காட்ட வேண்டாமா? ராமாயி "இதோ கொண்டாறே அக்கா!" என்று வெளியில் போனாள்.

நாகம்மாள் தனக்குள் அதிக விறைப்பாக இருப்பதும் ஆபத்தே. முள்ளுக்கு மேல் போட்ட வேட்டியை மெள்ள மெள்ளத்தான் எடுக்க வேண்டும். இவர்களுக்குச் சொல்கிறேன் புத்தி! என்று நினைத்தாள். சின்னப்பன் தலையை அசைத்து "என்ன ராசி பண்ணீட்டியா?" என்று ராமாயியைக் கேட்டான்.

அவள் சிரித்தாள். "ஓஹோ.. நீயும் தேவலாமே" என்று அவனும் சேர்ந்து சிரித்தான். அதேசமயம், முத்தாயா "சித்தப்பா, ஆரோ வந்திருக்காங்க" என்று சொல்லிக்கொண்டு வெளியிலிருந்து ஓடி வந்தாள். "ஆரு" என்று விசாரித்தவாறே சின்னப்பன் வெளியே எட்டிப் பார்த்தான். வாசலில் சக்கிலியாள் நின்றிருந்தான். சின்னப்பனுக்கு அவனைக் கண்டதும் பாதி விஷயம் விளங்கி விட்டது. மைத்துனன் காரியம் தாட்டி விட்டது அவ்வளவு தான். "என்னடா" என்று சின்னப்பன் வாய் திறப்பதற்குள் "அதுதானுங்க, பேச்சு மூச்சு அத்துப்போச்சு! உடனே கவுண்டிச்சியோடு புறப்பட வேண்டியது தானுங்க" என்றான். இதை அவன் சொல்லி முடிக்க முக்கால் நாழிகைக்கு மேல் பிடித்தது.

ராமாயிக்கு இதைக் கேட்டதுமே அளவு கடந்த துக்கம் ஏற்பட்டது. அவளுக்குத் தெரியும். சக்கிலியாக்கள் சாவு நேர்ந்தாலும், சீக்கிரத்தில் நேரடியாகச் சொல்ல மாட்டார்கள். இதுதான் அவர்கள் வழக்கம். வேறு யாராவது பாத்தியப்படாதவர்களிடம்ாய் இருந்தால் "அங்கே ஒரு பெரிய காரியமாப் போச்சுங்க!" என்று பளிச்சென்று சொல்லி விடுவார்கள்.

"இந்தப் பத்து நாளா பல்லி சொன்னது சரியாப் போச்சே" என்று ராமாயி பிரலாபிக்கலானாள். சின்னப்பன் அதறாமல் "ஏண்டா, அப்படி ஒண்ணும் பயமில்லையே? போறவரை பேச்சிருக்குமா?" என்றான்.

சக்கிலி பேசவில்லை. விழியும் மௌனமும், போய் வெகு நேரமாகி விட்டது என்பதைத் தெரிவித்தது. "ஏண்டாப்பா உசிரு இருந்தா சக்கிலியாள் விடுவாங்களா?" என்று கேட்டுக்கொண்டே சின்னப்ப-னுடைய பெரியப்பா வந்தார். "புறப்பட வேண்டியதுதா. இதோ சேதி சொல்லி வுடறே. காடு கரையில இருக்கிறவங்க வந்து சேர கொஞ்ச நேரம் ஆகுமல்ல" என்றார் பெரியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சொல்வதும் செய்வதும் சரியாக இருக்கும். அரை நொடியில் அங்குமிங்கும் இருந்த யாவருக்கும் சேதியைப் பரப்பி விட்டார். அதைக் காதில் போட்டதும், சின்னப்பனுடைய நெருங்கிய பந்துக்கள் புறப்படத் தயாரானார்கள்.

முதலில் நாகம்மாளும் தங்களுடன் வருவது உசிதம் என நினைத்தான். ஆனால் வீட்டைப் பார்த்துக் கொள்ள ஒரு ஆள் வேண்டாமா? ஆகையால் நாகம்மாளிடம் "நீங்க வூட்டைப் பாத்துக்குங்க. அவ அங்கிருந்தாலும் நா சீக்கிரமா வந்திடறே" என்று முத்தாயாளைத் தோளில் தூக்கி வைத்துக் கொண்டு புறப்பட்டான்.

"நீங்க வேணுமானாலும் இருந்து வாங்க" என்றாள் நாகம்மாள். அவள் என்ன நினைத்துச் சொன்னாளோ நமக்குத் தெரியாது.

ஆண்களும் பெண்களுமாக பத்துப் பதினைந்து பேருக்குப் புறப்பட்டார்கள். ராமாயி 'போய் வாறே' என்று நாகம்மாளிடம் சொல்லவும் மறந்து விட்டாள். ஆனால் நாகம்மாள் அவைகள் ஒன்றையும் லட்சியம் செய்யவில்லை. 'நல்ல சமயத்தில் இருவரும் போனார்கள். பொறுங்கள், உங்களைத் தொலைத்து விடுகிறேன்' என தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

## 22

ராமாயியினுடைய சகோதரன் இவர்கள் போவதற்கு முன்பே உயிர் விட்டு விட்டான். ராமாயி விம்மினாள், விக்கினாள், துடித்தாள்; ஆனால் அவன் எழுந்து வரவா போகிறான்!

"கண்ணான எம் பொறப்பெக்
காணுவது எக்காலம்?
பொன்னான எம் பொறப்பெப்
போய்ப் பாப்ப தெக்காலம்?"

என்று பிலாக்கணம் சொல்லி அழுதாள். பயன்தான் ஒன்றுமில்லை. அவன் நாலு பேருக்கு மேலாக தன் கடைசிப் பிரயாணத்தையும் முடித்து விட்டான்.

கூட வந்திருந்த ஊர்க்காரர்கள் திரும்பலானார்கள். இரண்டொருவர் சின்னப்பனிடம் "நீ வாறதுக்கு இன்னும் இரண்டொரு நாள் ஆகும். பாவம். எங்க மாதிரி உடனே வந்துவிட முடியுமா! என்னமோ உங்க மாமியா அழுது அழுது அரைச் சீவனாப் போறா" என்று கூறிச் சென்றனர்.

அடியால் தடிபட்ட மாடு போல் சின்னப்பன் மௌனமாக இருந்தான். என்ன செய்வது என்று அவனுக்கு விளங்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய கனவுகள், இராத் தூக்கத்திலேயே மறைந்து மாயமாய்ப் போனதால் காளியம்மாள் கலங்கினாள். என்னென்ன எண்ணியிருந்தாள். மகனுக்கு ஒத்தாசையாக மருமகனையும் தன் வீட்டிலேயே வைத்துக் கொள்ளலாம். அதோடு மருமகனது நிலபுலன்களை விற்ற ஆஸ்தி வேறு தன்னிடமே இருக்கும். பார்க்கிறவர்கள் எல்லோரும் வியந்து 'ஆ. காளியம்மாளின் அதிஸ்டத்தை பார்' என்றல்லவா பேசிக்கொள்வார்கள். இப்படியெல்லாம் பின்னிப் பின்னி திரித்து வைத்திருந்த அவளது சிந்தனைக் கயறுகளில் சிக்கு விழுந்து விட்டது. இனிப் பிரிக்கவே முடியாதோ என்னவோ! உபயோகமற்ற ஓட்டை உடைசல் சாமான் போல் அப் பெரிய வீட்டின் ஒரு மூலையில் காளியம்மாள் விழுந்து கிடந்தாள். "அந்தோ அம்மணீ! உன்னுடைய துடிதுடிப்பான நடையும் பேச்சும் எங்கே? அற்புதமான கற்பனைக் கனவுகள் எங்கே? அவை எல்லாம் காளான் போல் மறைந்து விட்டனவா" என்று கேட்கக்கூட யாருமில்லை.

அன்று வராதவர்கள் இடையிடையே துக்கம் விசாரிக்க வந்து போவார்கள். கொஞ்ச நஞ்சம் பூத்துப் போயிருக்கும் கனலை விசிறி விடுவார்கள். ஆனால் எத்தனை நாளைக்குத்தான் ஸ்வரம் குறையாது அழுவது? அழுது அழுதுதான் அரைச் சீவனாய் விட்டாளே!

ஆச்சு. ஒரு வாரம் ஆயிற்று. காளியம்மாளின் இருதய வேதனையும் சற்று மட்டுப்பட்டது. புத்திர வாஞ்சையில் விழுந்து கிடந்த உள்ளம் மகள் - மருமகன் பாசத்தால் தலையெடுத்தது.

சின்னப்பனுக்குச் சீக்கிரமாக ஊர் போக வேண்டும். ஆனால் எப்படிச் சொல்வது? அங்கே கணக்கற்ற வேலைகளைப் போட்டுவிட்டு இங்கே இப்படிச் சும்மா உட்கார்ந்துகொண்டு இருப்பதா? என்று சிந்தித்தான். ஆளுக்கு ஒரு மூலையில் சோர்ந்து கிடக்கும் பெண்களைப் பார்க்க அவனுக்குப் பரிதாபமாக இருந்தது. கடைசியாக தன் மனைவியிடம் "நா போகாது போனா அங்கே என்ன நடக்கும்? நாகம்மா சங்கதி உனக்குத் தெரியாதா? உன் அம்மாவிடம் சொல்வதுதானே?" என்றான்.

ராமாயி "நா அம்மாக்கிட்ட சொல்றதுக்கு நீங்களே சொல்லுங்களே" என்றாள்.

சின்னப்பனும் அரை மனதாக காளியம்மாளிடம் தெரிவித்தான். அவளிடம் இருந்து மங்கலான கம்மிய குரலில், "இன்னும் இரண்டொரு நாள் பொறுத்துப் போகப்படாதா?" என்று பதில் வரும் என எண்ணி இருந்த சின்னப்பன் ஏமாந்து போனான். ஏன்! காளியம்மாள் 'கலகல' எனப் பேசலானாள்.

"சாமீ, இனி நீங்கதான் எனக்கு மகனுக்குப் பதில் மவெ. என்னவோ கடவுள் செயல். இனி அரைக்கணம் உங்கள வுட்டு இருக்க மாட்டே. எனக்கு இனி உயிரோடு இருக்கலாமென ஆசையில்லை. என்னமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களிருவருக்காகத் தான் நான் இருக்கிறே. இனி யோசித்துப் பிரயோசனமில்ல. அவள என்ன செய்யறது என்பதுதா பேச்சு. உங்க மனசுக்குப் பிரியமானதைச் சொல்லுங்க. அப்படியே செய்யலாம்"

சின்னப்பன் மெதுவாகத் தலையைச் சொறிந்து கொண்டே "என்னங்க" என்றான்.

காளியம்மாள் அதே குரலில் "நீங்களே சொல்லுங்க" என்றாள். கேள்வி அர்த்தமானாத்தானே பதில் சொல்லலாம். நோயைத் தெரிந்து கொள்ளாமலே மருந்து கொடுப்பார்களா என்ன!

"சொன்னா செரி. நா அப்படி இல்லேன்னு தட்டியா போடுவேன்" என்று ரொம்பத் தெரிந்த பாவனையில் கூறினான். காளியம்மாளுக்கு பாலாபிஷேகம் செய்த மாதிரி ஆனந்தம் பொங்கியது. "நா உறுதியில்தா மவெ போனதையும் மறந்திருக்கே. எம் பேச்சுக்கு அட்டி சொல்லவா போறீங்க? செரி, நாகம்மா விஷயம் பைசலாச்சு" என்றாள். அப்போது தான் எந்த விஷயத்தைக் குறித்துக் காளியம்மாள் பேசுகிறாள் என்பது தெரிந்தது.

"உங்களுக்கு அவ கேட்டது ஒண்ணும் தெரியாதே? பங்கு வேணுமின்னு ரகளை எழுப்பி வுட்டாளே" என்றான் சற்று எரிச்சலாக.

"ஓஹோ... அவளே தொடங்கி விட்டாளா? எனக்குத் தெரியாதே இருக்கட்டும். நாச்சியப்பெ அண்ண இங்கு வந்திருக்கிறா. அவனெக் கண்டு பேசினா தம்பியிடம் பேசினது போலத்தா. செரி, அடுத்த வாரமே கெரயத்தை முடிச்சுக்கலா. பணம் எட்டு நாளக்கி முமபே இப்பவே வேணுமினாலும் நோட்டு நோட்டா எண்ணி வச்சிருவா" என்று காளியம்மாள் சரமாரியாக அடுக்கினாள்.

"அப்படியே முடிச்சுக்கலா" என்று சின்னப்பனும் உறுதி தந்தான். அடுத்த கணமே அவன் மனத்தில் ஓர் நினைவு பிறந்தது. சொந்த ஊர்ப் பாசம் குப்பென்று அவன் உள்ளத்தைக் கவ்வியது. பரம்பரையாக வாழ்ந்த இடத்தை விட்டு வருவதா? அதுவும் அடியோடு சொத்து முழுவதையும் விற்று விட்டா? பிறர் பார்த்து என்ன நினைப்பார்கள்! ஆனால் பிறருக்காக என் சுதந்திரத்தை குறைத்துக் கொள்வதா? யார் என்ன பேசினால் எனக்கென்ன? வம்பர்கள் வீண் கதை கதைக்கத்தான் செய்வார்கள். நான் என் இஷ்டப்படியே நடப்பேன். ஆனால் நாகம்மாள், அவளை எங்கே விடுவது? விடுவதென்ன! ஊரிலேயே வீட்டைக் காத்துக்கொண்டு கிடக்கிறாள். அவளுக்கு அநேகம் நேசர்கள் இருக்கிறார்கள். அவள் பக்கம்தானே மணியகாரர் முதற்கொண்டு! எனக்குத்தான் அவர்கள் விரோதிகள். நான்தான் பயந்து கொண்டு ஓடி வருகிறேன். ச்சை பயமா? இல்லை, நியாயமாக விலகிக் கொள்கிறேன். அந்த முட்டாள்களிடமிருந்து, ஆனால் உலகம்? உம் தலைகால் தெரியாத உலகம். என்ன பிதற்றினால் எனக்கென்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யோசனை என்னங்க? அடுத்த வாரமே நானும் வாரே. போவோமே" என்றாள். சின்னப்பனும் வேறு ஒன்றும் கேட்காது, 'உம்' என்றான்.

## 23

கயிறறுத்துக் கொண்ட காளை போலவும், சுயேச்சையாகச் சிறகடித்துப் பறந்து செல்லும் பட்சி போலவும் நாகம்மாள் உல்லாசமாகத் திரிந்து கொண்டிருந்தாள். அவ்வீட்டிற்கு அவளே ராணி. அவள் வைத்ததே சட்டம். வாசல் குப்பையைப் பெருக்கித் தள்ளுவாள். தள்ளாதும் விட்டு விடுவாள். கன்றை இடம் மாற்றிக் கட்டுவாள். கட்டாதும் விடுவாள். பாலைச் சும்மா காச்சிக் குடிப்பாள். குடிக்காமலும் இருப்பாள். இஷ்டம் போல் சமைப்பாள். சும்மா இருப்பாள். எங்கு வேண்டுமானாலும் எந்நேரத்திலும் செல்லுவாள். அவளை ஏனென்று கேட்பார் யாரும் இல்லை. வேகமாகப் பாய்ந்தோடும் காட்டாறு போல தன் போக்கில் தலை கால் தெரியாது. ஏக அமர்க்களமாய் இருந்தாள். வீடு எந்நேரமும் கலகலப்பாகவே இருந்தது. சதா பேச்சுக்கு ஒருவர் மாறி ஒருவர் வந்து கொண்டே இருப்பார்கள். இரவு பகல் வித்தியாசம் இன்றி நினைத்த நேரத்தில் அடுப்பு மூட்டுவாள். சாதமா குழம்மா எதுவும் செய்வாள். தாராளமாக வந்தவர்களுக்குப் பரிமாறுவாள். திருப்தியாகச் சாப்பிட்ட பின் வம்புப் பேச்சுக்குக் கேட்க வேணுமா? ஓயாத ஒரே கொண்டாட்ட மயம்தான்.

கெட்டியப்பன் இங்கேயே முகாம் போட்டு விட்டான். அடடா! அவன் தடல்புடல்களைப் பார்த்தால் 'ஏதேது இந்த ஆசாமிதான் வீட்டுக்குச் சொந்தக் காரன் போலிருக்கிறதே' என்று எண்ணத் தோன்றும்.

"என்ன கோழி போடலாமா?" என்பான் முரட்டுத் தொனியில்.

"ஆகா அதற்கென்ன" என்பாள்.

உடனே மிளகு அரைத்தாகி விடும். கண் மூடி விழிப்பதற்குள் கோழி பக்குவமாகி விடும். அப்புறம் கேட்க வேண்டுமா? குளுகுளு என்ற தென்னங் கள்ளுடன் ஆனந்தமாக உணவைத் தள்ள வேண்டியதுதான். இடையில் சில வேடிக்கைகளும் நடக்கும். முதலியார் நடுவில் சில பேச்சுக்களைப் போட்டு மடக்குவார்.

"ஆமாங்கையா, நீங்கெல்லா குடிச்சிட்டுப் பேசறவங்கதா. உங்களால என்னத சாதிக்க முடியும்?" என்பாள்.

"பார்க்கலாமே" என்பான் கெட்டியப்பன்.

"என்னதப் புடிச்சுப் பார்க்கிறது? அவன்களெல்லாமே வந்து வாங்கிக் கொள்ளட்டும் என்று சின்னப்பன் பேசியது தெரியாதா? கேட்டுப் பாருங்களே நாகம்மாளே சொல்லும் என்னவோ பார்க்கிறீங்களாம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஏளனமாக நாராயணசாமி ஆரம்பிப்பான். கெட்டியப்பன் தைரியமாக "அட கட்சிக்கு இருந்தே இருக்குது" என்பான் தீர்மானமாக. இதைக் கேட்டு இருவரும் சிரிப்பார்கள். முதலியார் சட்டென "அப்படி எல்லாம் திடுபுடு எனக் கை வைப்பது கூடாது. அது என்ன ஒரு நிமிஷத்தய காரியம், நாமும் பொறுத்துப் பார்ப்போம். அக்கிரமத்திற்கு நாம் போகவேண்டாம்" என்பார். வழியில் போறவன் கூப்பிட்டு செருப்பால் அடித்தாலும் முதலியார் மேலும் கீழும் பார்த்துக் கொண்டு முனகாது பேசுகிற ஆசாமி, இவ்வளவு தூரம் பேசுகிறார்.

"ஆமாமப்பா, அது நெசந்தா" கெட்டியப்பன் ஆமோதிப்பான். நாகம்மாள் "மணியகார அண்ணனும் இதற்கு ஒத்து வருவாங்களா?" என்றாள்.

முதலியார் தாழ்ந்த குரலில் "கண்ணைத் திண்ண குருடனும் நாயத்த ஒத்துக் கிட்டுத்தானே ஆகணும். அண்ணன அப்படி ஒத்துக்கொள்ளச் சொல்றவன் நானல்லவா? அதப்பத்தி நீங்க துளிகூட கவலைப்பட வேண்டியதில்லை" என்று சொல்லிவிட்டு இரண்டு மூன்று செலவுக்கு வாங்கிக் கொண்டு வீடு போய்ச் சேருவான். தனக்காக இவ்வளவு பேசுகிற மனிதனுக்கு நாகம்மாள் இல்லை என்றா சொல்லி விடவாள்! தாலி தண்டையாவது விற்றுக் கொடுப்பாள் அல்லவா! ஆமா, இப்படிக் கொடுத்துத்தான் அடியோடு நாசம் அடையவேண்டும். ஒரே நாளில் கெட்டுப் போ என்றால் கெட்டா போவார்கள்!

தனித்திருக்கையில் நாகம்மாளுக்குச் சில சமயங்களில் இவைகள் எல்லாம் தோன்றும். தன்னைத் தானே வெறுத்துக் கொள்வாள். நொந்து துக்கிப்பாள்.

'நான் ஏன் இங்கு வந்து சேர்ந்தேனோ? நல்ல மரத்தில் நரையான் விழுந்த மாதிரி பெரிய குடும்பத்துக்கு அவக் கேடாய் வந்து சேர்ந்தேனே! தலைமுறை தலைமுறையாக ஐக்கியமாக வாழ்ந்திருந்த-வர்களுக்கு கெட்டபேர் உண்டு பண்ணப் பார்க்கிறேன். பங்கு பிரிக்க வேணுமென்று பாழ்படுத்த ஆரம்பிக்கிறேன். ஐயோ! சின்னப்பன் எவ்வளவு அன்பாக வைத்திருக்கிறான். ஒரு வார்த்தை காரமாகச் சொல்வானா? நல்ல மனத்தை அன்று புண்படுத்தி விட்டேனே, இனி யாவது நல்ல தனமாக நடந்து கொள்ள வேண்டும். சாட்சிக்காரன் காலில் விழுவதை விட சண்டைக்காரன் காலில் விழுவதே மேல் அல்லவா!'

இவ்வித நினைவுகள் ஒரு விநாடிக்கு அப்புறம் பாதரஸம் போல நிலை கொள்ளாது. 'அப்படி எதற்கு இருப்பது? கட்டறுத்துக் கொண்டு பத்து நாள் இருந்தாலும், அதுவே அடிமையாகப் பத்தாயிரம் வருஷம் இருப்பதை விட மேலல்லவா? எனக்கென்று தனியாக எல்லாம் இருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். நான் நினைத்தால் எதையும் செய்ய வேண்டும். என் மகளுக்கு நகை நகையாய்ப் பூட்டிப் பார்க்க வேண்டும். இந்தப் பிசிநாறிகள் அதற்குச் சம்மதிப்பார்களா? அடேயப்பா! அன்றைக்குக் கேட்டதும் கேட்காததுமாய் சீத்துப் பூத்தெனச் சீறுகிறானே! யார் சம்பாதித்த சொத்து? என் புருஷன் சொத்து எனக்குச் சேராதா? இத்தனை கோபம் எவ்வளவு நாளைக்கு வருகிறதெனப் பார்க்கிறேன்' நாகம்மாள் இப்படி உக்கிரமாக இருக்கும் வேளையில் கெட்டியப்பனும் இரண்டொரு வார்த்தை சொல்லி வைப்பான். எரிகிற நெருப்பிற்கு எண்ணெய் விட்ட மாதிரி அவள் உள்ளத் தணல் கொழுந்து விட்டு எரியும். யாராய் இருந்தால் என்ன? சதா ஒருவருடைய துர்ப் போதனைக்கு ஆளாகி விட்டால் அப்புறம் அவர்களுடைய இதயம் மாறுவதில் ஆச்சரியமில்லை இல்லையா!

## 24

அன்று புதன்கிழமை. நாகம்மாள் ரொம்ப முகமலர்ச்சியுடன் இருக்கிறாள். கண்ணாடியைச் சீந்தாதவள் அடிக்கடி எடுத்துப் பார்க்கிறாள். துப்பைப்பூப் போன்ற வெள்ளைப் புடவையை அப்படியும் இப்படியுமாக திருப்பிச் சீராகச் சொருகிக் கொள்கிறாள். இன்று ஏது இவ்வளவு குதூகலம்? இன்று சந்தை நாள் என்றா? இல்லை. வாரம் தவறாதுதான் சந்தை வருகிறதே. அப்போது எல்லாம் இவ்வளவு ஆனந்தம் ஏற்பட்டது இல்லையே. பின் இப்பூரிப்புக்குக் காரணம் என்ன? மணியகாரர் வருகிறார்.

இத்தனை நாளாக அங்குமிங்கும் வேலை பார்த்து யோசனை சொல்லி வந்தவர் இன்று நேரிலேயே வருகிறார். அவராக வீடு தேடி வருகிறதென்றால் நாகம்மாளுக்கு அதைவிடச் சந்தோஷச் செய்தி வேறு இருக்கமுடியுமா? வாசல் பக்கம் போவதும் உள்ளே வருவதும், பொழுதைப் பார்ப்பதும், யோசிப்பதுமாய் இருந்தாள். அவளிடம் மட்டும் அமானுஷ்யமான சக்தி ஏதாவது இருந்தால் அப்பொழுது அடிக்கும் மாலை வெயிலை மாற்றி, காரிருள் மயமாகச் செய்திருப்பாள். ஏனென்றால், இருட்டினவுடன் வருவதாக மணியகாரர் தெரிவித்திருந்தார்.

முலாம் பூசிக் கொண்டிருந்த இயற்கை தன் அழகுக் கதிர்களை கொஞ்சங் கொஞ்சமாக அடக்கிற்று. மரங்கள் உச்சியிலும், வீட்டுக் கூரையிலும் படிந்திருந்த தங்க நிறம் மெதுவாக மறைந்தது. இரவு தன் நீண்ட கரும் போர்வையை விரித்தது. இரவின் சாந்த மடியிலே பட்சி ஜாதிகள் தலை சாய்த்தன. அந்த அமைதியான வேளையில் சித்திரப்பாவை போன்று நாகம்மாள் அமர்ந்திருந்தாள். ஒவ்வொரு சருகின் அசைப்பிற்கும் சட்டெனத் திரும்புவாள். சிறு காற்றில் ஓலைகள் படபடக்கும்போது, செருப்புச் சத்தம் என்று எண்ணி ஏமாறுவாள். அர்த்தமற்ற சத்தம் 'ஹோ' என எழும். திடுக்கிட்டுத் தலை நிமிர்வாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கெட்டியப்பன் முன்னால் வந்திருக்கப் படாதா?' என்று அவன் மேல் சலித்துக் கொள்வாள். இவ்வித விவரிக்கமுடியாத ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

"என்னத்தா வார்த்தை பேசுவா" என்று அவள் கவனத்தைத் தெரிந்தவன் போல் கெட்டியப்பன் குரல் கேட்டது.

"எங்க முகத்துக்காக உங்கள ஒன்றும் பேசமாட்டாங்க" என்று முதலியார் தமாஷ் பண்ணினார்.

நாகம்மாள் விளக்கை உயர்த்தி கதவை நன்றாகத் திறந்து, "வாங்க, வாங்க" என்று உபசரித்தாள். பாயை எடுத்து அவள் விரிக்கு முன்பே "இல்லெ, இல்லெ வேண்டா" என்று முதலியார் தடுத்தார்.

"உங்களுக்கில்ல. ஆனா....." என்று மணியகாரர் முகத்தைப் பார்த்து விட்டு நாகம்மாள் மறுபடியும் பாயை எடுக்கப் போனாள்.

"எனக்குத் தெரியும். இத பாருங்க, கட்டில் இருக்குது. அவுங்க உட்கார்ந்துகிடட்டும்" என்றார் முதலியார்.

"எங்கதா உக்காந்தா என்னப்பா" என்று பெரும் போக்காகக் கூறி மணிய காரரும் கீழேயே உட்கார்ந்தார்.

மணியகாரர் அவ்வறையின் ஒவ்வொரு மூலையையும் மேலும் கீழும் நோக்கியவாறு, "வெகு நாளைக்கு முன் வந்தது. பத்துப் பன்னெண்டு வருஷம் இருக்கும். அதுக்கப்புறம் ஆரு வந்தாங்க, போனாங்க? என்ன நாகம்மா, அந்த ஓரத்தில சின்ன மாடக்குழி ஒண்ணு இருந்துதே. இப்ப மூடீட்டீங்களா?" என்று கேட்டார்.

நாகம்மாள் என்னவோ யோசித்துக்கொண்டு நின்றாள்.

கெட்டியப்பன் ஆச்சரியத்துடன் "உங்களுக்கு அதெல்லா எப்படி நெனப்பிருக்குது?" என்றான். "இந்த ஆச்சரியத்தில்தா பேசமாட்டாமெ நிக்கறதப் பாருங்க" என்று நாகம்மாளைச் சுட்டிக் காட்டினார் முதலியார்.

"என்னது? என்ன?" என்று நாகம்மாள் இரண்டு மூன்று தரம் கேட்டாள். மணியகாரர் சிரித்து விட்டு, "அது என்னமோ சின்ன சங்கதி. என்ன நாகம்மா? நா சீக்கிரமா இப்ப போயாக வேண்டும். ஆராவது பார்த்தா நாளைக்கு சின்னப்பெ வந்ததும் என்னவாவது சொல்லி வெப்பாங்க. எனக்கெல்லா இங்க என்ன வேலன்னு அவெ அப்படியும் இப்படியும் பேசுவா. நானும் சும்மா இருக்க மாட்டேன். கோவத்தில் கண்டபடி பேசீட்டா இன்னும் சங்கடம் தானே! இத்தனை தொல்லையில்லாம நடந்து கொள்றது நல்லதல்லவா? என்ன நா சொல்றது?" என்றார் அவளைப் பார்த்துக் கொண்டே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகம்மாள் தலையைக் குனிந்தபடி "உங்களுக்குத் தெரியாததை நான் என்ன சொல்ல போறே? எல்லாம் நீங்க சொன்னா சரி" என்றாள்.

"காலையில சின்னப்பெ வரப்போறானாம். எனக்குத் தகவல் கிடைத்தது. அகத்தியம் நாளைக்கு வந்து விடுவான் என்றுதான் நானும் நினைக்கிறேன். போய்ப் பதினைந்து நாளைக்கு மேல் ஆகுதல்ல. தோட்டங் காடுகள விக்க ஏற்பாடு பண்ண இவ்வளவு நாள் போதாதா?" என்றார்.

"என்ன ஏற்பாடு ஆயிட்டதா?" என்று திகைப்புடன் நாகம்மாள் கேட்டாள்.

"ஆனமாதிரித்தான். கையெழுத்து ஒண்ணுதா பாக்கி"

"அப்புறம்?"

"நீ ஏ கலங்க வேண்டும்? எதுக்கும் அஞ்சாதே. எனக்குச் சரிபாதியப் பிரிச்சிடு என்று தாராளமாகக் கேளு. சும்மா மெரட்டினா அதெல்லாம் தெரியுமப்பா என்று சொல்லிடு. அப்படியாச்சா லொடபுட அது செய்திடவே, இது செய்திடுவேன்னா, எனக்குக் கொடுத்தபின் என்ன வேணுமானாலும் செய்து கொள் என்று தைரியமாகச் சொல்லு. நீ ஏன் தயங்கோணும்? இனி தாமதித்தால் வெள்ளம் தலைக்கு மேல் போவது நிச்சயம்"

"வாஸ்தவந்தா" என்று முதலியார் பேச்சை ஆமோதித்தார்.

நாகம்மாள் கொஞ்ச நேரம் மௌனமாய் இருந்துவிட்டு, "நான் என்னென்ன செய்யோணும்? என்ன செய்யச் சொல்றீங்க?" என்று கேட்டாள்.

"அண்ணக்கி மாதிரி அலண்டு போய் பதில் பேசாது வுட்டுடாதே. எனக்கு உண்டானதைப் பிரித்து வுடுண்ணு கண்டிப்பாகக் கேள். பின்னால் வாறதுக்கு நாங்கள் இருக்கிறோம். அவன் என்ன ஆகாசத்திலா பறந்திடுவான்? நீ மட்டும் உறைச்சு நின்னா விலைக்கு வாங்க ஒருவன் கிட்ட வந்துவிடுவானா?" என்றார் மணியகாரர். நாகம்மாள் "ஆகட்டும். நீங்க சொன்னபடி கேக்கிறேன்" என்றாள்.

பின்பு மணியகாரன் கெட்டியப்பனிடம் "அவன் வந்த பிறகு இந்தப்பக்கம் அடிக்கடி தலை காட்டாதே. தப்பாக நினைக்க இடமுண்டாகும்" என்றார்.

"அண்ணா! இப்போதே நான் சாளைக்குப் போய்விடுகிறேன். நீங்கள் கூப்பிடுகிற சமயம் வருகிறேன்" என்று சிரித்துக்கொண்டே சொன்னான்.

"நாங்களும் அவரோடு போகிறோம்" என்று முதலியார் சொல்லவும், மணியகாரர் சிரித்துக் கொண்டு எழுந்தார். அவர்கள் போனபின் சிறிது நேரம் வரை நாகம்மாள் அப்படியே உட்கார்ந்து கொண்டு இருந்தாள். கதவைத் தாழிட்டுப் படுக்கவும் இஷ்டமில்லை. உட்கார்ந்திருக்கவும் பிடிக்கவில்லை. கலவர மனத்துடன் யோசனையில் மூழ்கினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது 'சொத்'தென்று ஒரு பூச்சி முகட்டிலிருந்து கீழே விழுந்தது. பல்லியால் கவ்வப்பட்ட பாதிப் பாகம் போக, மீதிப் பாகமே தரையில் துடித்துக் கொண்டிருந்தது. அந்த மரித்துப் போகும் பூச்சியை கண் கொட்டாது பார்த்துவிட்டு, மேலே கூரையைப் பார்த்தாள். ஒட்டறை அடித்து வருஷக்கணக்காகிறது. இதில் புகைக் கலப்பு வேறு கன்னங் கரேலென்று கப்பியிருந்தது. மேலும் கீழும் பார்க்கப் பார்க்க நாகம்மா-ளுக்குக் கசப்பாக இருந்தது.

'என்ன இது, ஒரே குப்பை மயம். வந்தால் என்ன சொல்லுவார்கள். சொல்வதென்ன எனக்கே அசங்கியமாக இருக்கிறதே!' காலடியோசை கேட்டது. திடுக்கிட்டு நோக்கினாள். யார் என்று தெரியவில்லை. ஒரு வேளை கெட்டியப்பனாக இருக்குமா? அல்லது முதலியாரா? யாரென்று அவளால் நிச்சயம் செய்ய முடியவில்லை. "என்ன கோயில் பாளயத்தாளா?" என்று கேட்டுக்கொண்டு பெரியண்ண கவுண்டன் வந்தான். அயலூரிலிருந்து கலியாணமாகி வரும் பெண்களை அந்த ஊர்ப்பெயரைச் சொல்லியே தான் அதிகமாகக் கூப்பிடுவார்கள். தன்னை அவ்விதம் பெயரிட்டு அழைப்பவர் யார் என நாகம்மாள் நோக்கினாள்.

"நீங்கதானா என்னப் பயப்படுத்தினது?" என்றாள். "நானே அல்ல. எங்க தாத்தா வந்தாலும் உன்னெப் பயப்படுத்த முடியுமா? இந்த அர்த்த ராத்திரியில் நீதா யாரையோ பயப்படுத்த உட்கார்ந்துகிட்டு இருக்கிறாய்" என்று சொல்லிவிட்டு பெரியண்ணன் சிரித்தான்.

நாகம்மாளும் கூடச் சிரித்து விட்டு பின்பு ரொம்ப அனுசரணையாக "இந்நேரத்தில் எங்கிருந்து வாறீங்க?" என்றாள். பெரியண்ணன் "பேச நேரமில்ல" என்று சொல்லி, சுருக்கமாக "கருப்பட்டி வண்டி பின்னால் வந்தே. நொடித்தடம் வண்டி இடறி அகாலத்தில் ஏதாவது ஏற்பட்டால் என்ன செய்வது? சின்னப்பெ இருந்தாலும் சந்தைக்குப் போயிருப்பான். என்ன பண்றது? இருக்கிற வரையிலும் செய்துதானே தீரணும்? ஆயா, நேரமாச்சு, வண்டி வெகுதூரம் போயிட்டது" என்று அடியெடுத்து வைத்தான். "வாசலில் முளையடிச்சிருக்கு. பார்த்துப் போங்க" என்று நாகம்மாள் சொல்லச் சொல்ல அவன் முளையில் மோதி, காலை நொண்டிக் கொண்டே போனான்.

## 25

முதல் நாள் இரவு சுகமாகப் படுத்து நித்திரை செய்தவள், இன்று இரவு நரக வேதனை அனுபவித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாள். முதல் நாள் சிரிப்பும் சந்தோஷமுமாகப் பேசிக் கொண்டிருந்தவர்களிடம் இன்று நாகம்மாளால் உற்சாகமாக நடந்து கொள்ள முடியவில்லை. மணியகாரர் வீட்டு உட்புற ஆசாரத்தில் தூணில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறாள் நாகம்மாள். அடிபட்ட குழந்தை மேலும்கீழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பதைப் போல மணியகாரர் தம்முடைய கிருதா மீசையைத் தடவிக் கொண்டே ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருந்தார். கெட்டியப்பன் குனிந்த தலை நிமிரவில்லை. முதலியார் முகத்தில் மட்டும் எவ்விதக் குறியுமில்லை. நாகம்மாளைப் பார்க்கும் போதெல்லாம் முகத்தில் அனுதாபக்குறியை எங்கிருந்தோ வரவழைத்துக்கொண்டார். மூலையில் படுத்திருந்த பெரியவரின் கட்டில் கிறீச் சத்தமும், இடையில் மேற் புறத்திலுள்ள வண்ணானின் வீட்டிலிருந்து அரைகுறைப் பேச்சுச் சத்தமும் காதில் விழும். வண்ணான் அடிக்கடி 'கழுதை, கழுதை' என்று சொல்வது கழுதையைப் பற்றியா அல்லது அவன் மனைவியைப் பற்றியா என்பது நமக்குத் தெரியாது.

"என்னவோ எல்லாமே போய்விட்டது போல இப்படி உட்கார்ந்திட்டாங்களே" என்று முதலியார் ஆரம்பித்து, "நாம எதிர்பார்த்ததுதானே இவைகளை எல்லாம்" என்றார்.

மணியகாரர் திடுக்கெனத் தலையைத் தூக்கினார். பாவம், அவர் இது ஒன்றையும் எதிர்பார்க்கவில்லை போலிருக்கிறது. "நீங்க சொல்ல வேண்டியிருக்க, சும்மா பேசாமெ இப்படி செலயாட்ட உட்கார்ந்திட்டா?" என்றார் முதலியார்.

மணியகாரர் கொஞ்சம் தொண்டையைத் தீட்டினார். ஆனால் பரபரப்பு நீங்கவில்லை.

"எப்படி? அதை இன்னொரு தரம் சொல்லு. நேற்று நீ தூங்கிக் கொண்டிருக்கும் போது வந்து கதவைத் தட்டி....." என்று சொல்லி நிறுத்தினான் கெட்டியப்பன். "அதைச் சும்மா கேட்பதில் என்ன இருக்கிறது?" என்று சலிப்புத் தட்டியவர் போல் மணியகாரர் சொல்லவும், "நீங்க என்ன இப்படி எல்லாம் மெழுகி விடுகிறீர்கள்? அப்புறம் பார்க்கப் போனால் கல்லும் முள்ளும் நிறைந்த இடம் கூடச் சுத்தமாகத்தானே இருக்கும். சின்னப்பன் மேல் குற்றம் சொல்வதற்கே இடம் இருக்காது" என்று கொஞ்சம் அழுத்தமாகவே முதலியார் கூறினார்.

"எப்போதுதான் சின்னப்பனிடம் குற்றம் இருக்கப் போகிறது?" என்று பேச்சு முடிவதற்குள் பெரியவரிடமிருந்து பதில் வந்தது. அவர் கட்டில் சமீபத்தில் இருந்ததால், அவர் சொல்லுவது நன்றாகவே இவர்களுக்குக் கேட்டது.

"கட்டுச் சோற்றுக்கு எலியை வைத்துக் கட்டியது போல்" என்று கெட்டியப்பன் வேடிக்கையாகச் சொல்லிக் கொண்டு, "உங்களையும் கட்டிலையும் அக்கட்டாலே கொண்டு போய் வச்சிட்டுத்தா நாங்க பேசணும்" என்று எழுந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சும்மா உட்காரு" மணியகாரர் அதட்டினார். பெரியவர் "நானே எழுந்து போயிடரேன். ஆனா உனக்குப் பயந்துகிட்டல்ல. என்ன கெட்டியணா! இங்க ரொம்ப வேக்காடா இருக்குது. காற்றாட அந்தப் பக்கம் போறே. போறதுக்குள் சின்னப்புள்ள கிட்ட ஒரு வார்த்தை சொல்லோணும்" என்று நாகம்மாள் புறம் திரும்பினார். எப்போதும் மரியாதையாகவே அவரிடம் நடந்து வந்த நாகம்மாள் எழுந்திருக்க முயன்றாள். பெரியவர், "வேண்டா. உட்காரம்மா. ஒரு வார்த்தை பாக்குக் கடிக்கிற நேரத்துக்குள்ள சொல்லிடறே" என்று தொடங்கினார்.

"திருமனை செய்யத் தெரியாதவை தேரீ வேலக்கு அச்சாரம் வாங்கினானாம். ஒரு காணி நெலத்தைக் கிளறி பாங்காப் பொழக்கத் தெரியாத இந்தக் கெட்டியப்பனா உனக்குப் பங்கு வாங்கிக் கொடுக்கிறவன்? இது எல்லா நடக்காத சங்கதிகள். ஒரு நாளைய கூத்துக்கு மீசையெ சிரைத்த கதையா முடியும். இப்பொ பாரு, ஊரும் குடித்தனமுமாய் இருந்தவ, குழந்தைய வுட்டுட்டு வெளியில வந்து திண்டாட்டத்தில் மாட்டிக் கொண்டாய், நீ சொன்னதெல்லாம் நானும் கேட்டேன்"

"நீ யாருக்காக இந்த பங்கு பிரிக்கச் சொல்லறாயோ அந்தக் குழந்தை கூட உங்கிட்ட வரமாட்டேங்குதுன்னா பின் என்னத்துக்கு இந்தச் சச்சரவு எல்லாம். இதெல்லாம் அவர்கள் போதனை. அது இது என்று காரணம் சொல்லாதே. அதெல்லாம் பிரயோசனமில்லை. இப்போ முதலியார் சொன்னது போல எல்லாம் முழுகிப் போயிடல்ல. நீ பேசாம வூடு போய்ச் சேர் ஆயா. ஊர் சிரித்ததற்கப்புறம் போவதை விட விசயம் மூணாம் பேருக்குத் தெரிவதற்கு முன்பே நல்லதனமாப் போயிடுவது நல்லது"

நாகம்மாள் ஒன்றுமே பேசவில்லை. பதிலுக்குக் காத்திராமல் பெரியவரும் அப்பால் போய்விட்டார்.

"செரி. வழக்கப்படி இது நடப்பதுதானே! என்ன நீங்க கூடப் பேச்சில மயங்கி விட்ட மாதிரி இருக்கிறதே" என்றார் முதலியார்.

"இதைப் போல ஐம்பத்தெட்டுப் பேச்சுத்தா என்னை மயக்க முடியுமா? நா வேறு சங்கதியைப் பற்றி ஆலோசித்தேன் என்றார் மணியகாரர்.

"அதைத்தா சொல்லுங்களேன்" என்று நாகம்மாள் கேட்டாள்.

"நீ வீட்டுக்குப் போய்விடக் கூடாதா?" கொஞ்சம் தயங்கிக் கொண்டு தான் சொன்னார். அனைவரும் மௌனமாய் இருக்கவே, "அங்கிருந்து கொண்டு நாம் காரியத்தைச் சாதிப்பதை விட வெளியில் இருப்பது அவ்வளவு சிலாக்கியமானதா?" என்றார்.

"அது சிலாக்கியமோ, கிலாக்கியமோ இனி அந்தப் பேச்சு இல்ல. நா அந்தப்பக்கம் தலெ வச்சுப் புடுக்கமாட்டே. அவர்கள் கொழமாத்தை தெரிந்தபிற்பாடு அங்கிருந்துகொண்டு இருக்கலாமா? வெசம் வக்கக்கூட அஞ்சமாட்டாங்க. உங்களை நம்பி வந்தே. நீங்க எப்படி வுட்டாலும் சரி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுடைய வேகத்தையும் உருக்கத்தையும் கண்ட முதலியார், "ஒரேயடியாகக் கோபிக்கிறீங்களே! நாளைக்கு நாலு பேருக்கு எதிரில் சின்னப்பனிடம் காட்ட கொஞ்சம் வெச்சுக் கொள்ளுங்க" என்றான்.

"சும்மா இரப்பா. உனக்கு எழவு வூடுன்னும், கலியாண வூடுன்னும் வித்தியாசம் தெரிவதில்லை. சும்மா ஒரே சிரிப்புத்தானா? ஆனா நீ சொன்னதிலும் உண்மை இருக்குது அப்படிச் செய்தா என்ன?"

"எப்படி?"

"எப்படியா? அதுதா பொது மனுசர் பத்துப் பேரைக் கூட்டி, இதற்கு என்ன சொல்லுறீங்கன்னு கேக்கிறது? சின்னப்பெ நிலபுலன்களை வித்துக்கொண்டு ஓடிவிடுவதற்கா எல்லோரும் சாதகமா இருப்பாங்க?" என்று மணியகாரர் சுற்றிலும் பார்த்துக் கொண்டே கேட்டார்.

கெட்டியப்பன் "இதிலெல்லா ஒண்ணும் காரியமில்லீங்க" என்றான்.

"என்ன?" என்று மற்றவர்கள் ஏக காலத்தில் கேட்டார்கள். "நாளைக்குக் காலையில ஏத்துப் பூட்ட சின்னப்பெ தோட்டம் வந்ததும் போய்த் தடுத்துடுவது"

"என்ன, நம்முடைய ஆளுகள வுட்டா?" என்று மணியகாரர் இடைமறித்தார். "இல்ல, இல்ல நாகம்மாள வுட்டே. ஏன்னு கேளுங்க. அப்படிச் செய்தாத்தா அக்கம் பக்கம் நாலு பேருக்கு சங்கதி பளிச்சினு படும். அப்புற பேச்சு எடுப்பதற்கும், பேசுவதற்கும் வகையாக இருக்கும்" என்றான்.

"ஒருவகையில் எனக்கும் செரியாகத் தோணுதப்பா" என்று மணியகாரர் ஆமோதித்தார்.

"ஆனால் நா ஒருத்தியும்....." என்று நாகம்மாள் சற்றுத் தயக்கமாகச் சொல்லவும், "நா எங்க செத்தா போயிட்டே? கூட வேணுமானா இன்னும் நாலு பேரைக் கூட்டி வாறே" என்றான் கெட்டியப்பன்.

"அடேடே! கலகத்துக்குப் போற மாதிரி அப்படியெல்லாம் செய்திடாத. சும்மா எங்கேயோ அசந்தர்ப்பமாப் போன மாதிரிப் போ. அது கூட வேண்டியதில்ல. என்ன நாகம்மா! ஆள் எதுக்கு? சொல்லு பார்க்கலாம். பின்னால் தா பேசிக் கொள்ள நாங்க இருக்கிறோம். எவ்வளவு செலவு ஆனாலும் செரி, நா இருக்கிறே. உன்னெ அந்தரத்தில் வுட்டுட மாட்டோம். தைரியமாக இரு" என்றார் மணியகாரர்.

"செரி, காலயில நா தோட்டத்துக்கு போயி தடுத்துட வேண்டியது அவ்வளவு தானே?" என்றாள் நாகம்மாள். "எங்கப்பா நம்ம தடியக் காணோம்" என்று கெட்டியப்பன் எழுந்தான். "நீயும் தூங்கப் போ" என்றார் மணியகாரர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26

ராமாயி இப்போது ஒரு புது வழக்கத்தைக் கைக்கொண்டிருந்தாள். அதுதான் பேசப்பேசத் தூங்குவது. என்ன பேசினாலும் தெரியாது. ஏதோ வாயில் வந்ததைச் சொல்லிவிட்டு குறட்டை விடுவது ரொம்ப சர்வ சாதாரணமாகப் போய்விட்டது. சின்னஞ் சிறு அசைப்புக்கே திடுக்கிட்டுத் தலை தூக்கும் தன் மனைவி ஏன் இப்படித் தூங்குகின்றாள் என்ற விபரத்தை ஏனோ சின்னப்பனும் கேட்பதில்லை. இப்போது இரண்டு தரம் குரல் கொடுத்தும், 'உம்' கொட்டிக் கொண்டே பேசாமல் இருந்ததற்கும், இவன் கோபித்துக் கொள்ளவில்லை.

சின்னப்பனுக்கு எத்தனையோ கவலைகள். மைத்துனன் பிரிவுக்குப் பின் தன் குடும்பத்திலும் பிளவு ஏற்பட்டுவிட்டது. ஆனால், முக்கியமாக நாகம்மாள் வாசற்படி தாண்டியதுதான் அவனுக்கு மிகுந்த வருத்தத்தை கொடுத்தது. அதிலும் மணியகாரர் வீட்டுக்குப் போயிருக்கிறாள் என்பதைக் கேட்டு, அதிக ஆத்திரம் கொண்டான். எதற்கும் தான் ஒன்றும் முன்னால் போவதில்லை என்று திட்டம் செய்து கொண்டான். ஊரார் பேச்சைக் கேட்டு இப்படிக் குட்டிச் சுவராய்ப் போய் விட்டாளே என்று நினைக்கவும், அவனுக்கு இரக்கமாகத் தான் இருந்தது.

தன்னுடைய அண்ணன் காலத்தில் நிகழ்ந்த அநேக சம்பவங்கள் நேற்றுத்தான் நடந்தது போலிருந்தது. இவனுக்குக் கலியாணம் ஆகு முன் குளிப்பதற்கெல்லாம் வெந்நீர் நாகம்மாளே எடுத்து வைப்பாள். வேண்டாம் என்று மறுத்தாலும், ஒரு தரத்திற்கு இரண்டு தரமாக முதுகு தேய்த்துவிடாது இருக்கமாட்டாள். எவ்வித கல்மிஷமும் இல்லாதி-ருந்தவள், இன்று விஷமாக மாறிவிட்டது அவனுக்கு ஆச்சரியமாகத் தான் இருந்தது. நாகம்மாள் கோபத்தில் வீட்டை விட்டுப் போய் விட்டாளே ஒழிய, இவள் குழந்தை ஏனோ தாயுடன் செல்ல மறுத்து விட்டது. இதற்குக் காரணம், ராமாயி காட்டும் அபார வாஞ்சையா?

யாரோ கடவையைத் திறந்து கொண்டு வரவும், வெளியே பந்தக் காலில் கட்டியிருந்த எருமைதான் உள்ளே வருகிறதாக்கும் என 'த்த கெரகம்' என சின்னப்பன் விரட்டினான். இவனுடைய அதட்டலுக்கு எருமையாய் இருந்தால் அடுத்த எட்டு எடுத்து வைத்திருக்காது. ஆனால் விருந்துக்கு அழைக்க வந்த நாவிதன் அப்படிப் போய்விட முடியுமா? வந்த சிரிப்பை அடக்க முடியாது அவன் சிரித்துக்கொண்டே வந்தான்.

"சாமீ, வண்டி வுட்டாச்சுங்க. தேவைக்காரர் வளவிலெ சாப்பாட்டுக்குக் கூப்பிடுறாங்க" என்றான் மாரி.

சின்னப்பன் சாப்பிட்டு வெகு நேரமாயிருந்தது. அவன் மனைவியும், முத்தாயாளும் கூட சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொண்டார்கள். மத்தியா-னமே விருந்துச் சங்கதி தெரியும் என்றாலும் அவனுக்குப் போக இஷ்டமில்லை. பத்துப் பேருக்கு முன்னால் இப்போதெல்லாம் போவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாலே அவனுக்கு நெருப்பு மேல் நடப்பதைப் போலிருந்தது. அவனுடைய இஷ்ட தெய்வம் பிரசன்னமாகி, எங்காவது மனிதப் பூண்டற்ற ஒரு இடத்துக்கு அவனை அழைத்துப் போவதாகச் சொன்னால், சந்தோஷமாக அந்த அன்பு அழைப்பிற்குட்பட்டிருப்பான்.

"இப்ப வாறமப்பா, நீ போ" என்று சின்னப்பன் சொன்னான். தான் போகா விட்டாலும் வெளிக்கு ஏன் காட்டிக் கொள்ள வேண்டும் என்று இப்படிச் சொன்னான். "செரி, சடடுன்னு வாங்க" என்று கூறிவிட்டு வேறு வீடுகளை நோக்கி மாரி வேகமாக நடந்தான்.

பந்தக் காலில் சாய்ந்தபடி உட்கார்ந்துகொண்டே சின்னப்பன் எதைப் பற்றியோ யோசித்தான். எப்படிச் சிந்தை சென்றாலும் கடைசியில் நாகம்மாள் விஷயத்திலேயே வந்து நின்றது. 'இன்னம்தான் என்ன? என் பேச்சைத் தட்டுவாங்களா? நாம் பார்த்து இது சரியில்லன்னா கேக்கும்கிற உறுதி இருக்குது. என்னமோ இப்போ போயிட்டாங்க. வெடிஞ்சா வாறாங்க' இப்படி எண்ணும்போதே 'கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும். அந்த விடுதூளைகளும், அர்த்தங்கெட்ட மணிய-காரனும் என்ன பண்ணுவாங்களோ' என்று நினைவு வரும்.

'சரி, என்ன வந்தாலும் இந்தக் கட்டை அதறவா போகுது? எங்க அப்பன் காலத்தில் அவர் ஒருத்தருக்கும் அடங்கி நடந்தவர் அல்ல. இந்த மணியகாரனும் சித்தப்பனும், பெரியப்பனும் மண்ணுக் கவ்வினவங்க தானே! ஒரு கை பார்க்கிறது' என்று திடம் செய்து கொண்டான்.

அப்பொழுது முத்தாயா தூக்கத்தில் என்னவோ உளறினாள். ராமாயியும் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்திருப்பதைப் பார்த்து "ஐயோ! சாமத்துக்கு மேலாகுது. ஏ முளிச்சுக்கிட்டு இருக்கீங்க" என்றாள்.

"இப்பப் பலபலவென்று வெடிஞ்சு போயி நெலந் தெரியுது. தோட்டம் போகவேண்டாமா?" என்றான் சின்னப்பன், ஆனால் சிரிப்பை அவனால் அடக்க முடியவில்லை.

ராமாயி கண்டுகொண்டாள். கண்ணைத் துடைத்துக் கொண்டு "என்ன சத்தம்? ஊர் அடங்கலியா?" "இந்தா அரகமா பேசாத அப்புற விருந்துக்காரர் வூட்டிலிருந்து ஆள் வந்தாலும் வரும்"

"ஓ... அதுதான் சம்பல் அடங்கிலப் போல் இருக்கு. நா மறந்தே மறந்திட்டனுங்களே. ஆனா, நீங்கதா சோறுங்கப் போயிட்டு வரப் படாதுங்களா?"

"நா என்னத்துக்கு அங்க போறே? வேணுமின்னா முய்யைக் குடுத்திட்டாப் போவுது"

"ஆரு, ராமாயாளா இந்த நேரத்தில் பேசிறது?" என்று பக்கத்து வீட்டுக்காரி சுவரிற்கு அந்தப் புறத்தில் இருந்தபடியே கேட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாங்கென்னக்கா பேசுறம். இத்தன நேரமும் நானும் தூங்கிட்டுத்தா இருந்தேன். இந்த பொழயா தூக்கமொண்ணு.." என்று கூறிச் சிரித்தாள்.

அவள் சிநேகிதையும் சிரித்துக் கொண்டே, "ஆமா, எங்காயா நாகம்மாளைக் கண்ணில பாப்பம் எண்ணாக் காணோமே" என்றாள். நடந்த விஷயம் ஒன்றும் இன்னும் அவள் காதுக்கு எட்டவில்லை. தன் கணவன் பக்கத்தில் இல்லாது இருந்தால் ராமாயியும் சங்கதியைச் சொல்லி இருப்பாள். இப்போது அதை எல்லாம் சொல்லத் தருணமில்லை. "எப்படியோ உம்மவள் ஒடம்பு நல்லானாச் செரி" என்று ஒருவிதமாகப் பேச்சை முடித்தாள்.

# 27

"தூங்கப் போ" என்று மணியகாரர் கெட்டியப்பனிடம் சொல்லும்போதே, 'இன்றைக்குத் தூக்கம் ஏது?' என்று அவன் தன்னுள் எண்ணிக் கொண்டான். ஆனால் அதை யாரிடமும் அவன் சொல்லவில்லை. இதோ அப்படியே என அங்கிருந்து கிளம்பினான்.

எங்கும் ஒரே இருள். மயிர்பிடித்தால் மயிர் தெரியாத அவ்வளவு இருட்டு. கரடுமுரடான ஆற்றங்கரைத் திட்டுக்களைத் தாண்டி கெட்டியப்பன் தன் திசை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். மேலே போர்த்தியிருந்த துப்பட்டியை எடுத்து உருமாலாகத் தலையில் சுற்றிக்கொண்டு "ஊர் கூடிச் செக்குத் தள்ளுகிறதாம் ஊதிவிட்டால் விழுகிற நோஞ்சானைத் தொலைக்க என் கையில் இருக்கிறது மருந்து" என்று வாய்விட்டுச் சொன்னான். யாராவது அக்கம்பக்கம் இருக்கிறார்களா என்று சுற்றிலும் ஒருமுறை பார்த்தான். அந்த மையிருட்டில் செடி, கொடிகளின் சாயல் தான் தெரிந்தது. பழைய பத்தியமுறையை அனுசரித்து மருந்து கொடுக்கிறானா அல்லது சாஸ்த்திரத்தைக் கையாள்கிறானா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

இரண்டொரு இடத்தில் சேறு வழுக்கி விட்டதையும் குழிகளில் கால் இடறியதையும் சமாளித்துக்கொண்டு நனைந்துபோன கால் செருப்பைக் கழற்றித் தூர எறிந்துவிட்டுக் குடிசை போய்ச் சேர்ந்தான். இவனை எதிர்பார்த்துக் கொண்டு இரண்டுபேர் அங்கே காத்திருந்தார்கள்.

இவனைக் கண்டதும், "அடே! என்னப்பா நம்பினா பெரிய கல்லாத் தூக்கிக் கொடுத்திடுவாய் போலிருக்கிறதே. எந்நேரம் வரச்சொன்னது இப்ப வந்திருக்கிறாய்?" என்று ஒருவன் சொன்னான்.

இன்னொருவன் "குடிக்கத் தண்ணி கேட்டா குளிப்பாட்டக் கொண்டு வருவான், சாமி சக்தி பூசாரிக்குத் தெரியாதா? வெறும் பேச்சுப் பேசறதை விட காரியத்தைப் பார்ப்போம்" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செரி செரி, ஆமாப்பா" என்று கெட்டியப்பன் சொல்லி, அவர்களுக்கு முன்னால் தானே வழிகாட்டிப் போவதிலிருந்து அவனுக்கு முன்பே விஷயம் தெரிந்திருக்க வேண்டும்.

"ஆறிப்போனா ருசிப்படாது. எல்லாம் சுடச்சுடப் பார்த்திடோணும்" என்றான் ஒருவன்.

"என்னெக் கேட்டீன்னா அவெ தனியா அங்கே காவலுக்கு இருக்கிறான். ஒவ்வொண்ணாப் பதம் பாத்துச் சரிக்கட்டீட்டா" என்று மற்றவன் சொன்னான். "அவனெ உசிரோடு புதைச்சிட மாட்டே. சரி எவனாச்சும் முழுச்சிகிட்டிருக்கப் போறா. அங்கே போய்ப் பேசிடலா" என்று கெட்டியப்பன் சொல்லவும், சம்பாஷணை அடங்கிற்று.

காலடிச் சத்தம் கூடப் பலமாகக் கேட்காமல், நடந்து மூவரும் மடுவுத் தோப்புக்குள் நுழைந்து விட்டார்கள். அடிக்கு அடி பின்னிக் கிடந்த மரம், செடி கொடிகளுக்கிடையே தங்குதடையின்றி சாதாரணமாகச் சென்று, ஒரு பாழடைந்த கிணற்று மேட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். அந்தக் கிணறு ரொம்ப ஆழமில்லை. சும்மா பத்து அடிதான் இருக்கும். ஆனால் அந்த இருட்டில் வகை தெரியாமல் உள்ளே சிக்கிக்கொண்டால் ஊனமின்றிக் கரையேறுவது அவரவர் அதிஷ்டத்தைப் பொறுத்ததே. அதற்குச் சற்றுத் தள்ளி ஒதுக்கமான ஓரிடத்தில் கொஞ்சம் வெளிச்சம் தெரிந்தது.

"அதோ அங்குதா" என்று ஒருவன் கை நீட்டினான். "ஆமா, கிணற்றுப் புறா மாதிரி 'பொடபொட'வென முளிச்சுக்கிட்டு உக்காந்திருக்கான் பாரு. ஏண்டா டேய்!" என்று கொஞ்சம் உற்சாகமாகவே கத்திவிட்டு, "மிச்சம் இருக்குதா, இல்லையா? எல்லாம் சுருட்டி வாய்க்குள் போட்டுக்கிட்டாயா?" என்றான் கெட்டியப்பன்.

"போனது போக இருக்கிறது மிச்சம்" என்று தன்னிடம் வந்த விருந்தினர்களை உபசரித்தான் அங்கிருந்த மரியாதை தெரிந்தவன்.

மூன்று பேரும் உட்கார்ந்தனர். "சரக்குத் தயார்தானப்பா" என்று அங்கிருந்தவன் கூறிக்கொண்டே கலயங்களை எடுத்து வந்தான். புதிதாக அப்போது தான் இறக்கிய தென்னங் கள்ளு 'சொய்' என்ற சத்தத்துடன் நுரை மிதக்க நின்றது. அதைக் கண்டதும் ஆலாக ஒருவன் அப்படியே கலயத்தோடு தூக்கினான்.

"என்னடா, வெறியெடுத்தவனாய் இருக்கிறாய்? முதலில் இது முடியட்டும்" என்று பானையோடு வறுவல் வகைகளை அவன் எடுத்து வைத்தான்.

"பனங்கொட்டை ஒண்ணும் இல்லையா?" என்று பானம் செய்ய பண்டம் விசாரித்தவாறே கெட்டியப்பன் ஆகாராதிகளைச் சுவைக்கத் தொடங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைக்கு அங்கு நடந்த கோலாகலங்களை எல்லாம் வர்ணிக்க முடியாது. அடடா! துண்டுக் கறியும், ஒவ்வொரு வாய் மதுவும் உள்ளே செல்லும்போது அவர்களுக்கு இந்த லோகத்தில் இருக்கிறோம் என்ற நினைப்பே இருக்கவில்லை.

வெகுநேரம் கொண்டாட்டம் போட்ட பிறகு, இன்பச் சுற்றுச் சுற்றின பின் மூன்று பேரும் தலை சாய்ந்தனர். மயக்கத்தில் அவர்கள் இந்த வெறும் நிலத்தில் கண் மூடினார்கள். ரோஜாப்பூ மெத்தை அளித்திருந்தால் கூட, நித்திரைக்கு லாயக்குப்படாது என்று தள்ளியிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

இத்தனை அமளிதுமளிகளிலும் கெட்டியப்பன் நினைவு தவறாது மிதமாகவே இருந்தான். கண்கள் மட்டும் திரண்டு செஞ் சிவப்பாய் இருந்தது. சிறு குழந்தைகள் கண்டால் நிச்சயம் பயந்துவிடும்.

"என்னடா, விடிஞ்சிட்டுதா?" என்று தன்னோடு உட்கார்ந்திருக்கும் செங்காளியிடம் கெட்டியப்பன் கேட்டான். செங்காளி பொட்டென்று கைத்தடியை ஊன்றி எழுந்து பார்த்துவிட்டு, "இப்போதா கெழக்கு வெளுக்கிறது. ஆச்சு விடியிற சமயந்தா" என்றான்.

அப்போது ஒரு காகம் 'கா' என்று கத்தியது. "அடே கோழி கூப்பிடுதே" என்று எழுந்தான் கெட்டியப்பன். "எங்கே வயிற்றுக்குள் இருந்தா? இன்னும் சரியாச் செரிக்கலப் போலிருக்கிறது" என்று காளி சிரித்தான். "நீயும் வா" என்று கெட்டியப்பன் சொல்லிக்கொண்டே நடந்தான். எங்கே என்று கேட்காமலே, "நம்ம ஆசாமிகளின் தூக்கம் கலைவது எப்போது?" என்று கேட்டுக் கொண்டே செங்காளியும் பின் தொடர்ந்தான். வேறு விஷயங்களில் மற்றவர்களுடன் கெட்டியப்பன் எவ்வளவுதூரம் தொடர்பு வைத்துக் கொண்டாலும், ஏதாவது அந்தரங்கக் காரியமாய் இருந்தால் செங்காளியைத் தான் தன்னோடு இட்டுச் செல்வான். செங்காளியும் குருவுக்கு ஏற்ற உத்தம சிஷ்யனாகவே இருந்தான். சாமி மாடு போல அவன் வஞ்சகமின்றி வளர்ந்திருந்தான். பனை மரத்து அடிக்கட்டை போல் இருக்கும் அவன் தேகம். ஊரார் சொத்தைத் தின்றே சேகேடுயிருந்தது.

"தடி பத்திரம்" என்று மட்டும் கெட்டியப்பன் சொன்னான். அவன் கால்கள் நேராகப் போக மறுத்தன. கட்டைகளில் மோதிக் கொண்டன. பள்ளங்களில் கிணுக்கென இறங்கினான். "என்ன தடம் தெரியல்லயா?" என்று கேட்டதையும் கவனியாது ஆற்றுக்குச் செல்லும் இட்டேறியில் இறங்கினான் கெட்டியப்பன்.

செங்காளிக்கும் கொஞ்சம் மசமசப்பாகத்தான் இருந்தது. இருந்தாலும் தடுமாறாது பின் நடந்தான். மிருதுவான கூதல் அடித்துக் கொண்டிருந்தது. பட்டிகளிலிருந்து உடம்பை உதறிக் கொண்டே பண்டம் பாடிகள் வெளிக் கிளம்பின. எங்கோ இரண்டொரு நாய்களின் அர்த்தமற்ற

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குரைப்புச் சத்தத்தோடு ஆட்டுக்குட்டிகளின் 'ம்மா' என்ற சப்தமும் சுருதி லயமாகக் கலந்தன. அவர்கள் இருவரும் தோப்பை கடந்து, ஆற்று மணல் தாண்டி, ஊரடியில் உள்ள சின்னப்பன் தோட்டத்து வேலி வந்து சேர்ந்தனர். கெட்டியப்பன் கையிலிருந்த கழியால் வேலியை ஓங்கி ஒரு தட்டுத் தட்டினான். வேலி முட்கள் சிதறின. உள்ளே போகப் பெரிய வழி ஏற்பட்டது. "அந்தப் பக்கமாகத் தடம் இருக்கும்போது இது எதற்கு?" என்றான் செங்காளி. அந்த முட்களைச் சீராக எடுத்து வைக்கக் குனிந்தான். கெட்டியப்பன் திரும்பி "வேற வேலயில்ல? காரத்தால வேலி நடத்தா இங்க வந்தமா? அங்க பாரு கெணத்தோர ரொம்பக் கூட்டமா இருக்குதா?" என்றான்.

செங்காளி பார்த்துவிட்டு "சரியாக தெரியல. ஆனா, ஆரோ நிக்கிறாப்பல இருக்கிறது. என்ன நாகம்மா சங்கதியா?" என்றான்.

"ஆமா. அந்தத் தொல்லைக்குத்தா நா போறேன்" என்றான்.

மணியகாரர் வீட்டில் ஆலோசித்ததைப்போலவே நாகம்மாள் காலையில் போரைத் தொடுத்து விட்டாள். தோட்டத்தில் காலையில் ஏற்றுப் பிடிக்க வந்த சின்னப்பனைத் தடுத்து விட்டாள். தொல்லை ஆரம்பமாகிவிட்டது.

இவர்கள் கிட்ட நெருங்க நெருங்க சின்னப்பன் கடுமையாக அதட்டிப் பேசிக்கொண்டிருப்பது கேட்டது.

"உங் கையக் கால முறிச்சிருப்பே. எனக்கு வந்த கோவத்த அடக்கிக்கிட்டே! ஓடிப் போ. எம் முன்னால நிக்காத!" என்றான் சினத்தோடு.

"என்ன நானா ஓடறது? தலை துண்டாத்தா போவட்டுமே!" என்றாள் நாகம்மாள்.

"அவ்வளவு குண்டித் தைரியமா உனக்கு? அப்படின்னா இண்ணைக்கு அடி தடிக்கினே ஆளுகளையும் வரச்சொல்லி இருக்கிறாயா? ஒரு கை பாத்திட்டுத் தான் போக உத்தேசமா?" என்று சின்னப்பன் 'படபட' என்று பேசிக் கொண்டே பின்னால் திரும்பினான்.

அவன் சொல்லியவாறே வந்தவர்களைப் போன்று கெட்டியப்பனும் செங்காளியும் காட்சியளித்தார்கள்.

அவர்கள் இருவரையும் கண்டதும் நாகம்மாளுக்கு மனம் பகீரென்றது. என்னவோ முன் எப்பொழுதும் கண்டிராத ஒரு அதிர்ச்சி அவள் தேகத்தை நடுக்கியது. எதிரில் நின்று கொண்டிருந்த சின்னப்பனையும் அவனுக்குப் பின்னால் பனங் கருக்கோரத்தில் முத்தாயியை இடுப்பில் வைத்துக் கொண்டிருந்த ராமாயியையும் ஏக காலத்தில் பார்த்தாள். தன்னையே ஒரு தரம் மேலும் கீழும் பார்த்துக் கொண்டாள். அவள் கட்டியிருந்த தூ வெள்ளைக் காடாப் புடவை காற்றில் 'படபட'வென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்தது. அந்தப் புடவைக்கும் சின்னப்பனுக்கும் ஏதோவொரு சம்பந்தம்' இருப்பது போலப்பட்டது. ஆமாம், அன்று தாலி வாங்கின போது 'பிறந்திடத்துக் கோடி' அவளுக்குச் சுற்றினபோது அருகில் நின்று கொண்டிருந்த சின்னப்பன் கதறியது அவளுக்கு அப்போது ஞாபகம் வந்திருக்கலாம். அவளால் ஒருவரையும் ஏறெடுத்துப் பார்க்க முடியவில்லை.

சின்னப்பனுக்கு அடங்காத கோபம் வந்தது. பனங்கருக்கு ஓரம் நின்று கொண்டிருந்த தன் மனைவியை, "இங்கு வா" என அழைத்தான். நல்ல நாளிலேயே பலமாகப் பேசாதவள் இவைகளைக் கண்டதும் பதுமை போல் மௌனமாகி விட்டாள். இடுப்பில் இருந்த குழந்தை கீழே இறங்க முயற்சித்தது.

சின்னப்பன் உக்கிரமாக, "நீங்க ரண்டு பேரும் அவ சிபார்சுக்கு வந்த சிப்பாய்களா? செரியான காணியாளனுக்குப் பொறந்தவங்கதானா?" என்று ஆத்திரத்துடன் வந்தவர்களைப் பார்த்துக் கேட்டான்.

அப்போதும் அவன் வேகம் தணியவில்லை. இரண்டடி முன் வந்து, "இங்கே ஒரு கணம் நின்னுக்கிட்டிருந்தீங்கன்னா அப்புற என்ன நடக்கும்னு தெரியாது" என்றான்.

பிறகு சற்று நிதானித்து செங்காளியைப் பார்த்து, "அடே! முண்டப்பய செங்காளி மூணூட்டுக்கு பங்காளின்னு செலவாந்திரம் சொல்லுவாங்க. ஒனக்கு இவ்விடத்தில என்னடா வேல?"

செங்காளிக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான்.

ஆனால் கெட்டியப்பன் கையிலிருந்த தடியைப் பிடுங்கிக் கொண்டு, "இப்ப என்ன சொன்னாய்? என்ன நடந்திடும்?" என்று விறைப்பாகக் கேட்டுக் கொண்டே முன்னால் போனான்.

"மண்டைக் கிறுக்கு எடுத்துடுதா? நீ வருகிற விசையப் பார்த்தா உனக்குப் போங்காலம் தட்டீட்டுது போலிருக்கு" என்று சின்னப்பன் மடிக்குள் கையை விட்டான்.

நிலைமை எக்கச்சக்கமாய் விட்டதால் பயமுறுத்தத்தானோ என்னவோ சின்னப்பன் கத்தி எடுக்கப் போகிறான் என்று நினைத்துச் செங்காளி "கெட்டீணா, இந்தா நில்லு! நில்லு! அவசரப்படாத" என்று கூறி அவன் கையில் இருந்த தடியைப் பிடுங்கப் போனான். ஆனால் அதற்குள் காரியம் மிஞ்சி விட்டது. கெட்டியப்பன் தன் கைத்தடியால் மடாலென்று ஓங்கி சின்னப்பன் தலையில் அடித்து விட்டான். அந்த அடியின் வேகத்தால் தடி கூடச் சின்னாபின்னமாக முறிந்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னப்பன் நிலைகொள்ளாது பூமியில் சாய்ந்தான். சிரசினின்றும் ரத்தம் மளமளவென்று பெருகியது. சித்திரை வெயிலில் சோரும் வாழைக் குருத்தைப் போல அவன் அங்கங்கள் சுருங்கின. முதலில் சுவாசம் பலமாகி பின் மெதுவாக அடங்கிற்று. குழந்தை கீச்செனக் கத்தி ராமாயியைத் தழுவிற்று. ராமாயி 'ஹோ'வெனக் கதறிக் கொண்டு சின்னப்பன் மேல் விழுந்தாள்.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19

# நாகம்மாள்

## குறிப்புகள்

எந்த ஒரு நல்ல இலக்கியமும் காலம் கடந்து, நிலம் கடந்து வாழ வேண்டுமானால் அதன் கரு அல்லது உள்ளடக்கம் உலகப் பொது உண்மையைப் பற்றிக் கூறுவதாகவே அமைய வேண்டும். இத்தகைய பண்பினைக் கொண்டு விளங்குவதுதான் மணிக்கொடி எழுத்தாளரான ஆர்.ஷண்முகசுந்தரத்தின் "நாகம்மாள்" என்ற நாவல். 1941 இல் இந்நாவல் ஷண்முகசுந்தரத்தினால் படைக்கப்பட்டது. அரை நூற்றாண்டுக்கு முன்பே தமிழில் சிறந்ததொரு நாவலைப் படைத்துச் சென்றுள்ளார் இவர்.

கொங்குநாட்டுக் கிராமம் ஒன்றின் வாழ்க்கையை இந்நாவலின் மூலம் படம் பிடித்துக் காட்டியுள்ளார். ஆர்.ஷண்முகசுந்தரம் எழுதிய சிறுகதைகளில் காணப்பட்ட கிராமத்து வாசனையை படித்து வியந்த கு.ப.ரா. அவர்கள், இந்த மண்வாசனையை அடிப்படையாக வைத்து ஒரு நாவலைப் படைக்குமாறு கூறிய ஆலோசனையின் பெயரில் படைக்கப்பட்டதே 'நாகம்மாள்' நாவல்.

1941 இல் இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் இந்நாவல் வெளி வந்துள்ளது. இக்காலத்தில் உலக அரங்கிலே பாசிஸ எதிர்ப்புப்போர் நிகழ்ந்த காலம். இந்தியாவில் "வெள்ளையனே வெளியேறு" என்று தேசவிடுதலை உணர்வுடன் இயக்கங்கள் பொங்கியெழுந்த காலம். நாற்பதுகளின் ஆரம்ப ஆண்டுகளில் இந்தியாவைத் துண்டாடுகின்ற நோக்கம், இந்தியாவை இரு தேசங்கள் ஆக்கும் பிரச்சனை விஸ்வரூபம் எடுத்துக்கொண்டிருக்கின்றது. சொத்துக்களைப் பிரிப்பதுபோலத் தேசத்தைப் பிரிக்க வேண்டும் என்று பிரிட்டிஷார் தீர்மானித்தது ஜனங்களில் பெரும்பான்மையோருக்குப் பிடிக்கா விட்டாலும் அவசியமாகப் போய்விட்டது.

உருது, ஹிந்தி, பஞ்சாபி, ஆங்கிலத்தில் பிரிவினை நாவல்கள் பல வந்துவிட்டன. இவைகளில் பலவும் இந்தியா - பாகிஸ்தானில் 1947-48 இல் ஏற்பட்ட சம்பவங்களை வைத்து எழுதப்பட்டவை. பிரிவினை பற்றியும் அதன் தாக்கம் பற்றியும் 1947க்கு முன் எழுதப்பட்ட இரண்டு நாவல்கள் உள்ளன.

1. பாணிக்கிரஹி எழுதிய 'மட்டிர் மனிஷே' (மண்ணின் மைந்தர்கள்)
2. இதற்கு முன் எழுதப்பட்ட சண்முகசுந்தரத்தின் நாகம்மாள்

ஒரு தத்ரூபமான கிராமிய இலக்கியமான இந்நாவல் 27 அத்தியாயங்-களைக் கொண்டது. தமிழின் முதலாவது பிரதேச நாவல் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையையும் இந்நாவல் பெறுகின்றது. டெல்லி சாகித்ய அக்கடமி வெளியிட்டுள்ள "நவீன இலக்கியம் ஒரு தொகுப்பு" என்னும் பகுதியில் "நாகம்மாள்" ஆங்கிலத்தில் கதைச் சுருக்கமாகவும், கடைசி அத்தியாயம் முழுவதும் பிரசுரித்துள்ளது. இது இந்நாவலுக்குக் கிடைத்த சிறந்த அங்கீகாரம் இதுவாகும். இந்நாவலின் உரையாடல்கள் யாவும் கொங்கு மண்ணின் மணங்கமழும் பேச்சுத்தமிழில் அமைந்துள்ளன. இத்தகைய கொச்சைத் தமிழ்நடை இந்நாவலுக்கு ஒரு தனிச்சிறப்பாக அமைந்துள்ளது.

இந்தியாவில் நவீனத்தின் கோடுகள் படியாத எந்தக் கிராமத்தையும் போன்றே சிவியார் பாளையமும். அதற்கான சூழலும், சூழ்நிலையும் இயற்கையுடன் சம்பந்தமுடையது. கிராமம் ஒன்றுக்கு இருக்கவேண்டிய குணாம்சங்கள் எல்லாம் இதற்குண்டு. சிறிய ஆறு, குளம், கானல், விளை நிலம், இட்டேறி, பொட்டல்காடு, ஊர்வெளி இப்படிப்பட்ட தளங்களிலேயே நாகம்மாளின் மனிதர்கள் இயங்குகின்றார்கள். இந்த இயங்குதலுக்குள் சிதையும் குடும்பமொன்றின் கதைதான் நாகம்மாள். இந்நாவல் மனிதனின் எழுச்சியைப் பாடவில்லை. வீழ்ச்சியைப் பாடுகின்றது. கிராமமக்களின் பலவீனங்களை மறைக்கவில்லை. யதார்த்த நிலையைக் கீறிப் பிளந்து காட்டுகின்றது. இந்நாவலில் நன்மை வெற்றி பெறவில்லை. தீமை முடிசூட்டிக் கொள்கின்றது. சதியும் சூழ்ச்சியும் வன்முறைகளும் அரசோச்சுகின்றன. இது தேசபக்தியைத் தட்டியெழுப்பும் கதையல்ல. தேசத்தில் புரையோடிப் போயிருக்கும் புண்ணை ஜன சமூகத்திற்குக் காட்டும் ஒரு ஜன்னல். கட்டுக்கோப்பான கதை, கதை வளர்ச்சிப் படிகள், முரண்பட்ட பாத்திரங்களும் அவற்றின் குணாம்சங்களும், சிறந்த உரைநடை, எதிர்பாராத முடிவு போன்ற சிறந்த நாவலுக்குரிய அம்சங்கள் "நாகம்மாளை" அணி செய்கின்றன.

## கதைச் சுருக்கம்

இளம் விதவையான நாகம்மாளுக்குத் தன் பெண் குழந்தையான முத்தாயாள்தான் எல்லாம். ஆனால் அவள் தாயிடம் நெருக்கம் காட்டுவதில்லை. வாணம் வெடித்து இறந்து போன தன் கணவனின் தம்பி சின்னப்பனும் அவனுடைய மனைவி ராமாயியும் அவளோடு வாழ்கின்றார்கள். கணவன் விட்டுப்போன விளை நிலமே அவர்களிற்கு வாழ்க்கை ஆதாரம்.

கிராமத்து முரடனும், நடத்தை கெட்டவனும், தீமைக் குணமுடையவனுமான கெட்டியப்பன் மீது நாகம்மாளுக்கு அலாதியான பரிவு. அது நெருக்கமான ஈடுபாடாக வளர்கின்றது. அவனுடைய தீய குணங்களுக்குப் பலியான நாகம்மாள் தன் குடும்பத்தையே சிதைத்து விடுகின்றாள். அதன் பாரம்பரியம், பெருமை எல்லாவற்றையும் தகர்த்து விடுகின்றாள். அதற்குத் துணையாக நிற்பவர் பழைய வஞ்சகத்தைத் தீர்த்துக் கொள்ளத் தருணம் பார்க்கும் ஊர் மணியகாரர். நாகம்மாளின் குடும்பச் சொத்துக்களை விற்றுக் காசாக்கி கௌரவமாக வாழத்துடிக்கும் சின்னப்பனின் மாமியார் காளியம்மாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் ஆசைகளிற்கெல்லாம் பலியாகும் சின்னப்பன். அதற்குக் காரணமாயிருக்கும் விளை நிலம். இதுதான் "நாகம்மாள்" நாவல்.

## கதை மாந்தர்கள்

இந்நாவலில் வரும் பாத்திரங்கள் இயல்பு மீறாத மனிதர்கள். நிகழ்ச்சிகள் எல்லாம் யதார்த்தமானவை. உரைநடையும், உரையாடல்களும் யதார்த்த வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டவை.

**சின்னப்பன்**

சின்னப்பன் மிகவும் யதார்த்த சுபாவமுடையவன். அண்ணனின் இறப்பிற்குப் பின் குடும்பப் பொறுப்பை, குடும்பச் சொத்துக்களை, குடும்ப கௌரவத்தை சிதறவிடாது முயற்சிக்கும் பாத்திரப் படைப்பு. ஆரம்பத்தில் நாகம்மாள் மீது மிகுந்த மதிப்புக் கொண்டிருந்து காலப்போக்கில் அவள்மீது அளவுகடந்த வெறுப்புக்கொண்ட பாத்திரமாக அமைத்துள்ளார் நாவலாசிரியர். உழைப்பும் நல்லெண்ணமும் மனிதர்களிடம் நம்பிக்கையும் சின்னப்பனுக்கு முதலீடு. அவனுக்கு எல்லா வகையிலும் பொருத்தமான அப்பாவி மனைவி-யாய் ராமாயி. நாகம்மாளின் அடாவடித்தனத்திற்கும் அதனால் கணவனின் கோபத்திற்கும் ஆளாகும் ஒரு பாத்திரப் படைப்பு. நாகம்மாளின் குழந்தை முத்தாயியைத் தம் குழந்தையைப் போல நேசிப்பவர்கள் இவர்கள்.

**நாகம்மாள்**

பெண்மைக்கே உரித்தான மென்மை காணப்பட்டாலும் அவளின் மனப் போராட்டங்களையும் அவளுக்குள்ளே தோன்றி அவளைப் பாதிக்கும் கடுமையான போக்குகளையும் எதிரிகளின் சதியில் அவள் சிக்குவதையும் அப்பாத்திரம் உணர்த்தி நிற்கின்றது. சந்தேகங்களும், தப்பான எண்ணங்-களும் விபரீதமான முறையில் இப்பாத்திரத்தின் போக்காக அமைந்துள்ளன. சொத்தில் தனக்குரிய உரிமை, தனது வாழ்வைத் தானே தீர்மானித்தல் போன்ற விடயங்களில் உறுதியான கருத்துக்களைக் கொண்டவளாகவும், தன் இச்சைப்படி நடந்து கொள்பவளாகவும் நாகம்மாள் சித்திரிக்கப் படுகிறாள். 'கணவன் இறப்பதற்கு பத்து வருடங்களிற்கு முன்பிருந்தே அவள் ஒரு ராணி போலவே நடந்து வந்திருக்கின்றாள் என்றும், பிறருக்கு அடங்கி நடக்கும் பணிவும் பயமும் என்னவென்றே அவள் அறியமாட்டாள் என்றும் இப்போது குறிப்பிட்டாலே போதும்" என்று நாகம்மாளைப் பற்றி ஆரம்பத்திலேயே சொல்லி வைக்கின்றார் நாவலாசிரியர். கைம்பெண்ணான நாகம்மாள் வாழ்க்கையில் கலகக்காரியாக இயல்பிலேயே மாறி விடுகிறாள். ஊரே வெறுக்கும் கலகக்காரனான கெட்டியப்பனோடு உறவு வைத்துத் தன் குடும்பத்தையே அழித்து விடுகின்றாள்.

**கெட்டியப்பன்**

கிராமத்திலே ஒரு வன்முறையாளனாக சித்திரிக்கப்படுகின்றான். உணவிலும், குடிபோதையிலும் தனது சொத்துக்கள் அனைத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழித்துவிட்டு இறுமாப்போடு வாழ்பவன். எவ்வாறாயினும் நாகம்மாளின் அபிமானத்தைப் பெற்று, கதைப்போக்கினை விறுவிறுப்பாகக் கொண்டு செல்லும் பாத்திரமாக சித்திரிக்கப்பட்டுள்ளான். நாகம்மாளின் பாகப் பிரிவினைக்கு எண்ணெய் ஊற்றி வளர்ப்பது என்பதை தேசியப் போராட்டம் நடந்துகொண்டிருந்த காலம் என்பதால் தேசப்பிரிவினைக்கு ஒப்பிட்டு நோக்கலாம்.

## கிராமவாழ்க்கைச் சித்திரிப்பு

'நாகம்மாள்' தமிழில் தோன்றிய சிறந்த நாவல் மட்டுமல்ல, முதல் பிரதேச நாவலுமாகும். கொங்கு நாட்டுக் கிராமமாகிய சிவியார் பாளையம் எம் கண் முன்னே விரிந்து காட்சியளிக்கும் வகையில் ஒரு கிராமத்திற்கே உரிய கோவில் திருவிழா, பொங்கல், ஆட்டபாட்டம், கூத்து, விருந்து என்றெல்லாம் நாவலில் வாழ்வம்சங்களைப் பிரதிபலிக்கின்றார் நாவலாசிரியர். மரம், செடி, கொடி, வாசனையெல்லாம் கிராமத்திற்கு சொந்தமானவை. இவை கிராமத்து வாழ்க்கையோடு பிணைந்து இயங்குகின்றன. சடங்குகள், சம்பிரதாயங்கள், உறவுகளின் பிணைப்புக்கள் எல்லாமே நாவலின் இயல்பான தன்மைகளாக வெளிப்பட்டிருக்கின்றன. கிராமத்து விளைநிலத்தில் ஏற்றம் இறைத்தல், உழவோட்டுதல், பால் கறத்தல், களையெடுத்தல் என்பன உற்பத்தியின் பின்னணி இயல்பாகவே கலந்து வருகின்றன.

சகுனம் சொல்லும் பல்லி, கரையும் காகம் முதலியன வாழ்க்கையை மூட நம்பிக்கையோடு அணுகும் கிரா்மத்து மக்களின் இயல்புக்குப் பொருத்த-மாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன.

## வடிவமைப்பு

நாவலில் வடிவமைப்பு திட்டமிடும் தன்மையிலிருந்து மாறுபட்டு குழப்பமோ, நெருடலோ இல்லாமல் இயல்பாக வெளிப்பட்டிருப்பது நாவலின் சிறப்பம்பம். நாவலின் இடையிடையே ஆசிரியர் தலையிடுவது வாசகர்-களைக் குழப்பத்திலிருந்து விடுவிக்கவே.

ஆர்.ஷண்முகசுந்தரம் எந்த தத்துவ விசாரங்களையும், நீதி நெறிமுறை-களையும் சாராதவர். கதைமாந்தர்களின் வாழ்க்கையும், சூழலும் அங்கு மனிதர்களின் இயல்பான இயங்குதல்களுமே நாவலின் வடிவமாக அமைந்-திருக்கின்றது. கலையின் உன்னதமான வடிவத்தைத் தமது வாழ்வனுப-வங்களிலிருந்து செதுக்கியிருக்கின்றார் நாவலாசிரியர்.

நாவலின் முடிவை ஆசிரியர் மிகுந்த அர்த்தத்தோடும், உருக்கத்தோடும் செய்திருக்கின்றார். எங்கும் இயல்பு மீறிப் போவது சாத்தியமில்லாமலே அமைந்திருக்கின்றது.

தமிழ் நாவல்களில் மட்டுமல்ல. இந்திய நாவல்களிலும் ஆர்.ஷண்முக சுந்தரத்தின் நாகம்மாக்களுக்கு முக்கிய இடமுண்டு. கிராமியச் சூழ்நிலை-களை முழுவதும் உபயோகித்து பிராந்திய நாவல் என்ற துறையை "நாகம்மாளின்" மூலம் தொடங்கி வைத்தவர் ஆர். ஷண்முகசுந்தரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20

# மாதிரி வினாக்கள்

## ஒருநாள் கழிந்தது

1. முருகதாசருடைய வறுமை நிலையினை ஆசிரியர் எவ்வாறு வெளிப் படுத்திக் காட்டுகின்றார்?
2. ஆசிரியரின் உரைநடைச் சிறப்பினை விளக்குக.
3. "முருகதாசர்" என்ற பாத்திரம் கதையில் முக்கியத்துவம் பெறுமாற்றினை விளக்குக.
4. ஆசிரியருடைய கதைப் பாத்திரவார்ப்பின் சிறப்பினை ஆராய்க.
5. இச்சிறுகதையின் பகைப்புலம் பற்றி விளக்குக.

## கனகாம்பரம்

1. கு.ப.ராவின் மொழிநடைச் சிறப்பினை விளக்குக.
2. இக்கதைச் சிறப்பிற்கான காரணங்களை ஆராய்க.
3. ராமுவினதும், மணியினதும் உள்ளக்குமுறல்கள் வெளிப்படுத்தப்படுமாற்றை விளக்குக.
4. ராமு, மணி, சாரதா ஆகிய பாத்திரங்களின் இயல்புகள் பற்றி விளக்குக.
5. 'கனகாம்பரம்' என்னும் கதைத்தலைப்பு கதையில் முக்கியத்துவம் பெறுமாற்றை விளக்குக.
6. கிராமிய, நகர பண்பாடுகளுக்கிடையிலான முரண்பாடுகள் கதையில் முக்கியத்துவம் பெறுகின்றதா? விளக்குக.

## தவப்பயன்

1. கதை ஆசிரியரின் உரைநடைச் சிறப்புப்பற்றி விபரிக்க.
2. நிர்மலானந்தரின் தவச்சிறப்பு சித்திரிக்கப்படுமாற்றை விளக்குக.
3. கதை நிகழ்வுகளம் கதையின் சிறப்பிற்கு எவ்வாறு தனித்துவச் சிறப்பினைக் கொடுத்துள்ளது என்பது பற்றி ஆராய்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. நிர்மலானந்தரின் மறுபிறப்பு எவ்வாறு நியாயப்படுத்தப்படுகின்றது என்பது பற்றி ஆராய்க.

5. "தவப்பயன் என்ற கதையின் சிறப்பிற்கு நிர்மலானந்தர் என்ற பாத்திரமே முக்கிய காரணம்" இக்கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க.

6. நிர்மலானந்தரின் தவச்சிறப்பிற்கு இறைவன் கொடுத்த பிரதியுபகாரம் பற்றி விளக்குக.

## வெள்ளிப் பாதசரம்

1. இலங்கையர்கோனின் உரைநடைச் சிறப்புப்பற்றி விபரிக்க.

2. இக்கதையினூடாக மனிதவாழ்வின் அற்புதம் வெளிப்படுமாற்றை விளக்குக.

3. கதையோட்டத்தில் வெள்ளிப்பாதசரம் பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.

4. நல்லம்மா, செல்லையா ஆகிய பாத்திரங்களின் குதூகல உணர்வு எவ்வாறு திசைமாறிச் செல்கிறது என்பதனை விளக்குக.

5. இக்கதையில் ஆசிரியர் கையாண்ட உத்தியினை விளக்குக.

6. கிராமியச் செல்வாக்கு கதையில் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.

## பாற்கஞ்சி

1. "பாற்கஞ்சி" கதையில் முக்கியத்துவம் பெறுமாற்றினை விளக்குக.

2. "எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களுமே கதையில் முக்கியத்துவம் பெறுகின்றது" இக்கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க.

3. "பாற்கஞ்சி கதையில் ஒரு குறியீடாகவே அமைந்துள்ளது" இக்கூற்று பொருந்துமா? விளக்குக.

4. முருகேசனதும் காமாட்சியினதும் மனஉணர்வுப் போராட்டங்கள் வெளிப்படுத்தப்படுமாற்றினை விளக்குக.

5. ராமு என்னும் பாத்திரம் கதையில் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை விளக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

oundation.
m.org













**பூபாலசிங்கம் புத்தகசாலை**

340, செட்டியார் தெரு, கொழும்பு - 11. ☎ 422321, 337313

309 A 2/3, காலி வீதி, வெள்ளவத்தை. ☎ 504266, 074 515775

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விலை : ரூபா 175.00**